# பருக்கையின் கீழ் பாம்பு

நாவல் தொகுப்பு



கற்பனைச் சிற்பி

**பசுந்தீவு கோவிந்தன்**

# படுக்கையின் கீழ் பாம்பு

(நாவல் தொகுப்பு)

*ஆக்கியோன்*
கற்பனைச் சிற்பி
**பசுந்தீவு கோவிந்தன்**

வெளியீடு:
**கோ. சரோஜினிதேவி**
சிற்பனை முருகன் வீதி
6ம் வட்டாரம், வேலணை
இலங்கை.

| | | |
|---|---|---|
| முதற்பதிப்பு | : | யூன், 2012 |
| பதிப்புரிமை | : | ஆசிரியருக்கே |
| கணினி வடிவமைப்பு | : | சண் பிறின்டேர்ஸ் |
| அச்சுப்பதிப்பு | : | ஸ்ரீ சுப்பிரமணிய அச்சகம்,<br>யாழ்ப்பாணம்,<br>இலங்கை. |

# அணிந்துரை

வாசிப்புப் பழக்கம் குறைவடைந்து கொண்டு செல்லும் இந்தக் காலக்கட்டத்தில், இரு நாவல்களை எழுதி அவற்றை ஒரு தலைப்பின் கீழ் நூலாக்கி வெளியீடு செய்துள்ளார் பசுந்தீவு கோவிந்தன். இன்றைய சூழலில் இதன் மூலம் செலவைத் தானும் ஈடுசெய்ய முடியாது என்பதைத் தெரிந்திருந்துங்கூட இந்நூலை எழுதி வெளியீடு செய்கிறார் என்றால், இவருடைய முயற்சியைப் பாராட்டாமல் இருக்க முடியாது. காரணம், இவர் ஓர் இலட்சியவாதி. இலக்கியவாதி எப்பொழுதும் இலட்சியவாதியாகவே இருந்தாகவேண்டும். இவருடைய இந்த இரண்டு நாவல்களையும் படிக்கும்போது இவர் ஓர் இலட்சியவாதிதான் என்பது எந்தவித மயக்கமும் இன்றித் தெளிவாகப் புரிகின்றது.

இலக்கியம் என்பது மனிதன் தனது இலட்சியத்தை அடைவதற்கு வழிவகுத்துக் கொடுப்பது அல்லது அவனை இட்டுச்செல்வது என்பதுதான் உண்மை. இலக்கியப் படைப்பாளிகள் இலட்சியவாதிகளாக இருக்கும்வரை தான் அவர்களின் படைப்புக்கள் இலக்கியமாய் அமையமுடியும். இலக்கியவாதிகள் இலாபநட்டத்தை கணக்கில் எடுப்பதில்லை. ஓர் இலக்கியவாதி தான் வாழும் சமூகம் என்னமாதிரி இருக்க வேண்டும் என்று எண்ணுகின்றானோ, அதை நோக்கித் தனது படைப்புக்களை உருவாக்குகிறான். இவருடைய இந்த இரண்டு நாவல்களும் சமூக இலக்கியத்திற்குள் அடங்குவது தெளிவாக புலனாகின்றது. அந்த வகையில், இவர் ஒரு சமூக இலக்கியவாதியாகவே கருதப்பட வேண்டும். சமூக இலக்கியவாதிகள் எப்பொழுதும் தாம் வாழும் சமூகநலன்களில், அதன் முன்னேற்றங்களில் மிகுந்த அக்கறை கொண்டவர்களாக இருப்பர் என்பது அனுபவரீதியான உண்மை.

அந்தவகையில், எழுத்தாளர் பசுந்தீவு கோவிந்தன் தான் வாழும் சமூகத்தின் நலனில், அதன் முன்னேற்றத்தில் எவ்வளவு அக்கறை கொண்டுள்ளார் என்பதை இரு நாவல்களையும் படிக்கும் பொழுது தெளிவாக அறிந்துகொள்ள முடிகின்றது. இப்படிப்பட்ட இலக்கியவாதிகளை, அதாவது இலட்சியவாதிகளை, எப்படிப் பாராட்டாது இருக்கமுடியும்!

இந்த இரண்டு நாவல்களில் முதலாவது நாவலாகிய **படுக்கையின் கீழ் பாம்பு** இலங்கையை மட்டும் தளமாய்க் கொண்டது. இரண்டாவது நாவலாகிய **மண்வாசனை** இலங்கையையும் கனடாவையும் தளமாய்க் கொண்டது. இரண்டுக்கும் பொதுவாய் நூலுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் தலைப்பு "படுக்கையின் கீழ் பாம்பு" என்பதாகும். ஆசிரியர் தனது உரையிற் கூறியிருப்பது போன்று படுக்கையின் கீழ் பாம்பு என்பது துரோகச் செயலைப் பளிச்சென விளங்க வைக்கும் பழமொழியாகும். மண்வாசனை என்ற நாவலும் துரோகச் செயல்களையே வெளிப்படுத்துகின்றபடியால், இந்நூலின் தலைப்பின் கீழ் இந்நாவல் வருவது பொருத்தமானது என்றே கொள்ள வேண்டும்.

ஆசிரியர் பசுந்தீவு கோவிந்தன் இலங்கையில் நாற்பது வருடங்கள் வாழ்ந்தவர். கனடாவில் இருபத்தியேழு வருடங்களாக வாழ்ந்து கொண்டிருப்பவர். இந்த இரண்டு நாடுகளிலும் இவருக்குக் கிடைத்த அனுபவங்கள், இவருடைய தேடலுக்குக் கிடைத்த பெறுபேறுகள்தான் இவர் இந்த நாவல்களை எழுதுவதற்குத் தூண்டுகோலாக அமைந்துள்ளன என்பது வெள்ளிடைமலை. தான் வாழும் சமூகத்தின் நலனில் அக்கறை உள்ளவனும் தேடல் கொண்டவனும்தான் உண்மையான அனுபவசாலியாக முடியும். அதன் அடிப்படையில் பசுந்தீவு கோவிந்தன் ஓர் உண்மையான அனுபவசாலி என்பதை இவருடைய இரு நாவல்களும் எடுத்துக்காட்டுகின்றன.

ஒரு மனிதனுடைய அனுபவமும் அவனுடைய அறிவும் அவனது சமூகத்திற்குப் பயன்படும் பொழுதுதான், அவன் அந்தச் சமூகத்தில் பிரகாசிக்கின்றான். ஆசிரியருடைய அறிவும் அவருடைய அனுபவமும் இந்த இரண்டு நாவல்கள் மூலம் எம்முடன் பகிரப்படுகின்றன என்பதுதான் எனது கருத்தாகும். முதலாவது நாவல் மூலம் துரோகிகளிடம் இருந்து உன்னைக் காப்பாற்றிக்கொள்ள, "எப்பொழுதும் விழிப்பாய் இரு" என்றும், இரண்டாவது நாவல் மூலம் "வாழ், வாழவிடு" என்றும் இரு பெரும் படிப்பினைகளைத் தத்ரூவமாக எடுத்துக் காட்டுகிறார். இரு நாவல்களும் கற்பனை என்று கூறப்பட்டாலும் அவை நிறைந்த யாதார்த்தங்களைக் கொண்டவை என்பதையும் எமக்கு நல்ல பாடங்களைப் புகட்டுகின்றன என்பதையும் இவற்றைப் படிக்கும் எல்லோரும் ஏற்றுக்கொள்வீர்கள். இதன் மூலம், தான் ஒரு சமூக

இலக்கியவாதி என்பதை நிரூப்பித்துள்ளார் பசுந்தீவு கோவிந்தன்.

படிப்பினைகள் இருந்தால் மட்டும் ஒரு படைப்பு நாவலாக முடியாது. வாசகனைக் கடைசி வரை இழுத்துச் செல்லும் வல்லமை நாவலுக்கு இருக்கவேண்டும். இரு நாவல்களும் நகைச்சுவையும் நவரசனைகளும், அடுத்தகட்டம் என்ன எனும் ஆவலைத் தூண்டும் தன்மையையும் கொண்டிருப்பதனால், நிச்சயம் இவை வாசகர்களை இழுத்துச் செல்லும் வல்லமை கொண்டவை, விறுவிறுப்பானவை என்பது எனது முடிவாகும். இந்த உண்மையை எனது அணிந்துரையை வாசிக்கும் போது ஏற்றுக்கொள்ளா விட்டாலும் நாவலை வாசிக்கும் போது நிச்சயம் ஏற்றுக் கொள்வீர்கள்.

இலகுவான தமிழ், சிறிய வசனங்கள், இசைவான ஓட்டம், பொருத்தமான பழமொழிகள், சிறந்த உதாரணங்கள் என்பன ஆசிரியரின் எழுத்தை மெருகூட்டி நிற்கின்றன என்றால் மிகையாது. வாசகர்களை மகிழ்ச்சியிலும் ஆச்சரியத்திலும் மூழ்கவைக்க வேண்டும் என்பதற்காக ஒரு கட்டத்தில் கற்பனையின் உச்சத்திற்கே போயிருக்கிறார். அதுதான் நாகபாம்புகளின் நடனமாட்டம். ஆகா! என்ன அற்புதம்! நடக்குமா என்று சந்தேகிக்காமல், நடப்பதாய் எண்ணிக்கொண்டு மகிழ்ச்சியடையுங்கள். வாசகர்களே! கற்பனை நிசத்தை விட வலுவானது, மறந்துவிடாதீர்கள். கற்பனைச் சிற்பி என்னும் கௌரவப் பட்டத்தை ஆசிரியர் பெற்றிருப்பது எவ்வளவு பொருத்தம் என்பது இப்பொழுதுதான் புரிகின்றது.

“கடவுளை நம்பினார் கைவிடப்படார்”, என்ற உண்மையை நிரூபிப்பது போன்று பல இடங்களில் தனது கருத்துக்களைச் சொல்லுவதன் மூலம் ஆசிரியர் தனது கடவுள் நம்பிக்கையையும் ஆன்மீக ஈடுபாட்டையும் வெளிப்படுத்துகிறார். இது இவர் சமூகத்திற்கு வழிகாட்டத் தகுதியுடையவர் என்பதை நிரூபிக்கின்றது.

மண்வாசனை என்னும் நாவலில் எமது சமூக வாழ்க்கை முறையில் இருக்கும் பல குறைகளைச் சுட்டிக்காட்டும் அதே வேளையில், நல்ல அம்சங்களையும் எடுத்துக்காட்டியுள்ளார். அத்தோடு ஒவ்வொரு சமூகத்திலும் நல்லனவும், தீயனவும் இருக்கின்றன என்பதையும் அவற்றில் நல்லனவற்றை எடுத்துக்கொண்டு தீயனவற்றை அகற்றிவிட வேண்டும் என்று ஆலோசனை வழங்குவதன் மூலம், புலம்பெயர்ந்து

வாழும் எமது மக்களுக்கும் வரப்போகும் பிற்சந்ததியினருக்கும் நல்லதோர் வழிகாட்டியாக அமைகிறார் ஆசிரியர் என்றால் சாலவும் பொருந்தும். மண்வாசனை என்னும் நாவலில் தர்மத்திற்கு இவர் கொடுத்திருக்கும் முக்கியத்துவம் எமது சமூகத்தை நல்வழிப்படுத்த உதவும் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை.

எழுத்தாளர்கள் பொதுவாக மறைந்து நின்றே எழுதுவார்கள். ஆனால் பசுந்தீவு கோவிந்தன் சுந்தரியைப் பேட்டி காணுவதன் மூலம் தோன்றியும் தோன்றாமலும் என்ற யுக்தியைக் கையாண்டு நாவலை ஒரு புதுப்பாணியில் நகர்த்திச் செல்லுகிறார். இது இவர் ஒரு படைப்பாளி என்ற அந்தஸ்த்தை இவருக்குப் பெற்றுக் கொடுக்கிறது என்பது எனது அபிப்பிராயம். புதிதாக ஒன்றைப் படைப்பவன்தான் படைப்பாளியாகிறான். முன்னையவர்களைப் பின்பற்றுபவன் ஒரு போதும் படைப்பாளியாக முடியாது.

இந்நூலுக்கு அணிந்துரை எழுதும் வாய்ப்பைப் பெற்றதன் மூலம் ஓர் அற்புதமான எழுத்தாளனைச் சந்தித்துள்ளேன் என்று மிகப் பெருமையோடு கூறிக்கொள்கிறேன். இவர் மேன்மேலும் பல நாவல்களை எழுதி எமது சமூகத்திற்கும் எமது நாட்டிற்கும் பேரும் புகழும் தேடிக் கொடுக்க வேண்டும், சிறப்பாகப் பிற்சந்ததியினரின் முன்னேற்றத்திற்குப் பாடுபட வேண்டும், என்று கேட்டுக்கொள்கிறேன். இத்தனை வல்லமை கொண்ட பசுந்தீவு கோவிந்தன் மேலும் பல படைப்புக்களை உருவாக்கிப் பேருடனும் புகழுடனும் நீடூழி வாழ வேண்டுமென வாழ்த்தி எனது அணிந்துரையை நிறைவு செய்கிறேன்.

வணக்கம்.

அன்புடன்,

த.இராஜரட்ணம்

ஓய்வு பெற்ற அதிபர்,

யாழ். உயர் தொழில்நுட்பக் கல்லூரி.

# கதாசிரியர் உரை

மனிதனுக்கும் மற்றைய உயிரினங்களுக்கும் இடையிற் காணப்படும் முக்கிய வேறுபாடு பகுத்தறிவு எனப்படும் ஆறாம் அறிவு ஆகும். பகுத்தறிவு நல்லன தீயனவற்றை உய்த்துணரும் ஆற்றல் கொண்டது எனக் கருதப்படுகின்றது. ஐந்து அறிவினையும் பெறுவதற்கு ஐம்புலன்கள் உதவுவது போன்று, அதாவது தளமாயிருப்பது போன்று, ஆறாம் அறிவைப் பெறுவதற்குத் தளமாயிருப்பது மனம் ஆகும்.

மனிதனைத் தவிர மற்றைய உயிரினங்களெல்லாம் இயற்கை விதிகளுக்குக் கட்டுப்பட்டு வாழ்ந்து கொண்டிருக்கின்றன. மனிதன் மட்டும் இயற்கை விதிகளுக்கு முரணாகச் செயற்படுகிறான். அதற்கான காரணம் மனமும் அதன்மூலம் பெறப்படும் பகுத்தறிவும் ஆகும்.

மனம் நல்லமனமாயிருக்கும் வரைதான் மனிதன் நல்லனவற்றைச் செய்கிறான். மனம் தீயமனமாய் இருக்கும்வரை தீயனவற்றையே செய்கிறான். எனவே மனிதன் நல்ல மனிதனாய் வாழுவதற்கு மனதை எப்பொழுதும் நல்ல மனமாய் வைத்திருக்க வேண்டும். தீயனவற்றைத் தீர்மானித்துச் செய்பவன் மனிதன் மட்டுமே. ஆகையால் மனிதன் ஓர் ஆபத்தான படைப்பு என்று சொல்வதிலும் அர்த்தமிருக்கத்தான் செய்கிறது.

மனிதன் தீர்மானித்துச் செய்யும் தீய செயல்களில் நம்பிக்கைத் துரோகமும் ஒன்றாகும். இது மிகவும் ஆபத்தானது மட்டுமல்ல கொடுமையானதும்கூட. துரோகத்தனத்தைப் பளிச்சென விளங்கவைப்பதற்கு எம்முன்னோர் பயன்படுத்திய பழமொழிதான் "படுக்கையின் கீழ் கிடந்த பாம்பு போன்று" என்பதாகும். இதிலிருந்து தப்பித்துக் கொள்ளுவதற்கு நாம் எப்பொழுதும் விழிப்பாய் இருக்கவேண்டும். தட்டுத்தடுமாறியேனும் தூங்கிவிடப்படாது என்பதை ஞாபகமூட்டும் விதமாயே இந்நாவலை எழுதியுள்ளேன்.

படிப்பனைக்காக மட்டும் ஒரு நாவலை எழுதினால் அதைப் படிக்க யாரும் முன்வரமாட்டார்கள். நாவல் போன்ற படைப்புக்களை ஓய்வு நேரங்களில் மக்கள் படிப்பதுதான் வழக்கம். எனவே ஓய்வு நேரத்தை மகிழ்ச்சியோடு கழிப்பதற்கு உதவுவது போன்று நாவல் இருக்கவேண்டும் என்பதற்காக, கற்பனையிற் கதையை வடிவமைத்து

காசியத்தோடு நவரசனை உணர்வுகளையும் அதில் புகுத்தியுள்ளேன்.

வாசிக்கத் தொடங்கும் ஒரு வாசகனை இறுதிவரை இழுத்துச் செல்வதிற்தான் எழுத்தாளனின் எழுத்து வல்லமை தங்கியுள்ளது. வாச கனைச் சோரவிடப்படாது என்பதற்காக சில இடங்களில் கற்பனையின் உச்சம்வரை போயிருக்கிறேன். உதாரணமாக: நாகபாம்புகளின் நடன மாட்டம். இவ்வாறு நடக்குமா! என்று சந்தேகப்பட்டு மகிழ்ச்சியை கெடுத்துவிடாதீர்கள். நடப்பதாய் எண்ணிக்கொண்டு இரசியுங்கள். நிசத்தை விட கற்பனைக்கு வலு அதிகம் என்பது தத்துவ ஞானிகளினதும் அறிஞர்களினதும் கூற்று. எனவே கற்பனை என்று எண்ணிக்கொண்டு அதன் பயனை உதாசீனம் செய்து விடவேண்டாம். சிந்தனைதான் செயற்பாட்டுக்கு அத்திவாரம். அது போன்று கற்பனைதான் நிசத்திற்கு அத்திவாரம். அதன் காரணமாக, கற்பனையால் ஏற்படும் பயன் மிகப் பெறுமதியானது என்பதை மறந்துவிடாதீர்கள். அவற்றை வாசிக்கும் பொழுது, இப்படி நடக்குமா? என்று கேள்வி கேட்காமல், நிகழ்வை இரசித்து இன்பமாய் நேரத்தைக் கழிக்க முயற்சியுங்கள்!

நாவலை வாசிக்கும்பொழுது தோடம்பழத்தை அல்லது வாழைப் பழத்தைச் சாப்பிடுவதுபோல் செயற்படவேண்டும். அதாவது தோலை உரித்து அகற்றிவிட்டுச் சுளையைச் சாப்பிடவேண்டும். தோலை உரிப் பதற்குப் பஞ்சிப்படவோ அன்றி தோலை ஏன் இறைவன் படைத்தா னென்று சலித்துக் கொள்ளவோ கூடாது. சுளையில் சிறிய கருப்புத் தெரிந்தால் அதைக் கழித்துவிட்டுச் சாப்பிடவேண்டுமேயொழிய, அதற் காக முழுச் சுளையையும் வீசிவிடப்படாது. சுளையைச் சாப்பிட்டுப் பார்த்துவிட்டுச் சொல்லுங்கோ நாவல் எப்படி இருக்கென்று!

நீங்கள் சொல்லப்போகும் விமர்சனந்தான் இத்துறையில் எனது எதிர்காலத்தை நிர்ணயிக்கப்போகின்றது என்பதை மனதில் இருத்தி ஆரோக்கியமாய் விமர்சிக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

இந்நூலிலுள்ள முதலாவது நாவலாகிய 'படுக்கையின் கீழ் பாம்பு' இலங்கையை மட்டும் தளமாகக் கொண்டுள்ளது. இரண்டாவது நாவலா கிய 'மண்வாசனை' இலங்கையையும் கனடாவையும் தளமாகக் கொண் டுள்ளது. மண்வாசனை என்ற நாவலும் ஒருவகையில் நூலின் தலைப்

பிற்குப் பொருத்தமானதுதான். அங்கும் துரோகச் செயல்கள் இடம்பெறு கின்றன. ஆனால், அவற்றின் வடிவம் கொஞ்சம் வித்தியாசமானது, அவ்வளவுதான்.

இரண்டு நாவல்களும் பேச்சுவழக்கில் எழுதப்பட்டிருப்பதனால் இலக்கணத் தமிழைத் தேடி நேரத்தை வீணாக்காதீர்கள்! அதன் அடிப் படையில் குறை காண முயற்சிக்காதீர்கள்! ஆங்கிலச் சொற்களும் வடமொழிச் சொற்களும் உண்மை யதார்த்த நிலைக்கு ஏற்றவகையிற் தான் பயன்படுத்தப்பட்டுள்ளன. தனித்தமிழ்ப் பிரயோகம் சாத்தியமாகும் வரை இது நீடிக்கத்தான் செய்யும் எனும் உண்மையை நீங்களும் அறிவீர்கள். எனவே இதில் பெரிய தப்பொன்றும் இல்லையென்று நினைக்கிறேன்.

முன்பு குறிப்பிட்டது போன்று இரு நாவல்களும் பேச்சுவழக்கில் எழுதப்பட்டிருப்பதனால், வாசிக்கும்பொழுது மேற்கோட்குறி, கேள்விக் குறி, ஆச்சரியக்குறி, கொம்பா போன்ற குறிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து வாசிக்கவும். அப்பொழுதுதான் சரியான கருத்தைப் பெறமுடி யும். வாசிக்கும்பொழுது கதையில் வரும் கதாபாத்திரங்களாக உங் களை உருவகப்படுத்திக் கொள்ளுங்கள். அதன்மூலம்தான் அந்தந்த உணர்வுகளை அவ்வப்போது அனுபவித்து கதையைப் பூரணமாக இரசிக்க முடியும்.

அரைகுறையாகவோ அன்றி ஏனோதானோவென்றோ வாசித்து விட்டு நூலைப்பற்றி விமர்சனம் செய்ய முயற்சிக்கவேண்டாம். வாசிக் கும்பொழுது முதலிற் குறையைத் தேட முற்படாமல் நிறைவை ஏந்தி வாசியுங்கள். இறுதியில் நிறைகுறை இரண்டும் அடங்கிய விமர்சனத் தைச் சொல்லத் தவறவேண்டாம்.

இந்நாவல்களில் வரும் பெயர்கள் யாவும் கற்பனையே. ஆகை யால் எந்தவொரு பெயரையோ அன்றி எந்தவொரு நிகழ்வையோ எவருடனும் தொடர்புபடுத்திப் பார்க்க வேண்டாம். இந்நூலை வெளியிட் டதன் நோக்கம் ஓய்வுநேரத்தை மகிழ்ச்சியோடு கழிப்பதற்கேயாகும். அதற்கு மேலால் நல்ல விடயங்களிருந்தால் அவற்றை இனங்கண்டு எடுத்துக்கொள்வது வாசகர்களாகிய உங்களைப் பொறுத்த விடயம்.

எழுத்தாளன் என்ன நோக்கில் நின்று இந்நாவலை எழுதி யுள்ளானோ, அதே நோக்கில் நின்று நீங்களும் இவைகளை வாசிக்க வேண்டும். அப்பொழுதுதான் நாவல்களின் உண்மைத் தாற்பரியத்தைச்

சரியாக விளங்கிக்கொள்ள முடியும் என்பதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்த இரண்டு நாவல்களும் 'கனடா முரசொலி' பத்திரிகையில் ஏற்கனவே பிரசுரிக்கப்பட்டவை என்பதை வாசக நேயர்களுக்கு ஞாபக மூட்ட விரும்புகிறேன். அதன்மூலம் என்னை எமது சமூகத்தின் மத்தியில் ஓர் எழுத்தாளன் என்று அறிமுகம் செய்து வைத்த முரசொலி பத்திரிகையின் உரிமையாளரும் பல்வைத்திய நிபுணருமாகிய டாக்டர் ஆதிகணபதி சோமசுந்தரம் அவர்களுக்கு எனது உளங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

அத்தோடு இந்த நாவல்களை பத்திரிகையில் படித்துவிட்டு, இவற்றைப் புத்தக வடிவில் வெளியிடும்படி வேண்டிக்கொண்ட வாசர்களுக்கும் நண்பர்களுக்கும் எனது மனமுவந்த நன்றிகளைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன் என்பதை ஆத்மசுத்தியோடு தெரிவித் துக் கொள்கின்றேன்.

மேலும், இந்நூல் சிறப்புடன் வெளிவருவதற்கு கணினி வடிவமைப்பு செய்து வழங்கிய சண் பிறின்டேர்ஸ் நிறுவனத்திற்கும் இதை அழகுற அச்சிட்டு நூல் வடிவில் வழங்கிய ஸ்ரீ சுப்பிரமணிய அச்சக உரிமை யாளர் திரு.தி.ஜெயராசா அவர்களுக்கும் அவரது பாரியாருக்கும் மற்றும் அங்கு கடமைபுரியும் ஊழியர்களுக்கும் எனது உளம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அத்தோடு, இந்நூலுக்கு அணிந்துரை எழுதி இந்நூலை அழகுறச் செய்த ஓய்வுபெற்ற உயர் தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் திரு. தருமலிங்கம் இராஜரட்ணம் அவர்களுக்கும் இந்நூல் வெளிவருவதற்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்த எனது துணைவியார் கோ.சரோஜினிதேவி அவர்கட்கும் மற்றும் நண்பர்களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகுக.

இந்நூல் சிறப்பாகவும் நிறைவாகவும் அமைவதன் பொருட்டு தனது பொன்னான நேரத்தையும் பொருட்படுத்தாது செவ்வை பார்த்து உதவிய செல்வி பொன்னையா சர்மிளா அவர்களுக்கும் எனது உளம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

வாசகப் பெருமக்களாகிய நீங்கள் இந்நூலைப் படித்துவிட்டு குறைநிறைகளைத் தெரியப்படுத்துவதிற்தான், எனது எதிர்கால இருப்பும்

வளர்ச்சியும் தங்கியுள்ளது என்பதை நான் நன்கு அறிவேன். எனவே குறைகளைப் பக்குவமாயும் நிறைகளை அளவோடும் அறியத்தரும்படி பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

இந்நூலை எனது அப்பப்பா மயில்வாகனம் வேலாயுதர் (கட்டையர் நடுவிலார்) அவர்களுக்கும் எனது அம்மப்பா இராமநாதர் முருகேசு (செட்டியார்) அவர்களுக்கும் அவர்களின் நினைவாகச் சமர்ப்பணம் செய்கிறேன்.

வாசகர்களின் ஆதாரவே எழுத்தாளனை இயக்கும் சக்தியாகும் என்று மறுபடியும் கூறிக்கொண்டு எனது உரையை நிறைவுசெய்கின்றேன்.

வணக்கம்!

அன்புடன்
பசுந்தீவு கோவிந்தன்.

பூக்கழி வீதி,
வெட்டாக்காடு.
நெடுந்தீவு- 5,
இலங்கை.

# பொருளடக்கம்


| | |
|---|---|
| அணிந்துரை | i |
| கதாசிரியர் உரை | v |
| படுக்கையின் கீழ் பாம்பு | 1 - 89 |
| மண்வாசனை | 90 - 183 |

# படுக்கையின் கீழ் பாம்பு

## அங்கம் : 01

தோட்டத்தில் வேலை செய்து களைத்துப்போன சிங்காரம் மதிய உணவிற்காக வீடு திரும்பிக் கொண்டிருந்தார். தகப்பன் படலையைத் திறந்து உள்ளுக்குள் வந்து கொண்டிருந்ததை அவதானித்த மகள் காவேரி, அப்பா சாப்பாட்டிற்கு வரும் இந்த வேளையில் மரணச் செய்தியைச் சொன்னால் சிலவேளை அவர் சாப்பிடாமலேயே மரண வீட்டிற்குச் செல்லுவதற்கு முயற்சிக்கலாம், இப்போது வேலை செய்து களைத்துப்போய் வருகின்றார், ஆனபடியால் சாப்பாடு கொடுத்த பிற்பாடு மரணச் செய்தியைச் சொல்லுவம் என்று தீர்மானித்துக் கொண்டு செய்தியைச் சொல்லுவதை அந்தவேளையில் நிறுத்தி வைத்துவிட்டாள்.

சிங்காரம் சாப்பிட்டு முடித்தபின் வழமைபோன்று பாக்கு வெற்றிலை போடுவதற்காக திண்ணையில் இருந்து கொண்டு,

"அந்த வெற்றிலைப் பெட்டியை எடுத்துக் கொண்டு வா பிள்ளை" என்றார். வெற்றிலைப் பெட்டியை எடுத்துக் கொடுத்துவிட்டுத் திரும்பிய காவேரி, அப்போது திடீரென்று ஏதோ ஞாபகத்திற்கு வந்தவள்போன்று,

"அப்பா, கனகம் மாமி இறந்து விட்டதாய்ச் செய்தி சொல்லிவிட்டுப் போயினம்," என்றாள். இதைக் கேட்டுச் சற்றுப் பதட்டப்பட்ட சிங்காரம்,

"என்ன பிள்ளை சொல்லுகிறாய்! யார் இந்தச் செய்தியைச் சொன்னது? எப்ப நடந்ததாம்?" என்று பரபரப்போடு கேட்டார். இரண்டு பெடியன்கள் சயிக்கிளில் வந்து சொல்லிப்போட்டுப் போறாங்கள். அவன்கள் வரும்போது கிட்டத்தட்ட பதினொன்றரை மணி இருக்கும். நீங்கள் பன்னிரண்டு மணிக்கு வீட்டிற்கு வருவீங்கள் தானே என்பதால் நான் தோட்டத்திற்கு வரவில்லை.

"அப்ப..... நான் வந்தவுடன் இதைப்பற்றி ஏன் பிள்ளை சொல்லவில்லை?" என்று இழுத்த சிங்காரத்திற்கு திடீரென்று ஏதோ மூளையில் தோன்றியது போன்று,

"விளங்கிது, விளங்கிது, செய்தியை உடனே சொன்னால் தோட்டத்தால் களைத்துப்போய் வரும் அப்பா சாப்பிடாமற் போய்விடு

வாரோ? என்ற எண்ணத்தில் சாப்பிட்டு முடிந்து வெற்றிலை போடும் நேரம் பார்த்துச் சொல்லுகிறாய், அப்படித்தானே?'' என்றார்.

ஆம் அப்பா, என்னை ஏசாதீங்கோ, அப்படிச் சொன்னது தப்பென்றால் என்னை மன்னித்துக் கொள்ளுங்கோ,'' என்று பணிவான குரலில் கூறினாள் காவேரி.

"சரி..... சரி... அப்பா மீது வைத்திருக்கின்ற பாசத் தினால் அப்படிச் செய்து போட்டாய். இதற்குப் போய் ஏசுவேனா? எப்படியிருந்தாலும் பிள்ளை, கனகம் நமது நெருங்கிய சொந்தக்காரி யாச்சே, வேளைக்குப் போக வேண்டிய கடமை ஒன்று இருக்கல்லவா? புருசனும் இல்லாதவள். அவளுக்கென்று பெரிதாய் உதவி ஒத்தாசை செய்வதற்கு யாருமில்லை. அவளுடைய தம்பியையும் தங்கச்சியையும் தவிர வேறு யாரு பிள்ளை அவளுக்கு இருக்கினம்? என்று சொல்லிக் கொண்டு போக,

"இப்ப என்ன! நேரமாய் போய்விட்டது? ஒரு மணித்தியாலந்தானே போனது அப்பா, நீங்கள் அவமீது வைத்திருக்கின்ற அதிக பாசத் தினால் கவலைப்படுகின்றீர்கள். உங்களுடைய உணர்வு எனக்குப் புரியுதப்பா,'' என்று அவருடைய மனதைச் சாந்திப்படுத்தும் பாணியில் மெதுவாகக் கூறினாள்.

"நீ பெரிய தப்புப் பண்ணிவிட்டாய் என்று நான் ஒன்றும் சொல்ல வில்லைப் பிள்ளை. எனது கவலையில் சில வார்த்தைகள் வெளிப் பட்டன, அவ்வளவுதான், மேலும் கதைத்துக் கொண்டு நிற்க நேர மில்லை. அந்த வேட்டியையும் சால்வையையும் எடுத்துக்கொண்டு வா பிள்ளை,'' என்றதும் காவேரி வீட்டிற்குள் சென்று கொடியிற்கிடந்த வேட்டியையும் சால்வையையும் எடுத்துவந்து நீட்டினாள். அவற்றை வாங்கிக் கொண்ட சிங்காரம் வழமையாக உடுப்பு மாற்றும் வடக்குத் திண்ணைக்குப் போய் உடுப்பை மாற்றிக் கொண்டு,

"போயிட்டு வாறன் பிள்ளை,'' என்று கூறிவிட்டு வேகமாய் நடந்து சென்றார்.

கனகம் வீட்டிற்குப் போவதற்கு இரண்டு மைல் தூரம் நடந்துதான் போக வேண்டும். காரணம் போக்குவரத்து வசதியற்ற ஒரு கிராமம் தான் கனகம்வீடு அமைந்திருக்கும் நாகபுரம். இது பச்சிலைப்பள்ளி

உதவி அரசாங்க அதிபர் பிரிவில் அமைந்துள்ளது. இதற்கு மேற்குப் பக்கமாயும் வடக்குப் பக்கமாயும் நீண்டு பரந்த தென்னந் தோட்டங்கள், தெற்குப் பக்கமாய் வயல்வெளிகள், கிழக்குப் பக்கமாய் சிறியகாடு என்பன அமைந்துள்ளன.

காட்டிலும் கிராமத்தில் அங்குமிங்குமாயும் காணப்படும் வான ளாவிய நாவல் மரங்களும், சிறிய பாலை மரங்களும் அந்தக் கிரா மத்தை வளப்படுத்தி நிற்கின்றன என்றால் மிகையாகாது. நாவல் மரங்களும் பாலை மரங்களும் பழுத்துக் கொட்டும் காலங்களில் அவற்றைத் தின்பதற்காக குரங்குகள் கூட்டம் கூட்டமாக வருவது வழக்கம். பாலைப் பழம், நாவற்பழம் பிடுங்கப்போகும் பையன்களும், சிறுமிகளும் குரங்குகளுக்கு கல்லால் எறிந்து அவற்றை விரட்டும்போது அவை மரக்கிளைகளில் தாவிக்குதித்து ஓடுவதும் அப்பொழுது நன்றாய்க் கனிந்த பழங்கள் உதிர்ந்து கொட்டுவதும், அவற்றை மரங்களில் ஏற முடியாத சிறுமிகள் புறக்குவதும் பார்ப்பதற்கு ரொம்ப ரம்மியமான காட்சிகள் ஆகும்.

அந்தக் கிராமத்தில் நாகபாம்புகள் மிகவும் அதிகம் என்று அந்தக் கிராமவாசிகள் பேசிக்கொள்கிறார்கள். அதனாலோ என்னவோ அந்தக் கிராமம் நாகபுரம் என்று பெயர் கொண்டுள்ளது. நாகபாம்புகள் அங்கு அதிகம் உள்ளன என்பதற்காக அந்தக் கிராமத்து மக்கள் பயந்து பயந்து பீதியின் மத்தியில் வாழுகிறார்கள் என்று எண்ணி விடாதீர்கள். ஒருபோதும் அவர்கள் அந்தப் பாம்புகளுக்குப் பயப்படுவதில்லை. காரணம் ஓர் ஆளுக்கு விதிவந்தாற்தான் நாகபாம்பு கடிக்குமாம். மற்றும்படி பக்கத்தில் கிடந்தாலும், அதன்மீது தவறுதலாய் மிதித்தாலும் கூட கடிக்கமாட்டாதாம். இது அந்தக் கிராம வாசிகளின் உறுதியான நம்பிக்கை. அதனால் அவர்கள் நாகபாம்பைக் கண்டால் அதை அடிப்பதற்கோ, கொன்றுவிடுவதற்கோ முயற்சிப்பதில்லை. அவற்றை அந்தக் கிராமத்தின் காவல் தெய்வமாகவே அம்மக்கள் கருதுகின்றனர். இதுவரை நாகபாம்பு தீண்டி எவரும் அந்தக் கிராமத்தில் இறக்கவில் லையாம். இதைப் பெரிய அற்புதமாயும் அதிசயமாயும் அம்மக்கள் கருதி வருகின்றார்கள். நாகபாம்புகள் எப்பொழுதும் நல்ல பாம்புகள் என்பதே அந்தக் கிராமவாசிகளின் நம்பிக்கை.

சிங்காரம் வேகமாய் நடந்து சென்றபடியினால் சிறிது நேரத்தில் ஒன்றரை மைல் தூரத்தைக் கடந்து விட்டார். இன்னும் அரைமைல்

தான் செல்லவேண்டும். இதுவரை நடந்து களைத்துவிட்டபடியினால், மெதுவாகத் தொடர்ந்தும் நடந்து கொண்டிருந்தார். அப்போது சற்றுத் தொலைவில் நான்கு பெண்கள் எதிரில் வந்து கொண்டிருந்தனர். அவர்கள் மரணவீட்டிற்குச் சென்றுவிட்டுத்தான் வருகின்றார்கள் என்று எண்ணிய சிங்காரம், அவர்களைக் கேட்டால், 'என்னமாதிரி மரணம் ஏற்பட்டது' என்பதை அறியலாம் என்று கருதிக்கொண்டு களைப்பையும் பொருட்படுத்தாமல் சிறிது வேகமாக நடக்கக் தொடங்கினார். அவர்களை நெருங்கியதும் அந்த நால்வரில் ஒருத்தி அவருடைய கிராமத்தைச் சேர்ந்த பூரணம் என்பதை அடையாளம் கண்டு கொண்டார். எப்படி மரணம் ஏற்பட்டது? என்பதை அறியவேண்டுமென்ற ஆவலுடன் சென்றுகொண்டிருந்த சிங்காரத்திற்கு பூரணத்தைக் கண்டதும் ஒரு தென்பு பிறந்தது. உடனே,

"என்ன பூரணம், செத்த வீட்டிற்குப் போயிட்டா வாறீங்கள்?" என்று கேட்டதும் பூரணம், "ஆம்" என்றதுதான் தாமதம்,

"கனகத்திற்கு என்ன நடந்தது? எப்படி நடந்தது? ஏன் செத்தவள்?" என்று கேள்வி மேற் கேள்விகளை அங்கலாய்ப்போடு கேட்டார்.

என்ன சொல்வது? எப்படிச் சொல்வது? என்று பூரணத்திற்கு ஒன்றும் புரியவில்லை. இருந்தபோதும் செத்த வீட்டில் மற்றையவர்கள் கதைத் ததைக் கேட்டு அறிந்த அளவில் விபரத்தைச் சொன்னாள்.

அதாவது காலையில் மகளுடன் ஆஸ்ப்பத்திரிக்குப் போனதாம். ஆஸ்ப்பத்திரியால் திரும்பி வந்ததும் மகளோடு ஏதோ சத்தம் போட்டுக் கதைத்ததாம். கதைத்துக் கொண்டிருக்கையில் மயங்கி விழுந்ததாம். உடனே மகள் அழுது குளறி அயல்வீட்டுக்காரர்களைக் கூட்டிக் கொண்டு வர, அவர்கள் ஓடிவந்து தண்ணி தெளித்து தலையைத் தூக்கி மடியில் வைத்துக்கொண்டு விசிறியால் வீசிக்கொண்டிருக் கையில் கண்ணை விழித்துப் பார்த்தாவாம். அப்பொழுது பக்கத்து வீட்டுப் பரிமளம் தலையை தடவிக்கொண்டு என்னக்கா நடந்தது? என்று கேட்டபொழுது,

"படுக்கையின் கீழ் கிடந்த பாம்பைக் கவனிக்காமல் விட்டு விட் டேனே! படுக்கையின் கீழ் கிடந்த பாம்பைக் கவனிக்காமல் விட்டு விட்டேனே! வெளியிற் திரிந்த, வேலியோரமாய்த் திரிந்த பாம்பு களையெல்லாம் அவதானித்த நான் படுக்கையின் கீழ் கிடந்த பாம்பைக்

கவனிக்காமல் விட்டுவிட்டேனே!" என்று திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்த வேளையில், மெதுமெதுவாய்க் குறைந்து குறைந்து போன சத்தம் திடீரென்று நிற்க முடிசாய்ந்து போய்ச்சாம். மடியில வைத்திருந்த பரிமளம்,

"முடிஞ்சிது கதை வைத்தியரைக் கூட்டி வாங்கோ!" என்று குளற, நின்றசனங்கள் விழுந்தடித்துக்கொண்டு போய் வைத்தியர் வெங்கடாசலத்தைக் கூட்டி வர, வைத்தியர் வந்து கைநாடியைப் பிடித்துப் பார்த்துவிட்டு,

"உயிர் போய்விட்டது போலத் தெரியுது. இது இப்ப திடீரென்று நடந்தபடியினால் எதற்கும் உடனே ஆஸ்ப்பத்திரிக்குக் கொண்டு போங்கோ!" என்று கூறினாராம்.

நின்றவர்கள் முடிந்தவேகத்தில் செயற்பட்டு ஓர் அரைமணித்தி யாலத்தில் காரில் ஏற்றி ஆஸ்ப்பத்திரிக்கு கொண்டு சென்றார்களாம். டாக்டர் சோதித்துப் பார்த்துவிட்டு உயிர்பிரிந்து விட்டது என்று உறுதி படச் சொன்னதும், அப்புறம் பொலிசு, மரணவிசாரணை அதிகாரி எல்லோரும் வந்து விசாரணைகள் விளக்கங்கள் எல்லாம் முடிந்த பிற்பாடு பிரேதத்தைக் கொடுத்திருங்கிறாங்க" என்று கதையைச் சொல்லி முடிப்பதற்குள்,

"என்ன பூரணம்! கனக்கவெல்லாம் சொல்லுகிறாய்!" என்று ஆச்சரியத்தோடு கேட்டார் சிங்காரம்.

"என்ன சிங்காரம் அண்ண! குழந்தைப்பிள்ளை மாதிரிக் கேட்கிறீங்க! இது திடீர் மரணமல்லவா! நோய்வாய்ப்பட்டு படுக்கையில், ஆஸ்ப்பத்திரி யில் கிடந்து செத்திருந்தால் ஒன்றும் தேவையில்லை. காலையில ஆஸ்ப்பத்திரிக்குப் போன மனுசி வீட்டுக்குத் திரும்பி வந்ததும் மயங்கி விழுந்து செத்தது என்றால் சும்மா விடுவாங்களே! அது மட்டுமல்ல, காலையில தாயும் மகளும் போனபோது இருந்த டாக்டர்தான் ஆள் முடிந்து கொண்டுபோனபோதும் இருந்திருக்கிறார். அப்படியிருக்கையிற் குள்ள, டாக்டர் நடவடிக்கை எடுப்பார் தானே! டாக்டருக்குச் சந்தேகம் வந்துவிட்டது, எப்படி? இறந்தது என்று. அதனால அவர் பொலிசு, மரணவிசாரணை அதிகாரிகளைக் கூப்பிட்டிருக்கிறார்கள். இது ஒன்றும் புதிதில்லையே! திடீர் மரணங்களுக்கு இப்படி விசாரணைகள் எங்கும் நடப்பது வழமைதானே!" என்று பூரணம் சொல்லி முடிக்க,

"அப்ப.... ஏன் செத்ததென்று டாக்டர் சொன்னாராம்?" என்று மறுகேள்வியைப் போட்டார் சிங்காரம். "அதுதானே எனக்கும் சரியாய்த் தெரிய வில்லை சிங்காரம் அண்ண," என்று கூறிய பூரணம் தொடர்ந்து,

"சிலர் கதைக்கினம் நாகபாம்பு கடித்திருக்கலாம் என்று. வேறு சிலர் பேசிக் கொள்ளுகினம் இருதயநோய் - அதனால இருதயம் திடீரென்று நின்றுவிட்டதென்று, உண்மை என்னவென்று எங்களுக்கும் தெரியவில்லை. இளவுவீட்டில இவற்றையெல்லாம் விளாவாரியாய் விசாரித்துக்கொண்டா இருக்கலாம்? நாலுபேர் சொன்னதைக் கேட்டது தான், இப்ப நான் சொன்ன கதை.

செத்த வீட்டிற்கு துக்கத்தில பங்கு கொள்ளப் போனம். பிரேதம் எடுக்கும்வரையும் எங்களால நிற்கமுடியவில்லை. தலைக்குமேல சோலி. பொம்பிளப்பிள்ளையை வீட்டில தனிய விட்டிட்டு வந்தனான். அதனால நான் இப்ப அவசரமாய் வீட்ட போறன். இவர்களும் தங்கதங்க சோலியோட என்னோடு வருகினம். அதுதான் கூடிக்கொண்டு போகிறம்," என்று சொல்லிமுடித்தாள் பூரணம்.

பூரணத்திற்கு வீட்டுக்குப் போகவேண்டியிருந்த அவசரத்தைவிட சிங்காரத்திற்கு கேள்வி கேட்கவேண்டியிருந்த அவசரம் முந்திக் கொண்டு வந்த நிலையில்,

"உன்னுடைய அவசரம் எனக்குப் புரியுது பூரணம். கேட்ட கேள்விகளோட இந்தக் கேள்விக்கும் பதில் சொல்லிவிட்டுப் போவன்," என்று இழுத்த சிங்காரம்,

"பிரேதம் எப்பவாம் எடுக்கினம்?" என்றார். கொழும்பிலிருந்து மகன் வந்தபிற்பாடுதான் பிரேதம் எடுக்கிறதாம். மகனுக்கு ஏற்கனவே அறிவித்துவிட்டார்களாம். அப்ப.....நான் போயிட்டுவாறன் சிங்காரம் அண்ண," என்று சொல்லி முடித்துக்கொண்டே பூரணமும் மற்றைய மூவரும் நடக்கத் தொடங்கினர்.

உறவினர் ஒருத்தி இறந்துவிட்டாளே! என்ற ஓரே கவலையோடு வந்த சிங்காரத்திற்கு பூணரம் கூறிய கதைகள் அவருடைய மனதைக் கிளறிவிட்டு வேடிக்கை பார்த்தன. மனத்திற்குள் பல கேள்விகள் எழுந்தன. பதில் சொல்ல யாருமில்லை. கவலை ஒருபக்கம், மனதில் எழும் கேள்விகள் மறுபுறம். ஒன்றையொன்று முட்டி மோதிக்கொண்டன. அதனால் மனதில் பாரம். இந்தப் பாரத்தை எப்படி இறக்குவது?

என்று யோசித்துக்கொண்டு தொடர்ந்து நடக்க ஆரம்பித்தார் சிங்காரம். யோசனை மேல் யோசனை வந்துகொண்டிருந்தன.

"இதென்ன சாகிற வயதா! அவளுக்கென்ன இப்ப நாற்பத்தைந்து வயதுதானிருக்கும். வாழவேண்டிய இரண்டுபிள்ளைகள், அதில ஒன்று பெண்பிள்ளை! அதுகும் குமர்ப்பிள்ளை! இதென்ன சாகிற வயதா! அவள் நோய்நொடியில்லாமல் நல்ல தைரியமாய்த்தானே இருந்தவள். தன்னுடைய தோட்டவேலைகளை எல்லாம் செய்து அவள்தானே இந்தக் குடும்பத்தைக் காப்பாற்றிக்கொண்டு வந்தவள். அவளுக்கு எப்படி இருதயம் திடீரென்று நிற்கும்? நம்ப முடியவில்லையே!

பாம்பு கடித்திருந்தால் டாக்டருக்குத் தெரியாமலா போய்விட்டது? இவ்வளவு படித்த டாக்டருக்கு பாம்பு கடித்து இறந்தது தெரியாமலிருந் ததா?" என்று பலவாறு மனதிற்குள் தானே கதைத்துக்கொண்டு சென்றார். தனக்குள்ளேயே தன்பாட்டில் கதைத்துக்கொண்டு சென்ற வேளையில் எதிரில் வந்துகொண்டிருந்த சுந்தரத்தைக் கண்டார். சுந்தரம் கனகத்தின் ஒரே தம்பி, சிங்காரத்திற்கு ஒன்றுவிட்ட தம்பி.

சிங்காரத்தை நெருங்கிய சுந்தரம்,

"மோசம் போய்விட்டோம் அண்ண! மோசம் போய்விட்டோம் அண்ண!'' என்று சொல்லி கொண்டு சிங்காரத்தைக் கட்டிப்பிடித்து கொண்டு விமமிவிம்மி அழுதார். சிங்காரத்தாலும் தாக்குப்பிடிக்க முடியவில்லை. அவரும் சேர்ந்து அழுது கொண்டே,

"என்ன தம்பி நடந்தது? அக்காவிற்கு என்ன நடந்தது? அக்காவிற்கு என்ன நடந்தது? எப்படி இந்த மரணம் வந்தது?" என்று அக்கறையோடு கேட்டார். சிறிது நேரத்தின் பின் இருவரும் கவலையையும் அழுகை யையும் கட்டுப்படுத்திக்கொண்டு கதைக்க ஆரம்பித்தனர்.

சுந்தரத்திற்கு கதை இலகுவில் வரவில்லை. இருந்தபோதும் வளர்த்த நாய் முகத்தைப் பார்ப்பதுபோல் சிங்காரம் தனது முகத்தைப் பார்த்துக்கொண்டு நின்றதைச் சகிக்க முடியாத சுந்தரம் தன்னிடமிருந்து சரியான செய்தியை அறியமுனைகிறார் என்பதை உணர்ந்துகொண்டு,

"வாருங்கண்ண என்னோடு," என்று சொல்லி தமையனின் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு நடக்க ஆரம்பித்தார். தாகத்தில் நிற்பவனுக்கு எதுகும் பேசாமல் என்னுடன் வா என்று கூறினால் எப்படியிருக்குமோ,

அப்படியான நிலையில் நின்ற சிங்காரம்,

"எங்க போகிறாய், ஏன் போகிறாய்? என்று ஒன்றும் சொல்லாமல் உன்னுடன் வாருங்கோ என்று கூப்பிடுகிறாய், நான் அக்கா வீட்டிற்கல்லவா போய்க்கொண்டிருக்கிறேன்," என்று நடந்து கொண்டே கேட்டார்.

"நான் இப்ப அக்காவிட்டில நின்றுதான் வாறன். அக்காவினுடைய மகன் மகேசு, கொழும்பிலிருந்து வந்துகொண்டிருக்கிறான். நாமள் இருவரும் பளை பஸ் ஸ்டான்டுக்குப்போய் அவனைக் கூட்டிக்கொண்டு வரவேண்டும். அவன் வந்தபிற்பாடுதான் பிரேதம் எடுக்கவேண்டும். நீங்களும் என்னோடு வந்தால் எனக்கும் ஆறுதலாயிருக்கும். கவலையோடும் அங்கலாய்ப்போடும் வருகின்ற மகேசுவுக்கும் ஆறுதலாயிருக்கும். நீங்கள் அவனுக்கு ஆறுதல் சொல்லி பக்குவமாய்க் கூட்டிக்கொண்டு வருவீங்க. என்னுடைய கதையைவிட உங்களுடைய கதையை அவன் அக்கறையோடும் அடக்கத்தோடும் கேட்பான். நான் தனிய போய்க் கதையைச் சொல்ல, அவன் சிலவேளை குளம்பினாலும் கொண்டாலும் என்னால் சமாளிக்க முடியாது போகலாம். அப்படியேதும் நடந்தால் பஸ் ஸ்ரான்றில நின்று பார்க்கிற சனங்கள் ஏதும் தப்பாக நினைக்குங்கள்," என்று சொல்லிக் கதையை முடிப்பதற்குள் சிங்காரம், சீத்தப் பூரான்கொட்டை வெடித்தது போன்று,

"என்ன தம்பி, சொல்லுகிறாய்? முதலில மோசம் போய் விட்டோம் அண்ண, என்று சொன்னாய், இப்ப அவன் குளம்பினாலும் கொண்டாலும் என்று சொல்லுகிறாய். இவற்றையெல்லாம் வைத்துப் பார்க்கும்போது கனகத்தினுடைய மரணத்தில ஏதோ மர்மம் மறைந்திருக்குப் போலத் தெரியுது. என்ன தம்பி நடந்தது? எப்படி கனகம் செத்தது? அவள் பூரணத்தைக் கேட்டன். அவள் தனக்கும் வடிவாய்த் தெரியாது, பாம்பு கடித்ததோ - இருதயத் தாக்கமோ என்று சனங்கள் கதைக்கிதுகள் என்று சொன்னாள். அவள் சொன்ன காரணங்கள் எனக்குச் சரியாய்ப் படவில்லை. என்னுடைய தங்கச்சி கனகத்தைப் பற்றி எனக்குத் தெரியாதே! இப்ப நீ சொல்லுகிற கதையைப் பார்க்க எனக்குச் சந்தேகம் வலுக்கின்றது. என்னுடைய இருதயம் வெடிச்சிடும் போல கிடக்கு. உண்மையில என்ன நடந்த தென்று சொல்லுதம்பி," என்று ஏக்கமும் பாசமும் உரிமையும் கலந்த தொனியில் கேட்டார்.

"உங்களுடைய கவலையும் நிலைமையும் எனக்குப் புரியுது

அண்ண. நீங்கள் கூறுவதுபோன்று எனக்கும் இந்த மரணத்தில் சந்தேகமாய்த் தானிருக்கின்றது. ஆனால் எனக்கும் சரியான உண்மை தெரியாது அண்ண," என்று சுந்தரம் கூறி முடிப்பதற்குள் சிறிது உணர்ச்சிவசப்பட்ட சிங்காரம்,

"என்னதம்பி சொல்லுகிறாய்? நீ ஆஸ்ப்பத்திரிக்குப் போனனீ அல்லவா? மரண விசாரணையைப் பார்த்தனீ அல்லவா? உனக்கு எப்படி தெரியாமலிருக்கும்? நீ எதையோ மறைக்கிறாய். உண்மையை எனக்குச் சொல்லப்படாது என்று நீ நினைத்தால், அது உன்னைப் பொறுத்த விடயம். ஆனால் என்னை ஒரு முட்டாள் என்று நினைக்கக் கூடாது," என்று சற்று கோபமும் விரக்தியும் கொண்ட தொனியில் கூறினார்.

"அண்ண, உங்களுக்கேன் நான் பொய் சொல்லவேண்டும்? மரண விசாரணையை எல்லோரும் பார்க்கக் கூடியதாய் அவர்கள் நடத்தவில்லை. ஆஸ்ப்பத்திரியிலுள்ள தனி அறையிலதான் நடத்தின வங்க. அறையிற்குள்ள டாக்டரும் பொலிஸ் இன்ஸ்பெக்ரரும் மரண விசாரணை அதிகாரியும்தான் இருந்தனர். பக்கத்துவீட்டு பரிமளத்தின் மடியிற்தானே உயிர் போனது? அதனால் முதலில் பரிமளத்தை அறையிற்குள் கூப்பிட்டு விசாரித்தனர். பரிமளம் நடந்ததை அப்படியே சொன்னாவாம். அப்புறம் கனகம் அக்காவினுடைய மகள், உமாவை அறைக்குள் அழைத்து விசாரித்தார்கள். உமாவும் நடந்ததை அப்படியே சொன்னாவாம்," என்று சுந்தரம் சொல்லிக் கொண்டுபோக, இடையிற் குறுக்கிட்ட சிங்காரம்,

"எப்படிச் சொன்னாவாம்?" என்ற கேள்வியைப் போட்டார். அதற்கு சுந்தரம்,

"தாய் மயங்கி விழுந்ததென்றும், உமா அழுதுகுளறிக்கொண்டு ஓடிப்போய் பக்கத்து வீட்டு ஆட்களைக்கூட்டி வந்ததாயும், முதலில் பரிமளம் ஓடிவந்து! கனகத்தின் தலையை தனது மடியில் தூக்கி வைத்துத் தண்ணி தெளித்ததாயும், சிறிது நேரத்தால் விழித்துப் பார்த்த கனகம் அக்கா, 'படுக்கைக்குக் கீழ் கிடந்த பாம்பைக் கவனிக் காமல் விட்டுவிட்டேனே!' என்று திரும்பத் திரும்பக் கூறிக்கொண்டு சோர்ந்து போக பின் திடீரென முடி சாய்ந்ததாயும். உடனே 'முடிஞ்சிது கதை வைத்தியரைக் கூட்டிவாருங்கோ,' என்று பரிமளம் கத்தியதாயும்,

அப்புறம் வைத்தியர் வந்து நாடியைப் பிடித்துப் பார்த்துவிட்டு ஆஸ்ப் பத்திரிக்குக் கொண்டுபோகச் சொன்னதாயும் என்று எல்லாவற்றையும் விபரமாய் உமா சொல்லியிருக்கிறாள்," என்று கூறிமுடிக்க, அடுத்த கேள்விக்குத் தன்னைத் தயார்ப்படுத்தி வைத்திருந்த சிங்காரம்,

"அதெல்லாம் சரி.. கனகம் மயங்கி விழுவதற்குமுன் என்ன நடந்தது, என்று உமா சொன்னாளா?" என்ற கேள்வியைப் போட்டார்.

"எனக்கது தெரியாது அண்ண, நான் அதைக்கேட்கவுமில்லை. நான் கனகம் அக்காவை ஆஸ்ப்பத்திரிக்குக் கொண்டு போகிறார்கள் என்ற செய்திகேட்டு ஆஸ்ப்பத்திரிக்குப் போனனானே தவிர, மயங்கி விழுகிறதற்கு முதல் வீட்டில என்ன நடந்தது என்று எனக்குத் தெரியாது அண்ண. இப்ப நான் சொன்ன கதைகளும் ஆஸ்ப்பத்திரியில சனங்கள் சொன்னவைதான். நான் எதையும் நேரில பார்க்கவில்லை அண்ண," என்றார் சுந்தரம். உடனே சுட்டுவிரலால் தனது நாடியைத் தட்டிய சிங்காரம், எதையோ கண்டுபிடித்தவர்போன்று,

"அங்கதான் இருக்கு விஷயம்! கனகம் மயங்கி விழுவதற்குமுன் வீட்டில என்ன நடந்தது? என்பதிலதான் மர்மம் அடங்கியிருக்கு. சரி.. அதைப்பற்றி அப்புறம் பார்ப்பம், இப்ப நேரத்தை மினக்கெடுத்தாது போய் மகேசனைக் கூட்டிவருவோம்," என்று கூற இரண்டு பேரும் வேகமாய் பஸ்நிலையம் நோக்கிச் சென்றனர். போய்க்கொண்டி ருக்கும்போது சிங்காரம்,

"என்ன நடந்தது என்று மகேசுவுக்குத் தெரியப்படுத்தி விட்டிங் களோ? அல்லது அம்மாவிற்கு கடுமையான வருத்தம் என்றுதான் அறிவித்தீங்களோ?" என்று கேட்டார்.

"எப்படி அண்ண, தாய் இறந்து போய்விட்டா என்று அறிவிக்க முடியும்? கொழும்பிலிருந்து பளைக்கு வருவதற்கு எத்தனை மணித்தி யாலம் பிடிக்கும்? அவ்வளவு நேரமும் இந்த மரண வேதனையைத் தாங்க முடியுமே அண்ண!" என்று சொல்ல, வாழ்க்கையில் பலதையும் பத்தையும் அனுபவித்த அனுபவசாலியான சிங்காரம்,

"நீங்க நல்ல மூளையாய்த்தான் செய்திருக்கின்றீங்க," என்று கூறினார். அந்தவேளையில் மணிக்கூட்டைப் பார்த்த சுந்தரம் கொஞ்சம் கெதிப்பண்ணிப் போவம் அண்ண. பெடியன் வாறதுக்குள்ள நாம பஸ் ஸ்ரான்டுக்குப் போய் விடவேண்டும்," என்று கூறிக்கொண்டு

மேலும் வேகமாய் நடக்கத் தொடங்கினார். நிலைமையை உணர்ந்தவர் போன்று சிங்காரமும் கூடவே வேகமாய் நடந்தார்.

பஸ் நிலையத்தில் ஏறக்குறைய ஒரு மணித்தியாலமாய் கொழும்பு பஸ்வண்டிக்காகக் காத்திருந்த பொழுது, பஸ்வண்டி ஒன்று அரைமைல் தூரத்தில் வருவதை சிங்காரம் பார்த்துவிட்டார். உடனே,

"சுந்தரம் பஸ்வண்டி ஒன்று வந்து கொண்டிருக்கின்றது. கொழும்பு பஸ்வண்டி போலத் தான் தெரியுது. இதில் அவன் வரக்கூடும். நாம எதற்கும் ஆயத்தமாய் நிற்பம்," என்று கூறி சுந்தரத்தை உசார்ப்ப டுத்தினார். பஸ்வண்டி பளை பஸ் நிலையத்தில் நிறுத்தப்பட்டது. இருவரும் வேகமாக பஸ்வண்டியின் வாசல் பக்கம் சென்றனர். மகேசு ஒரு சிறிய கைப்பையோடு இறங்கினான். அவர்களைக் கண்டதும்,

"என்ன மாமா நடந்தது? அம்மாவிற்கு ஒன்றும் ஆபத்தில்லையே?" என்று ஆதங்கத்தோடும் அங்கலாய்ப்போடும் கேட்டான்.

"ஒன்றுக்கும் அவசரப்படவேண்டாம் மகேசு. எங்களோடு வாங்கோ," என்று கூறி அவரைக் கூட்டிப்போய் பஸ்நிலையத்தில் நின்ற ஒரு காரில் ஏற்றிவிட்டு "புறப்படுவம் அண்ண," என்று கார்ச் சாரதிக்கு சுந்தரம் கூற, எல்லாவற்றையும் ஏற்கனவே தெரிந்துவைத்திருந்த கார்ச்சாரதி நாகபுரத்தை நோக்கிப் புறப்பட்டார். இதை அவதானித்த மகேசு,

"என்ன மாமா, அம்மாவிற்கு கடுமையான வருத்தம் என்று அறி வித்திருந்தீங்க, இப்பவீட்டுக்குப் போய்க்கொண்டிருக்கிறீங்க, ஆஸப்பத்திரி யால அவ்வளவு கெதியில் வந்துவிட்டாவா? என்ன வருத்தம் வந்தது இவ்வளவு கெதியில குணமடைவதற்கு? நல்லாய்க் குணமடைந்து விட்டாவோ? அல்லது அரைகுறையில துண்டை வெட்டி அனுப்பி விட்டாங்களோ? தற்போதைய டாக்டர்களை நம்பமுடியாது மாமா. நோயாளிகள் அதிகமானால் அரை குறையில துண்டை வெட்டி வீட்டுக்கு அனுப்பிப் போடுவாங்க," என்று மகேசு சொல்லிக் கொண்டுபோக, 'சாடிக்கு ஏற்ற மூடிபோல்' பதில் அமையவேண்டும் என்று எண்ணிய சுந்தரம்,

"அவங்க துண்டு வெட்டி அனுப்பித்தான் வீட்டுக்குக் கொண்டு வந்தனாங்க. நல்ல சுகமா அல்லது அரைகுறைச் சுகமா என்பதைப்

போய்ப் பார்த்தாற்தான் தெரியும். எதற்கும் நீ மனதைத் திடப்படுத்திக் கொள்," என்றார்.

"என்ன மாமா சொல்லுகிறீங்க? மனதைத் திடப்படுத்திக்கொள்ளிற அளவிற்கு என்ன மாமா பிரச்சனை? நீங்க சொல்லிற கதையைப் பார்த்தால் எனக்குப் பயமாய்க்கிடக்கு. ஏதும் சீரியஸே மாமா?" என்று சுந்தரத்தின் தோளை உசுப்பிவிட்டுக் கேட்டான் மகேசு. சுந்தரம் பதில் சொல்லுவதற்கு வாயெடுக்க கார் வீட்டுக் கடவையில் நின்றது. காரின் கதவுப் பக்கத்திலிருந்த சுந்தரம் முதலில் இறங்கி கதவைத் திறந்து பிடித்துக்கொண்டு,

"மகேசு, அம்மா இறந்துவிட்டா!" என்றார்.

"என்னம்மா! என்னம்மோ!" என்று குளறியபடி காரிலிருந்து இறங்கி ஓடிப்போய் வளத்திக்கிடந்த அம்மா மீது விழுந்து அழுதான் மகேசு. அவனுடைய அழுகையை நிறுத்த யாருமே முயற்சிக்கவில்லை. காரணம், நன்கு அழுதாற்தான் கவலை முற்றாகத் தீரும் என்பது அவர்களின் விளக்கம். அது உண்மையும் கூட. கடைசியில் தங்கை உமாவையும் சித்தியையும் மாமா சுந்தரத்தையும் கட்டிப்பிடித்து கவலை தீர அழுதான். கண்ணீர் ஆறாய் ஓடியது. 'ஆண்டவனின் தீர்ப்பை யார்தான் மாற்றமுடியும்! அழுவதுதான் மனிதனால் முடிந்தகாரியம்,' என்று இருந்தவர்கள் பேசிக்கொண்டனர்.

தொடர்ந்து ஈமைக்கிரிகைகள் எல்லாம் நிறைவு பெற்று பி.ப. ஆறு மணியளவில் நாகபுரம் மயானத்தில் கனகத்தின் உடல் தீயுடன் சங்கமமாகியது. நெருங்கிய உறவினர்களும் அயலவர்களும் கிராம வழமைப்படி மன ஆறுதலையும் வேண்டிய உதவிகளையும் வழங்கும் பொருட்டு அன்றிரவு கனகம் வீட்டில் தங்கியிருந்தார்கள். வீட்டில் மயான அமைதி நிலவியது.

## அங்கம் : 02

இரவு பத்து மணியிருக்கும், திண்ணையில் தனியாக யோசித்துக் கொண்டிருந்த மகேசு எழுந்து சென்று அவனுடைய மாமா சுந்தரத்தின் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டான். மகேசு தனது பக்கத்தில் ஏன் வந்து உட்கார்ந்திருக்கிறான் என்பதை ஊகித்துக்கொண்ட சுந்தரம் மெதுவான குரலில்,

"அம்மாவின் மரணத்திற்கு என்ன காரணம் என்பதை அறியத் தானே, இப்ப எனக்குப் பக்கத்தில் வந்திருக்கியாய்?" என்று கேட்டான்.

"ஆம் மாமா, எல்லாம் முடிந்து விட்டது. ஆனால், ஏன் அம்மா இறந்தவ என்ற கேள்விக்குரிய பதில் இன்னும் முடியவில்லை," என்று தழதழத்த குரலில் கூறினான் மகேசு.

"உன்னுடைய கவலையும் ஆதங்கமும் எனக்குப் புரிகின்றது மகேசு. இதற்கு ஒரே வழிதான் உண்டு. நாளைக்குக் காலை நேர ஆஸ்ப்பத்திரிக்குப் போறம், டாக்டரைப் பார்க்கிறம், அவவிடம் மரணத்திற்கான காரணத்தைக் கேட்கிறம், டாக்டர் என்ற முறையில மரணத்திற்கான காரணத்தை டாக்டர் சொல்லித்தானே ஆகவேண்டும்," என்றார் சுந்தரம்,

"அதுசரி மாமா, மரணவிசாரணை முடிவடைந்தபொழுது நீங்கள் அங்கு நின்றனீங்கதானே? அப்பொழுது காரணத்தைச் சொல்லி இருப்பார்கள் தானே? அது உங்களுக்குத் தெரியும்தானே?" என்று கதையை இழுத்தான் மகேசு.

"நீ சொல்லுவது சரிதான் மகேசு, காரணத்தைச் சொன்னார். அதாவது, 'இயற்கை மரணம் என்று தீர்ப்பளிக்கிறேன்,' என்றார். என்ன காரணத்தால் இந்த இயற்கை மரணம் ஏற்பட்டது என்று விளக்கம் கேட்டுக் கொண்டு இருக்கின்ற நிலைமையில அப்போது நாங்கள் இருக்கவில்லை. அதனால அதைப்பற்றி அப்போது பெரிதாய்ச் சிந்திக்கவுமில்லை. ஆனபடியினால் டாக்டரிடம் இதைப்பற்றிக் கேட்டாற் தான் இந்த இயற்கை மரணத்திற்கான உண்மைக் காரணத்தை தெரிந்து கொள்ள முடியும். அதைப் பற்றி தற்பொழுது எனக்கு ஒன்றுமே தெரியாது" என்று பதில் அளித்தார் சுந்தரம்.

இவற்றையெல்லாம் நன்கு காது கொடுத்துக் கேட்டுக்கொண்டிருந்த உமா விம்மிவிம்மி அழும் சத்தம் கேட்டது. உடனே மகேசுவும் சுந் தரமும் உமாவிடம் சென்று,

"அழாத உமா, அழாத. அழுது என்ன நடக்கப்போகின்றது" என்று ஆறுதல் கூறிக்கொண்டிருக்க, அவர்களைத் தொடர்ந்து சென்ற சித்தி,

"அம்மா போன கவலையை உமாவால் தாங்க முடியுதில்லை.

அதுதான் அது விம்மிவிம்மி இன்னும் அழுது கொண்டிருக்கிது. அது என்ன செய்யும்? பாவம்!" என்று கூறிக்கொண்டு உமாவின் தலையைத் தடவி வழிந்த கண்ணீரையும் துடைத்து ஆறுதல் படுத்தினாள்.

அன்று இரவு முழுவதும் மகேசுவுக்குத் தூக்கமே இல்லை. அம்மாவை இழந்த கவலை ஒருபக்கம், மரணத்திற்கான காரணம் தெரியாத கவலை மறுபக்கம். அந்தச் சிந்தனைகளிலேயே இரவு முழுவதும் கழிந்தது என்றால் மிகையாகாது. மருமகனுடைய நிலையைப் பார்த்து சுந்தரத்திற்கும் தூக்கம் இல்லை. விடியப்புறம் வரை விழித்திருந்த சுந்தரம், உடற்களைப்பினாலும் மன வேதனையாலும் பொழுதுவிடியும் வேளையில் அயர்ந்து தூங்கிவிட்டார். இதை அவதானித்த மகேசு காலை எட்டு மணிக்குப் புறப்பட்டாற்தான் ஒன்பது மணியளவில் ஆஸ்ப்பத்திரிக்குப் போய்ச்சேரலாம் என்று எண்ணிக் கொண்டு சுந்தரத்தை தட்டி எழுப்பி,

"மாமா, மாமா, எழும்புங்கோ, எட்டு மணிக்குப் புறப்பட்டாற்தான் சனங்கள் வருவதற்குமுன் டாக்டரைப் பார்த்து கதைக்கமுடியும். சனங் கள் கூடினால் அவவும் ஏதும் சாக்குப்போக்குச் சொல்லப்பாப்பா" என்று தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தும் தொனியில் கூறினான் மகேசு. சுந்தரத்திற்கு பெரிய அலுப்பாயிருந்தபோதும் மகேசுவினுடைய ஆதங்கத்தைப் புரிந்துகொண்டபடியினால் சோம்பலைப் பொருட் படுத்தாது,

"அது சரிதான் மகேசு" என்று சொல்லிக்கொண்டே எழுந்தார். நேரம் எட்டு மணி ஆகிக்கொண்டிருந்தது. ஆஸ்ப்பத்திரிக்குப் புறப்படு வதற்காகத் தயாராகிக்கொண்டிருந்த அண்ணன் மகேசுவையும் மாமா சுந்தரத்தையும் அவதானித்த உமா மறுபடியும் விம்மிவிம்பி அழுதாள். அவளுக்கு ஆறுதல் கூறுவதில் அரை மணித்தியாலம் சென்றுவிட்டது. நேரம் எட்டு முப்பது ஆகிவிட்டதை அவாதனித்த மகேசு சித்தியைப் பார்த்து,

"சித்தி, உமாவைக் கவனமாய்ப் பார்த்துக் கொள்ளுங்கோ, அம்மாவினுடைய பிரிவை அவளால தாங்கமுடியுதில்லை. நானும் மாமாவும் ஆஸ்ப்பத்திரிக்குப் போய் 'அம்மா ஏன் இறந்தவா?' என்பதை அறிந்து கொண்டுவாறம்," என்று கூறிவிட்டு மாமா சுந்தரத்துடன் புறப்பட்டான். இரண்டு பேரும் ஆஸ்ப்பத்திரியை நோக்கி நடந்து கொண்டி

ருக்கும்பொழுது,

"மகேசு, ஒரு விடயத்தைக் கவனித்தாயா? உன்னுடைய மனம் கவலை நிறைந்து குழம்பமாக இருக்கும் இந்த நிலைமையில நீ அதை அவதானித்திருக்கமாட்டாய் என்றுதான் இந்தக் கேள்வியை இப்பொழுது கேட்கிறேன்," என்றார் சுந்தரம்.

"என்ன மாமா சொல்லவாறீங்க? இந்த நிலைமையில என்னால அதிகம் யோசிக்கவும் முடியாது. ஆனபடியினால் சொல்லவாறதை நேரடியாகச் சொல்லுங்கோ மாமா, என்னைக் கேள்வி கேட்டு உள்ள மண்டையையும் பழுதாக்கவேண்டாம்," என்று சற்று அழுத்தமான குரலில் கூறினான் மகேசு.

"உன்னுடைய மனநிலை எனக்குப் புரியுது மகேசு. அதனால விடயத்தை நேரடியாய்ச் சொல்லுகிறேன். உன்னுடைய சித்தி அதுதான் எனது தங்கச்சி இருக்கிறாளே அவளுடைய புருசன் காங்கேசு அதாவது உன்னுடைய சித்தப்பா, அதாவது என்னுடைய மச்சான் செத்த வீட்டிற்கு வரவில்லை. நான் தங்கச்சி அன்னத்திடம் இதைப் பற்றிக் கேட்டனான். அவள் சொன்னாள்,

"அவருடைய தாய்க்குச் சுகமில்லையென்றும், அவவை ஆஸ்ப்பத்திரிக்குக் கூட்டிச் செல்லவேண்டும் என்றும் கூறிவிட்டு, அவர் குடத்தனைக்குத் தாயிடம் போய்விட்டார். இந்தத் துக்ககரமான நிகழ்ச்சிக்கு அவர் வராதபடியினால், தாய்க்கு ஏதும் கடுமையான வருத்தமோ என்னவோ தெரியவில்லை. என்னவென்று அறியாமல் நாம திடீரென்று குறை சொல்லக்கூடாது அண்ண," என்று கவலையோடு சொன்னாள். அப்பொழுது நான் கேட்டன்,

"எப்ப போனவர்?" என்று, அவள் சொன்னாள்,

"அக்கா மயங்கிவிழுந்து அறிவில்லாத நிலையில் ஆஸ்ப்பத்திரிக்குக் கொண்டுபோகும் பொழுதுதான், தன்னிடம் தாயின் நிலைமையைப் பற்றிக் கூறிவிட்டு போனவர்," என்று.

"ஆள் இன்னும் திரும்பி வரவில்லை.

அவன் உனக்குச் சித்தப்பாதான். ஆனால்....," என்று சுந்தரம் கதையைச் சொல்லி முடிப்பதற்கிடையில் குறுக்கிட்ட மகேசு,

"ஆனால்... என்ன மாமா" என்று சற்று அக்கறையோடு கேட்கவே, சற்று உணர்ச்சி வசப்பட்ட சுந்தரம்,

"ஆனால்..... அவன் உன்னுடைய அப்பனோடு கூடப்பிறந்த தம்பியே? இல்லைத்தானே! எங்கவோவிருந்து பெண் எடுக்க வந்தவன். உன்னுடைய சித்தியைத் திருமணம் செய்ததால சித்தப்பாவாகினான். அவன் தன்னுடைய புறத்திக் கோலத்தைக் காட்டிவிட்டான், பார்த்தியே! 'அகத்தி ஆயிரம் காய் காய்த்தாலும் புறத்தியே புறத்தி' என்று ஒரு பழமொழி இருக்குத் தெரியுமா? அதன் அர்த்தம் இதுதான். புறத்தியான் எப்பொழுதும் புறத்தியான்தான். அதற்குரிய செய்றபாடுதான் அவனிட மிருக்கும். அது அவனுடைய பிழையில்லை, அது இயற்கையின் கோலம். அப்படிப்பட்டவனை நல்லவன் என்று நம்பினோமே! நமக்கு இதுவும் வேண்டும் இன்னமும் வேண்டும். அவனை நல்லவன் என்று நம்பியது நம்மளுடைய தப்பு. நாமள் விட்ட தப்பிற்குரிய தண்டனையை அனுபவித்துத்தான் ஆகவேண்டும். ஆண்டவன் மூளையைத் தந்திருக் கிறான். அதை நாம் சரியாகப் பயன்படுத்தவேண்டும். பிழையாய்ப் பயன்படுத்தினால் அதற்குரிய பெறுபேற்றை அனுபவித்துத்தான் ஆக வேண்டும். இது இயற்கையின் நியதி. இதற்கு யாரும் விதி விலக்கல்ல. அதுதான் நமக்கும் நடந்திருக்கின்றது," என்று எதையோ சூசகமாய்ச் சொல்ல முனைபவர் போன்று சொன்னார். மேலும் கதையைத் தொடர்ந்த சுந்தரம்,

"மகேசு, உன்னுடைய விசுவமடுத் தோட்டக் காணியில் நிறைய மிளகாய்க் கன்று வைத்துஇருப்பதும், இப்பொழுது அவை நிறை காயும் பழமுமாய் இருப்பதும் உனக்குத் தெரியும்தானே...?" என்று கூறிக்கொண்டு போகும்போது இடையிற் குறுக்கிட்ட மகேசு,

"ஓம், அது எனக்குத் தெரியும். நான் போன மாதம் இங்கு வந்த பொழுது அவற்றைப் போய்ப்பார்த்து, வேலை ஆட்களையும் ஒழுங்கு படுத்தி நல்லபடியாய்ப் பார்த்துக்கொள்ளும்படி அம்மாவிடம் கூறிவிட்டுப் போனது நான்தானே! அதற்கும் அம்மாவினுடைய மரணத்திற்கும் என்ன தொடர்பு?" என்று ஆச்சரியம் கலந்த தொனியிற் கேட்டான் மகேசு.

கதையைத் தொடர்ந்த சுந்தரம், "கிழமைக்கொரு தடவை, சில வேளை இரண்டு கிழமைக்கு ஒரு தடவை, அம்மா விசுவமடுவிற்குப்

போய்வந்தா. அப்பொழுதெல்லாம் உமாவையும் வீட்டையும் பார்த்துக் கொள்ளும்படி உன்னுடைய சித்தியிடமும் சித்தப்பாவிடமும்தான் கூறிவிட்டுச் சென்றார். அந்தளவிற்கு அவன்மீது நம்பிக்கையும் பாசமும் வைத்து உங்கள் அம்மா நடந்திருக்க, அவன் செத்தவீட்டிற்கும் வராமல் தாய்வீட்டில் போய் நிற்கிறான் என்றால் அவனைப் பற்றி என்ன நினைக்கிறது? அவனை நல்லவன் என்றா சொல்லலாம்? வீட்டையும் உமாவையும் ஒழுங்காய்ப் பார்த்தவனென்றால் இப்படிச் செய்வானா? அவன் பிறத்திக் குணத்தைக் காட்டிவிட்டான்'' என்று சுந்தரம் மேலும் எதையோ சூசகமாய்ச் சொல்லுவது போன்று கூறிமுடிக்க, அதை விளங்கிக் கொள்ளாத மகேசு,

“அவருடைய தாய்க்கு ஏதும் கடுமையான சுகயீனமோ? என்னமோ? இல்லாவிட்டால் சித்தப்பா வராமலிருக்கமாட்டாரே! எங்களோட அவர் நல்லாய்த்தானே இருந்தவர். இப்பவும் நல்லாய்த்தான் இருக்கினம்,'' என்று சற்று அனுதாபத் தொனியில் பதிலுக்கு கூறினான்.

“நான் சும்மா சொன்னான். சரி,சரி அதைவிடு. நாம இப்ப போற விடயத்தைக் கவனிப்பம்,'' என்று சுந்தரம் கூறிமுடிக்க இருவரும் ஆஸ்ப்பத்திரி வாசலை அண்மித்தனர்.

நோயாளிகளைப் பார்த்துக் கொண்டிருந்த டாக்டர் தனது அறையிலிருந்தவாறே இவர்கள் இருவரையும் அவதானித்தார். சுந்தரத்தைக் கண்டதும் இவர்கள் ஏன் வந்துள்ளார்கள் என்று டாக்டருக்குப் புரிந்து விட்டது. உடனே வெளியில் வந்த டாக்டர் இருவரையும் அண்மித்து,

“என்ன விடயமாய் வந்துள்ளீர்கள்?'' என்று கேட்டார்.

“உடனே மகேசு,

“டாக்டர் அம்மா, நேற்றுமுன்தினம் இறந்துபோன கனகம் என்னுடைய அம்மா. மரணவிசாரணையில் இயற்கை மரணம் என்று தீர்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. அம்மா இதுவரை பெரிய ஒரு நோயாளியாக இருந்ததில்லை. சாதாரணமாய் எல்லோருக்கும் போன்று காய்ச்சல் தலைவலி என்றுதான் வந்துபோகும். அப்படிப்பட்ட அம்மாவிற்கு எப்படி திடீர் மரணம் வந்தது? என்று புரியவில்லை. அது மட்டுமல்லாமல், அம்மாவின் உயிர் பிரியும்தறுவாயில் “படுக்கையின் கீழ் கிடந்த பாம்பைக் கவனிக்காமல் விட்டுவிட்டேனே!'' என்று திரும்பத் திரும்ப கூறியிருக்கின்றார். இந்த வார்த்தை மேலும் சந்தேகத்தை உருவாக்கு

கிறது. எது எப்படியிருந்தபோதும், இந்தத் திடீர்மரணம் எப்படி அம்மாவிற்கு வந்தது என்று டாக்டர் என்ற முறையில் உங்களுக்கு நிச்சயமாய்த் தெரிந்திருக்கும்.

நானும் கொஞ்சம் படித்தவன். கொழும்பில் எழுதுவினைஞராக வேலை செய்கிறேன். என்னைப் பற்றி விளம்பரப்படுத்துவதற்காக இதை நான் சொல்லவில்லை. நீங்கள் சொல்லப்போகும் காரணத்தை என்னால் புரிந்து கொள்ளமுடியும். அது என்ன காரணமாயிருந்தாலும் அதை ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் எனக்குண்டு என்பதைத் தெரி யப்படுத்து வதற்காகவே என்னைப் பற்றிச் சொன்னேன். அதற்காக ஒன்றும் தப்பாக எண்ண வேண்டாம் டாக்டர்," என்று கூறியதும்,

"சீ...சீ... அப்படி நினைப்பதற்கு ஒன்றுமில்லை, எனக்கு எல்லாம் புரியுது. இந்தளவிற்கு நீங்கள் கூறுகின்றபடியினால் நான் உண்மையைச் சொல்ல விரும்புகிறேன்.

"ஆனால்...." என்று கதையை விழுங்கிய டாக்டர் சுந்தரத்தைப் பார்த்து,

"நீங்கள் என்னோடு வாங்கோ," என்று கூறி சுந்தரத்தை வேறொரு அறைக்கு அழைத்துச் சென்றார். சிறிது ஆழமாய் யோசித்துவிட்டு,

"மிஸ்டர் சுந்தரம், இப்பொழுது உண்மைக் காரணத்தை நான் அவருக்குச் சொன்னால், அதனால் ஏதும் பாதகமான விளைவு ஏற்பட்டால், எல்லோருடைய மத்தியிலும் விடயம் களாபுளாயாய்ப் போய்விடும். அப்புறம் அதையிட்டு கவலைப்பட வேண்டி வரலாம். அப்படி ஏதும் நடந்தால் 'கறந்த பால் முலைக்கு ஏறாது' என்ற நிலை ஏற்படும். ஆனபடியினால், நீங்கள் அவரை வீட்டுக்குக் கூட்டிப் போய் அவருடைய மனநிலைமையைப் பார்த்து பக்குவமாய் உண்மை யைக் கூறிவிடுங்கோ," என்றார். மருமகனின் நலனின் அதீத அக்கறை கொண்டிருந்த சுந்தரம் மறுபேச்சு இல்லாது,

"நீங்கள் சொல்லுவது சரிதான் டாக்டர். நான் அப்படியே செய் கிறேன்," என்று கூறிவிட்டு வெளியே வந்தார். காத்திருந்த மகேசுவைப் பார்த்து,

"டாக்டர் எல்லாவற்றையும் என்னிடம் சொல்லி விட்டார். நான் உனக்குச் சொல்லுகிறேன் வா," என்று கூறி மகேசுவினுடைய கையைப்

பிடித்துக் கூட்டிச் சென்றார்.

"என்ன காரணம் என்று சொல்லுங்க மாமா," என்று அவசரப்படுத்திய மகேசுவைப் பார்த்து,

"மகேசு, உங்களுடைய அம்மாவின் திடீர்மரணத்திற்கான காரணம் இப்பொழுது டாக்டர் கூறித்தான் எனக்குத் தெரியுமென்றில்லை. மரணவிசாரணை நடந்துமுடிந்த அந்த நேரத்திலிருந்தே எனக்குத் தெரியும்," என்று சொல்லி வாய் மூடுவதற்குள்,

"அப்படியானால், எனக்கு வீட்டிலேயே சொல்லியிருக்கலாமே? அதை விடுத்து ஒன்றும் தெரியாத ஆள்போல என்னோடு கூடிக்கொண்டு ஏன் மாமா ஆஸ்ப்பத்திரிக்கு வந்தனீங்க?" என்று சற்று கோபமான தொனியில் கேட்டான் மகேசு.

"எல்லாவற்றிற்கும் ஒரு காரணம் உண்டு. காரணம் இல்லாமல் காரியம் ஒன்றும் நடக்காது மகேசு," என்று சுந்தரம் சொல்லிக்கொண்டு போக இடையிற் குறுக்கிட்ட மகேசு,

"என்ன மாமா! இது தத்துவம் பேசிற நேரமா? அம்மாவின் மரணத்திற்கான காரணத்தை அறிய வேண்டுமென்று நான் துடியாய்த் துடிக்கிறேன். நீங்க என்னடாவென்றால், காரணம் இல்லாமல் காரியம் இல்லை என்று என்னிடம் தத்துவம் பேசுகின்றீங்க. என்ன காரணம் என்று சொல்லித் தொலையுங்கோவேன்!" என்று சத்தமாக கோபத்தோடு மகேசு கூறியபோது, சுந்தரத்திற்கு அழுகைவந்துவிட்டது, மகேசுவிற்கும் கூட. கண்ணைத் துடைத்துக் கொண்ட சுந்தரம், மகேசுவைப் பார்த்து,

"அழாத மகேசு, அழாத. அந்தப் பாழ்பட்ட காரணத்தை உனக்குச் சொல்லாமல் உன்னை அழவைத்து வேடிக்கை பார்க்கவேண்டுமென்று நான் விரும்புவேனா? நான் உன் மாமாவடா! இறந்துபோன கனகம் அதாவது உனது அம்மா என்னுடைய சொந்த அக்காவடா! உனக்கிருக்கின்ற கவலையும் வேதனையும் எனக்கும் இருக்கிறது. ஆனால்...," என்று கதையை விழுங்கிக்கொண்டுபோன சுந்தரத்தைப் பார்த்து,

"ஆனால்... என்ன? ஆனால்... என்ன?" என்று அழுதுகொண்டே கேட்டான் மகேசு. மறுபடியும் அழுதுகொண்ட சுந்தரம்,

"காரணத்தைச் சொன்னால், ஏதும் விபரீதம் நடந்துவிடுமோ என்ற பயத்தினால், சொல்ல முடியாமலும் மெல்ல முடியாமலும் தவிக்கிறேன்,"

என்று கூறிக்கொண்டு மகேசுவைக் கட்டிப்பிடித்து அழுதார். ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய ஏதோ ஓர் ஆழமான காரணம் இருக்கின்றது என்பதை உணர்ந்துகொண்ட மகேசு சுந்தரத்தைப் பார்த்து,

"அழாதீங்கோ மாமா! அழாதீங்கோ! நாம் இரண்டு பேரும் அழுவதை யாரும் பார்த்தால் அவங்க ஏதும் தப்பாக நினைப்பாங்க. அதுமட்டுமல்ல, 'ஏன் அழுகிறீங்க?' என்றும் கேட்பாங்க. இந்த இடத்தில பெரும்பாலும் நமக்குத் தெரிந்த ஆட்கள் தான் இருக்கிறாங்க. அப்புறம் அவங்களுக்கு காரணம் கூறுவது பெரிய சங்கடமாய்ப் போய்விடும். ஆனபடியினால், உங்களுக்கு எப்ப கூறவேண்டுமென்று தோணுதோ அப்பொழுது கூறுங்கோ, அதுவரையும் நான் என்னுடைய மனதைக் கட்டுப்படுத்தி வைத்திருக்கிறேன்," என்று சற்று நிதானமாக உறுதியான குரலில் சொல்லி முடித்ததும், இரண்டு பேரும் தொடர்ந்து வீடு நோக்கி நடந்தனர்.

இந்தளவிற்குக் கதைத்துவிட்டு இனியும் காரணத்தைக் கூறாமல் மேலும் மௌனத்தைச் சாதித்தால், மகேசுவின் மனம் உடைந்துபோய் விடும் என்பதை உணர்ந்துகொண்ட சுந்தரம்,

"மகேசு, நான் இப்ப காரணத்தைச் சொல்லப் போறன், இனியும் சொல்லாமலிருந்தால் உன்னுடைய மனம் வெடித்தாலும் வெடித்துவிடும் என்பது எனக்குப் புரிகிறது. காரணத்தைச் சொல்லுவதற்குமுன் நீ எனக்கொரு சத்தியம் செய்துதரவேண்டும்.

நீ நல்லவன் என்பது எனக்குத் தெரியும். அதே நேரத்ததில் நீ ஒரு வல்லவன் என்பதும் எனக்குத் தெரியும். கோபம் பாவத்தை உழைக்கும் என்பது பொன் மொழி. நீ படித்தவன், கோபத்தினால் செய்கிற காரியங்களினால் ஏற்படக்கூடிய பயங்கரமான விளைவுகளை உணரக் கூடியவன். பெரிய அனுபவம் இல்லாவிட்டாலும் நீ அறிவுள்ளவன். ஆனபடியினால், சத்தியத்திற்கு கட்டுப்பட்டு நடப்பாய் என்ற பூரணமான நம்பிக்கையிற்தான் உன்னிடமிருந்து ஒரு சத்திய வாக்கைப் பெற்றுக் கொண்டு காரணத்தைச் சொல்லலாம் எனும் முடிவிற்கு வந்துள்ளேன்,'' என்று நிதானமாய்ச் சொன்னார். மாமா கூறிய எல்லாவற்றையும் மௌனமாய்க் கேட்டுக்கொண்டிருந் மகேசு,

"என்ன சத்தியம் மாமா கேட்கப் போறீங்க?" என்று தாழ்ந்த குரலில் கேட்டான். கதையைத் தொடர்ந்த சுந்தரம்,

"நம்மளுடைய நாகபுரம் கிராமத்திலிருக்கின்ற 'நாகாத்தாள்' கோயிலுக்கு இப்ப நேர போகிறம். அது அளவில சிறிய கோயிலாயிருந்தாலும் நாகாத்தாளுடைய சக்தி, அற்புதம் ரொம்பப் பெரியது. அந்த அம்பாள் தன்னை நம்பிக்கையோடு, விசுவாசத்தோடு, பக்தியோடு வணங்குபவர்களுக்கு கேட்கும் வரம் கொடுப்பவள். அவர்களைத் துன்பம் துயரங்களிலிருந்து நீக்குபவள்," என்று கூறிய பின், தொடர்ந்து,

"அந்த ஆத்தாளில் உனக்கும் நம்பிக்கை இருக்குத்தானே?" என்று கேட்க, அதற்கு மகேசன்,

"நம்பிக்கை இருக்கு மாமா," என்றான்.

"அப்படியானால், நான் சொல்லப்போகும் காரணத்தைக் கேட்டு, உணர்ச்சிவசப்பட்டு எந்த எதிர் நடவடிக்கையிலும் அல்லது அசம்பாவிதத்திலும் ஈடுபடமாட்டேன் என்று நாகாத்தாளின் முன்னிலையில் எனக்குச் சத்தியம் பண்ணித் தரவேண்டும், சரியா?" என்று சொல்லி முடித்தார்.

"அப்படியே சத்தியம் பண்ணித் தருகின்றேன் மாமா. அத்துடன் அந்தச் சத்தியத்திற்குக் கட்டுப்பட்டும் நடப்பேன்," என்று உறுதிபடக் கூறினான் மகேசு.

இப்பொழுது சுந்தரத்திற்கு மனதில் ஒரு அமைதியும் தெளிவும் வந்துவிட்டது. இனி உண்மையைத் தயக்கமில்லாமல் சொல்லலாம் என்று எண்ணிக்கொண்டு நாகாத்தாள் கோயில் நோக்கி இருவரும் வேகமாய் நடக்கத் தொடங்கினார்கள். நடந்து கொண்டிருந்த பொழுது கதையைத் தொடர்ந்த சுந்தரம்,

"மகேசு, உங்களுடைய அம்மாவின் மரணத்திற்கான காரணம் எனக்கும் டாக்டருக்கும் பொலிஸ் அதிகாரிக்கும் மரணவிசாரணை அதிகாரிக்கும் மட்டும்தான் தெரியும். வேறுயாருக்கும் தெரியாது. தங்களுடைய அனுமதியில்லாமல் இந்தக் காரணத்தை வேறுயாருக்கும் சொல்லப்படாது என்றும் அப்படிச் சொல்லி அதனால் ஏதும் அசம்பாவிதம் நடந்தால் நான்தான் அதற்குப் பொறுப்பு என்றும் என் மீது கட்டுப்பாட்டைப் போட்டு என்னுடைய வாயை மூடிவிட்டார்கள். நேரம் வரும்போது காரணத்தை தாங்களே உரியமுறையில் உரியவரிடத்துக் கூறுவோம் என்றும் உறுதி அளித்தார்கள்.

மகேசு, யாருக்கும் சொல்லாமலிருக்கலாம், ஆனால் உனக்குச் சொல்லாமலிருக்க முடியுமா? என்னால் முடியவில்லை. அதனாலதான் உன்னையும் கூட்டிக் கொண்டு டாக்டரிடம் போனனான். உன்னைப் பற்றிச் சொன்னால் டாக்டர் அனுமதி அளிப்பாரென்று எனது நம்பிக்கை. நம்பிக்கை அப் படியே நிறைவேறியது பெரிய காரியம். அதுகும் அம்பாளின் அருள் என்றுதான் சொல்ல வேண்டும்.

டாக்டர் ஏன் உன்னிடம் காரணத்தைக் கூறவில்லை என்று நீ எண்ணலாம். அங்கு ஏதும் அசம்பாவிதம் நடந்து அதனால் விடயம் பலர் மத்தியில் அம்பலமாகப்படாது என்றுதான் இந்தப் பொறுப்பை டாக்டர் என்னிடம் ஒப்படைத்தார். அசம்பாவிதம் ஏதும் நடந்தால் பாதிக்கப்படுவது டாக்டரோ அல்லது பொலிஸ் அதிகாரியோ அல்ல. பாதிக்கப்படப் போவது நாமதான். ஆனபடியினால் இந்த விடயத்தைக் கவனமாய்க் கையாளவேண்டியது என்னுடைய பொறுப்பு. கோபத்தில் நீ ஏதாவது தப்புத்தண்டம் செய்துவிட்டால், நாளைக்கு நம்ம குடும்பம் முழுவதும் நடுத்தெருவிலதான் நிற்கவேண்டிவரும். எமது குடும்பத்தைச் சந்தி சிரிக்க வைக்கப்படாது என்பதற்காக இந்த விடயத்தில் மிகவும் பொறுப்பாக நடந்துகொள்ள வேண்டிய அவசியம் எனக்கு உண்டு," என்று சொல்லிக் கொண்டுபோக இவற்றையெல்லாம் கேட்டுக்கொண்டு வந்த மகேசு,

"என்ன மாமா! நீங்கள் இப்படியே சொல்லிக்கொண்டு போனால் என்னுடைய மனம் என்ன பாடுபடும்! எந்தளவிற்குத் தாங்கும்! என்று கொஞ்சமாவது யோசிக்கிறீங்களா மாமா!" என்று சற்று எரிச்சலோடு கேட்டான்.

"மகேசு, நீ சொல்லுவதில நியாயம் இருக்கு. ஆனால் ஏற்கனவே திடீர் அதிர்ச்சியால ஒரு மரணம் ஏற்பட்டுவிட்டது. மறுபடியும் ஒரு திடீர் அதிர்ச்சியால எந்தவித அநர்த்தங்களும் ஏற்படக்கூடாது என்பதற்காகத்தான் இவற்றையெல்லாம் முன்னேற்பாடாகச் சொல்ல வேண்டியுள்ளது," என்று சொல்லி வாய் மூடுவதற்குள்,

"அப்படியானால், அம்மா திடீர் அதிர்ச்சியாலதான் இறந்தவா என்று சொல்லுகின்றீர்கள்? அப்படித்தானே!" என்று விழித்துக் கேட்டான் மகேசு.

"அப்படித்தான் நடந்தது,

அம்மாவிற்கு மரணம் ஏற்படுமளவிற்கு அதிர்ச்சி ஏற்படக்காரணம் என்ன? என்று நீ இப்பொழுது அடுத்த கேள்வி கேட்கப்போகிறாய் என்பது எனக்குத் தெரியும். நீ அந்தக் கேள்வியைக் கேட்காமலேயே நான் பதில் சொல்லப்போகிறேன். ஏனென்றால், உன்னுடைய மனம் என்னவிதமான துன்பத்திலும் துயரத்திலும் வேதனையிலும் பாரத்திலும் குழப்பத்திலும் இருக்கிறது என்று எனக்குத் தெரியும் மகேசு. நான் உன்னுடைய மாமா, தாய்மாமன். எதையும் தாங்கும் இதயத்தை உனக்கு ஏற்படுத்துவதுதான் நான் போடும் ஆலவட்டத்தின் நோக்கம். அதனாலதான் இவ்வளவு தாமதம்.

உனக்கு ஞாபகமிருக்கா மகேசு, நாம இன்று காலமை அம்மாவின் திடீர் மரணத்திற்கான காரணம் பற்றிக் கதைத்த பொழுதும், இறப்பிற் கான காரணத்தை அறிய ஆஸ்ப்பத்திரிக்கும் புறப்பட்ட பொழுதும் உன்னுடைய தங்கச்சி உமா அழுதவள். அதற்கு நீ சொன்னது: அம்மாவின் இழப்பைத் தாங்க முடியாமல் தங்கச்சி அழுகிறாள். அவளைக் கவனமாய் பார்த்துக் கொள்ளுங்கோ என்று சித்தியிடம் கூறிவிட்டு வந்தனியல்லவோ?" என்று சுந்தரம் கேட்டு முடிப்பதற்குள்,

"ஓம் மாமா, அப்படிக் கூறினனான்தான். அதில என்ன தப்பு?" என்று சற்று ஏக்கத்தோடு கேட்டான் மகேசு.

"தப்பொன்றுமில்லை மகேசு. நீ உன்னுடைய தங்கச்சியில வைத்திருக்கின்ற பாசத்தினால அப்படிச் சொன்னது சரி. ஆனால்...." என்று சுந்தரம் இழுக்க குறுக்கிட்ட மகேசு,

"ஆனால் என்ன மாமா?" என்று மேலும் கூடிய ஏக்கத்தோடு கேட்டான். கதையைத் தொடர்ந்த சுந்தரம்,

"ஆனால்..... அவள் அழுததிற்கு அம்மாவைப் பிரிந்த காரணம் மட்டுமல்ல இன்னுமொரு காரணமும் இருக்கிறது," என்று கூறி வாய் மூடுவதற்குள்,

"என்ன மாமா சொல்லுகிறீங்க! என்னுடைய மண்டையே வெடித்து விடும் போலிருக்கு. சொல்லித் தொலையுங்கோவேன்," என்று ஆத்திரத் தோடு கேட்டான் மகேசு. கதையைத் தொடர்ந்த சுந்தரம்,

"உன்னுடைய சித்தப்பா காங்கேசு... மரணச் சடங்கிற்கு வரவில்லை. அவன் வீட்டைவிட்டுப் போனது உங்களுடைய அம்மாவை ஆஸ்ப்பத்திரிக்

குக் கொண்டுபோன ஓர் அந்தரமான வேளையில். அவன் நின்று ஆஸ்ப்பத்திரிக்கு வந்திருக்கவேண்டியவன். மரணச்சடங்கிற்குக்கூட வரவில்லையென்றால், இதைப் பற்றி கொஞ்சம் யோசிக்க வேண்டுமல்லவா?" என்று கேட்டுவிட்டு,

"யோசித்துப் பிடி பார்ப்பம் காரணத்தை," என்று கேட்பதுபோல் உற்றுப்பார்த்தார் மகேசுவை.

"யோசித்து யோசித்து மண்டை வெடிக்கப்போகுது, மனம் இனியும் வேதனையின் பாரத்தைத் தாங்கமாட்டாது. அம்மா இறந்துபோன துக்கத்தையும் வேதனையையும் சோதனையையும் விட இது பலமடங்கு கொடூரமானதாய் இருக்கு மாமா. ஏன் மாமா, என்னை இப்படி உயிரோடு அறுவைச் சிகிச்சை செய்கிறீங்க? அறுவைச் சிகிச்சையையும் டாக்டர் அறிவை மயக்கிப்போட்டுத்தான் செய்வினம் மாமா! உங்களுடைய கதை உயிரோடு உணர்வோடு இருக்க அறுவைச் சிகிச்சை செய்கிறது மாதிரியிருக்கு மாமா! இதற்கு மேலும் என்னைச் சோதிக்கவேண்டாம்" என்று மகேசு இரந்து கேட்ட வேளையில் இருவரும் நாகத்தாள் கோயில் வாசலை அடைந்தனர். மேலும் நேரத்தைப் போக்காட்ட விரும்பாத சுந்தரம்,

"நான் கேட்டுக்கொண்டபடி சத்தியம் பண்ணு மகேசு," என்று சுந்தரம் கேட்க, மூன்று தரம் அந்தச் சிறிய கோயிலைச் சுற்றி வந்து அட்டாங்க நமஸ்காரம் பண்ணி எழுந்த மகேசு, சுந்தரம் கேட்டுக்கொண்ட படியே நாகத்தாள் முன்னிலையில் சத்தியம் பண்ணிமுடித்தான். மறுகணம்,

"இனியும் தாமதிக்காமல் காரணத்தைக் கூறுங்கள் மாமா," என்று இரந்து கேட்டான்.

மகேசுவினுடைய முகத்தைக் கவலையோடு பார்த்த சுந்தரத்தின் கண்களில் கண்ணீர் மல்கியது. உடனே மகேசுவைக் கட்டிப்பிடித்து அழுதுகொண்டு,

"உனது தங்கை, அதாவது எனது ஆசை மருமகள் உமா முழுகாமலிருக்கிறாளடா, மூன்று மாசமாய் முழுகாமலிருக்கிறாளடா," என்று அழுதழுது சொன்னார் சுந்தரம்.

இதைக்கேட்ட மகேசுவிற்கு தலையில் இடிவிழுந்ததுபோன்று

இருந்தது. ஒரு கணம் இருதயம் நின்று மறுபடியும் துடிக்கத் தொடங்கியது. மனம் சமநிலைக்கு வருவதற்கு சில நிமிடங்கள் எடுத்தன. ஏற்பட்ட அதிர்ச்சியினால் பேசாமடைந்தையானான் மகேசு. சிறிது நேரம் கழித்து வளர்த்த நாய் முகத்தைப் பார்த்தது போன்று மாமாவினுடைய முகத்தைப் பார்த்தான். மகேசுவின் மனோநிலையை அறிந்து கொண்ட சுந்தரம் எதுவுமே பேசவில்லை. ஆளையாள் பார்த்துக் கொண்டு பேய் அறைஞ்சவன் போல் நின்றனர் இருவரும். சிறிது நேரம் கழித்து,

"அப்படியென்றால் மாமா, அந்தப் பையனைப் பிடித்து கல்யாணம் செய்து வைத்துவிடுவம். நல்லவனோ கெட்டவனோ என்பதையெல்லாம் இனிப்பார்க்க முடியாது. எதுவானாலும், அது அவளுடைய தலைவிதி என்று கொள்ளவேண்டியதுதான்," என்று மகேசு சொல்லி முடிப்பதற்குள்,

"அப்படியொரு நிலைமை இருந்திருக்குமென்றால், உங்கம்மாவிற்கு இந்த மரணம் வந்திருக்குமா மகேசு?" என்று பயம் கலந்த கேரிய குரலில் கேட்ட சுந்தரம், தொடர்ந்து,

"நீ படித்தவன், புத்திசாலி. நான் இதுவரை கதைத்த கதைகளிலிருந்து உண்மைக் காரணத்தைப் புரிந்திருப்பாய் என்று நினைத்தேன். 'அப்பம் என்றால் புட்டா காட்டவேண்டும்' என்று ஒரு பழமொழி இருக்குது, தெரியுமா மகேசு?" என்றார். இதைக்கேட்டதும் மகேசுவினுடைய கண்களிலிருந்து கண்ணீர் மல்கிப் பெருகிப் பாய்ந்து ஓடியது. கண்ணீரின் மத்தியில்,

"புரியுது மாமா புரியுது. நான் அந்த உண்மையைப் புரியாமலிருக்கும் அளவிற்கு விபரம் கெட்டவனுமல்ல விளக்கமில்லாதவனுமல்ல. சரி..... முடிந்தது முடிந்தது தான். அதைப் பற்றிக் கவலைப் பட்டுக்கொண்டிருந்தால் எந்தப் பயனும் ஏற்படாது. வருவது வரட்டும் என்று எதையும் எதிர்கொள்வதுதான் உண்மையான வீரம். நான் ஒரு வீரனாய் இருக்க விரும்புகிறேனேயொழிய ஒரு கோழையாக இருக்க விரும்பவில்லை," என்று கூறிய மகேசு தொடர்ந்து,

"இனிமேல் நாங்கள் ஏன் இங்கு இருக்க வேண்டும்? நான் தங்கச்சியையும் கூட்டிக்கொண்டு கொழும்பிற்குப் போகப்போறன். அதுதான் எனக்குச் சரியாய்ப் படுகுது, நீங்கள் என்ன மாமா சொல்லு

கிறீங்கள்?'' என்று சுந்தரத்தினுடைய முகத்தைப் பார்த்துக் கவலை தோய்ந்த முகத்தோடு கேட்டான் மகேசு.

"நீ வயதில் சிறியவனாயிருந்தாலும், நீ எடுத்திருக்கின்ற இந்த முடிவு பெரியதாயும் வரவேற்கத்தக்கதாயும் இருக்கிறது. நான் விசுவமடுக் காணியையும் மிளகாயையும் பார்த்துக்கொள்கிறேன். நீ முடிவெடுத் திருக்கின்றபடியே செய். அதுதான் எல்லோருக்கும் நல்லது. மிகுதியை நாகாத்தாள் பார்த்துக்கொள்ளுவாள். நாகாத்தாளை நம்பியவர்களை அவள் ஒருபோதும் கைவிடமாட்டாள். இதுவரை இந்தக் கிராமத்தில் நாகாத்தாளை முழுமனதோடு நம்பிய யாரையும் அவள் கைவிட்ட வரலாறே கிடையாது. ஆனபடியினால், அவள் மீது பழியைப்போட்டு விட்டு நீ தங்கையையும் கூட்டிக்கொண்டு கொழும்பிற்குப் போ. அம்பாள் நல்லதொரு வழியைக் காட்டுவாள். அம்பாளை முழுமனதோடு நம்பு. நீ வைக்கிற நம்பிக்கையிலதான் உங்களுடைய எதிர்காலம் தங்கியுள்ளது. நீ இந்தக் கிராமத்தில் பிறந்து வளர்ந்தவன், நாகாத்தாளைப் பற்றி உனக்கு நான் அதிகம் சொல்ல வேண்டியதில்லை. நம்பினார் கெடுவதில்லை, இது நான்கு மறைத் தீர்ப்பு,'' என்று கூறிமுடித்த சுந்தரம், சிறிது யோசித்துவிட்டு, ஏதோ மனதிற்பட்டவராய்த் தொடர்ந்து,

"மகேசு, நான் உன் மனதை வேதனைப்படுத்திவிட்டேன், உனது மூளைக்கு வேதனையை அளித்துவிட்டேன், உன்னை வேதனைப்பட வைத்து வேடிக்கை பார்த்துவிட்டேன் என்று ஏதும் தப்பாக எண்ண வேண்டாம். நான் ஏன் அப்படி நடந்துகொண்டேன் என்பதை நீ இப்பொழுது உணர்ந்திருப்பாய். உன்னுடைய முடிவு அதைத்தான் வெளிப்படுத்துகிறது. நீ எடுத்திருக்கும் இந்த முடிவிலிருந்து நீ ஓர் அறிவாளி, அனுபவசாலி, பொறுமைசாலி என்பதையும் எதையும் தாங்கும் இதயம் கொண்டவன் என்பதையும் புரிந்துகொண்டேன். ஆனபடியால் உன்னையும், உனது தங்கையையும் பற்றி இனிமேல் நான் கவலைப்படமாட்டேன். காரணம் உன்னால் எதையும் சாதிக்க முடியும். மிகுதிக்கு உனக்கும் உனது தங்கைக்கும் நாகாத்தாள் உறு துணையாக இருப்பாள்,'' என்று நம்பிக்கையூட்டும் பாணியில் சொல்லி முடித்தார்.

## அங்கம் : 03

கொழும்பில் எழுதுவினைஞராக வேலை பார்த்துவந்த மகேசு தன்னுடைய வருமானத்தைக் கருத்திற்கொண்டு ஒரு நண்பனுடன் ஒரு வாடகை அறையில் வசித்துவந்தான். தங்கையையும் கொழும்பிற்குக் கூட்டிச்சென்று வசிக்கவேண்டுமாயிருந்தால் இன்னொரு அறையும் தேவைப்பட்டது. கொழும்பிற்குத் தங்கையைக் கூட்டிச் செல்வதற்கு முன் புதிய இடம் ஒன்று பார்க்கும் முயற்சியில் இறங்கி, நண்பன் சாந்தனுடைய உதவியுடன் ஒரு வீட்டில் இரண்டு அறைகைள வாடகைக்குப் பெற்றுக்கொண்டான். ஒரு அறையை தங்கை உமாவும் மற்றைய அறையை மகேசுவும் நண்பன் சாந்தனும் பாவித்தனர். நண்பன் சாந்தன் சாவகச்சேரியைச் சேர்ந்தவன். தொழில் காரணமாக சாந்தனின் பெற்றோர் வவுனியாவில் தற்காலிகமாய் வசித்துவந்தனர். சாந்தன் தொழில் அமைச்சு அலுவலகத்தில் எழுதுவினைஞராக வேலை செய்து வந்தான்.

மகேசுவிற்கு தங்கைமீது சிறிய கோபம் இருந்தபோதும் அம்மாவையும் அப்பாவையும் இழந்த நிலையில் தன்னைத்தவிர வேறு யாருமே துணையில்லாதபடியினால், தங்கை மீது அனுதாபமே கூடுதலாய் இருந்தது. இதனால் அவள்விட்ட மோசமான தவறையும் பாராட்டாமல் தங்கையைப் பாசத்தோடு பார்த்துவந்தான். சாந்தனும் மகேசனுக்கு ஏற்பட்டிருக்கும் துயர நிலைமையை உணர்ந்து அவர்களுடைய மனம் நோகாதபடிக்கு நடந்துகொண்டான். மகேசுவிற்கு இப்படி ஒரு நண்பன் கிடைத்தது இறைவன்விட்ட வழியென்றே சொல்ல வேண்டும். அந்தளவிற்கு எந்தவொரு கட்டத்திலும் மகேசுவினுடையதும் தங்கையினுடையதும் மனம் கோணாதபடிக்கு அவர்களுடைய மனோநிலையைப் புரிந்து நடந்துகொண்டான் சாந்தன்.

காலை எட்டு மணிக்கு அலுவலகத்தில் வேலையை ஆரம்பிக்கும் சாந்தன் காலை ஐந்து மணிக்கெல்லாம் நித்திரையால் எழும்புவது வழமையாகும். இன்று ஆறு மணியாகியும் படுக்கையைவிட்டு சாந்தன் எழும்பவில்லை. இதை அவதானித்த மகேசு,

"சாந்தன், நேரம் ஆறுமணியாச்சு ஏன் இன்னும் எழும்பவில்லை? இன்றைக்கு வேலைக்குப் போற பிளான் இல்லையா?" என்று கூறி அவனை எழுப்புவதற்கு முயற்சித்தான். மகேசுவினுடைய முயற்சிக்கு

பதில் வழங்குவது போன்று,

"தலையிடிக்குது, காய்ச்சல் குணமாயும் இருக்குது, உடம்பெல்லாம் அடிச்சுமுறித்தது போலக் கிடக்குது, என்னென்று தெரியவில்லை," என்று சொல்லிக் கொண்டிருந்த வேளையில்,

"இங்கவிடு பார்ப்பம்," என்று கூறிக்கொண்டு சாந்தனின் தலையில் கையை வைத்துப் பார்த்தான் மகேசு. உடனே,

"நெற்றி கொதிக்குதடா, சரியான காய்ச்சல், இப்பவே டாக்டரிடம் போய்க் காட்டி மருந்து எடுக்க வேண்டும்," என்று கூறியவேளையில் சாந்தனின் நெற்றியில் இரண்டு பருக்கள் கிடப்பதை அவதானித்தான். அதைப்பற்றி சிறிது யோசித்துவிட்டு,

"சாந்தன், என்ன நெற்றியில் இரண்டு பருக்கள் கிடக்குது. இங்கால வெளிச்சத்திற்கு வா, என்னென்று பார்ப்பம்," என்று கூறிக் கொண்டு படுக்கையை விட்டு எழுப்பி கூர்ந்து கவனித்தான். அவை முகப்பருவல்ல பொக்கிளிப்பானுக்குப் போடும் பொக்களம் என்பதைத் தெரிந்து கொண்ட மகேசு,

"சாந்தன், உனக்கு அம்மாள் வருத்தம் வந்திருக்குப் போலத் தோணுது. ஒருக்கால் முதுகைக் காட்டு பார்ப்பம்," என்று கூறி முதுகைப் பார்த்தபொழுது முதுகிலும் நாலைந்து பொக்களங்கள் காணப்பட்டன. அதைப் பார்த்ததும் அம்மாள் வருத்தம் என்பதை உறுதிப்படுத்திக் கொண்ட மகேசு,

"இது அம்மாள் வருத்தம்தான், நீ டாக்டரிடம் போக வேண்டியதில்லை. இரண்டு கிழமைக்கு நிலைமையை அலுவலகத்திற்குச் சொல்லி லீவு போடு, நாங்கள் உன்னைப் பார்க்கிறம்," என்று கூறினான் மகேசு.

இந்த வருத்த காலத்தில் அம்மாவின் பராமரிப்பில் இருப்பதற்குத் தான் சாந்தனுக்கு விருப்பம். ஆனால் அம்மாவும் சகோதரங்களும் வவுனியாவில் இடவசதிக் குறைவுடன் இருக்கிறார்கள். இந்த நிலைமையில அங்குபோனால், அவர்களுக்குப் பெரிய சுமையாயும் கஷ்டமாயுமிருப்பது மட்டுமல்ல, அவர்களுக்கும் அயலட்டையில் வசிப்பவர்களுக்கும் இந்த வருத்தம் தொற்றிவிடும். இதனால் கொழும்பிலேயே இருப்பதற்கு முடிவு செய்தான் சாந்தன். வருத்தம் தொடங்கி

இரண்டாவது மூன்றாவது நாட்களென்று செல்லச்செல்ல நோயின் கடுமை உக்கிரமாகியது. முகம் உடம்பு முழுவதும் இடைவெளியின்றிப் பொக்களங்கள் நிறைந்து காணப்பட்டன. காய்ச்சலும் உடம்பு நோவும் அதிகரித்துச் சென்றது.

இன்று நான்காவது நாள். மகேசு வேலைக்குச் சென்றுவிட்டான். சாந்தனும் உமாவும்தான் வீட்டில் இருந்தனர். சாந்தனுக்கு இருந்தாற் போல் சத்தி எடுக்கத் தொடங்கியது. சத்தி எடுப்பதை தனது அறையில் இருந்து அவதானித்த உமா, உடனே விரைந்து சென்று அவனின் தலையைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு, அவன் வசதியாகச் சத்தி எடுக்க உதவினாள். சத்தி எடுத்து முடிந்த பிற்பாடு தண்ணீர் கொடுத்து வாயை நன்றாகக் கொப்பளித்துச் சுத்தம் செய்யும்படி வேண்டினாள். அப்புறம் அவனை தன்னோடு அணைத்துப் பிடித்துக் கொண்டு மெதுவாய்க் கூட்டிச்சென்று அவனுடைய கட்டிலில் படுக்க வைத்துவிட்டு, அவனது அறையின் வாசலில் கிடந்த சத்தியை அள்ளி இடத்தைச் சுத்தம் செய்தாள். அடுத்து, கோப்பி தயாரித்து நன்றாகச் சுடுபோகும் வரை ஆற்றி குடிக்கும்படி சாந்தனுக்குக் கொடுத்தாள்.

அன்றிலிருந்து பதினொரு நாட்களுக்கும் அவனுக்குரிய பத்தியச் சாப்பாடு தயாரித்துக் கொடுப்பது, அவனுக்கு முகம் கழுவுவதற்குத் தண்ணீர் கொடுப்பது, அவனுடைய அழுக்குப்படிந்த துணிகளை துவைத்துச் சுத்தம் செய்வது, அவனுடைய அறையைக் கூட்டிப் பெருக்கித் துப்பரவு செய்வது எல்லாவற்றையும் உமாவே செய்துவந்தாள். நோயின் வேதனையில் முனகும்போதெல்லாம் "ஒன்றுக்கும் பயப்படவேண்டாம், அம்மாள் உங்களை நல்லபடியாய்க் காப்பாற்றுவாள்," என்று கூறி ஆறுதல் அளிப்பாள். மொத்தமாகச் சொல்லப்போனால் சாந்தனுடைய அம்மா எப்படியெல்லாம் தனது மகனைக் கவனிப்பாளோ அப்படியெல்லாம் உமா கவனித்து வந்தாள் என்றால் மிகையாகாது.

பதினோராவது நாள் முழுகவேண்டும். உமா தமையனைக் கொண்டு வேப்பிலை வருவித்து, மஞ்சலுடன் சேர்த்து அரைத்து, முழுகுவதற்கு வேண்டிய எல்லா உதவிகளையும் பெரிய அனுபவசாலி போல் செய்து கொடுத்தாள். முழுகிய பிற்பாடு சாமி படத்தின் முன் சாந்தனை இருக்க வைத்து, சாம்பிராணிப் புகை போட்டு, அப்புறம் உறைப்புச் சேர்க்காத பத்தியச் சாப்பாடு தயாரித்துக் கொடுத்து சாந்தனைச் சாப்பிடவைத்தாள். இருபத்தியொரு நாட்கள் முடியும்

வரை கண்டதையும் கடியதையும் சாப்பிடவிடாமல் பத்தியபபாகத்துடன் சாப்பாடு தயாரித்துக் கொடுத்தாள்.

பிள்ளை வயிற்றோடு இவ்வளவு சேவையையும் செய்தமையைப் பார்த்த சாந்தனுக்கு அவள் மீது பாசமும் நன்றியுணர்வும் ஏற்பட்டது. வயதிற் சிறியவளாயிருந்தாலும் அவள் செய்த செயற்பாடுகள் அவனைப் பிரமிக்க வைத்தது. உண்மையைச் சொல்லப்போனால் அவனுடைய பெற்றதாயே உமாவின் உருவத்தில் வந்து வேண்டிய காலத்தில் வேண்டிய உதவிகளைச் செய்தாள் என்ற உணர்வு அவனுக்கு ஏற்பட்டது. அதற்காக அம்பாளுக்கும் உமாவிற்கும் நன்றியறிதலுடன் எதிர்காலத்தில் நடந்து கொள்ள வேண்டும் என்று தனது மனத்திற்குள் உறுதியெடுத்துக் கொண்டான்.

அதுமட்டுமல்ல, இப்படிப்பட்ட ஒரு பெண்ணுக்கு இப்படியான ஒரு சோதனையா! இறைவன், யாரை எப்படி எப்படிச் சோதிப்பதென்று விபரம் தெரியாதவர் போல் காணப்படுகின்றாரே! என்று தன்னுள் ஆதங்கப்பட்டுக் கொண்டதும் உண்டு.

உமா தனக்குச் செய்த சேவையை அவளது அண்ணா மகேசுவிடம் சந்தர்ப்பம் வரும்போதெல்லாம் சொல்லிப் பாராட்டுவான். இவற்றையெல்லாம் காது குளிரக்கேட்ட மகேசு, தனது தங்கையின் திறமையையும் அனுபவத்தையும் சேவை மனப்பான்மையையும் உணர்ந்து தன்னுக்குள்ளே பெருமைப்பட்டுக் கொண்டான். சிலவேளை களில், உமா வயதிற் குறைந்தவளாயிருந்தாலும் அம்மாவிடமிருந்து நிறையவே குடும்ப விஷயங்களைக் கற்றுக்கொண்டுள்ளாள் என்று சாந்தனிடம் கூறிச் சந்தோசப்பட்டுக் கொண்டதும் உண்டு.

உமாவின் அன்பையும் அரவணைப்பையும் அவளின் சேவை மனப்பான்மையையும் நினைக்கும் போதெல்லாம் மனத்திலே ஒரு சந்தோசமும் கிளுகிளுப்பும் ஏற்படுவதை சந்தனால் உணர முடிந்தது என்றால் மறுப்பதற்கில்லை. இச்சிறிய வயதில் இப்பெரிய மனசும் பண்பாடும் ஏற்பட்டிருப்பதை எண்ணிப் பார்க்கும்போதெல்லாம் அவனால் ஆச்சரியப்படாமல் இருக்க முடியவில்லை. இறைவனின் படைப்பில் எத்தனை அற்புதங்கள்! அவற்றுள் இதுவும் ஒன்றாய் இருக்கலாம் என்று எண்ணி வியப்படைந்தான் சாந்தன்.

# அங்கம் : 04

ஒருநாள் பின் இரவு இரண்டு மணியளவில் மகேசுவும் சாந்தனும் படுத்திருந்த அறையின் கதவில் யாரோ தட்டும் சத்தம் கேட்டது. சாந்தன் விழித்தெழுந்து கதவைத் திறந்தான். எதிரில் நின்றது உமா.

"என்ன உமா, இந்த நேரத்தில கதவைத் தட்டுகிறாய்? என்ன நடந்தது?" என்று கேட்டான் சாந்தன்.

"சாந்தன், அண்ணாவை எழுப்பிவிடுங்கோ. எனக்குப் பிரசவநோ தொடங்கிவிட்டது என்று எண்ணுகிறேன். ஒரே வலியாயிருக்கு," என்று சொல்லி வாய் மூடுவதற்குள் சாந்தன் மகேசுவை எழுப்பி விடையத்தைச் சொன்னான். பதட்டப்பட்டு எழுந்த மகேசு,

"சாந்தன், உடனே போய் ஒரு ரக்ஸி பிடித்துக்கொண்டு வா. நாம உடனடியாக உமாவை நேஸிங் ஹோமிற்குக் கொண்டுபோக வேண்டும்.

அதே கணத்தில் பாய்ந்து சென்ற சாந்தன் பத்து நிமிடத்தில் ரக்ஸியுடன் வந்தான். உடனே கொழும்பிலுள்ள தனியார் நேஸிங் ஹோமிற்கு ரக்ஸி பறந்தது. அங்கு பிரசவ வாட்டில் அனுமதிக்கப் பட்டாள். வாட்டில் அனுமதித்த சில நிமிடங்களில் ஒரு நேஸ் வந்து,

"டாக்டர் சோதித்துக் கொண்டு நிற்கிறார். அவரின் சோதனை முடிந்து மறுமொழி சொல்லும்வரை நீங்கள் இங்கேயே நிற்கவேண்டும்," என்று பார்வையாளருக்கான ஹாலில் இருந்த மகேசுவையும் சாந்தனையும் பார்த்துக் கூறினாள். ஏறக்குறைய இருபது நிமிடங்கள் கழித்து வந்த டாக்டர் சிறிது கோபத்துடன் மகேசுவையும் சாந்தனையும் நோக்கி,

"என்ன! இந்தக் கர்ப்பிணிப் பொண்ணை இதுவரை எந்த டாக்டர் பார்த்தது? அவர் டாக்டரா? அல்லது வேறு யாருமா? இந்தப் பொண்ணுக்கு இரத்த அழுத்தம் ரொம்ப உயர்வாயிருந்திருக்கு. கால்களிரண்டும் அதிகமாய் வீங்கியுள்ளன. இந்தப் கர்ப்பிணியை இதற்கு முன் டாக்டர் யாரும் பரிசோதிக்கவில்லையா? ஏன் இந்த நிலைமை வரும்வரை வைத்திருந்தனீர்கள்? இந்தப் பொண்ணுக்கு கணவர் அல்லது தாய், தகப்பன் யாருமே இல்லையா? ஏன் இவ்வளவு நாளும் டாக்டருக்கு காட்டாது வைத்திருந்தீர்கள்?" என்று சற்று

சூடாகவே கேள்விக்குமேல் கேள்விகளைக் கேட்டார் டாக்டர். மகேசு சொல்வதறியாது வாய் அடைத்துப்போய் நின்றான். சிறிது நேரத்தின் பின் மனதைச் சற்று தைரியப்படுத்திக்கொண்டு,

“நான் இந்தப் பெண்ணினுடைய அண்ணா. அவவிற்கு அம்மா, அப்பா இருவரும் இல்லை” என்று கூறிய மகேசு, தொடர்ந்து,

“அவவினுடைய புருசன் சவூதி அரேபியாவில் வேலை செய்கிறார்,” என்று அப்பட்டமான ஒரு பொய்யையும் கூறினான்.

இவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டும் கேட்டுக்கொண்டும் நின்ற சாந்தன் தான் நோயுற்றிருந்த காலத்தில் உமா செய்த உதவிக்கு நன்றிக்கடன் செலுத்தவும் அவளின் நற்குணத்திற்கு பரிசு அளிக்கவும் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த முடிவு செய்தான்.

உமாவின் கணவர் சவூதி அரேபியாவில் வேலை செய்கிறார் என்று அப்பட்டமான பொய்யை மகேசு சொல்லிக் கதையை முடிப்பதற்குள்,

“அவர் பொய் சொல்லுகிறார் டாக்டர். நான் தான் அந்தப் பெண்ணினுடைய கணவர்” என்று சாந்தன் கூறினான். இது மகேசுவிற்குப் பெரிய ஆச்சரியத்தையும் டாக்டருக்கு ஓர் ஆறுதலையும் ஏற்படுத்தியது. கதையைத் தொடர்ந்த டாக்டர்,

“அப்படியாயின், மகேசு ஏன் பொய் சொல்லுகின்றார்?” என்றார்.

“அது..... டாக்டர், வந்து..... இவ்வளவு நாட்களும் இந்தக் கற்பினிப் பெண்ணை உரியகாலத்தில் டாக்டரிடம் காட்டி ஏன் வைத்தியம் செய்யவில்லை என்று கேட்டு நீங்கள் என்னை ஏசுவீங்கள் என்று எண்ணி, என்மீது கொண்ட பாசத்தினால் அவ்வாறு பொய்யைக் கூறிவிட்டார். அதற்காக நான் மன்னிப்புக் கேட்கிறேன் டாக்டர். அதையிட்டு நீங்கள் பெரிதுபடுத்திக் கொள்ளவேண்டாம் டாக்டர். அவர் என் மீது கொண்ட பற்றினால் பொய் சொல்லுகிறாரென்று, நானும் பொய்யைச் சொல்லி, எனது மனைவிக்குத் துரோகம் செய்யலாமா டாக்டர்? என்ன பிரச்சனையானாலும் என்ன உதவி வேண்டுமானாலும் என்னிடம் கூறுங்கள். அதைச் செய்ய நான் தயாராயிருக்கின்றேன் டாக்டர்,” என்று மன உறுதியோடு கூறிமுடித்தான் சாந்தன்.

இதைக் கேட்டதும் மகேசனின் கண்களில் கண்ணீர் பெருகியது. இது என்ன வகையான கண்ணீராய் இருக்கலாம் என்பது வாசகர்களாகிய உங்களுக்குப் புரியும் என்று நான் நம்புகிறேன்.

மேலும் தாமதிக்க விரும்பாத டாக்டர்,

"சரி... சரி.. நீங்கள் என்னுடன் வாரும்" என்று சாந்தனைப் பார்த்துக் கூறிவிட்டு, அவரை உமா படுத்திருந்த அறையினுள் கூட்டிச்சென்றார். அங்கு சென்றதும்,

"சாந்தன், உங்களுடைய மனைவிக்கு நீண்ட நாட்களாக உயர் இரத்த அழுத்தம் இருந்திருக்கின்றது. அதனால் பிள்ளையைப் பற்றி நான் கூறப்போகும் செய்தியைக் கேட்டு அதிர்ச்சியடையாமலிருக்க மனதைத் தேற்றிக்கொள்ளவும், சரியா?" என்று டாக்டர் கூறிய போது,

"ஆம் டாக்டர்," என்று எதையும் எதிர்நோக்கும் பாணியில் பதில் அளித்தான் சாந்தன். மெது மெதுவாகக் கதையைத் தொடர்ந்த டாக்டர்,

"உங்களது மனைவிக்கு நீண்டநாட்களாக உயர் இரத்த அழுத்தம் தொடர்ந்து இருந்ததினால், பிள்ளை வயிற்றுக்குள்ளேயே இறந்து விட்டது. இறந்த பிள்ளையைப் பெறுவித்து தாயைக் காப்பாற்ற முயற்சி செய்வோம்," என்று கூறிய டாக்டரிடம்,

"எப்படியாவது தாயைக் காப்பாற்றி விடுங்க டாக்டர்" என்று இரந்து கேட்டான். அப்பொழுது சாந்தனின் கண்கள் கலங்கின.

"சரி.. சரி.. நீங்கள் ஒன்றுக்கும் பயப்படவேண்டாம். இப்போது நீங்கள் வெளியே போய் உங்கள் மச்சான் மகேசுவுடன் காத்திருங்கோ. குழந்தையைப் பெறுவித்த பிற்பாடு நான் வந்து உங்கள் இருவரையும் பார்க்கிறேன், சரியா?" என்று கூறவே, சாந்தன் வெளியே வந்தான்.

சாந்தனுடைய வருகையை ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்த மகேசு அவனிடம் ஓடிப்போய்,

"என்ன சாந்தன் நடந்தது? தங்கச்சியின் நிலைமை எப்படியிருக்கு?" என்று பெரிய ஆவலோடு கேட்டான். அவனுடைய ஆவலையும் ஆதங்கத்தையும் புரிந்துகொண்ட சாந்தன்,

"குழந்தையையும் தாயையும் காப்பாற்றுவதற்கு டாக்டர் முயற்சி

செய்துகொண்டு இருக்கிறார். இப்போதைக்கு ஒன்றும் சொல்ல முடியாதாம். எல்லாம் நல்லபடியாய் முடிந்த பிற்பாடு டாக்டர் நம்மிடம் வந்து எல்லாவற்றையும் விபரமாய்க் கூறுவார். அதுவரை நாம் இருவரும் இங்கு பொறுமையாகக் காத்திருக்க வேண்டும், சரியா?" என்று சொல்லி முடிப்பதற்குள்,

"தங்கச்சிக்கு ஒன்றும் ஆபத்தில்லையே?" என்று ஆழ்ந்த கவலையோடு கேட்டான் மகேசு.

"ஒருவருக்கும் எந்த ஆபத்தும் இல்லை. நாம் செய்ய வேண்டியது டாக்டர் வரும்வரை பொறுமையாய் இருக்கவேண்டியதுதான்," என்று சற்று கண்டிப்பான குரலில் கூறினான் சாந்தன்.

ஒரு மணித்தியாலம் கழித்து இருவரையும் நோக்கி வந்த டாக்டரிடம் இருவரும் ஓடிப்போய்,

"என்ன டாக்டர்? எல்லாம் நல்லபடியாய் முடிந்ததா?" என்று அங்கலாய்ப்புடன் கேட்கவே, டாக்டர் அவர்களின் ஆவலைப் புரிந்து கொண்டு,

"அதாவது, தாயைக் காப்பாற்றிவிட்டோம். குழந்தை நான் முதலில் கூறியது போன்று இறந்த நிலையில் பிறந்துள்ளது. இந்தப் பொண்ணு இருந்த நிலைமைக்கு அவவைக் காப்பாற்றியதே பெரிய விடயம். ஆனபடியினால் பிள்ளையை நாங்கள் காப்பாற்றாமல் விட்டுவிட்டோமே என்று கவலைப்படவேண்டாம். ஏனென்றால் பிள்ளை ஏற்கனவே வயிற்றினுள் இறந்துவிட்டது. அதாவது இங்கு நீங்கள் கொண்டு வருவதற்கு முன்பே குழந்தை வயிற்றினுள் இறந்துவிட்டது. இந்த நிலைமையில் தாயைக் காப்பாற்றியதே ஆண்டவன் செயலென்றுதான் கூறவேண்டும். ஏதோ கணவனுக்கு நல்ல தாரப்பொருத்தமோ என்னவோ பொண்ணு காப்பாற்றப்பட்டுவிட்டார். அதையிட்டு நீங்கள் சந்தோசப்பட வேண்டுமே யொழிய கவலைப்படுவதற்கு ஒன்றுமில்லை. தாயிருந்தால் எத்தனை பிள்ளைகளையும் பெற்று எடுக்கலாம். அதையிட்டு சந்தோசப்பட்டுக் கொள்ளுங்கோ," என்று அன்பாகவும் பண்பாகவும் கூறிமுடித்த டாக்டர், தொடர்ந்து,

"நீங்கள் இப்போது தாயைப் போய்ப் பார்க்கலாம்," என்று சொல்லி விட்டுப் போனார்.

இவற்றையெல்லாம் கேட்டுக்கொண்டு நின்ற மகேசு நாகபுரம் நாகாத்தாளை மனதிற்குள் வரவளைத்து நன்றி செலுத்திக்கொண்டான். தாயே! நீ என்னையும் தங்கையையும் காப்பாற்றிவிட்டாய். உனக்கு எப்படி நன்றி சொல்லுவது என்று எனக்குத் தெரியவில்லை. என்னுடைய உள்ளத்தில் கோயில் கட்டி, அதில் உன்னை இருத்தி, ஒவ்வொரு நிமிடமும் உன்னை நம்பிக்கையோடு வணங்குவதுதான் இனி நான் செய்யவேண்டிய கடமை என்று மனத்திற்குள் கூறிக்கொண்டான். அத்துடன், 'நம்பினார் கெடுவதில்லை, இது நான்கு மறைத் தீர்ப்பு' என்று சுந்தரம் மாமா கூறிய பொன்மொழியையும் ஞாபகப்படுத்திக் கொண்டான்.

உமாவிடம் சென்ற இருவரும் அவளைப் பார்த்து ஆறுதல் வார்த்தைகள் கூறிவிட்டு, அவளுக்கு வேண்டிய சில பொருட்களையும் விபரங்களையும் கேட்டு அறிந்து கொண்டு வீடு திரும்பினர். வீடு திரும்பியதும் மகேசுவிற்கு வந்திருந்த தந்தி ஒன்றை அந்த வீட்டு உரிமையாளர் மகேசுவிடம் நீட்டினார். அதைப் பிரித்துப் பார்த்த மகேசுவின் முகத்தில் ஒரு புத்துணர்ச்சியும் புன்முறுவலும் பிறந்தது. அப்படி என்ன நல்ல செய்தி? "உனது சித்தியின் கணவர் காங்கேசு நாகபாம்பு தீண்டி நேற்று இரவு இறந்துவிட்டார். - இப்படிக்கு, சுந்தரம் மாமா" என்ற செய்தியையே அந்தத் தந்தி தாங்கி வந்தது.

"அப்பாடா! ஆண்டவா! நாகாத்தை! நீ அம்மா, உண்மையாக விழிப்புடன்தான் இருக்கிறாய். சுந்தரம் மாமா கூறியதுபோன்று எங்களைக் காப்பாற்றிவிட்டாய்! காப்பாற்றிவிட்டாய்!! காப்பாற்றிவிட்டாய்!!! அம்மா!" என்று வாய்விட்டு கூறினான் நன்றி கலந்த தொனியில்.

எல்லாவற்றையும் புரிந்துகொண்ட சாந்தன் "நடப்பதெல்லாம் நன்மைக்கே. அமைதியாயிரு! கவலைப்படாதே!" என்று ஆறுதல் கூறினான்.

காங்கேசுவின் மரணச் சடங்கிற்கு வந்த அனைவரும் இவ்வாறு பேசிக் கொண்டனர் : "இக்கிராமத்தில் நாகபாம்புகள் அதிகம். ஆனால், இதுவரைக்கும் இந்தக் கிராமத்தில் எந்த ஒருவரையும் நாகபாம்பு தீண்டியதும் கிடையாது, நாகபாம்பு தீண்டி இறந்ததும் கிடையாது. அந்தளவிற்கு நாகாத்தாள் இந்தக் கிராமத்து மக்களைக் காப்பாற்றிக் கொண்டு வருகின்றாள். இந்தக் கிராமத்து மக்களும் நாகாத்தாள் மீது ஓர் ஆழமான அசைக்கமுடியாத நம்பிக்கையை வைத்துள்ளார்கள்.

இந்தக் கிராமத்தில் நாகம் தீண்டி இறந்த முதலாவது நபர் காங்கேசு தான். இவன் ஏதோ நாகாத்தைக்குப் பிடிக்காத பெரிய தப்பைச் செய்திருக்கின்றான்.

அவன் இறப்பதற்கு சில நிமிடங்களுக்கு முன்,

"நான் செய்த குற்றத்திற்கு ஆத்தாள் தண்டனையை வழங்கி விட்டாள்." என்று சொன்னானாம். பாம்புக்கடிப் பரியாரிமார் கடுமையாக முயன்றும் காங்கேசுவைக் காப்பாற்ற முடியவில்லை," என்று தங்க ளுக்குள் பேசிக் கொண்டனர்.

மகேசுவின் தாயார் இறப்பதற்கு முன் கூறிய வார்த்தைகளின் அர்த்தத்தை அதாவது,

"எல்லாப் பாம்புகளிலும் கவனம் செலுத்திய நான் படுக்கைக்குக் கீழ் கிடந்த பாம்பை கவனிக்காமல் விட்டுவிட்டேனே!" என்று கூறியதன் கருத்தை தற்பொழுது வாசகர்களாகிய நீங்கள் புரிந்திருப்பீர்கள் என்று நம்புகின்றேன்.

இந்தப் பாழ்பட்ட உலகத்தில் படுக்கையின் கீழ் கிடக்கும் பாம்பு கள் நிறையவே உண்டு. வாழ்கையில் இவர்களையிட்டு மிக்க அவதா னமாயிருக்க வேண்டும். எதிரியைவிட துரோகிதான் ஆபத்தான வன். இதை மனதில் இருந்திக்கொள்ளுங்கள். இவ் உலகத்தில் எத்தனை வகையான பாம்புகள் உண்டோ அத்தனை வகையான துரோகத் தனங்களும் இருக்கத்தான் செய்கின்றன. அவற்றிலிருந்து உங்களைக் காப்பாற்றிக் கொள்ள விழிப்புடன் இருங்கள்.

## அங்கம் : 05

மூன்று நாட்கள் நேர்ஸிங் ஹோமில் தங்கியிருந்த உமா நான்காம் நாள் காலை துண்டுவெட்டி வீட்டிற்குப் போக அனுமதிக்கப்பட்டாள். உமாவை வீட்டிற்குக் கூட்டிச் செல்வதற்காக அண்ணா மகேசு நேஸிங் ஹோமிற்குப் போயிருந்தான். அப்பொழுது டாக்டர் மகேசுவிடம்,

"உமாவினுடைய கணவர் வரவில்லையா?" என்று கேட்டார்.

"அவருக்கு இன்று அவருடைய அலுவலகத்தில் முக்கியமான ஒரு கூட்டம் இருப்பதனால் வரமுடியவில்லை. எதுவானாலும் என்னிடம்

சொல்லுங்கோ டாக்டர்," என்றான் மகேசு. மகேசுவின் கதையைக் கேட்டு சொண்டிற்குள் சிரித்துக்கொண்ட டாக்டர்,

"கணவரிடம் சொல்ல வேண்டிய விடயங்கள் எல்லாவற்றையும் அண்ணாவிடம் சொல்லமுடியாது மகேசு. வருகின்ற கிழமை கிளினிக்கிற்கு வரும்போது அவரைக் கட்டாயம் கூட்டிவரவேண்டும். அத்தோடு நான் கொடுத்திருக்கின்ற இந்த மருந்துகளை தவறாது உங்கள் தங்கை உட்கொள்ளவேண்டும். நீங்கள் அதைப் பார்த்து உறுதிப்படுத்திக் கொள்ளுங்கோ. திரும்பவும் கிளினிக்கிற்கு வரும்வரை நல்லாய் றெஸ்ற் எடுக்கவேண்டும். அதிகதூரம் நடந்து வேலை செய்யப்படாது. பொதுவாக மென்மையான செயற்பாடுகளே இருக்கவேண்டும்," என்று ஆலோசனை கூறி அனுப்பிவைத்தார்.

இவையாவற்றையும் உமாவின் முன்னிலையில் வைத்தே டாக்டர் கூறினார். அண்ணாவும் தங்கையும் ஆளையாள் பார்த்து அன்பாதரவாய்க் கதைக்க முடியாத அளவிற்கு கவலையும் ஏக்கமும் இருவரிடமும் காணப்பட்டது. டாக்டர் அணுக்குண்டைத் தூக்கித் தலைமீது போட்டிருக்கின்றாரே! இதிலிருந்து எப்படி மீளுவது? என்று நினைத்துத் தன்னுக்குள் கவலைப்பட்டுக் கொண்டாள் உமா.

பாவம், தன்னையே காப்பாற்றிக் கொள்ளுமளவிற்குப் புத்தியில்லாத பொண்ணு. இதனிடம் போய் கணவனைக் கூட்டிக்கொண்டு வரவேண்டும் கிளினிக்கிற்கு என்று டாக்டர் நிபந்தனை போடுகின்றார். இந்த வேதனைகளிலெல்லாமிருந்து எப்படி தங்கை மீளப்போகின்றாளோ! என்று எண்ணி தன்னுக்குள் வேதனைப்பட்டுக்கொண்டான் மகேசு. தங்கை மீது அளவிற்கு மீறிய அன்பும் பாசமும் கொண்டிருந்தபடியால் , அவளுடைய நிலைமையை எண்ணி அனுதாபமும் கவலையும் அடைந்தானே ஒழிய, ஒருபோதும் தங்கைமீது கோபப்படவில்லை.

பிரசவம் நடந்த அன்று ஏதோ சந்தர்ப்பம் சூழ்நிலை காரணமாக 'நான்தான் கணவன்' என்று கூறிவிட்டான் நண்பன். அதற்காக கணவனாகும்படி அவனைக் கேட்கமுடியுமா? முடியாது. அவனுக்கென்று எத்தனையோ விருப்பு வெறுப்புக்கள் இருக்கும், அத்துடன் இலட்சியங்களும் இருக்கும். அவற்றையெல்லாம் உதறித் தள்ளிவிட்டு என்னுடைய தங்கையை மனைவியாக ஏற்றுக்கொள்ளும்படி கேட்பது எந்த வகையில் நியாயமானது? அவன்தான் அனுதாபப்பட்டு எனது

தங்கையை மனைவியாக ஏற்றுக்கொள்ளுவதற்கு முன்வந்தாலும், அவனுடைய பெற்றோர் கெட்டுப்போன ஒரு பெண்ணை தங்களுடைய மருமகளாய் ஏற்றுக்கொள்ளத் தயாராயிருப்பார்களா? இவற்றையெல் லாம் சர்வசாதாரணமாக எடுத்துக் கொள்ளுவதற்கு நமது சமூகம் ஐரோப்பியர்களா! அல்லது அமெரிக்கர்களா! இது தமிழர்கள்! மற்றைய வர்களுடைய துன்பத்தில் இன்பம் காணுபவர்கள். ஒட்டு மொத்தமாய் அப்படிக் சொல்லப்படாது. ஒரு சில நல்லவர்களும் இருக்கத்தான் செய்கின்றார்கள். அதனாற்தானோ என்னவோ இந்தச் சமூகம் இன்னும் இந்த உலகத்தில் அழியாமலிருக்கின்றது.

இருந்தபோதும், தனது தங்கை போன்றவர்களுக்குக் கெட்டுப் போனவள் என்று பட்டம் சூட்டியிருக்கின்றார்களே, இது எந்தவகையில் நியாயமானது? இது மிகவும் கொடுமையானதல்லவா! இவ்வாறு பட்டம் சூட்டுவதில் தமிழர்களுக்கு இணையானவர்கள் தமிழர்களே! நம் சமூகத்தை நாம் குறைகூறி என்ன பயன்? இதுவும் நமது இயலாமை யின் ஒரு வெளிப்பாடுதான். சரி... எதுவானாலும் நடக்கட்டும். நாகாத் தாளிடம் கவலைகளை ஒப்படைத்துவிடுவம். அவளே எல்லாவற்றையும் பார்த்துக்கொள்ளட்டும், என்று தன்னுக்குள் பலவாறு பேசிக்கொண்ட மகேசு, இறுதியில் 'கடவுளே துணை!' என்று மனதைத் தேற்றிக்கொண்டான்.

வழமைபோன்று வேலை முடிந்து பிற்பகல் ஐந்து மணியளவில் சாந்தன் வீட்டிற்கு வந்தான். உமா இன்று வீட்டிற்கு வந்திருப்பாள் என்று அவனுக்குத் தெரியும். வந்ததும் உடுப்புக்கூட மாற்றாமல்,

"உமா வந்துவிட்டாவா?" என்று மகேசுவிடம் கேட்டான். ஆம், வந்துவிட்டாள் என்று மகேசுவிடமிருந்து பதில் வந்ததுதான் தாமதம், உடனே உமாவின் அறைக்குச் சென்று கதவில் மெதுவாகத் தட்டினான். சாந்தன்தான் தட்டுகிறான் என்பதைத் தெரிந்து கொண்ட உமா,

"கதவு திறந்துதான் கிடக்கின்றது, உள்ளுக்கு வாங்கோ சாந்தன்," என்று சொன்னாள். கதவை மெதுவாகத் திறந்துகொண்டு உள்ளுக்குப் போனபொழுது உமா கட்டிலில் படுத்திருந்தபடியே பக்கத்தில் இருந்த கதிரையைக் காட்டி அதில் இருங்கோ சாந்தன். டாக்டர் சொன்னவர் அதிகம் நடந்து திரியாமல் சில நாட்களுக்கு றெஸ்ட் எடுக்கும்படி. எனக்கும் இயலாமற்தானிருக்கு. நாலைந்து நாட்களில் எல்லாம் சரியாய்ப் போய்விடும் என்று நினைக்கிறேன்," என்றாள்.

பக்கத்தில் பெத்த அம்மாவும் கட்டிய கணவனும் இருந்து கவனித்துக் கொள்ளவேண்டிய இந்த நேரத்தில், இரண்டுமில்லாமல் அநாதை போன்று கிடக்கின்றதே! பாவம்! ஆண்டவனின் சோதனைக்கு ஓர் அளவேயில்லை என்று தன்னுக்குள் எண்ணிக்கொண்டு மௌனமாக இருந்தான் சாந்தன். அவனின் மௌனத்தைக் கலைக்க எண்ணிய உமா,

"என்ன சாந்தன், பேசாமலிருக்கின்றீங்கள்?" என்றதும் திடுக்கிட்டு விழித்தவன் போன்று,

"ஒன்றுமில்லை, உங்களுக்கு எப்படி உதவி பண்ணலாம் என்று யோசிக்கிறேன்" என்று சாதாரணமாகச் சிரித்துக் கொண்டே சொன்னான். தன்மீது இவன் அனுதாபப்படுகிறான் என்பதை உணர்ந்துகொண்ட உமா, அவனுக்கு ஆறுதலை உண்டு பண்ணுவது போன்று,

"எனக்கு என்ன குறை? எனக்கு உதவுவதற்கு அண்ணா இருக்கிறார். அண்ணாவிற்கு உதவுவதற்கு நீங்கள் இருக்கின்றீங்கள். பிறகென்ன, இதற்குமேல் என்ன வேண்டும்? எல்லாவற்றிற்கும் மேலாக நம்மைப் படைத்த இறைவன் இருக்கின்றான். அவரே எல்லாவற்றையும் பார்த்துக்கொள்ளுவார்," என்று அமைதியாகச் சொன்னாள்.

"பரவாயில்லையே! சின்னப் பொண்ணாக இருந்தாலும் இறைவன் மீது ரொம்ப ஆழமான நம்பிக்கை வைத்திருக்கிறீங்களே! உங்களுக்கு எந்தக் கடவுள் மீது அதிக நம்பிக்கை? அறியலாமோ? என்றான். ஓம் ஓம், எனக்கு எங்கள் கிராமத்திலுள்ள நாகம்மாள் மீது அதிக நம்பிக்கை உண்டு. அவவை நாங்கள் நாகாத்தாள் என்று அழைப்போம். அது சிறிய கோயிலாக இருந்தாலும் அந்த அம்பாளுக்கு சக்தி ரொம்ப அதிகம். அவள் என்னைக் காப்பாற்றுவாள் என்ற நம்பிக்கை எனக்குப் பலமாய் உண்டு," என்றதும்,

"அப்படியா! ரொம்ப நல்லது. கடவுளை ஆழமாக நம்புபவர்கள் எந்தவிதமான துன்பத்திலிருந்தும் இலகுவாக விடுபட்டுக்கொள்வார்கள்," என்று கூறிவிட்டு,

"அப்ப... நான் அப்புறம் வந்துபார்க்கிறேன். ஏதும் உதவி தேவையென்றால், எழும்பிக்கிழும்பி வரவேண்டாம். கிடந்துகொண்டு கூப்பிடுங்கோ, என்ன?" என்று கேட்டுக்கொண்டு தனது அறைக்குச் சென்றான் சாந்தன்.

அன்று இரவுச் சாப்பாட்டை எல்லோரும் எட்டு மணியளவில் முடித்துக்கொண்டு படுக்கைக்குச் சென்றனர். உமா இங்கு வந்ததி லிருந்து மகேசுவும் சாந்தனும் ஒரு அறையில் படுப்பது வழக்கம். வழமையாக படுக்கைக்குச் சென்றவுடன் மகேசு நித்திரையாகி விடுவான். இது அவனுடைய இயற்கைச் சுபாவம். அவனுடைய அந்தச் சுபாவத்தைப் பார்த்த சாந்தன் ஒருநாள்,

"நீ கொடுத்துவைத்தவன் மகேசு. படுத்தவுடனேயே நித்திரையாகி விடுகிறாய். நான் அப்படியில்லை. எனக்கு ஒரு மணித்தியாலம் சிலவேளை அதற்கும் மேலும் எடுக்கும் நித்திரையாகுவதற்கு," என்று கூறி ஆதங்கப்பட்டுக்கொண்டான்.

இன்று படுத்து ஒரு மணித்தியாலத்திற்கு மேலாகியும் மகேசு நித்திரையாகவில்லை. புரண்டுபுரண்டு படுத்தான். இதை அவதானித்த சாந்தன்,

"என்ன மகேசு, படுத்தவுடனேயே நித்திரையாகும் நீ இன்று புரண்டு புரண்டு படுக்கிறாய். என்ன நடந்தது? நித்திரை வர வில்லையா?" என்று அக்கறையோடு கேட்டான்.

உண்மையைச் சொன்னால் நண்பனுக்குத் தொந்தரவு கொடுப்ப தாய் அமையுமோ என்று எண்ணிய மகேசு, உண்மையைச் சொல்லு வதற்குத் தயங்கினான். எமது பிரச்சனை எம்மோடு இருந்துவிட்டுப் போகட்டும். எம்மோடு சேர்ந்திருப்பதற்காக நண்பனுக்கேன் கஷ்டங்க ளைக் கொடுப்பான் என்று எண்ணியவனாய்,

"ஒன்றுமில்லை சாந்தன். என்னவென்று தெரியவில்லை, இன்று நித்திரை வழமைபோன்று வருகுதில்லை," என்று கூறிவிட்டு மறுபக்கம் புரண்டு படுத்தான்.

மகேசுவிற்கு நித்திரை வராத அளவிற்கு ஏதோ பிரச்சனை உண்டு என்பதை உறுதிப்படுத்திக் கொண்ட சாந்தன்,

"மகேசு, நீ உண்மையை மறைக்கிறாய். படுத்தவுடன் நித்திரையா கும் நீ, இன்று ஒரு மணித்தியாலத்திற்கு மேலாகியும் நித்திரையாக வில்லையென்றால், அதுகும் புரண்டு புரண்டு படுக்கிறாயென்றால், அதற்கொரு அழுத்தமான காரணம் இருக்க வேண்டும். என்ன பிரச்சனை என்று எனக்குச் சொல்லு. முடிந்தால் நான் உதவி பண்ணலாம்.

கவலையை அல்லது பிரச்சனையை மனத்திற்குள் போட்டு மூடினால், அது மனதைப் பாதிக்கும். உன்னுடைய தங்கை உன்னுடைய உதவியோடுதான் இருக்கிறாள். ஆனபடியால் நீ மனோதைரியத்தோடு இருக்கவேண்டும். என்ன பிரச்சனையானாலும் எனக்குச் சொல்லு. நான் உன்னுடைய நண்பன். முடிந்தால் நான் உதவி செய்வேன். என்னால் முடியாவிட்டால், ஆலோசனையாவது சொல்லுவேன்," என்று அழுத்தம் திருத்தமாய்ச் சொன்னான்.

சாந்தன் கூறுவது ஏற்புடைத்து என்று எண்ணிய மகேசு,

"என்னு டைய பிரச்சனைகளை உனக்கும் சொல்லி உன்னுடைய நின்மதியையும் சந்தோசத்தையும் ஏன் கெடுப்பான் என்றுதான் உனக்குச் சொல்லுவதற்கு நான் முயலவில்லை. என்னுடைய கஷ் டங்கள் துன்பங்களில் நீ பங்குகொள்ள அல்லது உதவி பண்ண ஆர்வமாயிருக்கின்ற படியால், விடையத்தைச் சொல்லுகிறேன். நாங்கள் தங்கச்சியைப் பிரசவத்திற்காக மருத்துவமனைக்கு எடுத்துச் சென்ற பொழுது, அன்று சந்தர்ப்பம் சூழ்நிலை காரணமாக நீதான் தங்கச்சியின் கணவன் என்று கூறியது உனக்கு ஞாபகமிருக்குமென்று நம்புகிறேன்," என்றதும்,

"ஓம் ஓம், எனக்கு ஞாபகமிருக்கு. அதெற்கென்ன இப்ப?" என்றான் சாந்தன்.

இன்று துண்டு வெட்டி தங்கச்சியை வீட்டிற்கு அனுப்பியபொழுது உங்கள் கணவர் வரவில்லையா என்று தங்கச்சியிடம் டாக்டர் கேட்டார். அவருக்கு வேலையிடத்தில் முக்கியமான கூட்டமொன்று இன்று இருக் கின்றபடியினால், அவரால் வரமுடியவில்லை. ஏதுவானாலும் என்னிடம் கூறுங்கள் டாக்டர் என்று நான் சொன்னேன். உடனே டாக்டர் இதழுக் குள் சிரித்துவிட்டு,

"கணவருக்குச் சொல்லவேண்டிய எல்லாவற்றையும் அண்ணாவிற் குச் சொல்லமுடியாது மகேசு. ஆனபடியால் அடுத்த கிழமை கிளினிக் கிற்கு வரும்போது கணவரைக் கட்டாயம் கூட்டிவர வேண்டும் என்று கட்டளையிடும் தொனியில் கூறிவிட்டார் டாக்டர். அந்த நேரத்திலிருந்து எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. தங்கச்சியோடு சரியாகக் கதைக்கக்கூட முடியவில்லை. இது என்னுடைய வேதனை. தங்கச்சி என்ன யோசித்துக் கொண்டிருக்கிறாளோ என்பது எனக்குத் தெரியாது.

ஏனென்றால் நீங்கள் அன்று நீதான் கணவன் என்று கூறிய விடயம் எனக்கும் உனக்கும் மட்டும்தான் தெரியும். அதைப்பற்றித் தங்கச்சிக்கு ஒன்றும் தெரியாது. எல்லாவற்றையும் எண்ணிப்பார்க்கும்போது எமது வாழ்க்கை வேதனையாயும் சோதனையாயும் காணப்படுகின்றது. இந்த நிலைமையில் நித்திரையும் வரமறுக்கின்றது. இதுகாலவரை படுத்தவுடன் நித்திரையாகுவதுதான் ஆண்டவன் எனக்குத் தந்த கொடையாக இருந்தது. அதற்கும் முடிவு வந்துவிடுமோ என்று கவலையாயிருக் கின்றது," என்று முழுவதையும் சொல்லி முடிப்பதற்குள் குறுக்கிட்ட சாந்தன்,

"இதற்கேன் போய் பெரிதாய்க் கவலைப்படுகிறாய்? அன்று அப்படிச் சொன்ன நான், வருகின்ற கிழமை கிளினிக்கில் அதையே திரும்பச் சொல்லுவது இயலாத காரியமா? நாய் வேடம் போட்டால் குரைக்கத்தானே வேண்டும். அன்று நீ சொல்லியா நான் கணவன் என்று சொன்னனான்? இல்லையே! எனது மனத்திற்கு அப்படிப்பட்டது, சொல்லிவிட்டேன். அது தொடர் கதையாயிருந்தால் அதை முடித்து வைக்க வேண்டியது என்னுடைய கடமைதானே? இதில் என்னுடைய பொறுப்பும் சம்பந்தப் பட்டிருக்கின்றதல்லவா, மகேசு? பேசாமல் படு, மிகுதியை நான் பார்த்துக் கொள்ளுகிறேன். விடயத்தை என்னிடம் கூறிவிட்டாயல்லோ. நின்மதியாய்ப் படுத்துத் தூங்கு," என்றான்.

இதைக்கேட்டு மகேசு மனத்திற்குள் ஆறுதலடைந்தாலும், நண்பனை ஓர் அளவிற்குமேல் ஏன் கடமைப்படுத்த வேண்டும் என்று கருதிக் கொண்டு,

"உன்னுடைய பெருந்தன்மையை நான் மெச்சுகிறேன் சாந்தன். இருந்தபோதும் எங்களுக்காக நீங்கள் நாய் வேடம் போட்டுக் குரைக்க வேண்டிய அவசியம் உங்களுக்கு இல்லைத்தானே? அதை நினைக்கும் போதுதான் மனதிற்குக் கொஞ்சம் சங்கடமாயிருக்கு," என்று சொல்லி முடிப்பதற்குள் குறுக்கிட்ட சாந்தன்,

"மகேசு, ஒன்றின் அவசியம் பிறப்புடன் கூடித்தான் வரவேண்டு மென்றில்லை. எப்பவும் வரலாம், யாருக்கும் வரலாம். நான் பொக்கிளிப் பான் வந்து கிடந்தபொழுது, என்னைப் பெத்த தாய்போன்று பார்த்துக் கவனித்து, சுகமடைய உதவியது உன்னுடைய தங்கை. நீ வேலைக்குப் போய் விடுவாய். நான் பட்ட வேதனை உனக்குத் தெரியாது. எனது

வேதனையை நேரில் பார்த்துக் கொண்டிருந்தவள் உன்னுடைய தங்கை. நான் யாருமற்ற அநாதையாகக் கிடந்தபொழுது, குழந்தை வயிற்றோடு தன்னுடைய அசௌகரியங்களையும் கணக்கில் எடுக்காமல் எனக்கு உதவி தேவைப்பட்டபோதெல்லாம் உதவி செய்தாளே! இந்த அவசியம் அவளுக்கு எங்கிருந்து வந்தது? ஏன் வந்தது? அவளுடன் நான் கூட பிறந்தவனா? இல்லையே! அப்படிப்பட்ட உனது தங்கைக்கு நான் தொடக்கி வைத்த கதையைத்தானும் முடித்து வைக்க இல்லையென்றால், எப்படி? நான் ஒரு மனிதனாக இருக்க முடியும்!

சிலவேளை நீ நினைக்கலாம் இந்த நாடகத்திற்கு உனது தங்கை ஒத்துக்கொள்ளுவாளா என்று. அப்படி நீ எண்ணுவதில் அர்த்தம் இருக்கலாம். அந்த வேலையை என்னிடம் விட்டுவிடு மகேசு. நான் அவவுடன் கதைத்து கிளினிக்கன்று நானே அவவைக் கூட்டிச் செல்லுகிறேன். உன்னுடைய கவலையையும் காரணத்தையும் என்னிடம் சொல்லிவிட்டாயல்லவா! மிகுதியை நான் பார்த்துக் கொள்ளுகிறேன். நிம்மதியாய்த் தூங்கு. எல்லாம் நல்லபடியாய் நடக்கும். ஒவ்வொரு நிகழ்விற்கும் ஒவ்வொரு காரணம் இருக்குமென்று கூறுவார்கள் பெரியவர்கள். இதற்கும் ஒரு காரணம் இருக்கும். நமக்குத் தெரியாமலிருக்கலாம். ஆனால் நிச்சயம் ஆண்டவனுக்குத் தெரியும். நடப்பதெல்லாம் நன்மைக்கே!" என்று கூறிவிட்டு இழுத்துப் போர்த்துக்கொண்டு படுத்தான் சாந்தன்.

## அங்கம் : 06

அடுத்த நாள் சனிக்கிழமை. சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் எல்லோரும் தாமதமாய் எழும்புவது வழக்கம். ஆனால் சில தேவைகள் கருதி இன்று ஏழு மணிக்கெல்லாம் எழுந்துவிட்டான் மகேசு. சாந்தன் ஒன்பது மணியளவிற்தான் எழும்பினான். எழுந்ததும் மகேசுவைப் பார்த்து முதல் கேட்ட கேள்வி,

"தங்கச்சிக்கு வேண்டியவையெல்லாம் கொடுத்துவிட்டாயா மகேசு?" என்பதுதான். "ஆம்" என்று பதில் வந்ததும் பெரும் சந்தோசம் அடைந்த சாந்தன், அப்புறம் தனது கடமைகளையெல்லாம் முடித்துக்கொண்டு காலைச் சாப்பாட்டிற்கு வர பத்து மணியாகிவிட்டது.

அப்பொழுது அந்தக் கிழமைக்கான மளிகைச் சாமான்களை

வாங்குவதற்காக கடைக்குப் புறப்பட்டான் மகேசு. அதைப் பார்த்த சாந்தன் நானும் வெளிக்கிட்டுக்கொண்டு வருகிறேன், பத்து நிமிடம் பொறுத்திரு மகேசு என்றான். உடனே மகேசு,

"தங்கச்சி தனிய இருக்கிறாள், இந்த நேரத்தில் அவவைத் தனிய விட்டுப் போவது நல்லதல்ல. நீ வீட்டில நில் சாந்தன். நான் சாமான்களை வாங்கி ஒரு ரக்ஸி பிடித்துக் கொண்டுவாறன்," என்றதும், மகேசு கூறுவது சரிதான் என்பதை உணர்ந்த சாந்தன்,

"அப்ப.... சரி, நான் வீட்டில் நிற்கிறேன். நீ போய்ச் சாமான்களை வாங்கிக்கொண்டு வா" என்றதும், மகேசு தங்கையிடமும் கூறிவிட்டுக் கடைக்குப் புறப்பட்டுச் சென்றான்.

சிறிது நேரத்தில் உமா,

"சாந்தன்" என்று கூப்பிட்டாள். உடனே அவளிடம் சென்ற சாந்தன்,

"என்ன உமா? என்ன வேண்டும்?" என்று அன்போடு கேட்டான். எனக்குத் தண்ணீர் விடாய்க்கிது. பச்சைத் தண்ணீர் குடிக்க விருப்ப மில்லை. கோப்பி ஒன்று போட்டுத் தாறீங்களே? என்றாள்.

"ஓம்! ஓம்! ஐந்து நிமிடத்தில் கோப்பியோடு வாறன்," என்று கூறிவிட்டுக் குசினிக்குச் சென்ற சாந்தன், பத்து நிமிடம் கழித்து கோப்பியுடன் வந்தான். கோப்பியை வாங்கிக்கொண்ட உமா, சாந்த னைப் பார்த்து அந்தக் கதிரையில் இருங்கோ என்றாள். கோப்பியைக் குடிக்கத் தொடங்கியதும் அவளுடைய வாயைப் பார்த்துக் கொண்டி ருந்த சாந்தன்,

"சூடாயிருந்தால் சொல்லுங்கோ, ஆத்தித்தாறன்," என்றான். வேண்டாம் வேண்டாம், சூடு கணக்காயிருக்கு, நான் ஊதி ஊதிக் குடிக்கிறேன் என்று சொல்லிவிட்டுக் கோப்பியைக் குடித்த உமா இடையில்,

"வாற சனிக்கிழமை கிளினிக்கிற்குப் போகவேண்டும். அதுதான் யோசனையாய்க் கிடக்கு. போகாமல் விடுவமோ என்றும் யோசிக்கி றேன்." என்று சொல்லி முடிப்பதற்குள்,

"என்ன உமா, சின்னப்பிள்ளை மாதிரிக் கதைக்கிறீர், சொறி! நீங்கள் கொஞ்சம் சின்னன்தான். இருந்தாலும் கிளினிக்கிற்குப் போகா மல் விடுவம் என்றே கதைக்கிறது? அது ரொம்பத் தப்பு உமா.

உங்களுடைய நன்மைக்காகத்தான் டாக்டர் கிளினிக்கிற்கு வரும்படி சொல்லியிருக்கிறார். உங்களுடைய எதிர்காலத்தைக் கருத்திற் கொண்டு நீங்கள் கிளினிக்கிற்குக் கட்டாயம் போய்த்தான் ஆகவேண்டும். கிளினிக்கிற்குப் போவதற்கு நீங்கள் ஏன் தயங்குகின்றீர்கள் என்பது எனக்குத் தெரியும். உங்கள் அண்ணாவிடமிருந்து எல்லாவற்றையும் அறிந்துகொண்டேன். அவர் தானாக எல்லாவற்றையும் என்னிடம் சொல்லவில்லை. அவருடைய முகத்தில் தென்பட்ட மாற்றத்தைப் பார்த்து நானாக வலிந்து கேட்டுத்தான் தெரிந்து கொண்டேன்.

டாக்டர் அப்படிக் கேட்டுக் கொண்டதற்கு நானும் ஒரு காரணம். இந்த இடத்தில் ஓர் உண்மையைச் சொல்லவேண்டும் உங்களுக்கு. நீங்கள் பிரசவத்திற்குச் சென்ற அன்று டாக்டர் எங்களிடம் வந்து யார் உமாவின் கணவர் என்று கேட்டார். அந்த நேரத்தில் ஏதோவொரு உந்தலினால்,

'நான்தான் டாக்டர் உமாவின் கணவர்' என்று சொல்லிவிட்டேன். அதனால் டாக்டரிடமிருந்து நல்ல ஏச்சும் வாங்கிக் கட்டினேன். அந்த விடயம் உங்களுக்குத் தெரியாது." இந்த இடத்தில் குறுக்கிட்ட உமா,

"நீங்கள் நினைப்பது தவறு. நீங்கள் அப்படிக் கூறியது எனக்குத் தெரியும். டாக்டர் என்னிடம் வந்து 'உங்கள் கணவரை ஏசிப்போட்டன். அதைப் பெரிதுபடுத்திக்கொள்ள வேண்டாமென்று அவரிடம் கூறுங்கோ' என்று டாக்டர் என்னிடம் கேட்டுக்கொண்டார். அப்பொழுது, அது நீங்களாய்த் தான் இருக்கவேண்டுமென்று நான் ஊகித்துக் கொண்டேன்," என்றாள்.

இதைக்கேட்டு ஆச்சரியமடைந்த சாந்தன்,

"ஓ! மைகோட், அப்படியா விசயம்! சரி... எதுவானாலும், நான் அப்படிக் கூறியபடியாற்தான் டாக்டர் கணவரை அழைத்து வரும்படி உங்களைக் கேட்டிருக்கிறார். சனிக்கிழமை கிளினிக்கிற்கு நான் உங்களுடன் வருகிறேன். அதிஷ்டவசமாக அன்று சனிக்கிழமையுமாகும், லீவு எடுக்கவேண்டிய தேவையுமில்லை. என்னுடைய இந்த முடிவிற்கு நீங்கள் எந்தவித ஆட்சேபனையும் தெரிவிக்க வேண்டாம், பிளீஸ்! இதைப்பற்றி ஏற்கனவே நான் உங்கள் அண்ணாவிடம் கூறிவிட்டேன். அவர் எந்த மறுப்பும் தெரிவிக்கவில்லை. திட்டமிட்டபடி சனிக்கிழமை நாங்கள் மூவரும் கிளினிக்கிற்குப் போகின்றோம்," என்று

உரிமை கலந்த தொனியில் சொன்னான். அந்தவேளையில் மகேசு மளிகைச் சாமான்களோடு திரும்பியிருந்தான். கொண்டுவந்த பொருட் களை ஒழுங்காக அடுக்கிவிட்டு இருவரும் மதியச் சாப்பாட்டைத் தயாரிக்கும் வேலையில் இறங்கினர்.

இன்று கிளினிக்கிகுச் செல்லவேண்டிய சனிக்கிழமை. காலை ஒன்பது மணிக்கு மருந்துவமனையில் நிற்கவேண்டும். வழமைக்கு மாறாக இன்று நேரத்தோடு எழும்பி எல்லா அலுவல்களையும் முடித்துக் கொண்டு கிளினிக்கிற்குச் செல்வதற்கு ஆயத்தமாகினர். இருவரையும் தயாராக இருக்கும்படி கூறிவிட்டு சாந்தன் ரக்ஸி பிடித்து வருவதற் குச் சென்றான். பத்து நிமிடத்தில் ரக்ஸியுடன் வந்ததும் தயாராக நின்ற இருவரும் ஏறிக்கொண்டனர். ரக்ஸி மருத்துவமனை நோக்கிப் புறப்பட்டது. சரியாக எட்டு ஐம்பதிற்கு மருத்துவமனையை அடைந்த மூவரும் கிளினிக் அறையின் முன் போடப்பட்டிருந்த வாங்கிலில் உட்கார்ந்து கொண்டனர். ஒன்பது மணி பத்து நிமிடத்தின்போது ஒரு தாதி வந்து உமாவையும் கணவரையும் உள்ளுக்கு வரும்படி அழைத்தாள். உடனே உமாவும் சாந்தனும் உள்ளே சென்றனர். அவர்களைப் பார்த்த டாக்டர் இருவரையும் அங்கிருந்த கதிரையில் அமரும்படி கேட்டுக்கொண்டார்.

உமாவின் கோவையைப் படித்துப் பார்த்துவிட்டு, உமாவை அழைத்து வேண்டிய சோதனைகளையெல்லாம் மேற்கொண்டார். உமாவின் உடல் நிலையில் திருப்தியடைந்த டாக்டர் மறுபடியும் கதிரையில் போய் அமரும்படி வேண்டினார். உமா கதிரையில் அமர்ந்து கொண்டதைத் தொடர்ந்து,

"உங்கள் இருவருக்கும் டாக்டர் என்ற முறையில் நான் சில ஆலோசனைகளை வழங்கவேண்டியிருக்கின்றது. உமாவின் உடல் நிலை தற்போது நல்லபடியாக உள்ளது. மேற்கொண்டு அவவிற்கு மருந்தொன்றும் தேவையில்லை. இருந்தபோதும் இன்னும் ஒரு மாதத் திற்கு கஷ்டமான வேலைகள் ஒன்றும் செய்யாமல் உடம்பைக் கவ னித்துக்கொள்ள வேண்டும். உமா போதிய உடல் வளர்ச்சியடைய முன்பே கற்பம் தரித்தபடியாலும் அவ கற்பமாயிருந்த காலத்தில் உடலைச் சரியாகப் பேணத்தவறியமையாலும் குழந்தை இறந்து பிறந்தபடியினாலும் அவவினுடைய கற்பப்பை மிகவும் பலயீனம் அடைந்துவிட்டது. ஆனபடியினால் உமா இன்னும் இரண்டு ஆண்டுக

ளுக்குள் கற்பம்தரித்தால், குழந்தைக்கு மட்டுமல்ல தாய்க்கும் உயிரா பத்து ஏற்படலாம். ஆனபடியால் இந்தவிடயத்தில் ரொம்பக் கவனமா யிருக்க வேண்டும். இது உங்கள் இருவரினதும் கையிற்தான் தங்கி யுள்ளது.

உமா, நீங்கள் பதினெட்டு வயதை அடைவதற்கு முன்பே கற்பம் தரித்துவிட்டீர்கள், என்று கூறிய டாக்டர் சிரித்துக்கொண்டே, 'காதல் திருமணமா?' என்று கேட்டார். உடனே உமா வெட்கத்தோடு கீழே பார்க்க,

"ஆம் டாக்டர் இவ என்னுடைய முறைப் பொண்ணுதான். அதாவது எனது மாமியின் மகள். விசயம் விளங்காமல் கொஞ்சம் அவசரப்பட்டு விட்டோம். தப்பென்று இப்போதான் புரிகின்றது," என்றான் சாந்தன். மறுபடியும் டாக்டர் சிரித்துக்கொண்டு,

"சரி... பரவாயில்லை. இனிவரும் இரண்டு வருடமும் மிகவும் கவனமாயிருக்கவேண்டும். அப்புறம் வேண்டுமென்றால் நீங்கள் எத்தனை பிள்ளைகளையும் பெறலாம். இரண்டு வருட காலத்தில் தேவை யென்றால் உமா கருத்தடை மாத்திரையைப் பாவிக்கலாம். கருத்தடை மாத்திரையை நான் பொதுவாகச் சிபார்சு செய்வதில்லை. அதனால் சில பக்கவிளைவுகள் ஏற்படும். அத்தோடு அதை ஒழுங்காகப் பாவிக்கத் தவறினால் கற்பம் தரிக்கவும் வாய்ப்புண்டு. எனவே உமா லூப் வைத்துக்கொள்ளலாம், அல்லது நீங்கள் கொண்டம் உறையைப் பாவிக்கலாம். லூப் வைத்துக்கொள்வது உங்களுக்கு விருப்பமென்றால் மூன்று மாதம் கழித்து மறுபடியும் என்னிடம் வாங்கோ. உடனே நீங்கள் செய்யவேண்டிய வேலை மூன்று மாதங்களுக்கு உடலுறவு வைத்துக்கொள்ளப்படாது. இரண்டு ஆண்டுகளுக்குப் பிற்பாடு கற்பம் தரிக்கும்போது முதல் மாதத்திலிருந்து குழந்தை பிறக்கும்வரை டாக்டரிடம் காட்டவேண்டும். தற்போது நடந்தது போன்று மறுபடியும் நடக்கப்படாது," என்று கூறிமுடித்த டாக்டர்,

"ஏதாவது கேள்வியிருந்தால் இப்போது நீங்கள் கேட்கலாம்" என்றார். உடனே சாந்தன்,

"நீங்கள் எல்லாவற்றையும் விளக்கமாய்க் கூறிவிட்டீர்கள் டாக்டர். ஆனபடியால் கேள்வி கேட்பதற்கு அவசியமில்லை என்று நினைக்கி றேன்" என்றதும்,

"அப்ப.... நீங்கள் போகலாம். ஏதும் தேவைப்பட்டால் வாங்கோ," என்று டாக்டர் சொல்ல, கதிரையை விட்டு எழுந்த சாந்தன்,

"எல்லாவற்றிற்கும் ரொம்ப தாங்ஸ் டாக்டர்" என்றான். அதைத் தொடர்ந்து உமாவும் நாணத்தோடு, "தாங்ஸ் டாக்டர்" என்று கூறிவிட்டு இருவரும் அறையைவிட்டு வெளியேறினர்.

இருவரினதும் வருகைக்காகக் காத்திருந்த மகேசு அவர்களைக் கண்டதும் வாங்கிலைவிட்டு எழுந்து எதுவுமே கேட்காமல் நின்றான். அவனின் நிலைமையைப் புரிந்துகொண்ட சாந்தன்,

"உமாவின் உடல் நிலை நல்லபடியாக இருக்கின்றதாம். இனி மேல் மருந்தொன்றும் தேவையில்லையாம். அத்தோடு இரண்டு மாதங்களுக்கு கஷ்டமான வேலைகள் ஏதும் செய்யாமல் உடம்பைக் கொஞ்சம் கவனமாய்ப் பார்த்துக் கொள்ளும்படி சொன்னார் டாக்டர்," என்று கூறியதும் அதைக்கேட்டு மனதிற்குள் சந்தோசம் அடைந்த மகேசு,

"அப்ப.. நாமள் வீட்டிற்குப் போவமா?" என்று கேட்டுவிட்டு முன் செல்ல அவனைத் தொடர்ந்து சாந்தனும் உமாவும் சென்றனர். மருத்துவமனையின் முன் நின்று, ஒரு ரக்ஸியை மறித்து ஏறிய மூவரும் வீடுவந்து சேர்ந்தனர்.

கணவன் மனைவி நாடகம் முடிந்தது. ஆனால், இதிலிருந்துதான் புதிய எண்ண அலைகள் இருவர் உள்ளத்திலும் ஆரம்பமாகின என்றால் மறுப்பதற்கில்லை. டாக்டர் கூறிய ஆலோசனைகள், அவற்றையெல்லாம் மனம் கோணாது உண்மையான கணவன் போன்று சாந்தன் செவிமடுத்தமை, டாக்டர் கேள்விகள் ஏதும் இருந்தால் கேட்கலாம் என்று கூறியபொழுது அதற்கான அவசியமில்லை என்று கூறிய பேச்சில் இருந்த தெளிவு, எந்தவித கூச்சமோ தயக்கமோ இன்றித் தன்னுடன் வந்து இத்தேவையைப் பூர்த்திசெய்யதமை எல்லாம் உமாவினுடைய மனதில் எண்ண அலைகளாகத் திரும்பத் திரும்ப திரைப்படம்போன்று ஓடிக்கொண்டிருந்தன.

சாந்தனைப் பொறுத்தமட்டில் ஓர் இனந்தெரியாத அன்பும் அனுதாபமும் உமா மீது ஏற்பட்டதெனலாம். இந்தப் பெண் தனக்கென்று ஒரு நல்ல எதிர்காலத்தை அமைத்துக்கொள்ள வேண்டும். அதற்கேற்ற

தகுதியெல்லாம் இந்தப் பெண்ணிடம் இருக்கின்றது என்று கருதிய சாந்தன், மறுநாள் மகேசுவிடம் கதைத்துக் கொண்டிருந்தபொழுது, ஏதோ முக்கிய விடயம் மனதில் பட்டதுபோன்று,

"மகேசு, நீ சொன்னாய் உன்னுடைய தங்கை பத்தாம் வகுப்புப் படித்துக்கொண்ருந்த பொழுதுதான் இந்த அனர்த்தம் ஏற்பட்டதென்று, அப்படித்தானே?"

"ஆம், அப்படித்தான்," என்றதும், கதையைத் தொடர்ந்த சாந்தன்,

"படிப்பில் நல்ல கெட்டித்தனமும் விவேகமும் உடையவள் என்றும் சொன்னாய், அப்படியானால், அவவினுடைய காலத்தை வீணடிக்காது வாற கிழமையே இங்குள்ள தனியார் கல்வி நிலையம் ஒன்றிற்கு ஆளை அனுப்பிப் படிப்பைத் தொடரும்படி கூறுவம். எப்படி இருக்கின்றது எனது ஐடியா? ஒரு மனிதனுக்கு கல்வி உதவுவது போன்று வேறு எதுவும் உதவ முடியாது மகேசு. இது உனக்குத் தெரியாத விடயமல்ல. தாய் தகப்பன் சகோதரங்கள் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குத்தான் உதவமுடியும். ஒருவனுடைய வாழ்நாள் முழுவதும் உதவவேண்டுமாயிருந்தால், அது கல்வியால் மட்டும்தான் முடியும். வேண்டுமென்றால் நான் கணிதத்திற்கு உதவி பண்ணலாம். உனக்குத் தெரியும்தானே கணிதம் எனக்குக் கைவந்த கலை என்று. என்னிடம் கணிதம் படித்தால் திறமைச் சித்தி பெறுவது இலகுவான காரியம். அதிதிறமைச் சித்திகூடப் பெறமுடியும். நீ என்ன மகேசு சொல்லுகிறாய்?" என்றான்.

"இதில் மறுத்துச் சொல்லுவதற்கு என்னிடம் ஒரு காரணமும் இல்லை. தங்கச்சியைப் படிக்கவிட்டால் ஒரு கரை காணுவாள் என்பது மட்டும் உறுதி. அந்தளவிற்கு அவளுக்குப் படிக்கக்கூடிய மூளை உண்டு. நீ சொன்னபடி வருகின்ற கிழமையே தனியார் கல்வி நிலையம் ஒன்றிற்கு ஆளை அனுப்புவம். நீ கூறியதுபோன்று நானும் எத்தனை காலத்திற்கென்று உதவுவது. அவள் படித்து முடித்து ஒரு தொழிலைத் தேடிக்கொண்டால் அப்புறம் தனக்கென்று ஓர் எதிர்காலத்தைத் தானே அமைத்துக் கொள்ளுவாள்," என்று கூறிமுடித்தான் மகேசு.

அதைத்தொடர்ந்து, அந்தக் கிழமையே அதற்கான ஆயத்தங்களைச் செய்வதில் மும்மரமாக ஈடுபட்டான் மகேசு. எதிர்பார்த்தபடி வந்த கிழமையிலிருந்து படிப்பைத் திரும்பவும் தொடங்கிய உமா

ஆர்வத்தோடும் அக்கறையோடும் படித்தாள். மாதங்கள் செல்லச்செல்ல அவளுடைய திறமை வெளிப்படத் தொடங்கியது. கல்வி நிலைய ஆசிரியர்களே அவளுடைய திறமையைப் பார்த்து மூக்கு நுனியில் விரலை வைத்தனர். புதிய இடம், புதிய வாழ்க்கை, புதிய நண்பர்கள், புதிய ஆசிரியர்கள், புதிய கல்விநிலையம் என்று எல்லாமே முற்றாக வேறுபட்ட இந்தச் சூழலில், படிப்பில் ஒரு வெறித்தன்மை உமாவிடம் காணப்பட்டது என்றால் மறுப்பதற்கில்லை. ஆறு மாதத்தில் பத்தாம் வகுப்புப் பரீட்சை ஆரம்பமாகியது. பரீட்சையின் இறுதிநாள் கடைசிப் பாடத்தை எழுதி விட்டு வீட்டிற்குவந்த உமாவிடம் சென்று,

"எப்படி உமா பரீட்சை எழுதினாய்? பாடங்கள் இலகுவாக இருந்தனவா? நான் உதவி செய்த கணிதம் எப்படி இருந்தது?" என்று சில கேள்விகளைக் கேட்டான் சாந்தன். கொடுப்புக்குள் சிரித்துவிட்டு, "ரொம்ப நல்லாய்ச் செய்துள்ளேன். கணிதத்தில் நிச்சயம் அதிதிறமைச் சித்தி கிடைக்கும். மற்றைய எல்லாப் பாடங்களிலும் திறமைச்சித்தி பெறுவேன். சில பாடங்களில் அதிதிறமைச்சித்தி கிடைத்தாலும் கிடைக்கலாம்," என்று எந்தவிதமான தயக்கமும் இன்றி நம்பிக்கை கலந்த தொனியிற் கூறினாள்.

"அப்படியா! கேட்பதற்கு ரொம்பச் சந்தோசமாயிருக்கின்றது. அப்படியானால் உமா, நீ பரீட்சைப் பெறுபேறு வரும் வரை காலத்தை வீணாக்காமல் உடனே பதினோராம் வகுப்பில் சேர்ந்து படிக்கத் தொடங்கலாமே!. இதைப் பற்றி உங்கள் அண்ணாவுடன் நான் கதைக்கிறேன். நீ என்ன சொல்லுகிறாய் உமா, என்னுடைய ஐடியாவைப் பற்றி?" என்று கூறிவிட்டு விழித்துப் பார்த்தான்.

உடனே உமா,

"நீங்கள் கூறுவது எனக்கும் சரியாகத்தான் படுகின்றது. நான் எதிர்பார்ப்பது போன்று பரீட்சையில் சித்தியடைவது உறுதி. ஆனபடியால் அண்ணாவிடம் கூறிவிட்டு வருகின்ற கிழமையே பதினோராம் வகுப்பில் சேர்ந்து படிக்கிறேன்," என்று ஆர்வத்தோடு கூறினாள்.

சாந்தனின் ஐடியாவைக் கேட்டு உண்மையிலேயே மகிழ்ச்சியும் ஆச்சரியமும் அடைந்த மகேசு, அடுத்த கிழமையே உமாவை பதினோராம் வகுப்பிற் சேர்த்துப் படிக்கவிட்டான். பதினோராம் வகுப்பில்

சில மாதங்கள் சென்றுவிட்டன. பத்தாம் வகுப்பிற் காட்டிய அதே அக்கறையையும் ஆர்வத்தையும் பதினோராம் வகுப்பிலும் காட்டினாள்.

வழமையாக கல்வி நிலையத்தால் பிற்பகல் நான்கு மணிக்கு வீடு திரும்பும் உமா, இன்று அங்கு கலைநிகழ்ச்சிகள் இடம்பெற்றதால் ஏழுமணிக்கே வீடு திரும்பமுடிந்தது. வழமைபோன்று வேலைமுடிந்து ஐந்து மணிக்கு வீடு திரும்பிய சாந்தன் கடிதங்கள் வந்து கிடக்கும் பெட்டியைப் பார்த்தான். உமாவின் பத்தாம் வகுப்புப் பரீட்சைப் பெறுபேறும் வந்துகிடந்தது. உடனே உடைத்து ஆர்வத்தோடு பார்த்தான். ஆனந்தமும் ஆச்சரியமும் பொங்க "உமா" என்று கூப்பிட்டுக் கொண்டு அவளின் றூமை நோக்கி ஓடினான். அந்தவேளையில் உமா அங்கு இல்லையென்பதை அறிந்து சிறிது ஏமாற்றம் அடைந் தவன், அப்புறம் உமாவிற்கு ஆச்சரியத்தைக் கொடுக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு பெறுபேற்றுக் கடிதத்தைத் தன்னுடைய றூமில் வைத்துக்கொண்டான். அதைத் தொடர்ந்து மகேசு வீட்டிற்கு வந்தான். மகேசுவைப் பார்த்ததும்,

"உமாவை இன்னும் காணவில்லை, ஏதும் சொல்லிவிட்டுப் போன வவோ?" என்று கேட்டான் சாந்தன். சாந்தனின் கேள்வியிலிருந்து அவன் உமா மீது கொண்டிருக்கும் அக்கறையைப் புரிந்துகொண்ட மகேசு,

"இன்று கல்வி நிலையத்தில் கலை நிகழ்ச்சிகள் இடம்பெறுகின்றன வாம். அதனால் தாமதித்து வருவேன் என்று காலையில் கூறி விட்டுச் சென்றாள். இன்னும் சிறிது நேரத்தில் வந்துவிடுவாள் என்று நம்புகி றேன். நேரம் ஏழு மணியாவதற்கு இன்னும் அரை மணித்தியாலம் இருக்கின்றது. ஏழு மணிக்கு வருவதாயே கூறியிருந்தாள்" என்று சொல்லிவிட்டு குளியல் அறைக்குச் சென்றுவிட்டான்.

கட்டிலில் படுத்திருந்தபோதும் மணிக்கூட்டின் மீதே கவனம் முழுவதும் இருந்தது எனலாம். இப்போ நேரம் ஏழு மணி. அண்ணா, என்று கூப்பிட்டுக் கொண்டு உமா வருகிறாள். உடனே எழுந்த சாந்தன் பெறுபேற்றைக் கையில் எடுத்துப் பின்னுக்கு மறைத்துக் கொண்டு வெளியில் வந்து,

"உமா, இராத்திரி ஒரு கனவு கண்டேன்," என்றான்.

"கனவா! என்ன கனவு சாந்தன்?" என்றாள்.

"நீங்கள் நான்கு அதிதிறமைச் சித்திகளுடனும் மற்றைய பாடங்களில் திறமைச் சித்திகளுடனும் பத்தாம் வகுப்புப் பரீட்சையில் சித்தியடைந்துள்ளதாய் உங்களுடைய பெறுபேறு வந்தது. அதைப் பார்த்துவிட்டு, எல்லாப் பாடங்களிலும் அதிதிறமைச் சித்தியை எதிர்பார்த்தேன், கிடைக்கவில்லையே! என்று சொல்லி அழுகின்றீர்கள். அப்பொழுது, நீர் அடுத்த முறை பரீட்சையை எழுதி எல்லாப் பாடங்களிலும் அதிதிறமைச் சித்தியைப் பெறலாம் தானே! அதைவிட்டு ஏன் அழுகின்றீங்கள் என்று நான் ஆறுதல் கூறினேன்," என்பது போல் கனவு கண்டேன் என்று சொல்லி முடிப்பதற்குள்,

"போங்க சாந்தன், நான் அந்தளவிற்குப் பேராசைக்காரி அல்ல. நான் முன்பு கூறியது போன்று கணிதத்திற்தான் அதிதிறமைச் சித்தியை எதிர்பார்க்கிறேன். நீங்கள் கனவு கண்டதுபோன்று நான்கு பாடங்களில் அதிதிறமைச் சித்தியைப் பெற்றால், அது அதிஷ்ட லாபம் கிடைத்தது போன்று இருக்கும். அந்தளவிற்கு....," என்று கதையை விழுங்க உடனே சாந்தன்,

"அந்தளவிற்கு அதிர்ஷ்சாலி இல்லை என்று சொல்ல வாறீங்கள், அப்படித் தானே?" என்றான்.

"புரிந்துகொண்டால் சரி," என்றாள்.

"அதிஷ்டம் வந்துவிட்டதே! எப்படி அதிஷ்டசாலி அல்ல என்று சொல்ல முடியும்? இந்தாங்கோ உங்கிட அதிஷ்டம்," என்று கூறிக் கொண்டு பெறுபேற்றுக் கடிதத்தை நீட்டினான். உடனே வாங்கிப் பிரித்துப் பார்த்தாள். அவளின் சிவந்த இதழ்களில் மொட்டவிழ்ந்தது போன்ற புன்சிரிப்பு. அது இதழ்களில் மட்டும் ஏற்பட்ட சிரிப்பல்ல. அவளின் இதயக் களிப்பைப் பார்த்து மகிழ்ச்சியடைந்த சாந்தன்,

"அப்ப.. நான் கண்ட கனவு உண்மைதானே உமா?" என்று சிரித்துக்கொண்டே கேட்டான். நான்கு பாடங்களில் அதிதிறமைச் சித்தி பெற்றதும் மற்றைய பாடங்களில் திறமைச் சித்தி பெற்றதும் உண்மைதான். ஆனால் மற்றைய பாடங்களில் அதிதிறமைச் சித்தி கிடைக்கவில்லையே! என்று நான் அழவில்லையே! நான் ரொம்பச் சந்தோசம் அடைகின்றேனே! அது பொய்தானே?" என்று பேசிக்கொண்டிருந்த பொழுது, மகேசு குளித்து முடித்துவிட்டு வெளியே வந்தான்.

உடனே உமா,

"அண்ணா, பரீட்சைப் பெறுபேறு வந்துவிட்டது. நான்கு பாடங்களில் D மிகுதிப்பாடங்களில் C," என்றாள். மகிழ்ச்சியடைந்த மகேசு,

"அப்படியா! என்னுடைய தங்கச்சியைப் பற்றி எனக்குத் தெரியும் தானே! இருந்தபோதும் இந்தப் படிப்பிற்கு அத்திவாரம் போட்ட சாந்த னுக்கு முதலில் நன்றி சொல்லவேண்டும். 'ரொம்பத் தாங்ஸ் சாந்தன்!' நீ கொடுத்த ஐடியாவினாற்தான் எனது தங்கையின் திறமை வெளிப்பட முடிந்தது. மறுபடியும், 'தாங்ஸ் சாந்தன்' என்று கூறிவிட்டு தங்கையைப் பார்த்து,

"பன்னிரண்டாம் வகுப்புப் பரீட்சையிலும் இதேபோன்று அதிதிறடை யுடன் சித்தியடைய வேண்டும்," என்று கூறிவிட்டு தங்கையின் தலை யைத் தடவி தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்திச் சென்றான்.

## அங்கம் : 07

மனதில் சில திட்டங்களை ஏற்கனவே வைத்திருந்த உமா அதற்கேற்ப பதினொராம் பன்னிரண்டாம் வகுப்புகளில் கணிதம், ஆங்கிலம், தமிழ், புவியியல் ஆகிய நான்கு பாடங்களையும் கற்று வந்தாள். இந்த தெரிவிற்கு சாந்தனுடைய ஆலோசனையும் உதவியது என்றால் மறுப்பதற்கில்லை. இரண்டு வகுப்புகளிலும் தனது முழுச் சக்தியையும் பயன்படுத்திப் படித்த உமா பன்னிரண்டாம் வகுப்புப் பரீட்சையில் கணிதம், தமிழ் ஆகிய பாடங்களில் அதிதிறமைச் சித்தி யையும் மற்றை இரு பாடங்களில் திறமைச் சித்தியையும் பெற்று பரீட்சையில் சித்தியடைந்தாள். அவளுடைய எதிர்பார்க்கையும் அந்த ளவிற்தான் இருந்தது. பல்கலைக் கழகத்திற்குச் சென்றால் அண்ணா விற்கு ஏற்படக்கூடிய நிதி நெருக்கடிகள், அவருடைய வயது, அவரு டைய எதிர்கால வாழ்க்கை என்பவற்றைக் கருத்திற் கொண்டு பல்கலைக் கழகம் சென்று படிப்பதைத் தவிர்த்து தொழில் ஒன்று தேடும் முயற்சியில் இறங்கினாள்.

இந்தக் கட்டத்திலும் சாந்தனின் அறிவுரை உமாவிற்குப் பெரிதும் உதவியது. மகேசுவும் தங்கையின் இந்த முடிவிற்கு எந்தவித ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை. காரணம், தனக்கென ஒரு

நல்லவாழ்க்கையை அவள் ஏற்படுத்திக் கொள்வாள் என்ற உறுதியான நம்பிக்கை அவனிடம் இருந்தமையாகும்.

வேலைதேடும் முயற்சியின் முதற்கட்டமாக எயர் லங்கா நிறுவனத்தில் உதவி நிர்வாகப் பயிலுநர் பதவிக்கு விண்ணப்பித்தாள். நேர்முகப் பரீட்சையில் இவளுடைய பன்னிரண்டாம் வகுப்புப் பாடங்களையும் அதன் பெறுபேறுகளையும் கருத்திற்கொண்ட அதிகாரிகள், அவளுடைய ஆங்கிலத்தில் இருந்த பேச்சுவன்மை, உடல் அமைப்பு என்பவற்றையும் கவனத்திற்கொண்டு அவளையும் பயிலுநர்களில் ஒருத்தியாகத் தேர்ந்தெடுத்தனர். அவளுக்குப் பெரு மகிழ்ச்சி, அண்ணாவிற்கு அதைவிட மகிழ்ச்சி, சாந்தனுக்கும்தான்.

ஒரு வருடப் பயிற்சியை முடித்துக்கொண்டு கொழும்பு அலுவலகத்தில் உதவி நிர்வாக உத்தியோகத்தராகக் கடமையாற்றத் தொடங்கினாள். வேலை பார்த்துக் கொண்டிருந்தபொழுது அவளுடைய தொழிலோடு சம்பந்தப்பட்ட படிப்புக்களும், பரீட்சைகளும், பயிற்சிகளும் தொடர்ந்து இடம்பெற்றன. எல்லாவற்றிலும் உமா தனது திறமையை வெளிப்படுத்தி மேலதிகாரிகளுக்குப் பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியதுடன் அவர்களுடைய பாராட்டிற்கும் மதிப்பிற்கும் உள்ளானாள்.

அக்காலப் பகுதியில் அவள் வேலை செய்த அலுவலகத்திற்கு உத்தியோக ரீதியாக பல விமான ஓட்டிகள், அதாவது பைலற்ஸ் இடையிடையே வந்து போவது வழக்கம். அவர்களில் ஒருவனுடைய பெயர் சஞ்சீவன். முதல் நாள் பார்வையிலேயே உமா மீது அவனுக்கு ஒரு கண். இப்பொழுது உமா இருபத்திரெண்டு வயது நிரம்பிய கண்ணைக் கவரும் அழகு தேவதை. அவளுடைய உயரம், உடல் அமைப்பு, கண்கள், கூந்தல், நடை, இடை என்பவற்றை வர்ணிப்பதானால் அது ஒரு புலவனாற்தான் முடியும். சுருக்கமாய்ச் சொன்னால் எந்த ஒரு ஆணினுடைய கவனத்தையும் இழுக்கக் கூடிய ஒரு கவர்ச்சியான பெண்ணாகக் காட்சி கொடுத்தாள் உமா.

எனவே, பைலற் சஞ்சீவனின் பார்வை அவள் மீது விழுந்ததில் வியப்பொன்றுமில்லை. அவன் அந்த அலுவலகத்திற்கு வரும்போதெல்லாம் உமாவுடன் நெருங்கிப் பழகுவதற்கு முயற்சித்தான். உமா அவனைக் கண்டும் காணாததும்போன்று நடந்துகொண்டாள். அவளுடன் பழகுவதற்கு வாய்ப்புக்கள் கிட்டாது போனாலும், நாளடைவில்

உமாவைத் திருமணம் செய்யவேண்டும், அவளைத் தனது மனைவி யாக்க வேண்டுமென்ற முடிவிற்கு வந்தான்.

சஞ்சீவன் இருபத்தேழு வயது நிரம்பிய கம்பீரமான வாலிபன். நல்ல சோடிப் பொருத்தம். எப்படியும் உமாவைத் தனது மனைவியாக்க வேண்டும் என்று இறுதி முடிவெடுத்தான். அங்கு வேலை செய்த தமிழ் உத்தி யோகத்தர்கள் மூலம் அவளைப் பற்றிய தகவல்களைச் சேகரித்தான்.

ஒரு சனிக்கிழமை அன்று முற்பகல் பதினொரு மணியளவில் மகேசுவின் அறைக்கதவில் யாரோ தட்டும் சத்தம் கேட்டது. உடனே மகேசு எழுந்து சென்று கதவைத் திறந்தான். எதிரில் இரண்டு இளைஞர்கள் நின்றனர். அதில் ஒருவன்,

"நீங்கள்தானா மகேசு?" என்று கேட்டான். உடனே,

"நான்தான் மகேசு," என்றதும், அந்த இளைஞன்,

"நான் உங்களிடம் கொஞ்சம் பேசவேண்டும் ஒரு முக்கிய விடைய மாக. இப்பொழுது பேசலாமா?" என்று கேட்டான்.

"நீங்கள் யார் எவர் என்று சொல்லாமல், முக்கிய விடையம் ஒன்றைப் பற்றிப் பேசவேண்டும் என்று கூறுகின்றீர்கள். அதுதான்....," என்று இழுத்தான் மகேசு. உடனே அந்த இளைஞன்,

"ஐ ஆம் சொறி. கதைக்கும் பொழுதே சொல்லலாம் என்று எண்ணியதால், என்னைப்பற்றி முதலில் கூறுவதற்குத் தவறிவிட்டேன். மன்னிக்க வேண்டும். என்னுடைய பெயர் சஞ்சீவன், என்னுடைய சொந்த ஊர் யாழ். குடாநாட்டில் உள்ள முள்ளிக்காடு. நான் எயர் லங்காவில் ஒரு பைலட் ஆக வேலை செய்கிறேன். இவர் என்னுடைய நண்பன். இவருடைய பெயர் குமரன். இவர் நெடுந்தீவைச் சேர்ந்தவர். இவர் எயர் லங்காவில் இஞ்ஜினியராக வேலை செய்கிறார்," என்று சொல்லிக் கொண்டுபோகக் குறுக்கிட்ட மகேசு,

"இதற்குப் பிறகும் உங்களை வாசலில் நிற்கவைத்துப் பேசுவது அழகல்ல. உள்ளுக்கு வாங்கோ," என்று சொல்லி அழைத்து அங்கி ருந்த கதிரைகளைக் காட்டி இருக்கும்படி கேட்டுக்கொண்டான். "தாங்கஸ்" என்று கூறிவிட்டு கதிரையில் அமர்ந்துகொண்ட இருவரும் அங்கு இருந்த சாந்தனைப் பார்த்தனர். இதை அவதானித்த மகேசு,

"இவர் என்னுடைய நண்பன் அறைஞனும்கூட, பெயர் சாந்தன்," என்று கூறிவிட்டு,

"இவர் இங்கு இருப்பது உங்களுடைய கதைக்கு இடைஞ்சலாக இருக்குமோ?" என்று கேட்டான்.

"இல்லை! இல்லை!! அப்படியொன்றுமில்லை. நாங்கள் பேசப் போகும் விடயம் கள்ளக்கடத்தலோ அன்றித் தூள் வியாபாரமோ சம்பந்தப்பட்டதல்ல," என்று சொல்ல, எல்லோரும் விழுந்து விழுந்து சிரித்தனர். அப்புறம் கதையைத் தொடர்ந்த சஞ்ஜீவன்,

"சரி.. சுத்திவளைத்துப் பேசாமல் நேரே விடயத்திற்கு வாறேன்," என்று கதையைத் தொடங்கி,

"எயர் லங்காவில் நிர்வாகப் பகுதியில் உதவி நிர்வாக உத்தியோகத்தராக உமா என்னும் பெயருடைய ஒரு பெண் பிள்ளை வேலை செய்கிறார். அவ உங்களுடைய தங்கை என்று அறிந்தேன். அப்படித் தானே?" என்று கேட்டுவிட்டு இதழுக்குள் சிரித்தான்.

"ஆமா, அவ என்னுடைய தங்கைதான்," என்றான் மகேசு.

கதையை மேலும் தொடர்ந்த சஞ்சீவன்,

"அவ வேலையில் சேர்ந்து சிறிது காலமாயிருந்தபோதும் அவ நல்ல பெயரையும் புகழையும் சம்பாதித்துள்ளார். அத்தோடு அவ வினுடைய குணம், நடை, உடை, பாவனை, ஏன் அழகும்கூட எனக்கு மிகவும் பிடித்துள்ளன. வெட்கப்படாமல் நேரடியாய்ச் சொன்னால், நான் அவவைக் கல்யாணம் பண்ணிக்கொள்ள விரும்புகிறேன். நீங்கள்தான் அவவிற்குப் பொறுப்பான ஆள் என்பதை அறிந்து கொண்டு உங்களிடம் வந்துள்ளேன்.

என்னடா, ஒரு வாலிபன் தங்கையைப் பார்த்துவிட்டு என்னிடம் நேரடியாக வந்து பெண் கேட்கிறான். இவன் ஒரு கிறுக்கனாயிருப் பானோ, என்று தப்புக்கணக்குப் போடவேண்டாம். தனிய வரப்படாது என்பதற்காகத்தான் என்னுடைய நண்பனையும் கூட்டி வந்திருக்கிறேன். புறோக்கர் மூலம் வருவதில் எனக்குப் பிடிப்பில்லை, நேரே வந்துவிட் டேன், அவ்வளவுதான். உங்களுக்கும் உங்களுடைய தங்கைக்கும் இதில் சம்மதம் என்றால், அப்புறம் எனது பெற்றோர், உறவினர் முறைப்படி உங்களுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளுவார்கள்.

அதற்குமுன் அவர்களையேன் போட்டு உலைப்பான் என்றுதான் இப்போது நானே வந்துவிட்டேன்," என்று கச்சிதமாய்ச் சொல்லி முடித்தான்.

கதையைக் கேட்டுவிட்டு உள்ளூரப் பூரிப்படைந்த மகேசு,

"நீங்கள் வந்ததில் தப்பொன்றுமில்லை. இந்தக்காலத்து இளைஞர்கள் இந்த விடயத்தில் துணிச்சலானவர்கள்தான். என்னையும் சேர்த்துத்தான் சொல்கிறேன்," என்று சொல்லிவிட்டுச் சிரித்தான். எல்லோரும் சேர்ந்து சிரித்தனர். தொடர்ந்து,

"முதலில் தங்கையின் விருப்பத்தை நான் கேட்டறிய வேண்டும். அதன் பிற்பாடுதான் நான் முடிவெடுக்கலாம்," என்றதும்,

"என்னை உமாவிற்கு நன்கு தெரியும். பெரிதாய்க் கதைத்துப் பேசிப் பழக்கமில்லையேயொழிய, அவவிற்கு என்னை நன்றாகவே தெரியும். காரணம் தொழில் ரீதியாக நான் அவவினுடைய அலுவலகத்திற்குப் போவது வழக்கம்," என்று கூறிவிட்டு தன்னுடைய விசிற்றிங் காட்டைக் கொடுத்து,

"இதில் என்னுடைய பெயரும் விலாசமும் தொலைபேசி இலக்கமும் உண்டு. தொலைபேசி மூலம் முடிவை அறியத்தாருங்கோ. நல்ல முடிவாய் வருமென்று எதிர்பார்த்துச் செல்லுகிறேன்," என்று கூறிக்கொண்டு கதிரையைவிட்டு எழுந்து,

"அப்ப.. நாங்கள் போயிட்டு வாறம்," என்று கூறி விடைபெற்றுச் சென்றனர்.

அன்று பின்னேரம் விடயத்தை உமாவிற்குத் தெரியப்படுத்தினான் மகேசு. அப்பொழுது,

"பைலட் சஞ்சீவனை எனக்குத் தெரியும். சில பல தடவைகள் அவர் என்னுடன் உத்தியோக பூர்வமாகப் பேசியிருக்கின்றார். இந்த விடயத்தில் நான் முடிவெடுப்பதற்கு முன் அவரைப் பற்றி மேலும் கேட்டறிய வேண்டும். ஆனபடியால் இரண்டு மூன்று கிழமை அவகாசம் தரவேண்டும் அண்ணா," என்று கூறினாள் உமா.

இந்த விடயத்தில் அவசரப்பட்டு முடிவெடுக்காமல் மாப்பிள்ளையைப் பற்றி நன்கு தெரிந்துகொண்டு முடிவெடுப்பதுதான் புத்திசாலித்

தனம். எனவே நீ வேண்டிய கால அவகாசத்தை எடுத்து உன்னுடைய முடிவைச் சொல்லு உமா," என்று கூறிவிட்டுச் சென்றான் மகேசு.

அன்று இரவு சாந்தனுக்கு பன்னிரண்டு மணியாகியும் நித்திரை வரவில்லை. புரண்டு புரண்டு படுத்தான். அப்பொழுது மரண நித்திரையி லிருந்த மகேசுவைப் பார்த்து,

"மூசிமூசி நித்திரை கொள்ளுகிறான். என்னுடைய வேதனை இவனுக்கெங்க புரியப்போகின்றது," என்று தன்னுள் புறுபுறுத்துக் கொண்டான். ஒரு மணிக்குப் பிற்பாடு அரையும் குறையுமாக கோழி உறக்கத்துடன் அன்றைய இரவு கழிந்தது. வழமையாக ஞாயிற்றுக் கிழமைகளில் காலை ஒன்பது மணிக்கு எழும்பும் சாந்தன் இன்று ஏழுமணிக்கே எழும்பிவிட்டான். காலைக் கடன்களை முடித்துக் குளித்து விட்டு வந்த சாந்தன் யாரும் எதிர்பாராத விதமாக,

"மகேசு, இந்த மாதத்துடன் நான் இந்த றூமைவிட்டு விலகிப் போகவிருக்கிறேன்," என்றான். இதைக்கேட்டு அதிர்ச்சியடைந்த மகேசு

"என்ன சாந்தன் சொல்லுகிறாய்! உண்மையாகவா கூறுகின்றாய்? அல்லது....," என்று இழுக்க,

"உண்மையாகத்தான் சொல்லுகிறேன். இதென்ன பகிடி விடுகின்ற விடயமா?" என்று சற்று இறுக்கிச் சொன்னான்.

"அதற்கான தேவை உனக்கு இப்ப என்ன வந்தது? ஏன் திடீரென்று போகின்றேன் என்று சொல்லுகிறாய்? " என்று கேட்டான் மகேசு.

"எல்லா நேரத்திலும் எல்லா விடயங்களையும் எல்லாரிடமும் சொல்ல முடியாது மகேசு, என்னுடைய கவலை உனக்கெங்க புரியப் போகின்றது?" என்று கூறிவிட்டுச் சுறுக்கெனக் குசினிக்குச் சென்றான்.

சாந்தனுடைய கதையையும் செயற்பாட்டையும் பார்த்துக் கலக்க மடைந்த மகேசு, இவனுடைய இந்தத் திடீர் முடிவிற்கு என்ன காரண மாயிருக்குமென்று மண்டையைப் போட்டு உடைத்தான். இரவு படுக் கைக்குப் போகும்வரை நல்லாய்த்தானே இருந்தான். அதற்குள் இவனுக்கு என்ன நடந்திருக்கலாம் என்று திரும்ப திரும்ப யோசித்தான். ஒன்றும் புரியாத நிலையில் உமாவிடம் போய் விடயத்தைச் சொன்னான்.

கதையைக் கேட்டுவிட்டு உமா,

"நேற்று சஞ்சீவனும் குமரனும் வந்து உங்களுடன் சம்பந்த விடயமாய்க் கதைத்தபொழுது சாந்தன் உங்களோடு கூட இருந் தாரா?" என்று கேட்டாள். "ஆம்" என்றான் மகேசு.

"அங்கதான் சாந்தனுடைய பிரச்சனைக்கான காரணம் இருக்க வேண்டும், கொஞ்சம் யோசித்துப் பாருங்கோ அண்ணா," என்றாள்.

"சரி... நான் யோசித்துப் பார்க்கிறேன்," என்று கூறிவிட்டு தனது அறைக்குள் வந்த மகேசு உண்மை வெளித்தவன் போன்று,

"ஓ! இவன் உமாவை விரும்புகின்றானோ? இல்லாவிட்டால், விடிய எழும்பி இவன் ஏன் றூமைவிட்டுப் போகிறேன் என்கிறான்? நாங்கள் எந்தத் தப்பும் பண்ணவில்லையே! இதை எப்படி அவனிடம் கேட்பது?" என்று குழம்பிக்கொண்டிருக்க, உமா குசினிக்குச் சென்றாள். அப்பொழுது சாந்தன் காலை உணவு சாப்பிட்டுக் கொண்டிருந்தான்.

"என்ன சாந்தன், றூமைவிட்டு இந்த மாதத்துடன் போகிறேன் என்று சொன்னீங்களாம்? அதற்கான அவசியம் என்ன வந்தது? அறிய லாமோ?" என்றாள் உமா.

"இனி உங்களுக்குச் சொல்லி என்ன பிரயோசனம்? காலம் கடந்து விட்டது. கறந்தபால் முலைக்கேறாது. முடிந்தது முடிந்ததுதான்" என்று எதையோ நிரந்தரமாக இழந்துவிட்டவன் போன்று புலம்பினான் சாந்தன். சிறிது நேரம் எதுவும் பேசாமல் ஆழமாகச் சிந்தித்துக் கொண்டிருந்த உமா,

"நான் ஒன்று கேட்கலாமா, சாந்தன்? என்றதும்,

"கேளுங்கோ," என்றான்.

"நான் கேட்பது தப்பாக இருந்தாலும் அதைப் பெரிதுபடுத்திக்கொள் ளக்கூடாது சரியா?" என்றாள்.

"சரி, எதுவானாலும் கேளுங்கோ. எனக்கும் ஒரு புரிந்துணர்வு இருக்கத்தானே வேண்டும்,"

"என்னை நீங்கள் கல்யாணம் பண்ணிக்கொள்ள விரும்புகின் றீங்களா?" என்று கேட்டாள் உமா.

"விரும்பினேன், இனிமேல் அந்த விருப்பதிற்கு இடமில்லை என்பதைப் புரிந்துகொண்டபடியால், விலகிப்போய் வேறு வழிகளைப் பார்க்கலாம் என்று நினைக்கிறேன். இதற்குமேலும் இங்கு இருப்பது என்னையே நான் அழித்துக்கொள்ளுவதாய் இருக்கும்," என்று ஏமாற்றம் கலந்த பாணியில் சொன்னான்.

சாந்தன் மீது நல்ல மதிப்பும் மரியாதையும் நன்றி உணர்வும் கொண்டிருந்த உமாவிற்கு அவனின் ஏமாற்றம் கலந்த கதை சிறிது வேதனையை அளித்தது. அவனின் நம்பிக்கையீனத்தைப் போக்கி புத்துணர்ச்சி அளிக்க வேண்டுமென்ற நோக்கில்,

"ஏன் சாந்தன், உங்களுடைய விருப்பத்திற்கு இனி இடமில்லை என்று எண்ணுகின்றீர்கள்?" என்று கேட்டு வாய் மூடுவதற்குள்,

"என்ன! என்னை ஓர் இளிச்சவாயன் என்று நினைச்சீங்களா? நான் ஓர் இளிச்சவாயனுமல்ல, விபரம் கெட்டவனுமல்ல, எனக்கும் கொஞ்சம் மூளை இருக்கு. நீங்கள்தான் பெரிய புத்திசாலியென்று நினைத்துக்கொள்ள வேண்டாம்," என்று சூடாகக் கதைத்துக் கொண்டு போக அதிர்ச்சியடைந்த உமா, மேலும் அவன் சொல்லப்போவதைக் கேட்க முடியாத நிலையில்,

"என்ன சாந்தன் சொல்லவாறீங்கள்? ஏன் இப்படியெல்லாம் பேசுகின்றீங்கள்?" என்று ஏக்கத்தோடு கேட்டாள்.

உணர்ச்சிவசப்பட்ட சாந்தன்,

"நீங்கள் பைலட் சஞ்சீவனை விரும்புகின்றீர்கள். அவனும் உங்களை விரும்புகிறான். அதன் பிரதி பலிப்புத்தான் நேற்று அவன் நேரே வந்து வீட்டுக் கதவில் தட்டிப் பெண் கேட்டது. ஓர் இளைஞன் நேரே வீட்டிற்கு வந்து பெண் கேட்கிறான் என்றால், அதற்கொரு அழுத்தமான காரணம் இருக்கவேண்டும். நீங்களும் அவனை விரும்புவதுதான் அதற்கான காரணம். அது உங்களுடைய அண்ணாவிற்குப் புரியாமலிருக்கலாம். அல்லது புரிந்துகொண்டும் நாடகம் ஆடலாம். இதைத்தானும் புரிந்துகொள்ள முடியாத ஒரு முட்டாளல்ல நான். ஆனபடியாற்தான், எனக்கும் கொஞ்சம் மூளை இருக்கு என்று சொன்னேன். நீங்கள் ஒருவனை விரும்புவதும் அவனைத் திருமணம் செய்துகொள்ளுவதும் உங்களுடைய உரிமை. அதில் நான் தலையிட

முடியாது. ஆனால் இப்ப ஒரு கேள்வி கேட்டீங்களே! அதாவது,

"ஏன் சாந்தன் உங்களுடைய விருப்பத்திற்கு இனி இடமில்லையென்று எண்ணுகிறீர்கள்?" என்று. அதற்காகத்தான் சொன்னனான்,

"நான் ஓர் இளிச்சவாயன் இல்லை," என்று. நீங்கள் அவனை விரும்புவீர்கள், இவனை விரும்புவீர்கள், அப்புறம் என்னையும் இப்படிக் கேட்பீர்கள், இவையெல்லாம் உங்களுக்குச் சர்வசாதாரணமாய் இருக்க....," என்று சொல்லி முடிப்பதற்குள்,

"யூ சட் அப், யூ பாஸ்ரட் , வட் னொன்சென்ஸ் ஆ யூ ரோக்கிங்? மைண்ட் யூவர் ரங். (you shut-up, you bastard, what non - sense are you talking? mind your tongue.) இவ்வளவு நாளும் உன்னை ஒரு பெரிய மனிதனாகத்தான் மனதார எண்ணியிருந்தனான். இந்தளவிற்கு குறுகிய மனப்பான்மையும் சுயநலமும் கொண்ட ஒரு கீழ்த்தர பிறவியாக இருப்பாயென்று நான் கனவிற்கூட உன்னைப் பற்றி எண்ணியதில்லை. நீ எவ்வளவு மோசமான சுயநலப் பிறவியென்று இப்பதான் புரிகின்றது.

இவ்வளவு நாளும் நல்லவன் போல் நடந்து கொண்டாய். அவையெல்லாம் நடிப்போ நிசமோ எனக்குத் தெரியாது. ஆனால் நீ இப்பொழுது பேசிக்கொண்டதிலிருந்து உன்னுடைய மனதில் அழுக்காறும் பொறாமையும் நிறைந்துள்ளதேயொழிய, நீ ஒரு சுத்தமான மனம் படைத்தவன் அல்ல என்பது உறுதி. இதற்குமேலும் உன்னுடன் பேசிக்கொண்டிருப்பதில் எந்தப் பிரயோசனமும் இல்லை. அதற்கான தேவையும் இல்லை," என்று கூறிவிட்டுத் தனது றூமிற்குள் சென்றாள் உமா.

எதுவுமே பேசாத சாந்தன் எழுந்து தனது றூமிற்குச் சென்று உடையை மாற்றிக்கொண்டு வெளியே சென்றான். இருவரும் பேசியதை குசினிக்கு வெளியில் நின்று கேட்டுக்கொண்டிருந்த மகேசு,

"இந்தப் பாழ்பட்ட உலகத்தைப் புரிந்துகொள்ள முடியாதிருக்கின்றதே! நல்லவன் போல் இருக்கிறாங்கள! பின் திடீரென்று இப்படி மாறுகின்றாங்கள். இவன் நல்லவன் போல் இருந்தது நடிப்பா? அல்லது நிசமா? ஏன் இப்படி நடந்துகொண்டான்? பொறாமையா? அல்லது சுயநலமா? ஏதுவுமே புரியவில்லையே!"

ஒருவன் கெட்டுப்போகும்போது அவனைப் பார்த்துப் பரிதாபப்படுவதும் அதே ஒருவன் நல்லாய் வரும்போது அதே ஆட்கள் அவனைப் பார்த்துப் பொறாமைப்படுவதும் உலக இயற்கை. அதுவும் நம்மவர் மத்தியில் கொஞ்சம் அதிகம். அதன் வெளிப்பாடாய்த்தான் இதுகும் இருக்கவேண்டும்.

இவன் தங்கச்சியை உண்மையாக விரும்பியிருந்தால் என்னிடம் தனது விருப்பத்தைத் தெரிவித்திருக்கலாம். அல்லது தங்கச்சியிடம் தானும் கேட்டிருக்கலாம். அதைவிடுத்து அவன்கள் வந்துபோனபிற்பாடு தேவையற்ற முறையில் கதைப்பதைப் பார்க்கும்போது பொறாமைதான் முன்னுக்கு நிற்பதுபோல் தெரிகின்றது.

இது தமிழனுக்கு கொஞ்சம் ஜாஸ்தி என்பது வெளிப்படையான உண்மை. இவனும் அதே குட்டையில் ஊறிய மட்டை தானே! ஆனபடியால், இவனை இனி மேலும் இங்கு வைத்திருப்பது ஆபத்தாய் முடியும். இவனும் படுக்கையின் கீழ் கிடக்கும் பாம்பு போன்றுதான் தென்படுகின்றான். தீண்டுவதற்கு முன் இவனை அகற்றிவிட வேண்டும். இல்லாவிட்டால் பேராபத்தாக முடியும். பொறாமையும் சுயநலமும் உச்சக்கட்டத்தை அடைந்தால் அது எந்த ஊத்த, நாசகார வேலையையும் செய்யத் தூண்டும்," என்று பலவாறாகத் தனக்குள் நினைத்துக் கொண்டிருந்தபொழுது, வெளியிற்போன சாந்தன் திரும்பிவந்தான். வந்தவன் மகேசுவைப் பார்த்து,

"நான் நாளைக்கே இந்த இடத்தைவிட்டுப் போகவிருக்கிறேன். அதில் உனக்கு ஏதும் இடைஞ்சல் இருக்கின்றதா?" என்று கேட்டான்.

இவனை மெதுவாகக் கழற்றிவிட வேண்டுமென்று எண்ணிக் கொண்டிருந்த மகேசுவிற்கு இவனுடைய கேள்வி 'பழம் நழுவி பாலில் விழுந்தது போன்ற' மகிழ்ச்சியைக் கொடுத்தது. உடனே,

"இல்லை சாந்தன். எனக்கொரு இடைஞ்சலும் இல்லை. தற்போது உனது மனோநிலை இருக்கின்ற விதத்தைப் பார்க்கும்போது, நீ இந்த இடத்தைவிட்டு விலகிப்போவது உனக்கும் நல்லது எனது தங்கச்சிக்கும் நல்லது. அவவும் கொஞ்சம் உணர்ச்சிவசப்பட்டுக் கதைத்துப் போட்டா போற் தெரியுது, தப்புத்தான். நீங்கள் கதைத்த விதம் அவளை அந்த நிலைக்குத் தள்ளி விட்டிருக்கலாம். இனி அவற்றைப் பற்றிக் கதைத்துப் பிரயோசனமில்லை. அதை மறந்துவிடுவம்.

நீங்கள் தந்த இந்தமாத வாடகைப் பணத்தையும் முற்பணத்தையும் திருப்பித்தருகிறேன், இன்றைக்கே தருகிறேன். நீங்கள் விரும்புகின்றபடி நாளைக்கே போகலாம். இவ்வளவு காலமும் நண்பனாயிருந்து செய்த உதவிகளை மறுந்துவிடமாட்டேன். நான் எப்பொழுதும் நன்றியுடையவனாயே இருப்பேன்," என்று கூறியதும் எதுவும் பேசாமல் அறையினுள் சென்ற சாந்தன், தனது உடுப்புக்கள் அடங்கிய ஒரு பெரிய பெட்டியையும் முக்கிய ஆவணங்கள் இருந்த கைப் பெட்டியையும் எடுத்துக்கொண்டு புறப்பட்டபொழுது,

"பின்னேரம் வந்து மற்றைய சாமான்களையும் எடுத்துச் செல்கிறேன். நாளைக் காலையில் கட்டில் மேசை கதிரைகளை எடுத்துச் செல்வேன்," என்று கூறிவிட்டுச் சென்றான்.

அவன் கூறியபடி மறுநாள் காலை வாகனத்துடன் வந்த சாந்தன் கட்டில், மேசை, கதிரை உட்பட மிகுதியாகக் கிடந்த பொருட்கள் எல்லாவற்றையும் ஏற்றிக்கொண்டு சென்றுவிட்டான். வழியனுப்பிவிட்டு வீட்டிற்குள் வந்த மகேசு,

"மறுபடியும் படுக்கையின் கீழ் பாம்பினால் தீண்டப்படாமல் நானும் தங்கையும் தப்பிவிட்டோம்! இல்லை! இல்லை!! என்னையும் தங்கையையும் நாகாத்தாள் காப்பாற்றிவிட்டாள். இந்தப் பாழ்பட்ட உலகத்தில் வாழ்ந்து முடிப்பது சவால் நிறைந்த விடயம் தான். ஆனால் நீதி நியாயத்தோடு வாழ்ந்து இறைவனின் அருளைப் பெற்றிருக்கும் வரை எந்தத்தீய சக்தியாலும் எதுவும் பண்ண முடியாது," என்று தனக்குள் சொல்லிக்கொண்டு நின்மதிப் பெருமூச்சுடன் சோபாவில் சாய்ந்தான்.

அவன் வீட்டை விட்டுப் போனபோதும் மகேசுவிற்கு பூரண நிம்மதி ஏற்படவில்லை. தனது தங்கையின் திருமண விடயமாக ஏதும் சதி வேலைகளில் இறங்குவானோ? சஞ்சீவனுக்கு பழைய கதையைச் சொல்லிக் காரியத்தைக் கெடுக்க முயற்சிப்பானோ? என்று பலவாறாக எண்ணிக் கவலைப்பட்டுக் கொண்டு உறங்கிவிட்டான்.

அன்று மகேசு வேலைக்குப் போகவில்லை. அன்று பிற்பகல் ஆறுமணிக்கு வேலை முடிந்து வீட்டிற்கு வந்த உமா அண்ணாவின் அறைக் கதவைத் தட்டினாள். சற்று மனக்கிலேசத்தோடு எழுந்து கதவைத் திறந்தபொழுது, தங்கையைக் கண்டு பூரிப்படைந்த மகேசு,

"என்ன இப்பதானா வேலையால வந்தனீ? உடுப்பும் மாற்றாமல் கதவில் தட்டுகிறாய், என்ன, முக்கிய விசயமா?" என்று புன்சிரிப்புடன் கேட்டான். கொடுப்புக்குள் சிரித்துக்கொண்டு,

"சஞ்சீவனைப் பற்றி முடிவெடுப்பதற்கு இரண்டு மூன்று கிழமை நேர அவகாசம் கேட்டனானல்லே. எல்லாவற்றையும் இன்றைக்கே அறிந்து, முடிவும் எடுத்துவிட்டேன். அவரைப் பற்றிப் பலரிடம் கேட்டறிந்தேன். அவர் தங்கமான பிள்ளை என்று கூறுவதுடன் நின்றுவிடாமல், அவர் உங்களுடைய மாப்பிள்ளையாய் வருவதற்கு நீங்கள் கொடுத்து வைத்திருக்க வேண்டும் என்றும் கூறினார்கள்.

எத்தனையோ பொண்ணுகள் அவரைக் கையிற்குள் போட வருடக்கணக்கில் முயற்சித்தார்கள், முடியவில்லை நீங்கள் சில மாதங்களிலேயே அவரைக் கவர்ந்துவிட்டீர்கள். ரொம்ப அதிஷ்டசாலி என்றும் கூறினார்கள்." இதையும் அண்ணாவிடம் சொல்ல முடியுமா? அவளால் முடியவில்லை. மனதிற்குள்ளேயே வைத்துக் கொண்டு,

"அண்ணா, எனது சம்மதத்தை அவருக்குத் தெரிவித்துவிடுங்கோ," என்று கூறிவிட்டுச் சென்றாள்.

தங்கையின் முடிவைக் கேட்டு மகிழ்ச்சியடைந்த மகேசு, தானும் சஞ்சீவனைப் பற்றிக் கேட்டறிய வேண்டுமென்பதற்காக மறுநாள் தன்னுடைய அலுவலகத்தில் வேலை செய்யும் முள்ளிக்காட்டைச் சேர்ந்த ஒரு நண்பனிடம் சஞ்சீவனைப் பற்றிக் கேட்டான். அந்த நண்பன் சஞ்சீவனைப் பற்றி மிகச்சிறந்த நற்சான்றிதழ் கொடுத்ததுடன் இறுதியில் சஞ்சீவன் தங்களுடைய எட்டத்து உறவினரும்கூட என்று சொன்னார்.

அவற்றையெல்லாம் கேட்டுத் திருப்தியடைந்த மகேசு, அன்றே அலுவலகத்திலிருந்து தொலைபேசி அழைப்பெடுத்தான். சஞ்சீவன் றிசீவரை எடுத்து, 'ஹலோ' என்றதும்,

"நான் இங்கு உமாவின் அண்ணா மகேசு பேசுகிறேன்." என்றான்.

"மகேசா!" என்று ஆவலோடு கேட்ட சஞ்சீவன் தொடர்ந்து,

"உங்களுடைய தொலைபேசி அழைப்பு எப்ப வரும் என்று ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். இப்போ வந்துவிட்டது ரொம்பச் சந்தோசம். நல்ல செய்திதானே சொல்லப் போறீங்கள்?"

என்று சிறிது ஆதங்கம் கலந்த தொனியில் கேட்டான்.

"ஆம், நல்ல செய்திதான், தங்கை சம்மதம் தெரிவித்துவிட்டா," என்றான் மகேசு.

"அப்படியா! கேட்பதற்கு மிக்க சந்தோசமாயிருக்கின்றது. நான் முதன்முதலாக விரும்பிய பொண்ணு உமா. நான் விரும்பிய பொண்ணு கிடைத்தமை மனதிற்குப் பெரும் ஆனந்தம். அப்புறம் என்ன! கல்யாணம் முடிந்ததுபோலத்தான். எல்லா வேலைகளையும் நானே பார்த்துக் கொள்ளுகிறேன்," என்று ஆனந்தம் பொங்கக் கூறினான் சஞ்சீவன்.

சாந்தன் இடையில் புகுந்து ஏதாவது சதி வேலை செய்வான் என்று எண்ணிய மகேசு,

"இன்னொரு விடயத்தையும் உங்களுக்குச் சொல்லி வைக்க விரும்புகிறேன்" என்றதும்,

"சொல்லுங்கோ என்ன விசயம்?" என்றான்.

"நீங்கள் எங்கள் வீட்டிற்கு வந்தபொழுது என்னுடன் இருந்த சாந்தன், அடுத்த நாள் எங்களுடன் பிரச்சனைப்பட்டுக்கொண்டு மறுநாள் இவ்விடத்தைவிட்டு விலகிச் சென்றுவிட்டான். எரிச்சல், பொறாமை காரணமாக அவன் உங்களுக்கு எனது தங்கையைப் பற்றி இல்லாத பொல்லாதனவற்றைச் சொல்லக்கூடும். நம்ம ஆட்களைப் பற்றித் தெரியும் தானே! அப்படி ஏதும் நடந்தால் அவற்றைக் கணக்கில் எடுத்துக்கொள்ளாதீங்கோ," என்று சொன்னதும், உடனே சஞ்சீவன்,

"நீங்கள் அதைப்பற்றி ஒன்றும் கவலைப்படவேண்டாம். நம்ம மக்களைப் பற்றி எனக்கும் கொஞ்சம் தெரியும். ஒரு மனிதன் கெட்டுப் போகும்போது அனுதாபப்படுவது போன்று காட்டிக்கொள்ளுவான்கள், அதே மனிதன் நல்லாவரும்போது நிசமாகவே பொறாமைப்படுவான்கள். இதுதான் நமது மக்களுடைய இயல்பு.

நலிந்த குடும்பத்தில் உள்ள பத்தினிகள் வேசிப் பட்டம் சூட்டப்படுவார்கள். வலிந்த குடும்பத்தில் உள்ள வேசிகள் பத்தினிப் பட்டம் சூட்டப்படுவார்கள். நலிந்த குடும்பத்தில் சந்தர்ப்பம், சூழ்நிலை, புத்தி முதிர்ச்சியடையாமை காரணமாய் தவறு இழைத்த பெண்களுக்கு கெட்டுப்போனவள் என்று பட்டம் சூட்டும் எமது சமூகம், வலிந்த

குடும்பத்தில் தவறு இழைப்பதற்கென்றே சந்தர்ப்பம் சூழ்நிலையை உருவாக்கிய பெண்களுக்கு கட்டுக் குலையாத கரும்பு என்று பட்டம் வழங்குவார்கள். இது தான் எமது சமூகம்.

உண்மையான பத்தினிக்கும் வேசிக்கும் வித்தியாசம் தெரியாத வர்கள் அல்ல எமது சமூகத்தினர். ஆனால், தெரிந்தும் தெரியாதவர்கள் போல் தேவைக்கேற்றப்படி நடிப்பார்கள். சுருக்கமாகச் சொன்னால், அறியாமலோ தெரியாமலோ தவறு இழைத்தவள் கெட்டுப்போனவள். ஏன்? அவள் நலிந்தவள். அறிந்தும் தெரிந்தும் தப்புப்பண்ணியவள் மடிப்புக் குலையாத பட்டு. ஏன்? அவள் வலிந்தவள். இதுதான் எமது சமூகத்தில் இன்றைய யதார்த்தம். இவற்றையெல்லாம் நான் நன்கு தெரிந்தும் புரிந்தும் வைத்திருக்கிறேன். எனவே கவலையை விடுங்கோ, கல்யாணம் முடிந் ததுபோல் வைத்துக்கொள்ளுங்கோ," என்று கூறிவிட்டு ரெலிபோனை வைத்தான் சஞ்சீவன்.

"நடப்பதெல்லாம் நன்மைக்கே," என்று தன்னுக்குள் சொல்லிவிட்டு தனது வேலையைத் தொடர்ந்தான் மகேசு.

## அங்கம் : 08

ஒருநாள் மகேசு அலுவலகத்தில் வேலை செய்து கொண்டிருந்த வேளையில் தொலைபேசி அழைப்பு வந்தது. றிசீவரை எடுத்து 'ஹலோ' என்றான். மறு முனையிலிருந்து,

"நான் சாந்தன் பேசுகிறேன். எப்படி இருக்கிறாய் மகேசு?" என்று இதமாகக் கேட்டான். மகேசு பதில் சொல்லுவதற்குள் தொடர்ந்து,

"நான் உங்களுடனும் உமாவுடனும் நடந்துகொண்டவிதம் மகா தப்பு என்பதை இப்போது உணர்ந்து கொண்டேன். அதற்காக உங்கள் இருவரிடமும் மன்னிப்புக் கேட்பதைத் தவிர வேறொன்றும் செய்ய முடியாது. என்னை மன்னித்துக்கொள் மகேசு! நான் ஏற்கனவே உமா விடம் மன்னிப்புக் கேட்டுவிட்டேன். அவ என்னை முழுமனதோடு மன்னித்துவிட்டா. நீயும் பெரிய மனசுபண்ணி மன்னிக்கவேண்டும் மகேசு," என்று அழாக்குறையாய்க் கேட்டான்.

நண்பன் கடந்த காலத்தில் செய்த உதவிகளையெல்லாம் ஒரு கணம் இரை மீட்டுப் பார்த்த மகேசுவிற்கு அந்தவேளையில் என்ன

செய்வதென்றே புரியவில்லை. மனம் மகிழ்ச்சியால் நிரம்பி வழிந்தது. ஆனந்தம் பொங்கி, முட்டியதனால் பேச்சு வரத்தாமதித்தது. ஒருவாறு மேலிட்ட உணர்வினைக் கட்டுப்படுத்திக்கொண்டு,

"டேய் சாந்தன்! நான் நினைச்ச மாதிரியே நடந்துவிட்டது. நான் நினைச்சேன், நீ உனது தவறை உணர்ந்து கொண்டு எப்போ ஒருநாள் வருவாயென்று, அது நடந்துவிட்டது. பிறகேன் மன்னிப்பும் கின்னிப்பும். ஒருவன் எப்போது தான் செய்த தவறை உணர்ந்து மனம் மாறுகிறானோ அந்தக் கணமே இறைவன் அவனை மன்னித்து விடுகிறான். அப்புறம் மனிதனின் மன்னிப்புக்கு வேலையில்லை. திறந்த உள்ளத்துடன் சொல்லுகிறேன், எனது குலதெய்வமாகிய நாகாத்தாள் உன்னை மன்னித்துவிட்டாள். அவளுக்குமேலால் நான் என்னத்தை மன்னிப்பது?" என்று சொன்னதும் சாந்தனால் நம்பவே முடியவில்லை. அவ்வளவு சந்தோசம்! மறுகணம்,

"இதைத்தான் மச்சான் உண்மை நட்பு என்பது. சந்தர்ப்பம் சூழ் நிலை எம்மைப் பிரித்தபோதும், உண்மை நட்பின் சக்தி மறுபடியும் எம்மைச் சேர்த்துவிட்டது, பார்த்தியா! உண்மை நட்பின் பலத்தை?" என்று கூறியபொழுது நண்பனின் மகிழ்வுணர்வை அவனின் பேச்சிலிருந்து அறிந்துகொண்ட மகேசு, மேலும் மகிழ்ச்சி பொங்கியவனாய்,

"டேய்! சாந்தன், உன்னை நேரிற் பார்த்துக் கட்டித் தழுவி முத்தங் கொடுக்க வேண்டும் போலிருக்கு. முடிந்த கெதியில் எங்க வீட்டிற்கு வரப்பார், சரியா! உன்னுடைய வரவை நானும் உமாவும் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். எப்ப வருவாய்? என்று இப்பவே சொல்லு. உனக்கு விசேட வரவேற்பு அளிப்பதற்கு ஆயத்தம் பண்ணுகிறோம்," என்று தனது உள்ளக்கிடக்கையை மேலும் வெளிப் படுத்துமாப்போல் சொன்ன மகேசு தனது புதிய வீட்டு விலாசத் தையும் சொல்லத் தவறவில்லை. உடனே சாந்தன் தானும் அன்பையும் நட்புணர்வையும் வெளிப்படுத்துவதிற் குறைஞ்சவன் அல்ல என்பதை தெரியபடுத்து மாப் போல்,

"மகேசு, நான் உன்னுடைய அன்பிற்கும் நட்பிற்கும் தலை வணங்குகிறேன். ஆனால் எனக்கு விசேட வரவேற்பு ஒன்றும் தேவை யில்லை. நான் எப்பவும் ஒரே சாந்தன்தான். இப்பவும் அதே சாந்தன் தான். நீ இவ்வளவு தூரம் அன்பு பாராட்டிக் கேட்கும் பொழுது

அதை நான் உதாசீனம் செய்யமுடியாது. அது எனது பண்பும் இல்லை. வருகின்ற சனிக்கிழமை நான் உங்களுடைய வீட்டிற்கு வருகிறன். மிகுதி யாவற்றையும் நேரிற் பேசுவம். வேறென்ன? வைக்கட்டா?" என்றான்.

"சரி, வைப்பதற்கு முன் ஒன்று, உனது வரவை வழிமேல் விழி வைத்துப் பார்த்துக் கொண்டிருப்பேன், சரியா?" என்று கூறிவிட்டு தொலைபேசியை வைத்தான் மகேசுவும்,

அலுவலகத்தால் வீட்டிற்கு வந்ததும்,

"உமா! ஒரு நல்ல செய்தி" என்று சொல்லி முடிப்பதற்குள்,

"அண்ணா! என்னிடமும் ஒரு நல்ல செய்தி உண்டு," என்று தொடங்கிய உமா,

"சாந்தன்" என ஆரம்பிக்க, "நானும் அதைத்தான் சொல்ல வந்தேன்," என்றான் மகேசு. இருவரும் சாந்தனைப் பற்றித்தான் சொல்லப்போறம் என்பதை ஒருவருக்கொரு வர் உணர்ந்துகொண்டு,

"நீ முதலிற் சொல்லு" என்றான் மகேசு.

"தாங்ஸ் அண்ணா! சாந்தன் இன்று அலுவலகத்திற்குப் போன் எடுத்துக் கதைத்தான். தான் நடந்துகொண்டது தப்பு என்று சொல்லி மன்னிப்புக் கேட்டான். நான் சொன்னேன்,

நீங்கள் உங்கள் தவறை உணர்ந்து மனம்மாறிக் கொண்டால் அதுவே போதும். அப்புறம் நான் மன்னிக்க வேண்டியதெல்லாம் தேவையற்றது.

நீங்கள் உங்கள் தவறை உணர்ந்து மனம் மாறியது உண்மை யென்றால், எங்களுடைய வீட்டிற்கு முடிந்த விரைவில் வரவேண்டும் என்றும் சொன்னேன்.

அதற்கு, நிச்சயமாய் விரைவில் வருவேனென்று பதிலளித்தான்," என்று சொன்னதுதான் தாமதம்,

"அதையேதான் நானும் சொன்னேன், நானும் வீட்டிற்கு வரும்படி கேட்டேன்," என்று ஆச்சரியத்தோடு கூறிய மகேசு தொடர்ந்து,

"எப்பொழுது வீட்டிற்கு வருவேன் என்று சொன்னானா? என்று கேட்டான்.

"நிச்சயம் விரைவில் வருவேன் என்றான். ஆனால் எப்பவென்று சொல்லவில்லை, நானும் அதை அழுத்திக் கேட்கவில்லை," என்றாள்.

"எனக்குச் சொன்னானே! சனிக்கிழமை வருவதாய்ச் சொன்னான். அவன்சொன்ன மாதிரியில் நிச்சயம் வருவான் என்று நம்புகிறேன். எதற்கும் நாமள் ஆயத்தமாய் இருக்கவேண்டும்," என்றதும்,

"அப்படியா! நல்லதாய்ப் போச்சு! மனதிற்குள் சிறிய நெருடல் இருந்தது. அதுவும் நாகாத்தாள் கருணையால் எடுபட்டுவிட்டது. இனி யென்ன... !" என்று தங்கை சொல்லி முடிக்க,

"இனியென்ன! எல்லா றூட்டும் கிளியர். கல்யாணத்தை நாகாத்தாள் துணையோடு ஜாம்ஜாம் என்று நடாத்தி முடிக்க வேண்டியதுதான்," என்று சொல்லித் தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினான் மகேசு.

"இவ்வளவு தூரத்திற்கு கைகொடுத்துத் தூக்கிவிட்ட ஆத்தாள் இறுதிவரை கைகொடுப்பாள் என்ற நம்பிக்கை உண்டு," என்று உமா கூற,

"அந்த நம்பிக்கையே போதும். நாகாத்தாள் மீது வைத்திருக்கும் நம்பிக்கைதான் நம்மிடமுள்ள தும்பிக்கை, அதாவது ஒரே பலம். அது எப்பொழுதும் நம்மைக் காப்பாற்றும், நம்மை வாழ வைக்கும். பயப்படாதே! கவலைப்படாதே!" என்று கூறிவிட்டு அறைக்குள் சென்றான் மகேசு.

இன்று சனிக்கிழமை, சாந்தன் எந்த வேளையிலும் வரலாம் என்ற எதிர்பார்க்கையில் நேரகாலத்தோடு எழும்பி அவனை வரவேற்கும் ஆயத்தத்தோடு இருந்தனர் இருவரும். பத்து மணியளவில் கதவில் யாரோ தட்டும் சத்தம் கேட்டது. தயார் நிலையிலிருந்த மகேசு உடனே சென்று கதவைத் திறந்தான். எதிரில் நின்றது மளிகைக் கடைக்காரன். அப்பொழுதுதான் தான் மளிகைப் பொருட்களுக்கு வேண்டுகோள் விட்டது மகேசுவிற்கு ஞாபகத்திற்கு வந்தது. பொருட் களைப் பெற்றுக்கொண்டு பணத்தைக் கொடுத்து அனுப்பிய பின் சாந்தனின் வருகைக்காக தொடர்ந்தும் காத்திருந்தான்.

பதினொரு மணியளவில் மறுபடியும் கதவில் தட்டும் சத்தம் கேட்டது. உடனே சென்று கதவைத் திறந்தான். சாந்தனைப் பார்த்ததும் ஏற்பட்ட மட்டற்ற மகிழ்ச்சியின் உந்தலினால் நண்பனைக் கட்டித்

தழுவி முதுகில் தட்டி தனது பாசத்தையும் நட்பையும் வெளிப்படுத்திய பின்,

"வா சாந்தன்" என்று சொல்லி கையிற் பிடித்துக் கூட்டி வந்து சோபாவில் இருத்தினான்.

அந்த வீடு, அங்கிருந்த பொருட்கள் எல்லாம் அவர்களுடைய பொருளாதார வசதி வாய்ப்பின் வளர்ச்சியையும் வாழ்க்கையில் மிகக் குறுகிய காலத்தில் ஏற்பட்ட முன்னேற்றத்தையும் வெளிப்படுத்துமாப் போல் அமைந்திருந்தன என்றால் மிகையாகாது. அவற்றையெல்லாம் நன்கு நோட்டமிட்ட சாந்தனுக்குத் தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்த வேண்டுமென்று தோன்றவே,

"மகேசு! உங்களுடைய முன்னேற்றம் கண்டு உண்மையிலேயே மகிழ்ச்சியடைகிறேன், பெருமைப்படுகிறேன். இது உங்களுடைய விடா முயற்சிக்கும் எதிர்காலத்தின் மீது நீங்கள் வைத்திருந்த நம்பிக்கைக்கும் கிடைக்கப்பெற்ற பெறுபேறுகள். உங்களுடைய இந்த முன்னேற்றம் மற்றையவர்களுக்கு ஒரு படிப்பனையாய் இருக்கவேண்டும். ஒரு பக்கம் சந்தோசமாயிருக்கும் அதேவேளை மறுபக்கம் சிறிது பொறாமையாயும் இருக்கின்றது," எனப் புன்சிரிப்புடன் கூறிக்கொண்டு மறுபடியும் சோபா வில் அமர்ந்தான் சாந்தன்.

நண்பனின் கள்ளம் கபடம் அற்ற மனத்திலிருந்து வந்த வார்த்தை களைக் கேட்டு மகிழ்ச்சியடைந்த மகேசு,

"ரொம்ப நன்றி சாந்தன்! உங்களுடைய பாராட்டுக்கு. நீங்கள் கூறியது போன்று விடாமுயற்சியும் எதிர்காலம் பற்றிய நம்பிக்கையும் கூடவே எங்கள் நாகாத்தாளினுடைய அருளும் சேர்ந்துதான் எங்களை இந்த அளவிற்கு உயர்த்தி வைத்துள்ளன என்பது எனது அசைக்க முடியாத நம்பிக்கை.

இன்னொரு காரணத்தையும் இங்கு சொல்லிவைக்க வேண்டும்; அதாவது எனது நண்பன் சாந்தனுடைய ஆலோசனைகள் ஆதரவு என்பன உரிய வேளையில் கிடைக்கப்பெற்றமையும் எமது இந்த முன்னேற்றத்திற்கு முக்கிய பங்கு வகித்துள்ளது என்பதை என் உயிர் உள்ள வரையும் மறக்க மாட்டேன் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிவைக்க விரும்புகிறேன்," என்று கூறிவிட்டு ஒரு நன்றி கலந்த புன்சிரிப்பை உதிர்த்தான் மகேசு.

பதிலுக்கு சாந்தனிடமிருந்து வந்த புன்சிரிப்பு "உனது நன்றி மறவாத பெருங்குணத்தைப் பாராட்டுகிறேன்" என்பதை வெளிப்படுத்து மாப் போலிருந்தது.

இந்த வேளையில் சாந்தனுக்கு மிகப் பிடித்த ஓவல்ரின் கலந்த தேனீருடனும் கேக் துண்டுடனும் குசினியிலிருந்து வெளியே வந்தாள் உமா புன்சிரிப்பு இதழ்களில் தவழ. அவளைப் பார்த்ததும் மகிழ்ச்சி யால் அதிர்ந்து போன சாந்தன், பொலிந்த முகத்தோடும் கனிந்த சிரிப்போடும்,

"உமா எங்க? என்று கேட்க வாய் எடுத்தேன், நீங்கள் வருகிறீங் கள். இதுதான் அன்பின் வெளிப்பாடு" என்று கூறிக்கொண்டு தேனீர்க் கப்பை எடுத்தவன் தொடர்ந்து,

"எப்படி இருக்கிறீங்கள் உமா? நல்லாயிருக்கிறீங்களா?" என்று அன்பு ததும்பக் கேட்டான்.

அவனின் வார்த்தைகளிலிருந்து வெளிப்பட்ட அன்பிற்கு அடிமைப் பட்டவள் போன்று,

"நான் ரொம்ப ரொம்ப நல்லாயிருக்கிறேன் நாகாத்தாளினுடைய அருளால! நீங்கள் எப்படி இருக்கிறீங்கள்? நலந்தானே!" என்று கனிவு டன் கேட்டாள்.

மறுபடியும் இதழ்களில் புன்சிரிப்பு வெளிப்பட,

"எனக்கென்ன குறைச்சல்! நானும் ரொம்ப நல்லாயிருக்கிறேன். உங்களைச் சில மாதங்களாய்ப் பார்க்காதது மனதிற்குக் கொஞ்சம் சங்கடமாயிருந்தது. அதுதான்..." என்று சொல்ல வந்ததைச் சொல்லுவதற்குள் முந்திக் கொண்ட உமா,

"அதுதானே! இப்ப வந்திட்டீங்க, பாத்திட்டீங்க! பிறகென்ன கவலை? விடுங்கோ அதை!" என்றாள் சுறுக்கென்று,

இன்னும் கதையிற்குள்ள கேக்கை அவன் எடுத்துச் சாப்பிடத் தொடங்கவில்லை என்பதை அவதானித்த உமா,

"கதையோடு கதையாக கேக்கைச் சாப்பிட மறந்துவிடாதீங்கோ" என்று ஞாபகப்படுத்த, சாந்தன் அதை எடுத்துச் சாப்பிட ஆரம்பித்தான். கதையைத் தொடர்ந்த உமா,

"நீங்கள் கோபித்துக்கொண்டு போனதிலிருந்து நான் ஏதும் பெரிய தப்புப் பண்ணிவிட்டேனோ என்று நினைத்து எனது மனம் வேதனைப் பட்டுக் கொண்டிருந்தது. இப்ப தான்..." என்று சொல்லவந்ததைத் தொடருவதற்குள் முந்திக்கொண்ட சாந்தன்,

"இப்பதான் வந்துவிட்டேனே! இனி ஏன் கவலை? அதையெல்லாம் விடுங்கோ!" என்று சொல்ல, இதுவரை பேசாமல் அவதானித்துக் கொண்டிருந்த மகேசு,

"கல்யாணம் சொர்க்கத்தில் தீர்மானிக்கப்படுவதாய் அதாவது இறைவனால் தீர்மானிக்கப்படுவதாய் பெரியோர்கள் கூறுகின்றார்கள். அதனாற்தான் 'இன்னார்க்கு இன்னாரென்று எழுதிவைத்தானே தேவன் அன்று' எனப் பாடியுள்ளார்கள். இந்த உண்மையைப் புரிந்துகொண் டால் எந்த மனவேதனைக்கும் அவசியம் இல்லை" என்று தங்கையைக் காப்பாற்றும் பாணியில் கூறினான். உடனே சாந்தன் அதை ஆமோதிப் பவன் போன்று,

"அப்படிச் சொல்லு மகேசு!" என்று சொல்லி உமாவின் கவ லைக்கு முற்றுப்புள்ளி வைத்தான். அந்த வேளையில் ஏதோ சொல்ல அவசரப்படுபவள் போன்று நின்ற உமா,

"இப்போ எனக்கு எவ்வளவு சந்தோசமாயிருக்கு! இந்தச் சந்தோச மான வேளையில் இன்னொரு சந்தோசமான விடயத்தையும் சொல் லப் போகிறேன். நான் சொல்லப்போகும் விடயம் அண்ணாவிற்கும் இதுவரை தெரியாது. அதாவது எனது திருமணம் வருகின்ற பங்குனி உத்தரத்திலன்று எங்களுடைய நாகபுரம் நாகாத்தாள் கோயிலில் தாலி கட்டு நிகழ்வாக சாதாரணமாய் நடைபெறும். அப்புறம் வரவேற்பு உபசார விழா கொழும்பில் கோலாகாலமாய் நடைபெறும். இத்தீர்மானங் களை நானும் மாப்பிள்ளையும் சேர்ந்து எடுத்துள்ளோம்" என்று கூறியபின் தமையனைப் பார்த்து,

"அண்ணா! உங்களுக்கு இதில் ஏதாவது ஆட்சேபனை இருக்கா?" என்று கேட்டுவிட்டுக் குழைந்துகொண்டு நின்றாள். சிலவிநாடிகள் தலையைச் சொறிந்து கொண்டு யோசித்த மகேசு அப்புறம் புன் சிரிப்புடன்,

"நீங்கள் இருவரும் சேர்ந்து எடுத்த முடிவு எந்தவகையிலும் பிழையாக இருக்கமாட்டாது. அத்தோடு எமது நாகாத்தாளுக்கு முன்னு

ரிமை கொடுக்கப்பட்டுள்ளது. அதுகும் பங்குனி உத்தரம் பொங்கல் விழாவன்று. அது மிகவும் விசேடமான நாள். அன்று எமது கிராம மக்கள் முன்னிலையில் தாலிகட்டுவது மிகச் சிறந்த விடயம். ஆனபடி யால் எனக்கு எந்தவித ஆட்சேபனையுமில்லை. எனக்குப் பூரண சம்மதம்" என்று சொல்லிய பொழுது உமா கைகளைத் தட்டி தனது நன்றியையும், மகிழ்ச்சியையும் வெளிப்படுத்திக் கொண்டாள்.

மறுபடியும் அவசரப்பட்ட உமா,

"அண்ணா! பங்குனி உத்தரத்தில் எமது நாகாத்தாள் கோயிலில் இடம்பெறும் பொங்கல் விழாவைப் பற்றிச் சாந்தனுக்கு விபரமாய் எடுத்துச் சொல்லுங்கோ. நான் மதிய உணவைத் தயார் பண்ணுகிறேன்" என்று கூறிவிட்டுச் சுறுக்கென்று குசினிக்குட் போனாள்.

## அங்கம் : 9

"நானும் சொல்லுவமென்றுதான் இருந்தனான். உமா ஞாபகப்படுத்தியது நல்லதாய்ப் போய்ச்சு," என்று தொடங்கிய மகேசு தொடர்ந்து,

"அது.... வந்து.. சாந்தன், பொங்கல் விழாவென்றால் உனக்குத் தெரியாததில்லை. இருந்தபோதும் எங்களுடைய நாகாத்தாள் கோயிலில் இடம்பெறும் விசேடம் என்னவென்றால்:

'அன்று இரவு பன்னிரண்டு மணிக்கு அம்பாள் வீதிவலம் வருவதற்கு எழுந்தருளும்பொழுது நாகபாம்புகள் வந்து அம்பாளுக்கு முன்னிலையில் நின்று படமெடுத்து ஆடுங்கள். சில பக்தர்களும் உருவேறி ஆடுவார்கள். பக்தர்கள் உருவேறி ஆடுவது பல இடங்களிலும் நடக்கும் நிகழ்வு. அதில பெரிய அற்புதமொன்றும் இல்லை. ஆனால் பாம்புகள் படமெடுத்தாடுவதைப் பார்த்தால் நீயே அதிர்ந்து போவாய். அந்தளவிற்கு அற்புதமான ஆட்டம். பார்ப்பவர்களை மெய்சிலிர்க்க வைக்கும். அந்தளவிற்குப் புதுமையானது," என்றதும் இதைக் கேட்டு ஆச்சரியமடைந்த சாந்தன்,

"என்ன சொல்லுகிறாய் மகேசு! பாம்புகளைப் பக்தர்கள் கொண்டு வந்து ஆட விடுவதா? அல்லது....." என்று கேட்க வந்ததைக் கேட்டு முடிப்பதற்குள் நண்பன் என்னத்தைக் கேட்கப் போகிறான் என்பதை

ஊகித்துக் கொண்ட மகேசு,

"பாம்புகளை ஒருவரும் கொண்டு வந்து விடுவதுமில்லை, பாம்பாட்டிகள் யாரும் வருவதுமில்லை. அம்பாள் எழுந்தருளும் வேளையில் நாகபாம்புகள் தாங்களாகவே அங்கு வரும். அவை வரும்பொழுது சீறிச் சத்தமிட்டுக்கொண்டு வருங்கள். உடனே பக்தர்கள் விலத்தி வழிவிட்டுக் கொடுப்பார்கள். ஆடிமுடிந்தவுடன் வந்த மாதிரியே திரும்பச் சென்றுவிடுங்கள். ஆடும்பொழுது உருவேறிய பக்தர்கள் சேர்ந்து ஆடுவார்கள். வேறு சில பக்தர்கள் மகுடி வாசிப்பார்கள். இன்னும் சிலர் உடுக்கு வாசிப்பார்கள். இது ஓர் அற்புதம் நிறைந்த கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். அதைக் கட்டாயம் நீங்கள் பார்க்க வேண்டும் சாந்தன்" என்று கூறி முடித்தான்.

"நீ..... இப்ப.... கதையைச் சொல்லும்பொழுதே உடம்பெல்லாம் புல்லரிக்கிறது. அதை நேரிற் பார்த்தால் எப்படி இருக்கும்! கட்டாயம் வருவேன். 'ஒரு எறியில இரண்டு மாங்காய்' என்பது போல, வந்தால் கல்யாணத்திலும் பங்கு பற்றியதாயிருக்கும் பாம்பாடும் காட்சியைப் பார்த்ததாயும் இருக்கும். இந்த வாய்ப்பைத் தவற விடுவேனா! நான்தான் அங்க முதல் ஆளாய் நிற்பேன்," என்று ஆரவாரமாய்ச் சொல்லித் தனது வரவை உறுதிப்படுத்தினான் சாந்தன். இது மகேசுவிற்கும் குசினிக்குள் நின்று கதையைக் கேட்டுக் கொண்டு நின்ற உமாவிற்கும் பெரும் மகிழ்ச்சியைக் கொடுத்தது. உடனே உமா,

"ரொம்பச் சந்தோசம்! உங்கள் வரவு நல்வரவாகுக!" என்றாள் குசினிக்குள் நின்றபடியே,

இப்பொழுது மதிய உணவிற்கான நேரம். சில மாதங்களின் பின் மறுபடியும் சாந்தனும் மகேசுவும் ஒன்றுசேர்ந்து, சாப்பாட்டு மேசைக்குச் சென்று அமர்ந்துகொண்டமை இருவரதும் உள்ளத்தில் ஒரு புத்துணர்வை ஏற்படுத்தியது எனலாம். உமாவின் கைவண்ணத்தால் ஆக்கப்பட்ட உணவை மறுபடியும் சாப்பிடப்போகிறேன் என்று எண்ணிய போது சாந்தனுக்குப் பசி மேலும் அதிகமாகியது. ஆசையும் ஆவலும் கூடியது. சாப்பாடு வரவிருந்த ஒவ்வொரு வினாடியையும் எண்ணிக் கொண்டிருந்தான் என்றால் மிகையாகாது. சாப்பாட்டின் உருசியோ சமையலின் மகிமையோ அல்லது அசாதாரண பசியோ, சாப்பிட்டு முடியும் வரை சாந்தன் எதுவுமே பேசவில்லை. சாப்பிட்டு முடிந்த பின்,

"சமையல் சாப்பாடு உண்மையாகவே ரொம்பப் பிரமாதம்! மாப்பிள்ளை கொடுத்து வைத்தவர்தான்!!" என்று புகழாரம் சூட்டினான். அப்பொழுது சிறிய புன்சிரிப்புடன்,

"ரொம்பத்தான் புகழாதீங்க சாந்தன்" என்று கனிந்துரைத்தாள் உமா. அப்புறம் ஐஸ்கிறீம், பீடா வெற்றிலை என்று வந்தவற்றையெல்லாம் இரசித்து ருசித்துச் சாப்பிட்டு விட்டு விடை பெற்றுச் சென்றபொழுது,

"நான்தான் உங்கள் திருமணத்தன்று நாகாத்தாள் கோயிலில் முதலாளாய் நிற்பேன்" என்று மறுபடியும் நிறைந்த சிரிப்புடன் சொல்லிக் கொண்டு விடைபெற்றான் சாந்தன்.

சாந்தனின் வருகை மகேசுவிற்கும் உமாவிற்கும் மிகப்பெரும் ஆத்ம திருப்தியையும் மகிழ்ச்சியையும் கொடுத்ததுடன், மனதிற் குடிகொண்டிருந்த பீதியும் சந்தேகமும் முற்றாக அகன்று போகவும் வழி செய்தது என்றால் சாலவும் பொருந்தும். அதைத்தொடர்ந்து, அப்படி இப்படியென்று இரண்டு மாதங்கள் கழிந்துவிட்டன.

நாளை மறுநாள் பங்குனி உத்தரம். இன்றே மகேசுவும் தங்கை உமாவும் தமது நாகபுரம் வீட்டிற்குச் சென்று சேர்ந்துவிட்டனர். மாமா சுந்தரத்தின் தலைமையில் திருமணத்திற்கான ஆயத்தங்கள் அடக்கமாய் நடைபெற்றுக் கொண்டிருந்தன. கோயில் பொங்கல் விழாவிற்கான ஆயத்தங்கள் கோயில் பூசாரி நாகராசன் தலைமையில் நடைபெற்றுக் கொண்டிருந்தன.

நாகபாம்புகளின் ஆட்டம் பார்ப்பதற்கு நாகபுரம் கிராமத்து மக்கள் மட்டுமல்ல அயற்கிராம மக்களும் அங்கு வருவது வழக்கம். பாம்பாட்டத்தை அறிந்த பலர் வடமராட்சி கிழக்கு, தென் மராட்சி, ஆனையிறவு, கிளிநொச்சி ஆகிய இடங்களில் இருந்து வருவதும் உண்டு. அதனால் பொங்கலன்று ஏராளமான சனங்கள் அங்கு கூடுவர். அதை முன்னிட்டுப் பல வசதிகள் செய்து கொடுக்கப் படுவது வழக்கம். எல்லாவற்றுக்குமாக பூசாரி நாகராசனும் அவருடைய உதவியாட்களும் சுறுசுறுப்பாய்ச் செயற்பட்டுக் கொண்டிருந்தனர்.

இன்று பங்குனி உத்தரம். மகேசு முதல் நாளே சென்று தங்கையின் தாலிகட்டுத் திருமணம் பற்றிப் பூசாரி நாகராசனிடம் கூறி அதற்கான ஏற்பாடுகளெல்லாம் செய்துவிட்டான். பூசாரி நாகராசன் மகேசுவின்

உறவினரும்கூட. அம்மன் வீதிவலம் வந்து வசந்த மண்டபத்திற்குச் சென்றதும், வசந்த மண்டபத்தின் முன் வைத்துத் தாலி கட்டும் வைபவம் நடப்பதற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இரவு பன்னிரண்டு மணிக்கு அம்மன் வீதிவலம் வரும்பொருட்டு எழுந்தருளுவாள். அப்பொழுது பாம்பாட்டமும் பக்தர்களின் உருவாட்டமும் நடைபெறும். அம்மன் எழுந்தருளுவதற்கு முன் பக்தர்கள் பொங்கல் செய்து படையல் பண்ணி அம்மனின் வருகைக்காகக் காத்திருப்பார்கள்.

இப்பொழுது பி..ப. ஒன்பது மணி. பொங்கல் வரிசையாக ஆரம்பமாகிவிட்டது. பக்தர் கூட்டம் பெருகிக் கொண்டேயிருந்தது. பதினொரு மணிக்கெல்லாம் மணமக்களும் உறவினரும் சென்று ஓர் இடத்தில் அமர்ந்து கொண்டனர். உமாவின் கண்கள் அடிக்கடி யாரையோ தேடுவதுபோல் அடியார் கூட்டத்தை நோட்டமிட்டுக் கொண்டிருந்தன. அவள் நோட்டமிடுவது சாந்தனுடைய வருகையை அறியத்தான் என்பது மகேசுவிற்கு மட்டுந்தான் தெரியும்.

சரியாகப் பதினொன்று முப்பது மணிக்கு அங்கு வந்த சாந்தன் மகேசுவுடன் கைகளைக் குலுக்கிவிட்டு, மணமக்களைப் பார்த்து ஒரு கும்பிடுபோட்டு "வணக்கம்" சொல்லி மரியாதை செலுத்திக் கொண்டான்.

கோயிலின் முன் போதிய இடம் பாம்புகளும் பக்தர்களும் ஆடுவதற்காக ஒதுக்கப்பட்டிருந்தது. அதைச் சுற்றிக் கயிறு கட்டப்பட்டிருந்தது.

இப்பொழுது நேரம் சரியாக இரவு பன்னிரண்டு மணி. ஒரு நிமிடமும் பிந்தாமல் அம்பாள் சிங்கவாகனத்தில் எழுந்தருளுகிறாள். நாகபாம்புகள் சீறிக்கொண்டு வரும் சத்தம் நான்கு திசைகளிலும் கேட்கின்றது. அடியார்கள் ஒதுங்கிப் பாம்புகளுக்கு வழிவிட்டுக் கொடுக்கிறார்கள். பாம்புகள் வந்துவிட்டன. மகுடியுடன் நின்ற அடியார்கள் மகுடியை வாசிக்கிறார்கள். பாம்புகள் படமெடுத்து ஆடுகின்றன. சில அடியார்கள் "ஆடு பாம்பே சுழன்றாடு பாம்பே..." என்ற பாடலை இசையோடு பாடுகிறார்கள். உருவேறிய அடியார்கள் ஒருபக்கமாக நின்று ஆடுகிறார்கள். கண்கொள்ளாக் காட்சி. எல்லோரும் ஆடாது அசையாது நின்று ஆச்சரியத்தோடு பார்த்து இரசிக்கிறார்கள். மாப்பிள்ளைக்கு ஆச்சரியத்தின்மேல் ஆச்சரியம். இது கனவா அல்லது நனவா என்ற ஓர் ஏக்கம்.

அப்பொழுது மகேசு பாம்புகளைப் பற்றி மாப்பிள்ளைக்கு விளக்கம் கொடுக்கிறான்.

"அது கருநாகம் கருப்பாய்த் தெரிவது. அடுத்தது செந்நாகம் சிவப்பாயிருப்பது. படத்தில் புள்ளிபுள்ளியாய்த் தெரிவது செட்டிநாகம், தலையில் முடிகொண்டிருப்பது இராசநாகம். அதை நாகராசன் என்றும் அழைப்பர். அது நாகங்களுக்கு இராசா. நன்கு அகன்ற படத்தோடு ஆடுவது பறநாகம். அது பறந்து கொத்தும் வல்லமை கொண்டது. வெள்ளை நிறத்தில் காணப்படுவது வெண்நாகம். அதற்குப் பக்கத்தில் வெண்பழுப்பு நிறத்தில் காணப்படுவது சங்குவாலன். அதனுடைய வாலில் சங்கு போன்ற அமைப்புண்டு. சங்கு வாலனுக்குப் பக்கத்தில் நின்று ஆடும் நீளம் குறைந்த பாம்பு குளிகன் என்று அழைக்கப்படுகின்றது. கடும் மூர்க்க குணமுடையது. அதனுடைய சீற்றம் மிகவும் பயங்கரமானது. வடகிழக்கு மூலையில் நின்று ஆடும் பெரிய தடித்த பாம்புதான் கார்க்கோடகன். அது பயங்கர நஞ்சுகொண்டது. அதற்கு அருகாமையில் நின்று ஆடும் சிவந்த கண்களை உடைய பாம்பு செங்கண்ணன். அதன் பார்வை விழுந்தாலே மனித உடலில் நஞ்சு ஏறுமாம். நடுமத்தியில் நின்றாடும் பெரிய தலையுடன் கூடிய சிறிய பாம்பு நாகமணி நாகம் எனப் பெயர் கொண்டது. அது தன் தலையில் உள்ள நாகரத்தினத்தின் ஒளியின் உதவியுடன் இரவுவேளைகளில் இரை தேடும். அதற்கு அருகில் நின்று ஆடும் சிவப்புக் கோடுகளுடைய பாம்பு செங்கோடன் என்று அழைக்கப்படுகிறது. கொடிய நஞ்சும் சாந்த குணமும் கொண்டது. மொத்தமாக முப்பது நாக பாம்புகள் இப்பொழுது நின்று ஆடுகின்றன.

பாம்புகள் அதிகம் வந்து ஆடினால் அந்த ஆண்டு இக்கிராமத்திற்குச் சிறப்பான ஆண்டாக அமையும் என்பது அனுபவரீதியான நம்பிக்கை. இம்முறை முப்பது நாகங்கள் ஒன்று சேர்ந்து ஆடுகின்றபடியால் இவ்வாண்டு இக்கிராமத்திற்கு நல்ல ஆண்டாக அமையும். எனவே இவ்வாண்டில் உங்களுடைய திருமணம் நாகாத்தாளின் முந்நிலையில் நடைபெறுவது மிகமிக நல்லது. நீங்கள் கொடுத்து வைத்தவர்கள் என்பதுதான் அதன் அர்த்தம். அதற்கு இந்தக் காட்சிதான் சாட்சியாகும்." என்று சொல்லி முடித்தான் மகேசு.

சஞ்சீவனும் உமாவும் மிகுந்த மகிழ்ச்சியுடன் எல்லாவற்றையும் பார்த்து இரசித்து கொண்டி ருந்தார்கள். அந்த அற்புதக் காட்சியைப்

பார்த்து அசந்து போனவர் களில் மாப்பிள்ளை முதலாம் இடத்தைப் பிடித்திருந்தார் என்றால் மிகையாகாது. காரணம் அவர் கொழும்பி லிருந்து வந்தபொழுது இப்படியொன்று நடக்குமா? என்ற சந்தேகமும் அலட்சியமும் அவரின் உள்ளத்தில் இருந்தன. அதனால் நேரில் பார்க்கும்போது இது நிசமா அல்லது கனவா என்று கூட அவருக்கு எண்ணத் தோன்றுகிறது. ஆச்சரியத்தில் உறைந்துவிட்டார் என்றால் கூட மறுப்பதற்கு இல்லை.

## அங்கம் : 10

இந்த வேளையில் சாந்தன் முன்வரிசையில் கட்டப்பட்டிருந்த கயிற்றின் அருகோடு உட்கார்ந்திருந்து பார்த்துக் கொண்டிருந்தான். அவன் இருப்புக் கொள்ளாதவன் போலும், யாரோ ஒருவருடைய வரவை எதிர்பார்ப்பவன் போலும் அடிக்கடி பின்னுக்குத் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டிருந்தான். இதை கோயில் பூசாரி நாகராச னும் உமாவின் மாமா சுந்தரமும் அவதானித்தனர்.

ஒரு கட்டத்தில் உக்கிரமாக ஆடிக்கொண்டிருந்த கார்க்கோடகன் திடீரென்று சாந்தனின் காலில் கடும் சீற்றத்துடன் கொத்தியது. உடனே துடிதுடித்து, நடுநடுங்கிச் சாய்ந்தான், வாயால் நுரை கக்க, இறுதியில் உடல் இயக்கமற்றுப் போனது. இதைப் பார்த்த உமா தாங்க முடியாத மனவேதனையால் பொறுமை இழந்தவளாய் அம்பாளைப் பார்த்து,

“நீ ஒரு தெய்வமா? கொலைகாரப் பிசாசு! எனது திருமணத்தை ஆசையோடு பார்க்க வந்த ஒரு அப்பாவி நண்பனைக் கொன்றுவிட் டாயே! பாவி! போ! நீ ஒரு தெய்வமுமில்லை! ஒன்றுமில்லை!!”என்று திட்டினாள். இதைக் கேட்ட பூசாரி நாகாரசன் கையை அபயம் வழங்கும் வடிவில் காட்டிக்கொண்டு,

“மகளே! கொஞ்சம் பொறு! காரணமில்லாமல் காரியம் நடக்காது. அம்பாள் தப்புப் பண்ணுபவளல்ல. காரணம் தெரியும் வரை பொறுத்திரு மகளே!” என்று சாந்தப்படுத்தினார்.

சனக்கூட்டத்தின் மத்தியில் ஒரே பரபரப்பு. அவ்வேளையில் பின் னுக்கு நின்ற ஒரு இளைஞன் சனங்களை விலத்திக்கொண்டு வேகமாக வந்து சாந்தனைத் தூக்கினான். அந்தக் கணப்பொழுதில் பறநாகம்

திடீரெனப் பாய்ந்து அந்த இளைஞனின் கழுத்தைச் சுத்தியது. அந்த இளைஞன் அந்தக்கணமே,

"ஐயோ பாம்பு! ஐயோ பாம்பு!! ஐயோ பாம்பு!!!" என்று அலறிச் செயலிழந்து வீழ்ந்து மயங்கினான்.

அப்பொழுது அந்த இளைஞனுடைய காற்சட்டைப் பையிலிருந்து ஒரு நவீன பிஸ்ரல் (துவக்கு) வெளியே விழுந்தது. அதை உடனே கையிலெடுத்த பூசாரி நாகராசன் அதை உயர்த்திக் காட்டிக்கொண்டு,

"இங்கு ஏதோ ஒரு பயங்கர சதி வேலை நடக்கின்றது. அதை அறிந்து கொண்ட அம்பாள் அதைத் தடுக்க முயற்சிக்கிறாள். முடிவு விரைவில் தெரியவரும். அதுவரை எல்லோரும் பொறுமையாய் இருங்கள்" என்று ஆக்ரோசமாய்க் கூறினார்.

மக்களிடையே மேலும் பரபரப்பும் ஆச்சரியமும் அச்சமும் மேலோங்கியது. எனினும் மக்கள் குழம்பவில்லை. பொறுமை காத்தனர்.

சில நிமிடங்களின் பின் மயங்கி விழுந்த இளைஞன் திடீரென்று எழும்பிக் குந்தினான். உடனே பூசாரி நாகராசன்,

"அவனைப் பிடித்துக் கட்டுங்கடா" என்று சத்தமிட்டார். சுந்தரமும் மற்றையோரும் அவனைப் பிடித்து கைகளையும் கால்களையும் கயிற்றி னால் கட்டினர். இதைப் பார்த்த இன்னொரு இளைஞன் திடீரென்று ஓட்டமெடுத்தான். உடனே பூசாரி,

"பிடியுங்கடா அவனை!" என்று சத்தமிட்டார். கூடிநின்ற சனம் அவனையும் பிடித்துக் கொடுக்க, அவனையும் கயிற்றினாற் கட்டினர்.

இக்கணத்தில் ஒரு கருடனின் சத்தம் வானைப் பிளந்துகொண்டு வந்தது. நாகங்கள் மறுகணமே ஓடி மறைந்தன.

இரண்டாவதாகப் பிடிபட்ட இளைஞனுடைய காற்சட்டைப் பையிற் குள்ளும் ஒரு நவீன பிஸ்ரல் (துவக்கு) இருந்து எடுக்கப்பட்டது.

"நீங்கள் யாரடா? ஏண்டா பிஸ்ரலுடன் இங்கு வந்தனீங்கள்?" என்று அதட்டிக் கேட்டார் பூசாரி நாகராசன். கேள்விகளுக்குப் பதில் சொல்ல மறுத்தார்கள். இதைப் பார்த்த பூசாரி,

"மறுபடியும் நாகங்களைக் கூப்பிட்டு உங்களைக் கொத்திக்

கொல்லப்பண்ணப் போகிறேன்," என்று அச்சுறுத்தினார். பூசாரியின் அச்சுறுத்தலைக் கேட்டு நடுங்கிய இருவரும்,

"அப்படிச் செய்யாதீங்கள்! அப்படிச் செய்யாதீங்க! நாங்கள் உண்மையைச் சொல்லுகிறோம்," என்று வழிக்கு வந்தனர்.

"சொல்லுங்கடா, நீங்கள் யாரடா? ஏண்டா பிஸ்ரலுடன் இங்கு வந்தீங்கள்?" என்று மறுபடியும் அதட்டிக் கேட்டார் பூசாரி. அப்பொழுது கழுத்தில் பாம்பு சுத்திய இளைஞன் நடுங்கிக்கொண்டு,

"நாங்கள் மாப்பிள்ளை சஞ்சீவனைக் கொலை செய்ய வந்தனாங்கள். எங்களுக்குப் பணம் கொடுத்து இக்கொலையைச் செய்யும்படி அனுப்பியவர் இங்கு பாம்பு கொத்தி இறந்து கிடக்கும் சாந்தன்" என்றான். இதைக் கேட்ட உமாவிற்கும் மகேசுவிற்கும் ஏற்பட்ட அதிர்ச்சியால் ஓடிக்கொண்டிருந்த இரத்தம் ஒரு கணம் உறைந்தது. அந்தக் கூற்றை அவர்களால் சீரணிக்கவே முடியவில்லை.

அப்பொழுது மகேசு மனக்குழப்பமும் கொதிப்பும் அடைந்த நிலையில் முன்னுக்கு வந்து,

"என்ன காரணத்திற்காக மாப்பிள்ளை சஞ்சீவனைக் கொலை செய்ய சாந்தன் உங்களை அனுப்பினான்?" என்று அதட்டிக் கேட்டான்.

"எங்களுக்கு அடிப்படைக் காரணங்கள் எதுவும் தெரியாது. ஆனால் எங்களுக்கு அவன் சொல்லிய காரணம்: அவரைக் கல்யாணம் செய்யப்போகும் உமா ஒரு நம்பிக்கைத் துரோகி. தன்னை நம்பவைத்துக் கழுத்தறுத்துவிட்டாள். அவள் கல்யாணம் பண்ணிக்கொண்டு இந்த உலகத்தில் சந்தோசமாய் வாழப்படாது. ஆனபடியால் அவளுடைய மாப்பிள்ளையை அவளது கண் முன்னாலே துடிதுடித்துச் சாகப் பண்ண வேண்டும்," என்று சொல்லி எங்களுக்குப் பணம் கொடுத்தவர் சாந்தன்தான். அதற்கு முன் உமாவையோ மாப்பிள்ளையையோ எங்களுக்குத் தெரியாது. நாங்கள் பணத்திற்காகத்தான் கொலை செய்ய வந்தோம். இதற்கு மேல் எங்களுக்கு ஒன்றும் தெரியாது" என்று சொன்னான்.

அதன் உண்மைத் தன்மையை மேலும் உறுதிப்படுத்தும் பொருட்டு,

"சாந்தன் பணம் கொடுத்து உங்களை அனுப்பியிருந்தால், அவன் ஏன் இங்கு வந்து முன்வரிசையில் இருந்திருக்கவேண்டும்?" என்று

இரண்டாவது கேள்வியைப் போட்டான் மகேசு,

"இந்தக் கொலை நிகழும்பொழுது எக்காரணம் கொண்டும் நீங்கள் அவன் மீது சந்தேகம் கொள்ளப்படாது என்பதற்காகவே அவன் இங்கு வந்து முன்வரிசையில் அமர்ந்திருந்தான். கொலை விழுந்திருந் தால் முதலில் ஓடிச் சென்று மாப்பிள்ளையைத் தூக்கியவன் சாந்த னாய்த்தான் இருந்திருப்பான். அதுதான் எங்களுடைய செற்றப். அது மட்டுமல்ல இதற்கு முன்னும் உங்களுடன் நல்லவன் போல் நடந்து கொண்டான். ஆனால் உமா தனக்குத் துரோகம் செய்துவிட்டாள் என்ற எண்ணமும் அதற்குப் பழிக்குப்பழி வாங்கவேண்டும் என்ற வைராக்கியமும் அவனின் உள்ளத்தில் ஆழமாய்ப் பதிந்திருந்தன. என்பதுதான் நாங்கள் அறிந்த உண்மை," என்று சொன்னதும் அவன் கூறுவதில் உண்மை உள்ளது என்பதை உணர்ந்து கொண்ட மகேசு, பூசாரி நாகராசனைப் பார்த்து,

"இவன் கூறுவதில் உண்மைகளுண்டு. எனவே இவர்களை பொலிசாரிடம் ஒப்படைத்து உரிய சட்டநடவடிக்கை எடுப்பதுதான் புத்திசாலித்தனம்," என்று சொன்னான். மகேசுவின் ஆலோசனையை ஏற்றுக்கொண்ட பூசாரி நாகராசன் அவ்வாறு செயற்பட்டு இரு இளை ஞரையும் சாந்தனின் உடலையும் பொலிசாரிடம் ஒப்படைத்துவிட்டு விழாவிற் கவனம் செலுத்தினார். அதன் தொடர்ச்சியாக மக்களைப் பார்த்து,

"இங்கு ஒரு கொலைச் சதிமுயற்சி நிறைவேற்றப்படவிருந்தது. அதை அறிந்த அம்பாள் உரியவேளையில் உரியமுறையில் தடுத்து நிறுத்திவிட்டாள். அதுமட்டுமல்ல, இக்கொலை முயற்சிக்குக் காரண மாயிருந்தவனுக்கு உரிய தண்டனையும் வழங்கிவிட்டாள். ஆத்தாளு டைய அருளையும் அற்புதத்தையும் எப்படி விபரிப்பது! அதற்கு வார்த்தைகளே இல்லை!! அதை நீங்கள் எல்லோரும் நேரில் பார்த்துத் தெரிந்து கொண்டபடியால் விபரிக்க வேண்டிய தேவையும் இல்லை.

சம்பந்தப்பட்டவர்கள் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். தொடர்ந்து விழா வழமைபோன்று நடைபெறவுள்ளது. யாரும் தேவை யற்றுக் கலவரப்பட வேண்டியதில்லை. அம்பாளை மீறி இங்கு எதுகும் நடக்காது. ஆனபடியால் அமைதியாக இருந்து விழாவைப் பார்த்து இரசிப்பதுடன் அம்பாளின் அருளையும் பெற்று ஏகும்படி பணிவுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்," என்று கூறிமுடித்தார்.

# அங்கம் : 11

அதனைத் தொடர்ந்து அம்பாள் வீதிவலம் வந்தாள். இறுதியாக அம்பாள் வசந்த மண்டபத்தில் அமர்ந்து கொண்டதும் உமாவினதும் சஞ்சீவனதும் தாலிகட்டுத் திருமணம் இடம்பெற்றது. தாலி கழுத்தில் ஏறிய வேளையில் பெற்றோர், உடன்பிறப்புக்கள், உற்றார், உறவினர் பூசாரி, தேவர்கள் எல்லோரும் பூச்சொரிந்து வாழ்த்தினர். ஆத்தாளின் ஆசீர்வாதத்துடன் திருமணம் இனிதே நிறைவேறியமை எல்லோரையும் மகிழ்ச்சியிலும் ஆச்சரியத்திலும் திழைக்கச் செய்தது என்றால் மிகை யாகாது. கோயிலுக்கு வந்த எல்லோரும் ஆத்தாளின் அருளையும் அற்புதத்தையும் மகிமையையும் பற்றிப் பிரமாதமாய்ப் பேசிக்கொண் டார்கள்.

குறிப்பாக பாம்புகளின் ஆட்டமும் கொலை முயற்சியின் சூத்திரதாரி பாம்பினால் கொத்திக் கொல்லப்பட்டதும் நடு இராத்திரியில் கருடனின் சத்தம் வானைப் பிளந்துகொண்டும் வந்ததும், மறுகணம் நாகங்கள் ஓடி மறைந்ததும் கொலை செய்ய வந்த இளைஞனின் கழுத்தில் நாகம் சுத்தி அவனைக் காட்டிக்கொடுத்ததும் எல்லோர் உள்ளத்திலும் மறக்கமுடியாத சம்பவங்களாகப் பதிந்துவிட்டன என்பதுதான் உண்மை. நாகபுரம் நாகாத்தாள்மீது மக்கள் கொண்டிருந்த நம்பிக்கையும் பக்தியும் இன்றிலிருந்து பன்மடங்கு அதிகரித்து என்றால் மறுப்பதற்கில்லை. அடியார்கள் எல்லோரும் பொங்கல் உண்டு மகிழ்ந்ததுடன், அம்பாளின் அருளினால் புத்துணர்வு பெற்று மனநிறைவுடன் வீடு சென்றனர்.

எல்லோரும் வீடு சென்ற பின்பும் ஒருத்தி மட்டும் வீடு செல்லாது கோயிலின் முன் அமர்ந்திருந்து அழுது சொரிந்து கொண்டிருந்தாள். அவள்தான் உமா.

உண்மையை அறியமுன் அவசரப்பட்டு ஆத்தாளை ஏசியதையும் திட்டியதையும் அதன்மூலம் தான் விட்ட மகாதவறையும் எண்ணி எண்ணி அழுது சொரிந்து கொண்டிருந்தாள்.

“ஆத்தாள்! இந்த அறிவிலியை மன்னிப்பாயா?” என்று அடிக்கடி கேட்டுக்கேட்டு அழுது சொரிந்தாள். இது ஒருபுறம், மறுபுறம் ஆத்தா ளின் அற்புதத்தையும் அருளையும், கருணையையும் நினைந்து நினைந்து ஆனந்தக் கண்ணீர் சொரிந்தாள். தான் செய்த தவறினால் ஏற்பட்ட குற்ற உணர்விலிருந்தும் ஆத்தாளின் அற்புதத்தால் விளைந்த

ஆச்சரிய உணர்விலிருந்தும் இலகுவில் விடுபட முடியாத ஒரு நிலையில் உமா தென்பட்டாள். பலர் ஆறுதல் சொல்லியும் ஆலோசனை சொல்லியும் கேட்க மறுத்துவிட்டாள். தொடர்ந்து உருகி உருகி அழுது கொண்டே இருந்தாள்.

" உன்னைப் போன்ற ஒரு தெய்வத்தை இவ்வுலகில் நான் கண்டதேயில்லை!" அப்படிப்பட்ட உன்னைப் பார்த்து,

"கொலைகாரப் பிசாசு" என்று திட்டிவிட்டேனே! எப்படி நீ என்னை மன்னிக்கமுடியும்?" என்று கேட்டுக் கேட்டு அழுதாள். அவளுடைய அழுகை தொடர்கதையாயிருந்த வேளையில் பூசாரி நாகராசனுக்கு உருவேறியது. பூசாரி வடிவில் அம்மன் அவள் முன் தோன்றி,

"மகளே! நான் உன்னை மன்னித்து விட்டேன்.

நீ அறியாமற் செய்த தவறு அது. உன் நண்பன் மீது நீ வைத்திருந்த அன்பினாலும், அதீத நம்பிக்கையாலும் அப்படி நடந்து கொண்டாய்.

உனது உள்ளத்தை நான் அறிவேன்!

கவலையை விட்டுப் போய் வா மகளே!" என்று கூறினாள். உமா அவளின் பாதங்களில் வீழ்ந்து வணங்க, உமாவைப் பார்த்து சஞ்சீவனும் வீழ்ந்து வணங்கினான். அம்பாள் இருவரினதும் தலையில் கைகளை வைத்து ஆசீர்வாதம் பண்ணி அருளினாள். அதைத் தொடர்ந்து உமா தனது மணவாளனுடன் மகிழ்ச்சியோடு வீடு திரும்பினாள். இதைப் பார்த்த உறவினர் எல்லோரும் வியந்து நின்றனர். உமா நாகாத்தாளின் ஆசீர்வாதம் பெற்ற குழந்தை என்று எல்லோரும் பேசி மகிழ்ந்தனர்.

வீட்டிற்கு வந்ததும் உமா, அண்ணா மகேசுவைப் பார்த்து,

"பார்த்தியா அண்ணா! கோபித்துக்கொண்டு போனவன் திரும்பி வந்து எப்படி நல்லவன் போன்று நாடகம் ஆடினான் என்று!

ஆத்தாளின் அருள், கருணை இல்லையென்றால் நமது கதி என்னவாகியிருக்கும்! படுக்கையின் கீழ் பாம்பு எனது வாழ்வில் தொடர்கதையாகவே இருக்கின்றது. ஆனால் ஆத்தாள் ஒவ்வொரு கட்டத்திலும் என்னைக் காப்பாற்றிக் கொண்டே வருகிறாள். அவளுடைய

அருள் அவளுடைய கருணை கிடைக்கும்வரை என்னை எவரும் எதுவும் பண்ண முடியாது. அவளை எப்பொழுதும் என்னுடனேயே வைத்துக் கொள்ளுவேன்,'' என்றதும்,

"உண்மைதான் உமா, அவனுடைய நடிப்பில் நானும் நன்கு ஏமாந்துவிட்டேன். இவ்வளவு ஒரு நயவஞ்சக வைராக்கியத்தை மனதில் வைத்துக்கொண்டு எப்படி அவனால் நல்லவன் போல் நடிக்க முடிந்தது! என்பதை எண்ணிப் பார்க்கும் பொழுது, யாரை நம்புவது? யாரை நம்பாமல்விடுவது? என்று ஒன்றுமே புரியுதில்லை. இறைவனின் படைப்புக்களில் மனிதன்தான் ஒரு பயங்கரமான படைப்பு என்பது மட்டும் புரிகின்றது.

படுக்கையின் கீழ் பாம்புகள் உன்னுடைய வாழ்க்கையில் மட்டு மல்ல உமா, எல்லோருடைய வாழ்க்கையிலும் இருக்கத்தான் செய் கிறன. வடிவங்கள் வேறுபடலாம், ஆனால் தன்மை ஒன்றாய்த்தான் இருக்கிறது. நாம் மனிதராயிருக்கும்வரை மனிதர்களுடன் சேர்ந்து வாழும் வரை படுக்கையின் கீழ் பாம்புகளைச் சந்திக்க வேண்டித்தான் வரும்.

எமக்கு நாகாத்தாளின் அருள், கருணை கிடைக்கப் பெற்றதால் பயங்கர ஆபத்திலிருந்து காப்பாற்றப்பட்டு விட்டோம். இறைவனின் அருளை, கருணையைப் பெறமுடியாதவர்களும் விவேகம், விழிப்புக் குறைந்தவர்களும் பாதிக்கப்படுவது தவிர்க்க முடியாத ஒன்றாய்த்தான் இருந்து வருகின்றது. இது இவ்வுலகில் தொடர்கதையாகவே காணப் படுகிறது,'' என்று சொல்லிக்கொண்டு போக கதையைக் கேட்டுக் கொண்டிருந்த மாமா சுந்தரம்,

"நீ சொல்வது சரிதான் மகேசு. படுக்கையின் கீழ் பாம்பு எனப்படும் துரோகச் செயல் எல்லோருடைய வாழ்க்கையிலும் சந்திக்கத்தான் செய்கின்றது. இருந்தபோதும் இந்தளவிற்குக் கொடூரமானதாயும் வரும் என்பதை எண்ணிப் பார்க்கும்பொழுது அதை இலகுவில் ஜீரணிக்க முடியாதிருக்கிறது. இந்த இடத்திற்தான் எமது நாகாத்தாளின் அற்புதம், அருள், கருணை என்பவற்றின் மகிமை, பெருமை வெளிப்படுகின்றன. அவளுடைய பெருமைகளைப் புகழ்ந்துரைக்க வார்த்தைகளே இல்லை என்பதுதான் உண்மை,'' என்று கூறி தனது உணர்வை வெளிப்படுத்தி னார்.

இதுவரை பேசாதிருந்த மாப்பிள்ளை சஞ்சீவன், இந்தக்கட்டத்தில், "எனக்கு இதுவரை கடவுளில் பெரிய நம்பிக்கை இருந்ததில்லை. இங்கு நடந்த நிகழ்வுகளைப் பார்த்தபொழுது எப்படி நம்பாமல் இருக்க முடியும்? ஓ! மை கோட்! இவ்வளவு அற்புதத்தை, அதிசயத்தை இத் தெய்வம் வெளிப்படையாய்ச் செய்து காட்டியிருப்பதைப் பார்க்கும் போது என்னால் நம்பவே முடியாதிருக்கின்றது. ஆனால் நம்பித்தான் ஆகவேண்டும். கனவு கண்டு விழித்தது போல் இருக்கின்றது. ஆனால் இது நிசம்," என்று தனது புதிய அனுபவ உணர்வுகளை வெளிப்படுத்த, இதைக் கேட்டுக் கொண்டிருந்த சிங்காரம்,

"ஏன் மாப்பிள்ளை! எமது நாயன்மாருடைய வரலாற்றைப் படித்துப் பார்த்தால் இறைவன் அருளிய எண்ணிலடங்கா அற்புதங்கள் அதிசயங் களை அறியமுடியும். திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் பானை யிலிருந்த ஒரு பெண்பிள்ளையின் எலும்புகளைக் கொண்டு அந்தப் பெண்பிள்ளையையே திரும்ப உருவாக்க உதவியவர்தானே இறை வன்! அப்படியான வல்லமை கொண்ட இறைவனுக்கு இது பெரிய காரியமே? தூய்மையான உள்ளம், பக்தி, நம்பிக்கையோடு இறைவனை வழிபட்டு வருபவர்களுக்கு இறைவன் அருள் நிச்சயம் கிடைக்கும். இதுதான் மாமனிதர்கள் கண்ட அனுபவ ரீதியான உண்மை. அந்த வல்லமை உமாவிடம் உண்டு. அவளுடைய உண்மையான பக்திக்குக் கட்டுப்பட்ட ஆத்தாள் இன்று இவ்வளவு அற்புதம், அதிசயங்களை எல்லோர் கண்முன்னும் காண்பித்துள்ளாள்.

நாங்களும் அதைக் கண்குளிரப் பார்த்து இறைவனின் ஆற்றலை யும் அவனது கருணையையும் தெரிந்துகொள்ள ஓர் அரிய வாய்ப்புக் கிட்டியமை நாம் செய்த பாக்கியம் என்றே சொல்ல வேண்டும். இதன் பெருமை உமாவையே சாரும்," என்று சொன்னபொழுது உமாவின் கண்களிலிருந்து கண்ணீர்த் துளிகள் பொலுபொலுவென உதிர்ந்தன. இதைப் பார்த்த சிங்காரம்,

"ஏன் பிள்ளை அழுகிறாய்? அதுதானே எல்லாம் நல்லபடியாய் நடந்து முடிந்துவிட்டது," என்று கேட்டார்.

"இது கவலையால் வந்த அழுகை அல்ல மாமா! இது ஆனந்தக் கண்ணீர்! ஆத்தாளினுடைய அற்புதத்தை அதிசயத்தை என்னோடு தொடர்புபடுத்தி நீங்கள் கூறியபோது என்னை அறியாமலேயே ஆனந்

தக் கண்ணீர் பெருகிவிட்டது. ஆத்தாள் என்னுக்குள்ளேயே இருக்கி றாள் மாமா!" என்று சிறிய பதட்டத்துடன் கூறினாள். உமாவின் உணர்வுகளையும் நிலைமையையும் புரிந்து கொண்ட சிங்காரம்,

"நாகாத்தாளின் பங்குனி உத்தர விழாவை இனிவரும் காலங்களில் ஒவ்வொரு வருடமும் மிகச் சிறப்பாக நடாத்தவேண்டும். அதற்காகப் பூசாரி நாகராசனுடன் சேர்ந்து உமாவும் மாப்பிள்ளையும் மகேசுவும் உழைக்க வேண்டும். நானும் எனது பங்கை அளிப்பதென்று ஏற்கனவே தீர்மானித்துவிட்டேன்," என்று சொல்லிக்கொண்டு போக பூசாரி வந்தார். அவரைக் கண்டதும் சிங்காரம் முந்திக்கொண்டு,

"வாங்க பூசாரி ஐயா! உங்களுக்கு வயது நூறு. உங்களைப் பற்றி இப்பதான் கதைத்தோம். நீங்களும் சொல்லி வைத்தாற்போல் வந்திட்டீங்க," என்றதும்,

"என்னைப் பற்றியா கதைத்தீர்கள்? அந்தளவிற்குப் பெரிய மனிதனா நான்?"

"நாகாத்தாளினுடைய பூசாரியாய் இருக்கும்வரை நீங்கள் பெரிய மனிதன்தானே! அவளினுடைய அற்புதங்களும் அதிசயங்களும் அதிக ரிக்க அதிகரிக்க உங்களுடைய பெயரும் புகழும் உயர்ந்து செல்லுந் தானே!" என்று சொல்லி ஒருபடி மேலே தூக்கி வைத்தார் சிங்காரம். உள்ளங் குளிர்ந்த பூசாரி நாகராசன்,

"நாகாத்தாளைப் பற்றிப் பேசுவதாயிருந்தால் அதற்குப் பல நாட் கள் வேண்டும். நான் வந்த காரியம் முடியாது. திருமண விழாவிற்கு அழைப்பு விடுத்திருந்தீங்கள். நேற்று வரமுடியவில்லை. ஏன் என்பது உங்கள் அனைவருக்கும் தெரியும்," என்று கதையைச் சொல்லி முடிப்பதற்குள் குறுக்கிட்ட மகேசு,

"வீட்டிற்கு வராவிட்டாலென்ன! கோயிலில் நீங்கள்தானே திரும ணத்தை நடாத்தி வைத்தீங்கள். இதென்ன சும்மா நடந்த கல்யாணமா? மிகப்பெரிய சதியைத் தாண்டி நடந்த கல்யாணமல்லவா! சதியை முறியடித்ததில் ஆத்தாளுக்கு அடுத்தபடியாக நீங்கள் தானே முக்கிய பங்கு வகித்தீங்கள்! இதற்கும் மேலால் என்ன வேண்டும்?" என்று அவரை விட்டுக் கொடுக்காது சொல்ல,

"எதைச் செய்திருந்தாலும் உறவினன், இக்கிராமவாசி என்ற

முறையில் வீட்டிற்கு வந்து மணமக்களை வாழ்த்த வேண்டும் அல்லவா! நமக்கென்று ஒரு முறை பண்பாடு இருக்கல்லவா?" என்று பணிவுடன் கூறினார் பூசாரி நாகராசன். அந்வேளையில் மகேசு மணமக்களைப் பார்த்து,

"பூசாரி ஐயாவினுடைய காலில் விழுந்து ஆசீர்வாதம் வாங் குங்கோ," என்றதும் மாப்பிள்ளையும் பொம்பிளையும் வந்து பூசாரியா ரின் காலில் விழுந்து அவருடைய ஆசீர்வாதம் வேண்ட, பூசாரி மலர்ந்த முகத்தோடும் நிறைந்த சிரிப்போடும் இதுவரதும் தலைகளில் கைகளை வைத்து,

"நல்லாயிருங்கள்! நல்லாயிருங்கள்!! உங்களுக்கு ஆத்தாளினு டைய அருள் எப்பொழுதும் கிடைக்கும்," என்று வாழ்த்தி மகிழ்ந்தார்.

அப்பொழுது உமா பூசாரி ஐயாவைப் பார்த்து,

"நேற்று அந்த ஆபத்தான வேளையில் மிகக் கச்சிதமாயும் வேகமாயும் செயற்பட்டுக் கருமம் ஆற்றி எல்லாவற்றையும் நல்லபடி யாய் முடித்து வைத்தமைக்கு ரொம்ப நன்றி! முதல் ஆத்தாள் இரண்டாவது நீங்கள். உங்களையும் எங்கள் வாழ்நாளில் மறக்க முடியாது," என்று கூறி தனது நன்றியுணர்வை வெளிப்படுத்தினாள். அப்பொழுது நாகராசன்,

"பொறாமை, எரிச்சல், சுயநலம் என்பனதான் துரோகச் செயலுக்கு முக்கிய தளம். இந்த மூன்று நாசகாரச் சக்திகள் தமிழனுக்குக் கொஞ்சம் ஜாஸ்தியாயுண்டு. இதன் காரணமாய்த்தான் தமிழ் இனம் உலகில் ஒன்பது கோடி மக்களைக் கொண்டிருந்த போதும், இதுவரை ஒரு நாடு கூட இல்லாத நாதியற்ற இனமாக இருக்கின்றது. தனது சொந்த நலனுக்காக ஒரு தனிமனிதன் தன் இனத்தையே காட்டிக் கொடுக்கின்றான் என்றால், அவன் தமிழனாய்த்தான் இருக்கமுடியும். இது நான் சொல்லும் உண்மை அல்ல, இது வரலாறு சொல்லும் உண்மை.

அதுபோன்ற ஓர் ஈவிரக்கமற்ற ஈன நிகழ்வுதான் நேற்று எமது ஆத்தாள் முன்னிலையில் அரங்கேற்றப்பட இருந்தது. அது ஆத்தாளி னால் தடுத்து நிறுத்தப்பட்டது மட்டுமல்ல அவனுக்கு உரிய தண்டனை யும் அளிக்கப்பட்டது. இது எல்லோருக்கும் நல்லதோர் பாடம்.

படுக்கையின் கீழ் பாம்பாகக் கிடந்து பலர் சாதுரியமாய்த் தமது துரோகச் செயல்களை நிறைவேற்றி விடுகின்றார்கள். இது மனித குலத்தில் தொடர்கதையாகவே இருந்து வருகின்றது. அதனாற்தான் அனுபசாலிகள்,

"எதிரியை விடத் துரோகிதான் பேராபத்தானவன்" என்று சொல்லி வைத்தார்கள். சந்தர்ப்பம், சூழ்நிலை, தேவையைப் பொறுத்து எதிரியைக் கட்டித் தழுவலாம். ஆனால் துரோகியை எப்பொழுதும் எட்டத்திலேயே வைத்திருக்க வேண்டும். எதிரியை மன்னிக்கலாம், ஆனால் துரோகியை மன்னிக்கவே முடியாது. அதன் காரணமாய்த்தான் ஆத்தாள் அந்தத் துரோகிக்குத் தண்டனை வழங்கினாள்.

எதிரி எப்பொழுதும் வெளிப்படையாய்த் தெரிபவன். ஆனால் துரோகியை இனங்கண்டு கொள்ளுவது மிக மிகச் சிரமம். அவன் தனது கைவரிசையைக் காட்டும்வரை படுக்கையின் கீழ் பாம்பாகக் கிடப்பதுதான் அதற்கான காரணம்.

படுக்கையின் கீழ் பாம்பாகக் கிடக்கும் துரோகிகளிடமிருந்து உங்களைக் காப்பாற்றிக்கொள்ள எப்பொழுதும் விழிப்பாய் இருக்க வேண்டும்'' என்று அறிவுரை கூறி விடைபெற்றுச் செல்வதற்குமுன்,

"ஆத்தாள் நிகழ்த்திய அற்புதங்களில் அதி உச்சமாக ஒன்று நிகழ்ந்தது. அதை நீங்கள் அவதானித்தீங்களா?'' என்று கேட்டுவிட்டு ஆச்சரியப் பார்வை பார்த்த பூசாரி நாகராசன் தொடர்ந்து,

"அதுதான் கருடனின் சத்தம். நடுநிசியில் கருடன் எப்படி வந்தது! அச்சத்தம் எப்படி வானைக் கிளித்துக்கொண்டு வந்ததென்று கேட்டீங்கள்தானே! நாகங்களை அவ்விடத்தைவிட்டு அனுப்ப வேண்டிய தேவை ஏற்பட்ட சரியான வேளை பார்த்து ஆத்தாள் எழுப்பிய சத்தந்தான் அது. அதைக் கேட்டபொழுது எனது ஐம்புலன்கள் மட்டுமல்ல ஆறாவது புலனாகிய மனமும் சில வினாடிகள் அடங்கி ஒடுங்கின. அதைக் கேட்ட நாகங்கள் என்ன மாதிரி மாயமாய் மறைந்தன! அப்பப்பா! என்ன அதிசயம்!! எண்ணிப் பார்க்கும் பொழுதெல்லாம் உடம்பு புல்லரிக்கின்றது,'' என்று கூறியபொழுது எல்லோருடைய உடம்பும் புல்லரித்தது. உடனே மாப்பிள்ளை சஞ்சீவன்,

"இக்கலியுக காலத்திலும் அதாவது இருபத்தியொராம் நூற்றாண்

டில் இறைவன் இப்படி வெளிப்படையாய் அற்புதங்களை நிகழ்த்துகிறார் என்று யாரும் சொன்னால், அதை நம்பாது போகலாம். ஆனால் நேரடியாய்ப் பார்த்ததைக் கேட்டதை எப்படி நம்பாதிருப்பது? என்ன அற்புதம்! என்ன அதிசயம்! அவை அங்கு வந்திருந்த எல்லோர் உள்ளத்தையும் நிச்சயம் உறைய வைத்திருக்கும் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை" என்று வியந்து கூறியது எல்லோரையும் மகிழச் செய்தது.

***"துரோகிகளிடமிருந்து உங்களைக் காப்பாற்றிக்கொள்ள எப்பொழுதும் விழிப்புடன் இருங்கள்!***

முற்றும்.

யாவும் கற்பனை

# மண்வாசனை

## அங்கம் -1

ஆ..! ஆ....! ஆ...! அம்மா...! நோவைத் தாங்க முடியுதில்லையே! இந்த வேதனையை எத்தனை நாளைக்குத் தாங்குகிறது? ஆண்டவா! ஏன் இப்படி என்னைப் போட்டு வருத்துகிறாய்? நான் செய்த பாவத்திற்கு இதுகும் வேண்டும்! இன்னமும் வேண்டும். இறைவா! உன்னைக் குறைசொல்லிப் பிரயோசனமில்லை. நான் செய்த துரோகத்திற்கு இது போதாது. நேரம் பிற்பகல் ஐந்து மணியாகிவிட்டது. இந்த மனுசனை இன்னும் காணவில்லையே!" என்று சுந்தரி தனிமையில் அழுது புலம்பிக் கொண்டிருந்தாள்.

விபத்தில் காலை முறித்துக்கொண்ட சுந்தரி கனடா ஸ்காபரோ பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த பொழுது அவள் அனுபவித்த வேதனையின் பிரதிபலிப்புத்தான் இந்த அழுகையும் புலம்பலும்.

இவள் படும் வேதனையை அவதானித்த ஒரு நேஸ் எயிட் (NURSE AID),

"என்னக்கா கால் ரொம்பவும் வலிக்கிறதா?" என்று கேட்டுக் கொண்டு வந்தாள். இவ்வளவு நாளும் அந்த நேஸ் எயிட்டை வேறு நாட்டுக்காரி என்று எண்ணியிருந்த சுந்தரிக்கு அவள் தமிழில் கதைத்துக் கொண்டு வந்தது பெரும் அதிர்ச்சியையும் வியப்பையும் ஏற்படுத்திய போதும் சிறிய ஆறுதலையும் ஏற்படுத்தியது. உடனே சுந்தரி,

"சிஸ்ரர், நீங்கள் தமிழா?" என்று ஆச்சரியத்தோடு கேட்டாள். ஆமாம், நான் ஒரு தமிழ்ப் பெண்தான். என்னுடைய பெயர் சித்திரா. இனிமேல் நீங்கள் என்னை சிஸ்ரர் என்று கூப்பிடாமல் சித்திரா என்றே கூப்பிடலாம்," என்று அன்போடு கூறினாள். இதைக்கேட்ட சுந்தரி,

"ரொம்பச் சந்தோசம். உங்களை இவ்வளவு நாளும் இந்தியாக் காரியோ அல்லது கயானாக்காரியோ என்றுதான் எண்ணிக்கொண்டிருந் தேன். அதனாலதான் இவ்வளவு நாளும் உங்களுடன் எனக்குத்

தெரிந்த அரைகுறை ஆங்கிலத்தில் பேசிக்கொண்டேன்,'' என்று கதைத்துக் கொண்டிருந்தபொழுது சுந்தரியின் கணவன் கண்ணன் வந்தான்.

கண்ணனைக் கண்ட சுந்தரி உடனே, "சித்திராவைக் காட்டி இவ நம்மளுடைய தமிழ்ப் பொண்ணுதான். இவவினுடைய பெயர் சித்திரா. இவவை இவ்வளவு நாளும் வேறுநாட்டுக்காரி என்று எண்ணி யிருந்தேன். நான் அழுது புலம்பிக் கொண்டிருந்ததைப் பார்த்துவிட்டு இவதான் தமிழில் பேசினார்,'' என்று சொல்லி முடிக்கவே, இதைக்கேட்ட கண்ணன் சித்திராவைப் பார்த்து,

"வணக்கம் சித்திரா! இங்கு நீங்கள் வேலை செய்வதையிட்டு நான் ரொம்பச் சந்தோசப்படுகிறேன்,'' என்று கூறவே; பதிலுக்கு,

"வணக்கம்! நீங்கள் இருவரும் பேசுங்கோ. நான் வருகிறேன்,'' என்று கூறிவிட்டு கணவன் மனைவியினது கதைக்கு இடைஞ்சல் பண்ண விரும்பாதவள் போன்று சென்றுவிட்டாள்.

கண்ணனின் வருகைக்காக காத்திருந்த சுந்தரி, "இவ்வளவு நேரமும் என்னப்பா செய்தனீங்க? இருந்துபோட்டு இப்ப ஆறு மணிக்கு வாறார். நான் படுகின்ற வேதனையைப் பற்றி கொஞ்சமாவது கவலைப்பட்டால் இப்படி ஆறுமணிக்கு வருவீங்களே?'' என்று அவன் மீது எரிந்து விழுந்தாள். இதைக் கேட்ட கண்ணன்,

"உன்னுடைய வேதனை எனக்குப் புரியுதப்பா. அதற்காக உன்னு டைய வேதனையை நான் மாற்றிப் பிடிக்கவா முடியும்? 'அழுதழுதும் பிள்ளை அவளே பெறுவாள்' என்பதைப் போல நான் ஐந்து மணிக்கு வந்தாலென்ன! ஆறுமணிக்கு வந்தாலென்ன! நீதான் அப்பா வேதனை யைத் தாங்கி ஆகவேண்டும். இதைக் கேட்டுப் பொறுமையை இழந்த சுந்தரி,

"நான் படுகின்ற வேதனை போதாதென்று மிச்சத்துக்கு உங்களு டைய தத்துவம். இது தத்துவம் பேசுகின்ற நேரமா? இரண்டு ஆறுதல் வார்த்தை கூறுவம் என்றில்லை! தத்துவம் பேசுகிறார், தத்துவம்! சனத்தினுடைய திட்டும் உங்களுடைய சாபமும்தானே எனக்கு இந்த

நிலைமையைக் கொண்டு வந்தது,'' என்று கோபத்தோடு கூறினாள்.

அவள் தன்னுடைய வேதனையில் என்னவோ எல்லாம் நினைத்த பாட்டிற்குப் பேசுகிறாள் என்று இவ்வளவு நேரமும் அதைப் பெரிதுபடுத்தாமல் கேட்டுக்கொண்டிருந்த கண்ணன் தன்னுடைய சாபமும்தான் அவளுடைய இந்த நிலைமைக்குக் காரணம் என்று கூறியதைக் கேட்ட பொழுது பொறுமையை இழந்தவனாய்,

"நீ செய்த பாவம்தான் உன்னை இந்த நிலைமைக்கு இட்டுச் சென்றது என்பதை உணராமல் மற்றையவர்கள் மீதும் என்மீதும் பழி சுமத்துகிறாயே! இது நியாயமா? உனக்கு இன்னும் புத்தி வரவில்லையா? நீ செய்த துரோகத்தனத்திற்கு சனங்கள் உன்னைத் திட்டாமல் பாராட்டு விழாவா எடுக்குங்கள்! எத்தனை தடவை சொன்னனான் இப்படியான துரோகத்தனத்தைச் செய்ய முயற்சிக்க வேண்டாம் என்று. நான் சொன்னதைக் கொஞ்சமாவது கேட்டியா? உன்னுடைய உயிருக்கு ஆபத்து வராமல் இந்த அளவோடு நீ காப்பாற்றப்பட்டது, நானும் நமது பிள்ளைகளும் செய்த புண்ணியம் என்பதை உணராமல் நான் போட்ட சாபம் என்று நாகூசாமல் சொல்லுகிறாய்,'' என்று சற்று கோபத்தோடு கூறினான்.

தான் அப்படிக் கூறியது தவறு என்பதை உணர்ந்த சுந்தரி,

"சரி அப்பா, நான் ஏதோ வேதனையில் அப்படிக் கூறிவிட்டேன். நான் அப்படிக் கூறியது தப்புத்தான். அதைப் பெரிதுபடுத்தாமல் விடுங்கோ!'' என்று பணிவோடு கூறினாள். மனைவி தன்னுடைய பிழையை உணர்ந்து விட்டாள் என்பதைக் கேட்டு மனம் இளகிய கண்ணன்,

"நானும் கொஞ்சம் உணர்ச்சி வசப்பட்டுப் பேசிப்போட்டன் என்று நினைக்கிறேன். நீ இருக்கிற இந்த நிலைமையில அப்படிப் பேசி இருக்கப்படாது. நான் கூறியது உன் மனதை வேதனைப்படுத்தியிருந்தால் என்னை மன்னித்துவிடு சுந்தரி,'' என்று கூறிக்கொண்டு அவளுடைய தலையைத் தடவினான். உடனே சுந்தரி,

"அப்படி ஒன்றுமில்லை அப்பா! நீங்கள் எத்தனையோ தடவை எனக்குப் புத்திமதிகள் சொன்னனீங்கள்தானே! நான்தான் பேராசையில

நீங்கள் சொன்னதைக் கேட்கவில்லை. பேராசை பெருநட்டம் என்று இப்பதான் புரியுது. இனிமேலாவது நல்ல ஒரு பெண்ணாக வாழுவதற்கு முயற்சிக்கிறேன், போதுமா?'' என்று அவள் கூறியதைக் கேட்ட கண்ணன்,

"இப்பதானப்பா நீ என்னுடைய உண்மையான பெண்டாட்டி,'' என்று கூறிக்கொண்டு மேலும் தலையைத் தடவிக் கொடுத்தான். கால் வலியில் வேதனைப்பட்டுக் கொண்டிருந்த வேளையில் அவன் அவளது தலையைத் தடவிக்கொடுத்தது அவளுக்கு இதமாகவும் சுகமாகவும் இருந்தது. அப்படியே அவள் தூங்கிவிட்டாள். இரண்டு நாட்களாக கால் வேதனையால் நித்திரை இல்லாதிருந்த சுந்தரி இன்று நித்திரையாகிவிட்டதைப் பார்த்தபொழுது கண்ணனுக்குச் சந்தோசமாயிருந்தது. அவளை மறுபடியும் எழுப்பி வேதனையை உணரப்பண்ணாமல் அப்படியே விட்டுவிட்டுப் போவதற்குத் தீர்மானித் தான்.

அப்பொழுது சித்திரா,

"எப்படி கண்ணன் இருக்கின்றீர்கள்?'' என்று கேட்டுக்கொண்டு வந்தாள்.

"நான் நல்லாயிருக்கிறேன். நீங்கள் எப்படி இருக்கின்றீர்கள்?'' என்று கண்ணன் பதிலுக்குக் கேட்டான்.

"நான் ரொம்பவும் நல்லாயிருக்கிறேன்,'' என்று கூறிய சித்திரா, தொடர்ந்து,

"என்ன, சுந்தரி தூங்கிவிட்டாவோ?'' என்று கேட்டுக்கொண்டு அவளின் கட்டிலுக்கு அருகாமையில் வந்தாள். கதிரையில் இருந்த கண்ணன் உடனே எழுந்து,

"எனக்கு நேரமாகின்றது. நான் வரப்போகிறேன். அவவை எழுப்பிச் சொல்லிப் போட்டுப் போவதற்கு நான் விரும்பவில்லை. இரண்டு நாட்களாக அவவிற்கு நித்திரையில்லை. இண்டைக்காவது நன்றாகத் தூங்கட்டும். அவவைக் கொஞ்சம் கவனமாய்ப் பார்த்துக் கொள்ளுங்கோ சித்திரா,'' என்று கூறிவிட்டுச் சென்று விட்டான் கண்ணன்.

மறுநாள் காலை "எப்படிச் சுந்தரி இருக்கின்றீர்கள்? இரவு நல்ல நித்திரை கொண்டிருக்கின்றீர்கள் போல?" என்று கேட்டுக்கொண்டு வந்தாள் சித்திரா. அதைக்கேட்ட சுந்தரி,

"நீங்கள் சொல்லுவது சரிதான் சித்திரா. இரண்டு நாட்களுக்குப் பிறகு கடந்த இரவுதான் நல்ல நித்திரை கொண்டிருக்கிறேன். இப்பொழுது உடம்பிற்கும் மனத்திற்கும் நல்ல இதமாயிருக்கின்றது," என்று கூறினாள். கதையைத் தொடர்ந்த சித்திரா,

"உங்களுடைய நித்திரையைப் பார்த்த உங்களுடைய கணவர் உங்களை எழுப்பிச் சொல்லாமலேயே என்னிடம் கூறிவிட்டுப் போய் விட்டார். அவர் ரொம்ப நல்லவர். அதுமட்டுமல்ல அவர் ரொம்ப அழகானவரும்கூட. அவர் உங்களுக்குக் கணவராய்க் கிடைச்சதற்கு நீங்கள் குடுத்து வைத்திருக்க வேண்டும். அவரை எனக்கு ரொம்பப் பிடிச்சுப் போச்சு," என்று மனதில் பட்டதை அப்படியே கூறிவிட்டாள். அவளின் கதையைக் கேட்ட சுந்தரிக்கு ஏதேதோ எண்ணங்கள் எல்லாம் மனதில் தோன்றின.

"நான் நித்திரையாய்க் கிடக்க என்ன நடந்ததோ? ஏது நடந்ததோ? நித்திரை கொண்டு எழும்பிய சந்தோசத்தையும் கெடுத்துவிட்டாளே!" என்று தனக்குள் முணுமுணுத்துக் கொண்டாள். சுந்தரியின் முணு முணுப்பை அவதானித்த சித்திரா,

"என்னக்கா, உங்கபாட்டில ஏதோ கதைக்கின்றீங்க? "என்று கேட்கவே, பதிலுக்கு,

"கால் மறுபடியும் வலிக்கிறது. அதுதான் என்னுடைய பாட்டில் சொல்லி அழுகிறேன்," என்று கதையை மழுப்பிக் கூறிச் சமாளித்துக் கொண்டாள்.

இப்பொழுது நேரம் பிற்பகல் ஐந்து மணி. கண்ணன் வரும் நேரம். அவனுடைய வருகையை ஆவலுடன் சுந்தரி எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். ஐந்துபத்திற்கு சுந்தரியின் அறையில் நுழைந்த கண்ணன்,

“இப்பொழுது கால் எப்படியப்பா இருகிது?” என்று கேட்டுக் கொண்டு அவளின் கட்டிலுக்கருகில் வந்து நின்றான். கணவனின் கரிசனையை உணர்ந்து கொண்ட சுந்தரி,

“கால் நோவு இப்பொழுது குறைந்துள்ளது. ஆனால், புதிதாக நெஞ்சுநோ ஆரம்பிச்சிருக்கு,” என்று கூறிமுடிப்பதிற்குள்,

“என்னப்பா சொல்லுகிறாய்?” என்று பதட்டத்துடன் கேட்டான் கண்ணன். நிலமையை உணர்ந்து கொண்ட சுந்தரி,

“பதட்டப்பட வேண்டாம் அப்பா, நான் கேட்கிற கேள்விக்கு ஒழுங்காய்ப் பதில் சொல்லுங்கோ,” என்று கூறவே, ஒன்றும் புரியாத கண்ணன்,

“ அப்படி என்ன கேள்வியப்பா கேட்கப் போகிறாய்? என்று கூறி விட்டு வளர்த்த நாய் முகத்தைப் பார்த்தது போன்று அவளுடைய வாயைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

“நான் நேற்று நித்திரையாகிப் போனபின் இங்கு என்ன நடந்தது?” என்று கேட்டாள். அவள் என்னத்தைப் பற்றிக் கேட்கிறாள் என்பதை உணர்ந்து கொள்ளாத கண்ணன்,

“என்னத்தைப் பற்றியப்பா கேட்கிறாய்? கொஞ்சம் விளக்கமாய்ச் சொல்லுமேன்,” என்றான். தான் என்னத்தைக் கருதுகிறேன் என்பதை அவன் புரிந்து கொள்ளவில்லை என்பதை உணர்ந்து கொண்ட சுந்தரி,

“சித்திரா உங்களைப் பற்றி ஏதோவெல்லாம் சொன்னாள். உங்க ளுக்கும் அவளுக்கும் இடையில என்ன நடந்தது?” என்று தடுமாற்றத் துடன் கேட்டாள். நிலைமையை உணர்ந்து கொண்ட கண்ணன் பதட்டப்படாமல்,

‘எப்படி இருக்கின்றீங்க?’ என்று கேட்டாள்.

‘நல்லாயிருக்கிறேன்,’ என்று சொல்லிவிட்டுப் பதிலுக்கு நானும்,

‘எப்படி இருக்கின்றீங்கள்?’ என்று கேட்டேன். அத்துடன் உங்களைக்

கொஞ்சம் கவனமாய்ப் பார்த்துக் கொள்ளுங்கோ,' என்று சொல்லிப் போட்டுப் போனேன். இவ்வளவுந்தான் நடந்தது," என்று தெளிவாகச் சொன்னான்.

நிலைமையைத் தெளிவுபடுத்திக்கொள்ள விரும்பிய சுந்தரி,

"வேறொன்றும் நடக்கவில்லை?" என்று சற்று கண்டிப்பான தொனியில் கேட்டாள். குறிப்பாக அவள் என்னத்தைக் கருதுகிறாள் என்பதைத் தெரிந்து கொள்ளுவதற்காக,

"நீ என்னத்தை மனதில் வைத்துக் கொண்டு கேட்கிறீ?" என்றான்.

"இல்லையப்பா, கட்டி அணைப்பது முத்தம் கொடுப்பது என்பன இந்த நாட்டில சர்வசாதாரணம் தானே?" என்றாள்.

"என்னப்பா, இவ்வளவு நாளும் நீ என்னுடன் வாழ்ந்த வாழ்க்கையில் நீர் என்னைப் பற்றிப் புரிந்து வைத்திருப்பது இவ்வளவும்தானா?" என்று சற்று கவலையோடு கேட்டான்.

"உங்களைப் பற்றி நான் நல்லாய்த்தான் புரிந்து வைத்திருக்கிறேன். இருந்தாலும் இந்நாட்டு மண்வாசனை உங்களையும் பாதித்திருக்குமோ என்று எண்ணி மனதைச் சோரம் போகவிட்டுவிட்டேன்," என்று தளர்ந்த தொனியில் கூறினாள்.

"மண்வாசனை செல்வாக்குச் செலுத்துமென்பது உண்மைதான். மண்வாசனை இந்த நாட்டுக்கு மட்டும் இல்லை அப்பா! நமது நாட்டுக்கும் இருக்கல்லே? நாங்கள் எமது நாட்டில் பிறந்து வளர்ந்து வாழ்ந்த பின் இங்கு வந்தனாமள். நமது நாட்டு மண்வாசனை எம்மைவிட்டு இலகுவில் போகாதப்பா! என்று கூறியவன் சிறிது யோசித்துவிட்டு தொடர்ந்து,

"எல்லாரும் அப்படி என்று சொல்லமுடியாது. அடிக்கிற காற்றுக்குப் பறக்கிற சருகுகளும் உண்டு. எதற்கும் அசையாத கோளாங்கல்லும் உண்டு. நான் கோளாங்கல் அப்பா! அதற்கும் மேலாக மனச்சாட்சி என்ற ஒன்றும் இருக்கல்லவா? அது பலமாயும் தெளிவாயும் இருக்கும் போது மண்வாசனையின் தாக்கம் மேலோங்கமாட்டாது. நீர் உம்முடைய

அனுபவத்தைக் கொண்டு என்னையும் எடைபோட்டிருக்கிறீர். அங்கதான் நீர் தப்புப் பண்ணிவிட்டீர்,'' என்றான் கண்ணன்.

“ஏதோ என்னுடைய மனச்சபலத்தில அப்படி நினைத்து கேட்டுப் போட்டன். அதற்காக என்னுடைய தவறைக் குத்திக் காட்டி இந்த நிலைமையில என்னை வேதனைப்படுத்த வேண்டுமா அப்பா?'' என்று கேட்கவே, அவளின் நிலைமையைப் புரிந்து கொண்டவன் போல,

“சரி... சரி எல்லாவற்றையும் மறந்துவிடும். அது கிடக்கட்டும், அவளவ கொடுத்த சாப்பாடுகளையெல்லாம் ஒழுங்காய்ச் சாப்பிட்டாயே? அல்லது திருப்பிக் கொடுத்துவிட்டாயே? அது மணக்கிது இது கயர்க்குதென்று! நீ பசி தாங்கமாட்டாய், ஏதாவது வாங்கித் தருவ மென்றுதான் கேட்கிறேன்,'' என்றான்.

“எனக்கொண்டும் வேண்டாம் அப்பா, நான் அவன்கள் தருகின்ற எல்லாவற்றையும் நன்றாய்ச் சுவைத்துச் சாப்பிடுகிறேன்,'' என்று சொன்னதைத் தொடர்ந்து,

“அப்படியா! நல்லது. அப்ப.... எனக்கு நேரமாகிது, நான் போயிட்டு வாறன். நீர் படுத்து நன்றாக றெஸ்ட் எடும்,'' என்று கூறிவிட்டு கிளம்பினான் கண்ணன். வெளியோ வந்து கொண்டிருந்த வேளையில் குறுக்கிட்ட கண்ணனின் நண்பன் கருணா,

“என்ன கண்ணன் இந்தப் பக்கம்? யாரும் உறவினர் வாட்டில் இருக்கினமே?'' என்று கேட்டான்.

“ஓம் மச்சான், எனது மனைவி தான். கடந்த வாரம் எனது கார் விபத்தில் சிக்கிவிட்டது. அதன் பெறுபேறுதான்,'' என்று சுருக்கமாய்க் கதையை முடித்துக்கொண்டு கிளம்பினான் கண்ணன்.

‘இவன்களுக்கு இதுவும் வேண்டும் இன்னமும் வேண்டும். இவன்கள் செய்த துரோகத்தனத்துக்கு இவ்வளவும் போதாது,' என்று தன்னுள் முணுமுணுத்துக் கொண்டான் கருணா.

## அங்கம் – 2

இப்பொழுது தனிமையில் படுத்திருந்த சுந்தரி, தான் கனடாவிற்கு வருவதற்குமுன் தனது வாழ்க்கையில் நடந்த நிகழ்வுகளையும் கனடாவிற்கு வந்த ஆரம்ப நாட்களில் இருந்த தனது மன நிலை யையும் அப்புறம் கனடா மண்வாசனைக்கு உட்பட்டு அதன்பின் தான் நடந்து கொண்ட முறைகளையும் அதற்கு ஆண்டவன் கொடுத்தி ருக்கின்ற தண்டனையையும் இரைமீட்டுப் பார்த்தாள். எல்லாம் மனத்திரையில் படம் போன்று ஓடிக்கொண்டிருக்க நித்திரையாகி விட்டாள்.

கனடாவிற்கு வந்து இறங்கியதும் சுந்தரிக்கு ஏற்பட்ட மட்டற்ற மகிழ்ச்சியை வர்ணிக்கவே முடியாது. பல வருடங்களாக எடுத்த விடாமுயற்சியின் பயனாகத்தான் கனடா வரமுடிந்ததென்றால் அது பல வேதனைகளுக்கும் சோதனைகளுக்கும் பின் கிடைத்த வெற்றி. அந்நிலையில் யாருக்குத்தான் மகிழ்ச்சி பொங்காமலிருக்கும். 1985 ஆம் ஆண்டு ஆரம்பித்த கனடா வருவதற்கான பிரயாண முயற்சி 1990 ஆம் ஆண்டு வெற்றி அளித்ததென்றால், இடைப்பட்ட ஐந்து வருடகாலமும் என்னென்ன அனுவங்களையெல்லாம் பெற்றிருப்பாள் என்று கனடாவிற்குக் கஷ்டப்பட்டு வந்தவர்களுக்கு மிகத் தெளிவாகத் தெரியும்.

கோலாலம்பூரில் வைத்து ஒரு தடவையும் சிங்கப்பூரில் வைத்து ஒரு தடவையும் பாங்கொக்கில் வைத்து ஒரு தடவையுமாக மொத்தம் மூன்று தடவைகள் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டிருந்தாள் சுந்தரி. ஒரு தடவை பிரயாணமுகவர் பணத்தைப் பெற்றுக்கொண்டு ஏமாற்றிவிட்டு ஓடிமறைந்துவிட்டான். தோல்விக்கு மேல் தோல்வி கிடைத்தும் பணத்தை இழந்திருந்தும் சுந்தரி மனதைச் சோரவிட வில்லை. மாறாக எப்படியும் கனடாவிற்குப் போகவேண்டும், இழந்த பணத்தைப்போல் பல மடங்கு பணத்தைச் சம்பாதிக்க வேண்டும். என்ற ஒரு வெறி அவளுக்கு ஏற்பட்டிருந்தது என்றால் மிகையாகாது. முதற்தடவை செய்த முயற்சிக்கான பணத்தைத் தனது குடும்பத்தவரிட மிருந்து பெற்றிருந்த சுந்தரி, அடுத்தடுத்து மேற்கொண்ட பிரயாண முயற்சிகளுக்கு வேண்டிய பணத்தை வெளியாரிடம் கடனாகவும்

காணி பூமி, நகை நட்டுக்களை விற்றும் அடவு வைத்தும் பெற்றிருந் தாள். இவ்வாறு பெற்ற பணத்தை எவ்வாறு திருப்பிக் கொடுத்து முடிப்பது என்று எண்ணும் போதெல்லாம், கனடாவிற்கு எப்பாடுபட்டா வது போகவேண்டுமென்ற உத்வேகத்தை அதிகரிக்கச் செய்ததே தவிர, மாறாக அவளுடைய மனதில் சோர்வை ஏற்படுத்தவில்லை.

அவளோடு படித்தவர்கள் அவளுடைய கிராமத்தைச் சேர்ந்தவர் கள், அவளுடைய உறவினர்கள் என்று பலர் கனடாவிற்குச் சென்று விட்டார்கள். இவற்றையெல்லாம் பார்த்தும் கேட்டறிந்துமிருந்த சுந்தரிக்கு தனது முயற்சி வெற்றி அளிக்காமலிருந்தமை ஒரு வகையில் பொறாமையாயும் இன்னொரு வகையில் கௌரவப் பிரச்சினையாயு மிருந்தது என்றாலும் சாலவும் பொருந்தும்.

பல தடவைகள் அவள் மேற்கொண்ட முயற்சி வெற்றி அளிக்காது போனமைக்கு முக்கிய காரணம் ஆங்கிலத்தில் போதிய அறிவில்லா திருந்ததும் ஆங்கிலத்தை ஓரளவிற்காவது பேச முடியாமல் இருந்ததும் ஆகும் என்றால் அதிலும் உண்மை இருக்கத்தான் செய்தது. இந்த உண்மைகளைப் புரிந்துகொண்ட சுந்தரி ஆங்கிலத்தில் பேசும் தனது ஆற்றலை இந்தக்கால இடைவெளியில் வளர்த்துக் கொண்டாள். கடைசியில் இவளுடைய பிரயாணம் வெற்றி பெறுவதற்கு ஆங்கிலத் தில் பேசும் ஆற்றல் பெரிதும் உதவியது என்றால், அதன் உண்மையை அறிந்த வர்கள் ஏற்றுக்கொள்வர்.

சுந்தரியின் ஐந்து வருட முயற்சியில் இரண்டாவது வருடத்தில் ஏமாற்றிப் பணத்தைக் கொண்டு சென்ற பிரயாணமுகவர் அவளின் இறுதி முயற்சிக்குச் சில மாதங்களுக்குமுன் பணத்தைத் திருப்பிக் கொடுத்து விட்டான். இந்த நிகழ்வு அவளுடைய பணக்கஷ்டத்தைப் போக்கியது மட்டுமல்ல, அவளுக்கு அதிஷ்டகாலம் தொடங்கிவிட்டது என்பதற்குக் கட்டியம் கூறுவது போன்று அமைந்திருந்தது. ஆரம்ப காலத்தில் கனடாவிற்கு எப்படியும் போகவேண்டும் என்ற ஒரு வெறித் தனம் இருந்ததேயொழிய நல்லகாலம், சாஸ்திரம் என்பவற்றில் சிறிதுகூட சுந்தரிக்கு நம்பிக்கை இருக்கவில்லை. தோல்விக்கு மேல் தோல்வி ஏற்படவே, இந்தத் தோல்விகள் வாழ்க்கையிற் பல பாடங்களைச் சுந்தரிக்குக் கற்றுக் கொடுத்தன என்றால் சாலவும் பொருத்தமாகும்.

அவற்றில் சிலதான் அதிஷ்டகாலம், கெட்டகாலம், சாஸ்திரத்தில் நம்பிக்கை என்பனவாகும். கெட்டகாலம் அதிஷ்டகாலம் என்பவற்றில் நம்பிக்கை ஏற்படவே, அதிஷ்டகாலத்தை அறியும் பொருட்டு சாத்தி ரத்தில் நம்பிக்கை வைக்கவேண்டிய தேவை ஏற்பட்டது. கடைசியாக அவளுடைய பிரயாணம் வெற்றியளித்த காலப் பகுதி சாத்திரியார் கூறிய அதிஷ்டகாலப்பகுதிதான் என்பதை சுந்தரியே ஒப்புக்கொண்டாள்.

ஆங்கிலத்தில் ஓரளவிற்குப் பேசும் ஆற்றலை வளர்த்துக் கொண்டமை, போன பணம் திரும்பி வந்தமை, சாஸ்த்திரியார் அதிஷ்டகாலத்தைத் தெரியப்படுத்தியமை என்பன இறுதியில் அவளுடைய பிரயாணம் வெற்றி பெறுவதற்கு உறுதுணையாய் இருந்தன என்பதில் உண்மையிருந்தபோதும், சுந்தரியின் விடா முயற்சியும், எப்படியும் கனடாவிற்குப் போகவேண்டும் என்ற வைராக்கி யமும், ஒரு வகையில் அவளுடைய ஆர்வத்தை “வெறி” என்று கூடச் சொல்லலாம், முக்கிய காரணங்களாக இருந்தனவென்றால் வாஸ்த்தவந்தான். இவ்வாறான வெறித்தனமான ஆர்வம் சுந்தரிக்கு ஏற்பட்டமைக்கு அவளுடைய இளமைப் பருவத்தில் கிடைத்த வாழ்க்கை அனுப வங்களே காரணங்களாக அமைந்திருந்தன எனலாம்.

இவளுடைய குடும்பத்தில் ஏழு பிள்ளைகள். ஏழு பேரில் சுந்தரி மூத்தபிள்ளை. இவளுடைய தந்தை நீதிமன்றின் ஒரு சேவகனாக வேலை பார்த்துவந்தார். சேவகன் சின்னத்தம்பி என்றால் அக்கிராமத்தில் எல்லோருக்கும் தெரியும். தாயார் குடும்பப் பெண்ணாகவே இருந்தார். மொத்தம் ஒன்பது பேர் கொண்ட குடும்பத்திற்கு சேவகன் சின்னத்தம்பி பெறும் மாதச் சம்பளம் எந்த மூலைக்குப் போதும்? சிறிய அளவில் தோட்டம் செய்து வந்தமையினால் இதன் மூலம் கிடைத்த வருமானமும் காய்கறி வகைகளும் பொருளாதாரக் கஷ்டத்தைப் போக்குவதற்கு ஓரளவிற்கு உதவியது எனலாம். சேவகன் சின்னத்தம்பி வெளியூர் நீதிமன்றங்களில் வேலை செய்து வந்தபடியினால், அநேக காலம் வெளியூர்ச் சீவியமாயே சென்றது. சேவகன் சின்னத்தம்பியின் வாழ்க்கைச் செலவுபோக மிகுதிப் பணத்துடன் ஏழு பிள்ளைகள் கொண்ட குடும்பத்தை நடத்துவது சுந்தரியின் தாய்க்குப் பெரும் சோதனையாகவும் வேதனையாகவும் இருந்தது.

சுந்தரி வயதுக்கு வந்த காலத்தில் சேவகன் சின்னத்தம்பியாருக்குப் புதிய உறவு ஒன்று ஏற்பட்டது. அதாவது முல்லைத்தீவு நீதிமன்றில் வேலைசெய்த பொழுது, அங்கு வேலை செய்த பெண் சிறைச்சாலை ஊழியர் ஒருவருக்கும் சேவகனுக்கும் இடையில் காதல் அரும்பத் தொடங்கியது. காதல் படிப்படியாக வளர்ந்து கட்டிய பெண்டாட்டி யையும் ஏழு பிள்ளைகளையும் கைவிடும் அளவிற்கு முற்றிவிட்டது. விஸ்வாமித்திரரையே ஆட்டிப்படைத்த காதல் சேவகன் சின்னத்தம்பி யாரையா விட்டுவைத்தது! ஏழு பிள்ளைகளையும் மனைவியையும் அம்போவெனக் கைவிட்டுப் புதுப் பெண்டாட்டியுடன் குடும்பம் நடத்தத் தொடங்கினார் சேவகன் சின்னத்தம்பி. பெண்டாட்டிக்கும் பிள்ளை களுக்கும் என்று மாதா மாதம் அனுப்பிய சிறுதொகைப் பணமும் நிறுத்தப்பட்டது. இப்போது அவர் புதுமாப்பிள்ளையல்லோ! அவருக்கு பணம் அதிகம் தேவைப்பட்டதில் ஆச்சரியம் இல்லை. இதன் விளைவாக சுந்தரியின் வீட்டில் வறுமை கோரத்தாண்டவம் ஆடியது. உண்பதற்குப் போதிய உணவில்லை. உடுத்துவதற்கு ஆன உடுப்பில்லை. சுந்தரியின் தந்தையார் புதுமாப்பிள்ளை ஆகியபொழுது சுந்தரிக்கு வயது பதினேழு, விபரம் அறிந்த வயது.

வருடப்பிறப்பு, தைப்பொங்கல், தீபாவளி, ஆடிப்பிறப்பு போன்ற கொண்டாட்டங்கள் வரும்போதெல்லாம் சுந்தரியின் கிராமத்துப் பிள்ளை கள் புத்தாடை அணிந்து, பட்டாசு கொழுத்தி, ஆவிக்கொழுக்கட்டை உண்டு கொண்டாடிக் குதூகலிக்கும் போதெல்லாம், சுந்தரியின் வீடு களையிழந்து காணப்படும். மற்றப் பிள்ளைகளைப் பார்த்து ஏக்கம் கொள்வது சுந்தரிக்கும் சகோதரங்களுக்கும் வழக்கமாகிவிட்டது. அன்றாடம் பசியைப் போக்குவதற்கே போராடும் குடும்பத்திற்கு புத் தாடை எங்க! புதுப்பானை எங்க! வறுமை தாண்டவம் ஆடியபொழுதும் சுந்தரி பாடசாலைக்குப் போவதை நிறுத்தவில்லை. அவளுடன் படித்த பெண்பிள்ளைகள் எல்லாம் ஒவ்வொரு நாளும் வெவ்வேறு உடை யணிந்து பாடசாலைக்குச் செல்லுவார்கள். சுந்தரி தனக்கென்றிருந்த ஒரேயொரு பாவாடையையும் சட்டையையுமே ஒவ்வொரு நாளும் அணிந்து செல்வாள். வீட்டு வறுமையும் தோட்டவேலையும் அவளது படிப்பைப் பெரும் அளவு பாதித்தது என்றால் அதிலும் உண்மை இருக்கத்தான் செய்தது. தோட்டம்தான் ஒரு நேரச் சாப்பாட்டுக்கேணும் வழி சமைத்தது. எனவே தோட்ட வேலையைவிட்டு படிப்பில் முழுவதாய்க் கவனம் செலுத்துவ

தென்பது சுந்தரியைப் பொறுத்தமட்டில் முடியாத காரியமாய் இருந்தது.

அவர்களுடைய கிராமத்துப் பிள்ளையார் கோயில் திருவிழாக் காலத்தில் அவளுடைய வயதை ஒத்த பெண்பிள்ளைகள் கைநிறையக் காசு கொண்டுபோய் செலவு செய்வதைப் பார்க்கும் போதெல்லாம் அவளுக்கு ஏக்கமாயிருக்கும். இவ்வாறு வறுமையில் வளர்ந்து வந்தபோதும் சுந்தரியின் மனம் சோர்ந்து போகவில்லை. எப்படியாவது வாழ்க்கையில் ஒருநாள் முன்னுக்கு வரவேண்டும், கைநிறையப் பணம் சேர்க்க வேண்டும், சந்தோசமாய்ச் செலவு செய்யவேண்டும், வேண்டிய விரும்பிய பொருட்களையெல்லாம் வாங்கி அனுபவிக்க வேண்டும் என்னும் ஆசை ஒரு வெறியாக மாறியிருந்தது என்றால் மிகையாகாது. இவற்றையெல்லாம் அடையவேண்டுமானால் கனடாவிற்குப் போயே ஆகவேண்டும்!

## அங்கம் – 3

சுந்தரி பாடசாலையில் படித்தபொழுது படிப்பில் கெட்டிக்காரியாக இருக்கவில்லை. ஆனால் மற்றைய கெட்டிக்காரப் பிள்ளைகளைப் போன்று தானும் பரீட்சையில் சித்தியடைய வேண்டும் என்ற ஆசை அளவிற்கு அதிகமாயே இருந்தது. இதனால் தவறாது பாடசாலைக்குச் சென்றுவந்தாள். மற்றையவர்களைப் போன்று படித்து தானும் பெரிய ஓர் ஆளாக வரவேண்டும் என்ற ஆசை இருந்ததேயொழிய, கஷ்டப்பட்டுப் படித்துப் பரீட்சைகளில் சித்தியடையவேண்டுமென்ற நேரிய போக்கும் உழைப்பும் இருக்கவில்லை. இதனால் மற்றைய பிள்ளைகளைப் பார்த்துக் கொப்பி அடிப்பதும், மற்றைய பிள்ளை களைப் பார்த்து வீட்டுப்பாடங்கள் செய்வதும் சுந்தரிக்கு கைவந்த கலையாக இருந்தன. சுந்தரி பத்தாம் வகுப்பை அடைந்த பொழுது இந்தப் பழக்கம் அதிகமாகவே வளர்ந்திருந்ததெனலாம். சுந்தரியின் இந்தப் பழக்கம் பத்தாம் வகுப்பு பரீட்சையில் சித்தி பெறுவதற்கு சிறிதளவும் உதவவில்லை. இதனால் மூன்று தடவைகள் பரீட்சை எழுதியும் அவளால் பரீட்சையில் சித்தியடைய முடியவில்லை.

மற்றைய பிள்ளைகள் பரீட்சையில் சித்தியடைந்ததைப் பார்த்த சுந்தரிக்கு ஒரு உண்மை புலப்பட்டது. அதாவது கொப்பியடிக்காமல்

தன்னுடைய திறமையைப் பயன்படுத்தி ஒருபோதும் பரீட்சையில் சித்தியடைய முடியாது என்பதாகும். பத்தாம் வகுப்புப் பரீட்சையில் எப்படியும் சித்தியடைந்தே ஆகவேண்டும் என்ற அதீத ஆசை அவளைப் பரீட்சையில் குதிரை ஓடுவதற்குத் தூண்டியது. நான்காவது தடவை பரீட்சையில் குதிரை ஓடிச் சித்தியடைந்துவிட்டாள். சுயமாகப் படித்துச் சித்தியடைந்தவர்கள் பெற்ற திறமைச் சித்திகளைவிட அதிகமான திறமைச் சித்திகளைப் பெற்றாள்.

நேர்வழியிற் சென்று தன்னால் சாதிக்கமுடியாத காரியங்களை குறுக்கு வழியில் சென்று சாதிப்பதற்குரிய அசாத்திய துணிவு சுந்தரி யின் இயற்கைச் சுபாவமாயிருந்தது. குறுக்குவழியில் அல்லது தப்பான வழியில் சென்று காரியத்தைச் சாதிப்பது சரியா அல்லது பிழையா, நீதியா அல்லது அநீதியா என்பதைப் பற்றியெல்லாம் சிந்திக்க முற்பட மாட்டாள். தான் அடைய வேண்டிய இலக்கை அடைவதிலேயே குறியாக இருந்தாளேயொழிய, இலக்கை அடைவதற்குப் பின்பற்றும் வழியைப்பற்றிச் சிந்திப்பது சுந்தரியின் அகராதியில் கிடையாது.

பத்தாம் வகுப்புப் பரீட்சையில் எந்த வழியைப் பின்பற்றிச் சித்தியடைந் தாளோ அதேவழியைப் பின்பற்றி பன்னிரண்டாம் வகுப்பையும் கடந்து விட்டாள். தனது திறமை பல்கலைக் கழகத்திற்கு ஒத்துவராது என்பதை உணர்ந்துகொண்ட சுந்தரி படிப்பை பன்னிரெண்டாம் வகுப்புடன் நிறுத்திக்கொண்டாள். குதிரை ஓடிச் சித்திபெற்ற பன்னிரெண்டாம் வகுப்புச் சான்றிதழுடன் ஒரு எழுதுவினைஞராக வரமுடிந்தது.

எழுதுவினைஞராக கொழும்பில் வேலைசெய்தபொழுது தனக்குப் பொருத்தமான கணவனைத் தானே தெரிவு செய்யவேண்டும் என்ற இலட்சியம் இவளிடம் இருந்தது. இதனால் இவளுடைய பெற்றோர் பல இடங்களில் மாப்பிள்ளை பார்த்த பொழுதும் அவற்றிற்கெல்லாம் மறுப்புத் தெரிவித்துவிட்டாள். சுந்தரியினுடைய இலட்சிய மாப்பிள்ளை சுந்தரியின் விருப்பு வெறுப்புகளுக்கு ஒத்துப்போகக் கூடியவனாய் இருக்கவேண்டும் என்பது அவளுடைய எதிர்பார்க்கையாக இருந்தது. வேறுவார்த்தையில் சொன்னால், அடக்கி ஆளும் மாப்பிள்ளையை விட அடங்கிப் போகும் மாப்பிள்ளையையே பெரிதும் விரும்பினாள். குறுக்குவழியில் தனது இலட்சியங்களை அடைய முயலும் சுந்தரிக்கு

அடங்கிப்போகும் மாப்பிள்ளைதான் பொருத்தமாக இருக்கும் என்பதை அவள் நன்றாகவே தெரிந்து வைத்திருந்தாள்.

சுந்தரி சுமாராக ஓர் அழகான பொண்ணு, அது மட்டுமல்ல ரொம்பவும் சுறுசுறுப்பானவள். அவளுடைய நடையிலிருந்து அவள் ஒரு தன்நம்பிக்கை உடைய பெண் என்பதை யாரும் இலகுவில் புரிந்து கொள்ளலாம்.

சுந்தரி கொழும்பில் வேலை செய்தபொழுது வெள்ளவத்தையில் தங்கியிருந்தாள். கோட்டையிலுள்ள தனது அலுவலகத்திற்கு வெள்ளவத்தையிலிருந்து நாளாந்தம் பேரூந்தில் செல்வது வழக்கம். ஒருநாள் அலுவலகத்திற்கு செல்வதற்காக பேரூந்து தரிப்பிடத்தில் மற்றைய பிரயாணிகளுடன் காத்துநின்றாள். காலை நேரமாயிருந்த படியினால் பிரயாணிகள் அதிகமாகவே நின்றார்கள். பேரூந்து வந்து நின்றது. பிரயாணிகள் முந்தியடித்துக்கொண்டு பேரூந்தில் ஏறத் தொடங்கினார்கள். சுந்தரியும் நெருக்கியடித்துக்கொண்டு சென்று நடத்துநரை அண்மித்ததும் பணத்தை எடுப்பதற்காக தனது கைப்பை யைத் திறந்தாள். கைப்பையிலிருந்த மணிபேர்ச்சைக் காணவில்லை. அவளுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. உடனே,

"யாரோ என்னுடைய பணத்தைப் பிக்பொக்கற் அடித்து விட்டாங் கள்! யாரோ என்னுடைய பணத்தைப் பிக்பொக்கற் அடித்துவிட்டாங்கள்! என்று உரத்துச் சத்தமிட்டாள். இதைப் பார்த்துக் கொண்டு நின்ற ஒரு தமிழ் இளைஞன் அவளிடத்திற் சென்று,

"சிஸ்ரர், நீங்கள் இப்படிச் சத்தமிட்டுக் கத்தினாற்போல் பணத்தைத் திருடியவன் திருப்பித் தரப்போவதில்லை. இங்கு நிற்பவர்கள் எல்லோ ரும் சிங்களவர்கள். நீங்கள் சொல்லுவது அவங்களுக்கு விளங்கப் போவதுமில்லை. நான் உங்களுக்கு இப்பொழுது பத்து ரூபாய் தருகிறேன். நீங்கள் போகவேண்டிய இடத்திற்குப் போய்விட்டு, நாளைக்கு இதே இடத்தில் பணத்தைத் திருப்பித்தாருங்கோ," என்று பணத்தைக் கொடுத்துவிட்டு அவன் பேரூந்தில் முதலில் ஏறி உட்கார்ந்து கொண்டான்.

பணத்தைப் பெற்றுக்கொண்ட சுந்தரி நடத்துனரிடம் ரிக்கற்றைப்

பெற்றுக்கொண்டு பேருந்தில் ஏறி சுற்றும்முற்றும் பார்த்தாள். அந்த இளைஞன் இருக்கைக்குப் பக்கத்தில் இடம் இருந்தது. உடனே சென்று அவனருகில் உட்கார்ந்துகொண்ட சுந்தரி,

"உங்களுடைய உதவிக்கு ரொம்ப நன்றி! நான் நாளைக்கே உங்களுடைய பணத்தைத் திருப்பிக் கொடுத்துவிடுவேன், யோசிக்க வேண்டாம்," என்றாள். உடனே அந்த இளைஞன்,

"உங்களுக்குத் தந்த பணத்தைப் பற்றி நான் யோசித்துக்கொண்டு இருக்கவில்லை. உங்களுடைய நிலமையைப் பார்த்துத்தான் கவலைப் படுகிறேன்," என்று அக்கறை கலந்த தொனியில் சொன்னான். அவனு டைய கதைக்குப் பதில் சொல்லும் பொருட்டு,

"என்னுடைய கான்ட் பாய்க் சிப் போடப்பட்டிருந்தது. சிப்பைத் திறந்து உள்ளுக்கிருந்த மணி பேர்சைத் திருடியிருக்கின்றாங்க, ஈவிரக்கம் இல்லாத கெட்ட படைப்புகள்!" என்று அசடுவழியச் சொன் னாள். பிக்பொக்கற்காரரைப் பற்றி அதிகம் தெரிந்தவன் போன்று,

"அவன்கள் சிப்பைத் திறந்தும் எடுப்பான்கள், தேவைப்பட்டால் கைப்பையை பிளேட்டினால் வெட்டியும் எடுப்பாங்கள். இதுதான் அவங்களுடைய முழுநேரத்தொழில். அவங்களைத் திருத்தவும் முடியாது. ஆட்களைக் கண்டுபிடிக்கவும் முடியாது. நாமள் தான் கவனமாய் இருக்கவேண்டும்," என்று கூறிய இளைஞன் தொடர்ந்து,

"இதுதான் உங்களுக்கு முதல் அனுபவமோ? அல்லது இதற்கு முதலும் பறிகொடுத்திருக்கின்றீங்களோ? என்று அனுதாபத்துடன் கேட்டான்.

" இதுதான் முதல் அனுபவம். இனிமேல் நான் ரொம்பக் கவனமாயிருப்பேன்," என்று சற்று கவலையோடு பதில் வந்தது. இப்பொழுது பேருந்து காலிமுகத்திடல் ஓரமாய் ஓடிக்கொண்டு இருந் தது. இறங்கும் வரையும் இவளுடன் ஏதாவது பேசுவம் என்று எண்ணிய அந்த இளைஞன்,

"அது சரி, நீங்கள் இப்போது எங்கே போய்க் கொண்டிருக்கி ன்றீர்கள் என்று அறியலாமே?"

"நான் இமிக்கிறேசன் திணைக்களத்தில் எழுதுவினைஞராக வேலை செய்கிறேன். எனது சொந்த இடம் யாழ்ப்பாணம். நான் இங்கு வெள்ள வத்தையில் தங்கியிருக்கின்றேன். இப்பொழுது வேலைக்குத்தான் போய்கொண்டிருக்கிறேன்," என்று தன்னைப் பற்றி சுருக்கமாகச் சொல்லி முடித்தாள்.

இதைக் கேட்ட அந்த இளைஞன்,

"அப்படியா விஷயம்! நாம இருவரும் கிட்டக் கிட்டத்தான் வேலை செய்யிறம். நான் பொருளாதாரத் திட்டமிடல் அமைச்சில் எழுது வினைஞனாக வேலை செய்கிறேன். நானும் வெள்ளவத்தையிற்தான் தங்கியிருக்கிறேன். என்னுடைய ஊரும் யாழ்ப்பாணம்தான். என்னுடைய பெயர் கண்ணன். முழுப்பெயர் கண்ணதாசன். எல்லோரும் கண்ணன் என்றுதான் கூப்பிடுவார்கள். நானும் இப்ப வேலைக்குத்தான் போய்க் கொண்டிருக்கிறேன்," என்றான். அவன் தன்னுடைய பெயரைக் கூறும்பொழுது தான் தனது பெயரைக் கூறாமலிருப்பது சரியல்ல என்று எண்ணிய சுந்தரி உடனே,

"என்னுடைய பெயர் சுந்தரி," என்றாள். தொடர்ந்து,

"எனக்கு இறங்கிற இடம் வந்துவிட்டது. நாளைக்குச் சந்திப்பம்," என்று சொல்லியபடி இருப்பிடத்தைவிட்டு எழும்பவே,

"நானும் இந்த இடத்திற்தான் இறங்கிறனான். எனது அலுவலகம் இதற்குப் பக்கத்திலதான்," என்று சொல்லிக் கொண்டு கண்ணனும் இறங்கினான். இறங்கிய கையோடு,

"வேலை முடிந்து போகும்போது இந்த இடத்திற்தான் பேரூந்து எடுக்கிறனீர்களோ? அல்லது வேறிடத்திலிருந்தா?" என்று கேட்கவே, சுந்தரி

"இந்த இடத்திலிருந்துதான்," என்று பதிலளித்தாள். உடனே கண்ணன்,

"அப்ப... அடிக்கடி சந்திக்கலாம், நான் போயிட்டு வாறன்," என்று கூறி விடை பெற,

"நானும் போயிட்டு வாறன்," என்று கூறி விடை பெற்றுச் சென்றாள் சுந்தரி.

நான் அவல நிலையில் இருந்த தருணம் தானாக முன்வந்து உதவி செய்ததை வைத்துப் பார்க்கும்போது இவர் ரொம்பவும் நல்ல ஆளாயிருப்பார் போல் தோணுது. எதற்கும் அவசரப்பட்டு முடிவெடுக்கப் படாது மேற் கொண்டு பழகிப்பார்ப்பம், என்று தன்னுக்குள் கதைத்துக் கொண்டு சென்றாள் சுந்தரி. இவர்களிருவரும் அடிக்கடி பேரூந்து தரிப்பிடத்தில் சந்திப்பதும் இரண்டும் பேரும் ஒன்றாக தங்கள் தங்கள் அலுவலகத் திற்குப் பிரயாணம் செய்வதும் வழமையாகிவிட்டது. காலகதியில் சுந்தரிக்கு கண்ணனை நன்றாகப் பிடித்துக்கொண்டது. தன்னை அவன் விரும்புகின்றானா என்பதை அறிய ஆவலாயிருந்தாள்.

ஒருநாள் இருவரும் பிரயாணம் செய்துகொண்டிருக்கும் பொழுது,

"கண்ணன், நான் இந்தக்கிழமை முடிவில் யாழ்ப்பாணம் போகி றேன்," என்றாள் சுந்தரி. இதைக் கேட்ட கண்ணன்,

"ஏதும் விசேசமோ?" என்றான்.

"விசேசம்தான், அம்மா அப்பா எனக்கு கல்யாணம் பேசும் படலத்தில் இறங்கியிருக்கின்றார்கள். ஒரு மாப்பிள்ளை பொண்ணு பார்க்க வருகிறாராம். அதற்காகத்தான் நான் வீட்டிற்குப் போகின்றேன். இரண்டு நாளில் திரும்பி வந்துவிடுவேன்," என்று கூறிவிட்டு, தன்னுடைய கதை அவனுடைய முகத்தில் என்ன பிரதிபலிப்புக்களை ஏற்படுத்து கின்றது என்பதை உற்று நோக்கினாள். அவள் கூறியது முழுக்க முழுக்க உண்மையென்று எண்ணிய கண்ணன்,

"அப்படியா விஷயம், நீங்கள் எப்படியான மாப்பிள்ளையை எதிர் பார்க்கின்றீர்கள்? நீங்கள் எதிர்பார்க்கின்ற மாப்பிள்ளையை உடனே பார்த்துவிட்டுக் கண்டுபிடிக்க முடியுமா? பழகிப் பார்க்காமல் எப்படி உங்களுடைய இலட்சிய மாப்பிள்ளையைக் கண்டுபிடிக்க முடியும்?" என்று கேள்வி மேல் கேள்விகளைப் போட்டான் கண்ணன்.

"நான் உங்களைப் போன்ற ஒரு மாப்பிள்ளையைத்தான் விரும்பு

கிறேன். உடனே பார்த்துவிட்டு அவர் உங்களைப் போல் இருப்பாரா? இருக்கமாட்டாரா? என்று கண்டுபிடிப்பது இயலாத காரியம்தான். இது நம்மளுடைய சமுதாயத்தில் இருக்கின்ற பெரிய குறைபாடு. காலாதி காலமாகப் பின்பற்றப்பட்டு வருகின்ற முறைகளைத் திடீரென்று மாற்ற வும் முடியாது. தலைவிதி என்று ஏற்றுக்கொள்ள வேண்டியதுதான். நல்லாய் அமைந்தால் சந்தோசம். கெட்டதாய் அமைந்தால் சங்கடம்தான்," என்று சுந்தரி கூறிமுடிக்க, அவர்கள் இறங்கும் இடம் வந்து விட்டது. இருவரும் பேரூந்தினால் இறங்கி விடைபெற்றுச் சென்று விட்டார்கள்.

"என்னைப் போன்ற மாப்பிள்ளைதான் தனக்கு வேண்டும் என்று நேரடியாகக் கூறுகின்றாள். அப்படியானால்....? எதற்கும் அவளுடைய விருப்பத்தை அறிவதற்கு முயற்சித்துப் பார்ப்பம்," என்று தன்னுக்குள் கதைத்துக் கொண்டு சென்றான் கண்ணன். மறுநாள் வேண்டுமென்றே அவளைச் சந்திக்கவில்லை. அடுத்தநாள் பேரூந்தில் சுந்தரியைச் சந்தித்தான். கண்ணனைக் கண்ட சுந்திரி,

"என்ன கண்ணன் நேற்று உங்களைக் காணவில்லை! வேலைக்குப் போகவில்லையா? அன்றி நான்தான் உங்களைச் சந்திக்கவில்லையா? என்று ஆர்வத்தோடும் அக்கறையோடும் கேட்டாள்.

"நீங்கள் சொல்லுவது சரிதான் சுந்தரி. நான் நேற்று வேலைக்குப் போகவில்லை. உங்களுக்கு மாதிரித்தான் என்னுடைய அம்மா அப்பா வும் எனக்குப் பெண் பார்த்துத் திரியினம். நேற்று ஒரு பெண்ணைப் பார்க்கப் போயிருந்தோம். அதனாலதான் நேற்று வேலைக்குப் போக வில்லை," என்று ஒரு தண்டவாளத்தை அவிட்டு விட்டான் கண்ணன்.

இதைக்கேட்டு சற்று அதிர்ச்சியும் ஏமாற்றமும் அச்சமும் அடைந்த சுந்தரி,

"பெண்ணை உங்களுக்குப் பிடிச்சுக் கொண்டுதோ?" என்று சோகம் ததும்பிய குரலில் கேட்டாள்.

"நானும் உங்களைப் போன்ற ஒரு பெண்ணைத்தான் தேடித் திரிகிறேன். பழகாமல் எப்படிக் கண்டுபிடிக்க முடியும்? ஏதோ அம்மா அப்பாவினுடைய மனதை நோகடிக்காமல் போய்வருவது வழமையாகி

விட்டது. காலம் பதில் சொல்லும் என்ற நம்பிக்கையில் காத்திருக்கிறன். நீங்கள் சொன்னதுமாதிரி நல்லதுதான் வந்து வாய்க்கிதோ! அல்லது பிச்சைவேண்டாம் நாயைப்பிடி என்ற மாதிரித்தான் வந்து மாட்டுதோ! எதற்கும் பொறுத்திருந்து பார்ப்பம்," என்று ஒரு விரக்தி கலந்த தொனியில் கூறினான்.

இதைக்கேட்ட சுந்தரி,

'என்னைப் போன்ற ஒரு பெண்ணைத் தேடித் திரிவதாய்க் கூறு கிறார். இவர் என்னை விரும்புகின்றாரோ? எப்படி அறிவது? நேரே கேட்டுப் பார்த்துவிடுவமோ? சீ! சீ! நான் ஒரு பெண் பிள்ளை.... போய்.... ஒரு வாலிபனிடம் எப்படி நேரடியாய்க் கேட்கமுடியும்! என்னைப்பற்றி ஏதும் தப்பாக நினைச்சாராய்ச்சி! வேண்டாம் வேண்டாம்' என்று தன்னுக்குள் பேசிக்கொண்டாள். அவளின் மௌனத்தை அவதா னித்த கண்ணன்,

"என்ன ஒன்றும் பேசாமல் இருக்கின்றீங்கள்?" என்று கூறி அவளு டைய மௌனத்தைக் கலைத்தான். தொடர்ந்து,

"நான் ஒன்று கேட்டால் தப்பாக எண்ணமாட்டீங்களே? என்றதும்,

"நான் ஒன்றும் தப்பாக எண்ணமாட்டன். நீங்கள் எதுவானாலும் கேளுங்கோ," என்று உறுதிபடக் கூறினாள் சுந்தரி. மனதை சிறிது திடப்படுத்திக் கொண்ட கண்ணன்,

"இல்லை... நான் உங்களைப் போன்ற ஒரு பெண்ணைத் தேடித் திரிகிறேன். நீங்கள் என்னைப் போன்ற ஒரு மாப்பிள்ளையை விரும்பு கின்றீங்கள். இதன் அர்த்தம் என்ன? நாம் ஒருவரை ஒருவர் விரும்புகி றோம்! அப்படித்தானே? பிறகேன் நீங்கள் மாப்பிள்ளையைப் பார்க்க யாழ்ப்பாணம் போகவேண்டும்? நான் ஏன் என்னுடைய அம்மா அப் பாவை ஏமாற்றித் திரியவேண்டும்?"என்று அழுத்தமான குரலில் சொன் னான். இதைக்கேட்ட சுந்தரி,

"நீங்கள் சொல்லுவது சரிதான் கண்ணன். நான் உங்களை உண்மையாக விரும்புகிறேன். எப்படி ஒரு பெண் வாய்விட்டுக் கேட்பது என்றுதான் தயங்கினேன்," என்று சொல்லி வாய் மூடுவதற்கிடையில்,

"நானும் உங்களை மனதார விரும்புகிறேன். இனிமேல் நீங்கள் இல்லாமல் எனக்கு வாழ்க்கை இல்லை என்பதை எனது வெட்கத்தை விட்டுச் சொல்லுகிறேன். வேறு வார்த்தையில் சொன்னால் நான் உங்களை இதயபூர்வமாய்க் காதலிக்கிறேன்," என்று கூறிக்கொண்டு அவளுடைய கையை மெதுவாகப் பிடித்தான். உடனே அவள் தன்னுடைய இதயபூர்வமான காதலை வெட்கம் கலந்த புன்சிரிப்பாலும் காதளவோடிய கடைக்கண் பார்வையாலும் வெளிப்படுத்தினாள். அத்தோடு,

"ரொம்பத் தாங்ஸ் கண்ணன், ரொம்பத் தாங்ஸ்," என்று நன்றியையும் தெரியப்படுத்தினாள்.

அன்று வேலையால் வீட்டிற்கு வந்த கண்ணன் கதவைத் திறந்து சுற்றுமுற்றும் பார்த்தான். அம்மா குசினிக்குள் சமைத்துக்கொண்டு நின்றாள். உடனே,

"அம்மா, எனக்கு சுவீப் விழுந்திருக்கு," என்று சந்தோசமும் சிரிப்பும் ஒன்று சேரச் சொன்னான். இதைக்கேட்டு ஆச்சரியம் அடைந்த தாய் கற்பகம்,

"என்ன கண்ணன் சொல்லிறாய், உண்மையாகவா?" என்று கேட்கவே, கண்ணன்,

"உண்மையாகத்தான் அம்மா," என்று மறுபடியும் சிரித்துக் கொண்டே சொன்னான்.

"எத்தனை லட்சம் தம்பி?" என்றாள் கற்பகம். அதற்கு கண்ணன்,

"என்ன அம்மா, அதிஷ்டம் அடித்திருக்கென்றால் அது பணத்தைத் தானா கருதும்? வேறொன்றையும் கருதாதோ அம்மா?" என்றான்.

"என்ன தம்பி, பொடிவைத்துப் பேசுகிறாய். விபரமாய்ச் சொல் லேன்," என்றாள் கற்பகம்.

"விடயத்தைக் கேட்டுவிட்டு என்னை ஏசமாட்டேன் என்று முதலில் சத்தியம் பண்ணுங்கோ, அப்புறம் விடயத்தைச் சொல்லுகிறேன்,"

என்று உறுதிபடக் கூறினான்.

மகனுடைய சுதந்திரத்தை மதிக்கும் பாணியில்,

"நீ தம்பி, இப்பொழுது வளந்த பெரிய ஆள். உனக்கு வயது இருபத்தெட்டு முடியப்போகின்றது. அத்துடன் நீ உத்தியோகம் பார்த்து உழைக்கிறாய். நீ ஒரு பொறுப்பான பிள்ளை என்பதும் எனக்குத் தெரியும். இந்த நிலையில் நீ எதைச் செய்தாலும் நான் ஏன் தம்பி ஏசப்போறன்? நீ யோசிக்காமல் விடயத்தைச் சொல்லு," என்று அன்புடன் கேட்டுக் கொண்டாள்.

"நான் ஒரு பெண்ணைக் காதலிக்கிறேன் அம்மா. அவளும் என்னைக் காதலிப்பதாய் இன்று சொல்லிவிட்டாள். இனிமேல் உங்களுக்குப் பெண் பார்த்து அலையும் அவசியமில்லை. நாங்கள் இருவரும் ஆறு மாதத்திற்கு மேலாகப் பேசிப்பழகி ஆளையாள் நன்றாகப் புரிந்துகொண்டு எடுத்த முடிவு இது. ஆனபடியினால் எந்தப் பிழையும் வராது," என்று அழுத்தம் திருத்தமாய்க் கூறினான் கண்ணன்.

"நல்ல பெண்ணாயிருந்தால் எங்களுக்கும் சந்தோசம்தான். அப்பாவும் இதற்கு ஆட்சேபனை தெரிவிக்கமாட்டார். அது சரி தம்பி, பொண்ணு என்ன செய்கிறாள்? அவளுடைய சாதி, குலம், கோத்திரம் இவைகளைப் பற்றித் தெரியுமா? என்று கேட்டு முடிப்பதற்குள் கதையைத் தொடங்கிய கண்ணன்,

"உங்களை மாற்றவே முடியாது! இப்பவும் பழைய பல்லவியைத் தான் பாடிக்கொண்டு நிற்கிறீங்கள்! நீங்கள் கேட்டதற்காகச் சொல்லுகிறேன். சாதி.... மனித சாதி, குலம்.... பெண்குலம், கோத்திரம்.... இராசாங்கம், தொழில் என்னைப் போன்று ஓர் எழுதுவினைஞர், பிறப்பிடம் யாழ்ப்பாணம், இருப்பிடம் கொழும்பு, இவ்வளவும் போதுமா? அல்லது இன்னும் வேணுமா அம்மா?" என்று வேகமாய்ச் சொல்லி முடித்தான்.

வாழ்க்கை அனுபவம் இல்லாது, இளமைத் துடிப்பில இவ்வாறு மகன் கதைக்கிறான் என்று மனத்திற்குள் எண்ணிக்கொண்ட தாய்,

"குலம்... பெண்குலம் என்று சொன்னாய் தம்பி, நீ ஓர் இளைஞன், பெண்குலத்தை விடுத்து ஆண்குலத்தைக் காதலிப்பாய் என்றா நான் கேள்வி கேட்டனான்? என்ன மறுமொழி தம்பி சொல்லுகிறாய்?" என்று பகிடியாகச் சிரித்துக்கொண்டே கேட்டாள். தாயின் இந்தக் கதையைக் கேட்டதும் கண்ணனுக்கு ஒரு செய்தி ஞாபகத்திற்கு வந்தது. உடனே,

"அம்மா, உங்களுக்கு ஒரு புதினம் தெரியுமே?" என்றான்.

"என்ன புதினம் தம்பி?" என்று ஆர்வத்துடன் கேட்டாள் கற்பகம்.

"அமெரிக்கா, கனடா, மற்றும் ஐரோப்பிய நாடுகளில் ஆண்களை ஆண்களும், பெண்களைப் பெண்களும் காதலிப்பார்களாம். அத்தோடு நின்றுவிடுவதில்லை கல்யாணமும் செய்து கொள்வார்களாம். அதுகும் சும்மா கல்யாணம் அல்ல பதிவுத் திருமணமாம். பாராளுமன்றத்தில் சட்டம் இயற்றி பதிவுத் திருமணத்திற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்காம். எல்லாவற்றிற்கும் மேலாக சேச்சில் மதகுரு இந்த ஜோடிகளுக்கு சமயமுறைப்படி கைப்பிடித்தும் வைப்பாராம். எப்படி அம்மா இருக்கிது கதையும் கல்யாணமும்?" என்று கண்ணன் சொல்லி முடிப்பதற்குள் கற்பகம்,

"என்ன தம்பி சொல்லுகிறாய்? இது வெறும் கதைதானா அல்லது உண்மையா? என்று ஆச்சரியத்தோடு கேட்டாள்.

"என்ன அம்மா கேட்கிறீங்க? உங்களுக்கு வெறுங்கதையை இந்த நேரத்தில் வேலையில்லாமற் போய்ச் சொல்லுவேனா? உண்மை யான உண்மை அம்மா. நான் பத்திரிகையில் வாசித்தனான்," என்று அழுத்திச் சொன்னான் கண்ணன்.

"என்ன அசிங்கீனம் இது! கேட்கவே மனதிற்கு ஒருமாதிரிக் கிடக்கிது," என்று அருவருப்போடு சொன்னாள் கற்பகம்.

"உங்களுக்கு கதைப்பதற்கு அருவருப்பாயும் கேட்பதற்கு அசிங் கீனமாயும் இருக்கின்றது. அவன்களுக்கு அது இன்ப வாழ்க்கையாய் இருக்கின்றது. உங்களுக்கும் உலகப் புதினங்கள் தெரிந்திருக்க

வேண்டும் என்பதற்காகத்தான் இதைச் சொன்னேன் அம்மா. வேறொன்றுக்குமாக இல்லை. சரி.... அதை விடுங்கோ," என்று சொல்லி முடிக்கவே, கதையைத் தொடர்ந்த கற்பகம்,

"நம்ம தமிழ் மக்கள் இப்பொழுது கனடாவில் நிறையப் போய் இருக்கிறார்கள். அவர்களும் இவர்களைப் பார்த்து இந்த ஒருபால் திருமணத்தைப் பின்பற்றி விடுவார்களோ தம்பி?" என்று ஒரு சங்கடமான கேள்வியைக் கேட்டாள். இதற்கு எப்படிப் பதில் அளிப்பதென்று திமிறிய கண்ணன்,

"தமிழ் ஆட்கள் கொப்பி அடிப்பதில் குறைந்தவர்கள் அல்ல. ஒவ்வொரு நாட்டிற்கும் ஒவ்வொரு மண்வாசனை இருக்கல்லே? ஈழத்தமிழ் வாசனையோடு போயிருக்கும் எமது மக்கள் தமது சொந்த மண்வாசனையை இழந்து கனடா மண்வாசனையில் முழுகும் போது இதுவும் நடக்கலாம், இன்னமும் நடக்கலாம். எதற்கும் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். வேறு வார்த்தையிற் சொன்னால் உங்களுடைய கேள்விக்கு காலம்தான் பதில் சொல்லவேண்டும் அம்மா," என்று நாசூக்காகச் சொல்லி நழுவிக்கொண்டான்.

தொடர்ந்து தனது விடையத்தில் கவனம் செலுத்திய கண்ணன், "அம்மா, அப்பாவிடம் எனது விடயத்தைச் சொல்லி நீங்கள்தான் அப்பாவைச் சம்மதிக்க வைக்க வேண்டும். சாதி, குலம், கோத்திரம் பற்றி அப்பா கேட்டால், நான் கூறியதுபோன்று சொல்லி அப்பாவிற்கு கோபத்தை உண்டு பண்ணாமல், நல்லமாதிரிச் சொல்லி எப்படியும் சம்மதிக்க வைத்துவிடுங்கோ. இந்த விடயத்தில் உங்களைத்தான் அம்மா நம்பியிருக்கிறேன். என்னுடைய அம்மா நல்ல அம்மா!" என்று அம்மாவிற்கு ஐஸ் வைத்துக் கதைத்தான்.

கற்பகம் இந்த விடயத்தைத் திறமையாகக் கையாண்டதினால் கண்ணனுடையதும் சுந்தரியினுடையதும் திருமணம் இரு வீட்டாரின் சம்மதத்துடன் இனிதே நிறைவேறியது.

## அங்கம் – 4

இலங்கையின் அரசியல் சூழ்நிலையும் நாட்டின் அமைதியற்ற

போக்கும் தமிழ் மக்களை வெளிநாடுகளுக்குச் செல்லத் தூண்டியது என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம். இந்தச் சூழ்நிலையில் எழுதுவினைஞராக வேலை செய்து சம்பாதித்த பணம் கொழும்புச் சீவியத்திற்கே போதுமானதாய் இருக்கவில்லை. நாட்டில் நீண்ட காலம் போரினாலும் உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சியினாலும் பணவீக்கம் உயர்ந்து செல்லவே, பொருட்களின் விலைவாசி எதிர்பாராத அளவிற்கு அதிகரித்துச் சென்றது. இதனால் எழுதுவினைஞர் போன்ற நடுத்தர பதவியில் உள்ளவர்கள் பெரும் பொருளாதாரக் கஷ்டத்தை அனுபவிக்க வேண்டி ஏற்பட்டது.

வாழ்க்கையில் எப்படியும் மேலே வரவேண்டும், வேண்டியவற்றை யும் விரும்பியவற்றையும் பெற்று அனுபவிக்க வேண்டும் என்ற எதிர்பார்க் கையைக் கொண்ட சுந்தரிக்கு இந்த எழுதுவினைஞர் பதவியும் அதன் மூலம் உழைத்த பணத்துடன் நடத்திய வாழ்க்கையும் திருப் தியை அளிக்கவில்லை. இதன் வெளிப்பாடுதான் வெளிநாட்டுப் பிரயாணத்திற்கு அவளைத் தூண்டியது. எப்படியாவது கனடாவிற்குச் சென்று சம்பாதித்து இதுவரை அனுபவிக்காத எல்லாவற்றையும் அனுபவிக்க வேண்டும் என்ற ஆசை ஒரு வெறித்தனமாய் மாறியிருந்தது என்றால் மறுப்பதற்கில்லை.

கனடாவிற்குச் செல்லுவதற்கு எடுத்த ஐந்து வருட முயற்சி இறுதியில் சுந்தரியை கனடாவிற்குக் கொண்டுவந்து சேர்த்தது. கனடா விற்கு வரும்போது அவளுக்கு ஒரு பெண்குழந்தை இருந்தது. பெண் குழந்தையையும் கண்ணனையும் இலங்கையில் விட்டுவிட்டு சுந்தரி மட்டுமே கனடாவிற்கு வந்திருந்தாள். அகதிக்கோரிக்கை விசாரணைகள் முடிந்து லான்டட் பத்திரம் கிடைப்பதற்கு ஒன்றரை ஆண்டுகள் பிடித்தன. அப்புறம் கணவனையும் பிள்ளையையும் ஸ்பொன்சர் செய்து அவர்களைக் கனடாவிற்குக் கூப்பிடுவதற்கு ஏறக்குறைய ஒரு வருடம் சென்றது. தற்பொழுது சுந்தரியும் கணவரும் மகளும் ஓர் அறை அபாட்மென்றில் வசித்துக் கொண்டிருக்கின்றனர்.

இலங்கையில் எழுதுவினைஞராக வேலைசெய்த சுந்தரிக்கு அது போன்ற ஒரு தொழில் கனடாவில் கிடைப்பது முயற்கொம்பாக இருந்தது. காரணம் இலங்கையின் தொழில் அனுபவம் கனடாவில் செல்லாக் காசாகவே இருந்தது. அத்துடன் அவளின் ஆங்கில அறிவு கனடாத்

தொழிற்சந்தையில் எழுதுவினைஞர் போன்ற தொழிலுக்குப் போதிய தாக இருக்கவில்லை. கனடாவில் அலுவலகப் பதவிகளைப் பெறுவ தற்கு ஆங்கில அறிவுடன் கம்பியூட்டர் அறிவும் அவசியம் தேவைப் பட்டது. அவற்றைப் பெறவேண்டுமாயின் பொறுமை, கால அவகாசம், விடாமுயற்சி என்பன வேண்டுமென்பதை சுந்தரி நன்கு உணர்ந்திருந் தாள். எனினும் உடனே பாடசாலைக்குச் சென்று ஆங்கில அறிவையும் கம்பியூட்டர் அறிவையும் வளர்த்துக் கொள்ளுவதற்கு அவள் முயற் சிக்கவில்லை. இதன் காரணமாக தொழிற்சாலைகளில் உடல் உழைப்பாளியாகவே வேலைசெய்து வந்தாள்.

உடல் உழைப்பில் அனுபவமும் ஆற்றலும் இல்லாத சுந்தரிக்கு தொழிற்சாலைகளில் உழைப்பது என்பது வேப்பங்காயாகக் கயர்ந்தது என்றால் வாஸ்தவம்தான். இளமைப் பருவத்தில் தோட்டவேலை செய்த அனுபவத்தை வைத்து தொழிற்சாலைகளில் ஓரளவிற்கு நின்றுபிடிக்க முடிந்தது. சுந்தரியைப் பொறுத்தமட்டில் தொழிற்சாலை களில் உடல் உழைப்பைச் செய்வதை விட, கனடாவில் வேறு வழியில் வேலை என்ற நிலையே காணப்பட்டது.

இலங்கையிற் போலன்றி இங்கு தொழிற்சாலைகளில் கடுமையாக வேலைசெய்ய வேண்டியிருந்தது. கடுமையாக கஷ்டப்பட்டு உழைத்த போதும் குறைந்த பட்ச ஊதியமே கிடைத்தது. குறைந்தபட்ச ஊதியத் திற்கு வேலை செய்து அதன்மூலம் வந்த வருமானத்தைக் கொண்டு வாழ்ந்தபொழுது கீழ்மட்ட வாழ்க்கையையே வாழமுடிந்தது. சிறு தொகைப் பணத்தைத் தானும் மிச்சம்பிடிக்க வேண்டுமாயிருந்தால் மேலதிக நேரம் வேலை செய்யவேண்டும். அல்லது சனிக்கிழமை களிலும் ஞாயிற்றுக் கிழமைகளிலும் மற்றும் விடுமுறை நாட்களிலும் வேலை செய்யவேண்டும். சிலர் பணம் சம்பாதிப்பதற்காக இரண்டு வேலை செய்வதையும் சுந்தரி அறிந்திருந்தாள். பெரும்பாலும் அது ஆண்களாகவே இருந்தனர்.

இவ்வாறு மேலதிக நேரம் வேலை செய்வது, இரண்டு வேலை செய்வது என்பதெல்லாம் அவளுக்குப் பெரிய கஷ்டமான காரியமாய்ப் பட்டது. அவளுடைய கணவன் ஓரளவிற்கு மேலதிக நேரம் வேலை செய்து சம்பாதித்தான். இருந்தபோதும் கனடாவில் வீட்டு வாடகையும்

வாழ்க்கைச் செலவும் உயர்ந்து காணப்பட்டபடியினால் இருவருடையதும் உழைப்பு கீழ்மட்ட வாழ்க்கை வாழ்வதற்குத்தான் போதியதாயிருந்ததேயொழிய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கோ அன்றி பணத்தை மிச்சம் பிடிப்பதற்கோ இவர்களால் முடியவில்லை. இருவருடையதும் உழைப்பில் பெரும்பகுதி வாடகைக்கும் குறிப்பிடத்தக்க பணம் தொலைபேசிக்கும் சென்றது.

சுந்தரி தன்னுடைய தாயாருடனும் சகோதரங்களுடனும் அடிக்கடி தொலைபேசி மூலம் கதைப்பது வழக்கம். அப்படியாகக் கதைப்பதன் மூலம் குறிப்பிடத்தக்க அளவு பணம் விரையமாகின்றது என்பதை அவள் உணர்ந்திருந்தபோதும், அந்தப் பழக்கத்தை அவளால் நிறுத்தவோ கட்டுப்படுத்தவோ முடியவில்லை. அன்புத்தொல்லை அந்தளவிற்கு அவளை இட்டுச் சென்றது எனலாம். அன்புத்தொல்லை தொலைபேசி மூலம் மட்டுமல்லாது, தாய் சகோதரங்களுக்கு பண உதவிசெய்வதிலும் அவளை ஊக்குவித்தது. எல்லாவற்றையும் கூட்டிக் கழித்துப் பார்த்தால் இருவருடைய உழைப்பு அவர்களுடைய தேவையைப் பூர்த்தி செய்வதற்குப் போதியதாயிருக்கவில்லை. நாட்கள் செல்லச் செல்ல தேவைகளின் அளவு அதிகரித்துச் சென்றதேயொழிய வருமானம் அதிகரித்துச் செல்லவில்லை.

எத்தனையோ கற்பனைகளுடன் கனடாவிற்கு வந்தவள் சுந்தரி. வாழ்க்கைக்குத் தேவையானவற்றை மட்டுமல்ல விரும்பியவற்றையும் வாங்கி அனுபவிக்கவேண்டும் என்ற மனோபாவம் உடையவள் சுந்தரி. இவ்வாறான மனோபாவம் உடைய சுந்தரிக்கு கனடாவில் இரண்டு மூன்று வேலைகள், மேலதிக நேரவேலைகள், விடுமுறை நாட்களில் வேலைகள் உயர்ந்த சம்பளத்துடன் கூடிய வேலைகள் என்று கடுமையாக உழைத்துச் சம்பாதித்து உயர்தர வாழ்க்கை வாழ்ந்தவர்களைப் பார்க்க அவளின் மனம் புழுங்கியது. எப்படியாவது தானும் அவர்களைப் போன்று வாழவேண்டும் என்று கங்கணம் கட்டினாள்.

கனடாவில் அவளுடைய ஐந்து வருட வாழ்க்கையில் கனடா வாழ்க்கை முறை, சட்ட திட்டங்கள், குறுக்கு வழியில் பணம் சம்பாதிப்பது போன்ற பல விடயங்களை அவள் நன்கு அறிந்து கொண்டாள். கடன் வாங்கிவிட்டுத் திருப்பிக் கொடுக்காமல் விடுவது, வட்டிக்குப் பணம் வாங்கிவிட்டு வட்டியையும் முதலையும் அடைக்காமல் விடுவது,

சீட்டுப் பிடிப்பதுப் பணத்தை அமாடிசெய்வது, சீட்டை எடுத்துவிட்டு பணம் கட்டாமல் விடுவது, கடன் அட்டைகளில் பணத்தை எடுத்துவிட்டு கட்டாமல் விடுவது, வியாபாரத்தை நட்டம் காட்டி வங்குரோத்து அடிப்பது, வங்கியிற்பணம் எடுத்துவிட்டு வங்குரோத்து அடிப்பது போன்ற பல வழிமுறைகளைப் பற்றி சுந்தரி நன்கு தெரிந்து வைத்திருந்தாள்.

மாதாந்த வரவு செலவில் துண்டு விழவே ஆரம்பத்தில் நண்பர்களிடமும் உறவினர்களிடமும் சிறிய அளவில் கடன் வாங்கத் தொடங்கினாள். வேறு வார்த்தையில் சொன்னால் கனடா மண்வாசனையைச் சிறிது சிறிதாக நுகரத் தொடங்கினாள். ஆரம்பத்தில் வாழ்க்கைச் செலவிற்கும் தொலைபேசி அழைப்பிற்குமாகத் துண்டு விழும் தொகையை நிரப்புவதற்கு கடன் வாங்கிய சுந்தரிக்கு, நாளடைவில் மற்றையவர்களைப் போன்று கார் வாங்கவேண்டும் நகை நட்டுகள் வாங்கவேண்டும், வீடு வாங்கவேண்டும், தாய்க்கும் சகோதரங்களுக்கும் பண உதவி செய்யவேண்டும் என்று தேவைகள் அதிகரித்துச் சென்றன. சுந்தரியைப் பொறுத்தமட்டில் கட்டாயம் பூர்த்திசெய்யப்பட வேண்டிய தேவைகளாக இவை அனைத்தும் இருந்தன என்றால் மறுப்பதற்கில்லை.

இத்தேவைகளை எப்படிப் பூர்த்தி செய்யலாம் என்று ஒருநாள் சீரியஸாக சிந்தித்துக் கொண்டிருந்த சுந்தரி கணவனை அழைத்து,

“என்னப்பா! இப்படி நாங்கள் ஆறு டொலருக்கும் ஏழு டொலருக்கும் வேலை செய்து கொண்டிருந்தால், உழைப்பு சாப்பாட்டிற்கும் வீட்டு வாடகைக்குந்தான் போதும். சாப்பிடுவதற்கும் அபாட்மென்றில் இருப்பதற்குமா நாமள் கனடாவிற்கு வந்தனாங்கள்? இலங்கையிலும் இரண்டு பேரும் வேலை செய்து சாப்பிட்டுக்கொண்டு வாடகைக்கு இருந்தனாமள் தானே! கனடாவிற்கு வந்ததில் என்ன வித்தியாசத்தைக் கண்டிருக்கிறம்? வருடம் ஐந்து கடந்து விட்டது,” என்று கூறினாள். இவற்றையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த கண்ணன்,

“என்னை என்னப்பா செய்யச் சொல்லிச் சொல்லுகிறாய்! படித்திருந்தால் அல்லது ஒரு தொழிலைப் பழகியிருந்தால் நல்ல சம்பளத்தில வேலை செய்யலாம். அல்லது சொந்தமாய் தொழில் செய்து

சம்பாதிக்கலாம். நம்மளுடைய படிப்பும் அனுபவமும் கனடாவில் செல்லுபடியாகாது. ஆறு டொலருக்கும் ஏழு டொலருக்கும் வேலை செய்யாமல் வேறு என்ன செய்யலாம்? இப்ப செய்யிற தொழிலாற் தானே சீவியம் போய்க்கொண்டிருக்கு. இதையும் விட்டால் நம்ம நிலமை அதோகெதியல்லோ!" என்று சொல்லி முடிப்பதற்குள் சுந்தரி,

"யாரப்பா இப்ப வேலையைவிடச் சொன்னது? நான் என்ன சொல்லவாறேன் என்றால்.... வேலையைச் செய்துகொண்டு பணம் சம்பாதிப்பதற்கான வேறு வழிதுறைகளையும் பார்க்கவேண்டும் என்று சொல்லுகிறேன் அப்பா. வேறு வார்த்தையிற் சொன்னால், இந்தநாட்டு மண்வாசனையை நுகரத் தொடங்கவேண்டும் என்று சொல்லுகிறேன்," என்று கூறவே, அவள் என்னத்தைக் கருதுகிறாள் என்பதைப் புரிந்துகொண்டவனாய்,

"ஓ!.. சிங்கிள் மதர் அடிக்கலாமென்று சொல்கிறாய், அப்படித் தானே?" என்று கண்ணன் கேட்கவே, சுந்தரி பொறுமையை இழந்தவள் போன்று,

"உங்களுக்கப்பா இப்படியான சில்லறை எண்ணங்கள் தோன்றுமே யொழியப் பெரிய எண்ணங்கள் ஒன்றும் தோன்றமாட்டாது. சிங்கிள் மதர் அடிச்சு ஐந்நூறு அல்லது அறுநூறு டொலர் கூடுதலாய்ப் பெற்று எத்தனை வருடத்திலப்பா நாம முன்னேற முடியும்? ஒரு திட்டத்தைப் போட்டால் அதன்மூலம் ஒன்றைச் சாதிக்கவேண்டும் அப்பா," இதைக் கேட்ட கண்ணன்,

"சரி... என்னுடைய சிந்தனைகளெல்லாம் சில்லறையானது. அதை நான் ஒத்துக்கொள்ளுகிறேன். அப்படியானால் நீ வைத்திருக்கின்ற பெரிய திட்டத்தைச் சொல்லுமேன், எப்படியிருக்கென்று பார்ப்பம்!" எதையாவது சொல்லித் தொலை என்ற தொனியில் கூறினான். இதைக்கேட்ட சுந்தரி,

"நமக்கு தற்போது நமது சமூகத்தின் மத்தியில் நல்ல பெயருண்டு, அதாவது நேர்மையானவர்கள், நாணயமானவர்கள், நல்லவர்கள் என்ற பெயரும் மதிப்பும் மரியாதையும் உண்டு. இதை மூலதனமாய் வைத்து நாங்கள் ஒரு சீட்டுத் தொடங்கலாம். மாதம் ஐந்நூறு டொலர் சீட்டு.

எப்படியும் ஓர் இருபது பேரைச் சேர்க்க வேண்டும். அப்படியானால், பத்தாயிரம் டொலர் சேரும். சீட்டுப் பிடிக்கின்ற நாம் முதல் ஐந்நூறு ரூபாய் போடத் தேவையில்லை. ஒரே மாதத்தில் ஒன்பதாயிரத்து ஐந்நூறு டொலர் கைக்கு வந்துவிடும். எப்படியிருக்கின்றது எனது திட்டம்?" என்று அவள் கேட்டு முடிப்பதற்குள் கதையைத் தொடர்ந்த கண்ணன்,

"திட்டம் கேட்பதற்குப் பிரமாதமாய்த்தான் இருக்கின்றது. ஆனால் இருபது பேரைச் சேர்ப்பதும் இருபது மாதத்திற்கு அவர்களிடமிருந்து பணத்தைப் பெற்று இருபதுபேருக்கு அவரவர்க்குரிய பணத்தைக் கொடுப்பதும் இலகுவான காரியமில்லை சுந்தரி. இது மிகவும் பொறுப்பு வாய்ந்த விடயம், நாணயமாய் நடந்து கொள்ளவேண்டும். அப்பொழுது தான் தற்போது இருக்கும் மதிப்பும் மரியாதையும் தொடர்ந்து இருக்கும்," என்று கூறவே, இதைக்கேட்ட சுந்தரி,

'இந்த மனுசனுக்குப் புளைக்கத் தெரியாது,' என்று தனது மனத்திற்குள் எண்ணிக்கொண்டு,

"சரி..., அப்பா, நான் அந்த விடயத்தைப் பார்த்துக் கொள்ளுகிறேன். நீங்கள் எனது முயற்சியில் குறுக்க வராமலிருந்தாற் போதும்," என்று சுறுக்கெனச் சொல்விட்டுச் சென்றாள்.

அவள் திட்டமிட்டபடியே ஒரு மாதத்தில் இருபது பேரைச் சேர்த்து ஐந்நூறு டொலர் சீட்டை ஆரம்பித்துவிட்டாள். இதனால் ஒன்பதினாயிரத்து ஐந்நூறு டொலர் அவளுடைய கைக்கு வந்து விட்டது. அடுத்து வந்த சில மாதங்களில் தானும் ஐந்நூறு போட்டு பத்தாயிரம் டொலரையும் வேறு சீட்டுகளில் முதலீடு செய்தாள். அதாவது ஆயிரம் டொலர் சீட்டுப் பிடிப்பவர்களுடன் சேர்ந்து பத்தாயிரம் டொலரையும் வேறுவேறு சீட்டுகளில் முதலீடு செய்தாள். எல்லாமே கூறல் சீட்டுக்கள். எல்லாச் சீட்டுகளிலும் கழிந்துபோன பணத்தைப் பற்றிக் கவலைப்படாமல் இரண்டாவது சீட்டுப் பணத்தைப் பெற்றுக் கொண்டாள். மொத்தமாக இருபதினாயிரம் பெறுமதியான ஐந்துசீட்டுகளில் முதலீடு செய்ததின் மூலம், மூன்று மாதத்தில் எண்பதினாயிரம் டொலர்கள் அவளுடைய கைக்கு வந்து சேர்ந்தன.

இப்பொழுதெல்லாம் சுந்தரியின் செயற்பாடுகள் கண்ணனுக்கு பெரும் ஆச்சரியத்தையும் அதேநேரத்தில் அச்சத்தையும் கொடுத்தன. இருந்தபோதும் அவளுடைய திறமையை அவனால் பாராட்டாமலும் இருக்கமுடியவில்லை. அவளுடைய வங்கிக் கணக்கில் பணத்தை நன்றாக உருளவிட்டிருந்தாள். இவற்றையெல்லாம் அவதானித்த கண்ணன்,

"என்ன சுந்தரி! உன்னுடைய நடவடிக்கைகளைப் பார்க்கும்போது ஒருபுறம் சந்தோசமாயிருக்கின்றது. மறுபுறம் நாங்கள் பெரிய ஆபத்தை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறோம் போல் தோணுகின்றது. நாங்கள் இருவரும் உழைத்து ஒரு டொலரைக்கூடச் சேமிக்கமுடியவில்லை. நம்மமுடைய உழைப்பும் செலவும் சரியாய்ப் போய்க்கொண்டிருந்தன. இந்த நிலமையிலிருந்த நம்மிடம் மூன்று மாதத்தில் எண்பதினாயிரம் டொலர் கைக்கு வந்துள்ளதைப் பார்க்கும்போது சந்தோஷமாய் இருக் கின்றது. ஆனால் இந்த ஆறு சீட்டுகளுக்குரிய பணத்தை ஒழுங்காகக் கட்டி முடிப்பதற்கு ஒரு லட்சத்து இருபதினாயிரம் டொலர் தேவைப்ப டும். கழிவு போக ஒரு லட்சம் டொலராவது தேவைப்படும் சுந்தரி. அப்படிப் பார்த்தால் தற்போது இருபதினாயிரம் டொலருக்கு நாமள் கடனாளியாகியுள்ளோம். இது உனக்குப் புரியவில்லையா சுந்தரி?" என்று விளங்கப் படுத்திக்கேட்டான்.

"நீங்கள் கணிதத்தில் திறமைசாலிதான் என்பது எனக்கு விளங்கு கின்றது. இந்தக் கணிதப் படிப்பெல்லாம் கனடாவிற்குத் தேவைப்படாது. ஒன்றைப் பெறவேண்டுமாயிருந்தால் இன்னொன்றை இழக்கத்தான் வேண்டும். கனடாவில் பணம் சம்பாதிக்க வேண்டுமாயிருந்தால், மக்கள் நம்மீது வைத்திருக்கின்ற நாணயம், நம்பிக்கையை இழந்துதான் ஆக வேண்டும். நாணயம் இருக்கும் வரைதான் கனடாவில் எம்மால் பணம் சம்பாதிக்க முடியும். ஆனபடியினால் தற்போது நமக்கிருக்கின்ற நற் பெயரைப் பயன்படுத்திச் சம்பாதிக்கக்கூடிய அளவிற்குச் சம்பாதித்து விடவேண்டும்," என்று சொல்லி முடிப்பதற்குள் கதையைத் தொடர்ந்த கண்ணன்,

"என்னப்பா சொல்லுகிறாய்? மதிப்பு, மரியாதை, நாணயத்தை இழந்து பணம் சம்பாதிப்பதிலும் பார்க்க நம்மமுடைய வருமானத்துடன்

நாணயத்தோடு வாழுவதுதானே பெருமையான வாழ்க்கை!" என்று கூறவே, பதிலடி கொடுப்பது போன்று,

"மதிப்பு, மரியாதை, நாணயம் வேணுமாயிருந்தால் சாப்பிட்டதும் அபாட்மென்டில் வாழ்ந்ததும்தான் மிச்சம் என்று இருக்கவேண்டியது தான். அம்மா சகோதரங்களுக்குக் கூட உதவிசெய்ய முடியாது போகும் என்பது மட்டுமல்ல, அவர்களுடன் சந்தோசமாய் ரெலிபோன் கூடக் கதைக்க முடியாத ஒரு நிலைமை ஏற்படும். இப்படியான ஒரு கீழ்மட்ட வாழ்க்கை வாழுவதற்காகவா நாமள் கனடாவிற்கு வந்த னாங்கள்?

இன்னும் மூன்று நான்கு வருடத்தில் பிள்ளையும் பெரியபிள்ளை ஆகிவிடும். சாமத்தியச் சடங்கைச் சிறப்பாய் மற்றைய சனங்கள் போன்று செய்யவேண்டாமே? மற்றைய ஆட்களைவிடப் பெரிதாய்ச் செய்யாவிட்டாலும் மற்றைய ஆட்களைப் போலாவது செய்ய வேண்டாமே? சனங்கள் ஈஸ்ட்ரவுண், கிறிஸ்ரல் பவுண்டின் போன்ற பாங்குவேற் ஹால்களில் சாமத்தியச் சடங்குகள் கல்யாண வீடுகளைச் சிறப்பாக செய்யிதுகள். அவைகளைப் பார்க்கும் நம்மளுடைய பிள்ளைக்கும் அப்படியான ஓர் ஆசை இருக்கத்தானே செய்யும்!," என்று சொல்லி முடிப்பதற்குள் குறுக்கிட்ட கண்ணன்,

"பிள்ளைக்கு ஆசையிருக்கோ! இல்லையோ! உமக்கு மற்றையவர் களைப் போன்று ஆடம்பரமாய்ச் செய்யவேண்டுமென்ற ஆசையிருக் கின்றது என்பது மட்டும் எனக்கு நன்றாகப் புரிகின்றது. நீர் சொல்லுகின்ற ஹோலில் கொண்டாட்டம் செய்யவேண்டுமாயிருந்தால் குறைந்தது இருபதினாயிரம் டொலர் வேண்டும், அது தெரியுமோ உமக்கு?" என்ற கேள்வியைப் போடவே, அதற்குப் பதிலளித்த சுந்தரி,

"இது தெரியாமலா அப்பா! கனடாவில் ஐந்தாறு வருடமாய் இருக்கிறேன்? எல்லாவற்றையும் தெரிந்துகொண்ட படியினாற்தான் கனடாவில் பணம் சம்பாதிக்கின்ற வழிமுறைகளைப் பற்றி சீரியஸாக சிந்தித்துக் கொண்டிருப்பது மட்டுமல்ல, எனது திட்டங்களைச் செயற்படுத்தவும் தொடங்கியிருக்கிறேன். நீங்கள் செய்ய வேண்டியது என்னவென்றால், நான் போடுகின்ற திட்டங்களைச் செயற்படுத்தும்

பொழுது, என்னுடன் நீங்கள் ஒத்துழைக்க வேண்டும். அது சரியில்லை, இது சரியில்லை, அப்படிச் செய்யாதே, இப்படிச் செய்யாதே என்று குறுக்க குறுக்க கதைச்சுக் கொண்டிருக்கப்படாது," என்று அழுத்திக் கூறினாள்.

இதைக் கேட்ட கண்ணன்,

"ஏற்கனவே ஆறு சீட்டுகளில் காலை வைத்து ஒரு லட்சம் டொலர் கடனாளியாக இருக்கிறம். இதற்குமேல் தேவையற்ற வேலை பார்த்து எம்மைக் கடனில் முழ்கடித்துவிடாதே. அப்புறம் சமுதாயத்தில தலை காட்ட முடியாத ஒரு பரிதாப நிலை ஏற்படும். எதையும் ஒன்றுக்குப் பல தடவை யோசித்துச் செய்யவேண்டும்." என்று கண்டிப் பான தொனியில் சொன்னான். இதைக் கேட்ட சுந்தரி கணவனின் கதையில் வெறுப்புக் கொண்டவளாய்,

"இப்படியே குறுக்க குறுக்க கதைத்துக் கொண்டிருப்பீர்களானால், நான் செய்யப் போகும் காரியத்தைப் பற்றி ஒன்றுக்குப் பல தடவை யோசிக்கமாட்டன். அதற்குப் பதிலாக உங்களைச் செப்பறேசன் அடிக்கிறதா? இல்லையா? என்பதைப் பற்றித்தான், ஒன்றுக்குப் பலதடவை யோசிக்காமல், ஒரே தடவையில் முடிவெடுக்க வேண்டி வரும்," என்று தனது அடுத்த செயற்திட்டத்தை அவிட்டுவிட்டாள். இதைக் கேட்டு அதிர்ச்சியடைந்த கண்ணன்,

"என்ன வார்த்தையப்பா சொல்லுகிறாய்! நீ சொல்லிறதோடு மட்டும் நின்றுவிடாமல் செய்தாலும் செய்து போடுவாய். அப்படியான ஓர் ஆபத்தான முடிவிற்கு வந்துவிடாத சுந்தரி. உன்மீதும் பிள்ளைமீதும் நான் உயிரையே வைத்திருக்கிறேன். உன்னையும் பிள்ளையையும் பிரிந்து என்னால் ஒரு நிமிடம்கூட வாழமுடியாது. அப்படிப்பட்ட என்னைப் பார்த்து செப்பறேசன் அடிக்கிறது என்று சொல்லுகிறாயே சுந்தரி! இது உனக்கே நியாயமாயிருக்கா?" என்று பயந்த தொனியில் கூறினான். அவனுடைய மனோநிலையைப் புரிந்துகொண்ட சுந்தரி,

"உங்களைப் பிரிந்து வாழுவதில் எனக்குச் சந்தோசமிருக்குமா? இல்லை! ஆனால் பணம் சம்பாதிக்க வேண்டுமானால் சில காரியங் களைச் செய்துதான் ஆகவேண்டும். எனக்காக மட்டுமா பணத்தை

உழைக்க ஆசைப்படுகிறேன்? எமக்கும் எம்முடைய பிள்ளைக்குந் தானே! சில காரியங்களைச் செய்யும்போது சிலவேளைகளில் குறுக்கு மறுக்காய்ப் போகவேண்டிவரும். அதையெல்லாம் பெரிதுபடுத்தாமல் என்னோடு ஒத்துழைக்கவேண்டும் அப்பா. அப்பதான் நாமள் பணம் சம்பாதித்து முன்னேற முடியும்," என்றாள்.

இதைக்கேட்ட கண்ணன்,

"பணம் சம்பாதிக்கிறது என்று கூற வேண்டாம் சுந்தரி, பணம் சேர்க்கிறது என்று சொல்லவேண்டும். சம்பாதிப்பது என்றால் உழைத்துச் சம்பாதிப்பதைத்தான் குறிக்கும். பணம் சேர்ப்பது என்பது எந்தவழியிலா வது பணத்தைச் சேர்ப்பதைக் குறிக்கும். நீ இப்ப பணத்தைச் சேர்க்க முயற்சி செய்கிறாயே ஒழிய பணத்தைச் சம்பாதிக்க முயற்சி செய்ய வில்லை. சரி, எது எப்படியிருந்தாலும் உன்னுடைய முயற்சிக்கு நான் குறுக்க நிற்கமாட்டேன்,. போதுமா?" என்று கேட்கவே,

"இப்பதான் அப்பா, நீங்கள் கனடா மண் வாசனையைச் சுவாசிக்க ஆரம்பித்திருக்கிறீர்கள். இனி.... போகப் போக எல்லாம் சரியாகிவிடும்.

இதுவரை கார் இல்லாமல் பெரிய சிரமத்தின் மத்தியில் வாழ்க் கையை ஓட்டிவிட்டோம். இப்பொழுது கைக்குப் பணம் வந்துவிட்டது. மற்றையவர்கள் மதிக்கக்கூடிய மாதிரிக்கு சிக்ஸ் சிலிண்டர் ரொயாட்டா கம்றி ஒன்று வாங்குவம். டவுண் பேய்மென்ற் கொஞ்சம் போட்டு கடனுக்கு வாங்கினால் மாதம்மாதம் வட்டியும் முதலுமாய் அதிக பணம் கட்டவேண்டும். நம்மளுடைய வருமானத்தில் மிச்சம் பிடித்து அந்தப் பணத்தைக் கட்ட முடியாது. அத்தோடு வட்டி கட்டுவது முட்டாள்தனம். ஆனபடியினால் முழுப்பணத்தையும் கொடுத்து காரை வாங்குவம். கடனுக்கு வாங்கிப்போட்டு மாதா மாதம் பணம் கட்டத்தவறினால் கொம்பனி காரைக் கொண்டு போய்விடும். சீட்டுப் பணத்தில் காரை வாங்கினால், சீட்டுக் கட்டாமல் விட்டாலும் சீட்டுக்காரர் காரை கொண்டுபோக முடியாது. எப்படி என்னுடைய திட்டம்?" என்று பெருமையோடு கேட்கவே, அதைக் கேட்ட கண்ணன்,

"திட்டம் நல்லாய்த்தானிருக்குது; ஆனால்... எப்ப கப்பல் கடலில் மூழ்கப்போகின்றதோ...! ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்," என்று

கூறிமுடிப்பதற்குள், கதையைத் தொடர்ந்த சுந்தரி,

"சும்மா அறம் பாடிக்கொண்டு இருக்காதீங்கோ அப்பா! இதெல்லாம் கனடாவில் சாதாரண விடயம். இவற்றைப் பெரிதுபடுத்தி மனதைக் குழப்பினால் சந்தோசம் கெட்டுப் போகும். நான் எல்லாவற்றையும் பார்த்துக்கொள்ளுகிறேன். நீங்கள் சும்மாயிருங்கோ!" என்று சற்று அதட்டிக் கூறினாள்.

அடுத்த கிழமை பிராண்ட் நியூ ரொயாட்டா கம்றி வந்திறங்கியது. அம்மாவிற்கும் பத்தாயிரம் டொலர் அனுப்பப்பட்டது. சுந்தரியைப் பொறுத்தமட்டில் பெரிய சந்தோசம். சமுதாயத்தில் தான் உயர்ந்து செல்லுகிறேன். என்ற பெருமை அவளுடைய மனதிற் குடிகொள்ள ஆரம்பித்துவிட்டது.

## அங்கம் - 5

சுந்தரியின் அடுத்த திட்டம் வீடு வாங்குவது. வீடு வாங்குவதைவிட வாங்கும் வீட்டை தொடர்ந்து காப்பாற்றிக் கொள்ளுவதில் மிகவும் அக்கறையாக இருந்தாள் சுந்தரி. வாங்கப்போகும் வீட்டைத் தொடர்ந்து காப்பாற்ற வேண்டுமானால், தற்போது இருக்கும் அபாட்மென்றிற்குக் கொடுக்கும் வாடகைப் பணம் அளவு மாதாந்தக் கட்டுப்பணம் இருக்க வேண்டும். அதற்கேற்றபடி முற்பணம் போடவேண்டும் என்பதை துல்லியமாய்க் கணக்கிட்டு, அந்த அளவு பணத்தைச் சேர்ப்பதில் சுந்தரி மும்மரமாய் ஈடுபட்டாள்.

இந்தத் தொகையைச் சேர்ப்பதற்கு கடன் பெறுவதுதான் பொருத்தமான வழியாகப் பட்டது. கைமாற்றாகக் கடன் கேட்டால் பணம் பெறுவது கஷ்டமான காரியம் என்பதை உணர்ந்திருந்த சுந்தரி, வட்டிக்குப் பணம் கேட்டால் இலகுவில் பணத்தைச் சேர்க்கமுடியும் என்ற உண்மையை அறிந்திருந்தாள். வீட்டு அடமானத்திற்குப் பணம் கட்டத்த வறினால் வீட்டை வங்கி எடுத்துவிடும், ஆனால் வட்டிக்கு பணம் வாங்கியவர்களுக்குப் பணம் கொடுக்கத் தவறினால் வீட்டை அவர்களால் எடுக்க முடியாது என்ற உண்மையையும் தெரிந்து வைத்திருந்த சுந்தரி, வட்டி தருவதாகச் சொல்லிப் பணத்தைப் பெற்று வீடுவாங்க வேண்டும் என்ற திட்டத்தை மனதில் நிறுத்திக்கொண்டாள்.

வேண்டிய அளவு பணத்தைப் பெறும்வரையும் இன்னுமொரு உபாயத்தையும் பின்பற்றினாள். அதாவது தனக்குப் பணக்கஷ்டம் இருப்பது போன்றோ அல்லது தான் கடன்பட்டுக் காரியங்களைச் செய்வதுபோன்றோ சமூகத்தில் தன்னைக் காட்டிக்கொள்ளவில்லை. பதிலாகத் தன்னை ஒரு நேர்மையான பேர்வழியாக இனம் காட்டிக் கொண்டாள். ஒருவரிடம் வட்டிக்குப் பணம் பெற்றபொழுது அதை வேறு யாருக்கும் தெரியாமல் பரம இரகசியமாய்ப் பேணிக்கொண்டாள். இந்த உபாயத்தின் மூலம் இரண்டு இலட்சம் டொலர்களை மிகவும் இலகுவாக சிலமாதங்களில் அவளால் பெறமுடிந்தது.

ஒரு லட்சம் டொலர் டவுண்பேய்மென்ட் போட்டு வீடு ஒன்று வாங்கப்பட்டது. மிகுதிப்பணம் தளபாடங்கள் வாங்குவதற்கும் அம்மா சகோதரங்களுக்கு அனுப்புவதற்கும் பயன்படுத்தப்பட்டது. இவற்றை யெல்லாம் பார்த்த கண்ணனுக்குத் தலை சுத்தியது. அவள் செய்வது தப்பு என்று எடுத்துரைத்தால் சிலவேளை விபரீதமான செயலில் இறங்குவாள் என்ற பயத்தில் கண்ணன் எதையுமே சொல்லவில்லை. ஆனால், பெரிய ஓர் ஆபத்தை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறோம் என்ற உண்மை மட்டும் அவனுக்குப் புரிந்தது.

சுந்தரியைப் பொறுத்தமட்டில் தன்னுடைய இலட்சியத்தை நோக்கி தான் முன்னேறிக் கொண்டிருப்பதாக எண்ணினாள். வசதியான வீடு, தளபாடங்கள், கார் என்பன வந்து சேர்ந்ததையிட்டு சந்தோசமும் பெருமையும் அடைந்தாளேயொழிய, கடன் பணத்தையோ, சீட்டுக்க ளையோ எப்படிச் செலுத்திமுடிப்பது என்பதைப்பற்றி அவள் சிறிதுகூடச் சிந்திக்கவில்லை. இப்பொழுது சமூகத்தில் தானும் மற்றையவர்களைப் போன்று வசதியாக வாழுகிறேன் என்ற உணர்வுமட்டும் அவளிடமிருந்த தேயொழிய, கடனைப் பற்றிய கவலை சிறிதுகூட இருக்கவில்லை. இதனால் அவள் சந்தோசமாயும் பெருமையுடனும் வாழ்ந்து வந்தாள் என்றால் மிகையாகாது.

வீடு வாங்கிய பிற்பாடு மிகுதியாக இருந்த பணத்தைக் கொண்டு மூன்று மாதங்களுக்கு சீட்டுப்பணமும் கடன்களுக்கான வட்டியும் செலுத்தப்பட்டன. அத்துடன் எல்லாமே ஒரேயடியாய் நிறுத்தப்பட்டன. தொடர்ந்து வந்த மாதங்களில் கடன் கொடுத்தவர்களும் சீட்டுப் பிடித்தவர்களும் சுந்தரியின் வீட்டை நோக்கிப் படையெடுக்கத் தொடங்

கினர். அப்பொழுதுதான் சுந்தரி இவ்வளவு பேரிடம் பணம் கடனாக வாங்கியிருந்த விடயம் எல்லோருக்கும் தெரியவந்தது. இவர்களில் குகன் முக்கியமானவர். இவர் முப்பதினாயிரம் டொலரை சுந்தரிக்கு வட்டிக்குக் கொடுத்திருந்தார். வட்டிப்பணம் வருவது நிறுத்தப்பட்டதைத் தொடர்ந்து சுந்தரியின் வீட்டுக்குச் சென்ற குகன்,

"வட்டிப்பணம் தராதுவிட்டால் நான் தந்த பணம் முப்பதினாயிரத் தையும் உடனடியாகத் தரவேண்டும். இவ்வளவு பேரிடம் பணம் வாங்கியிருக்கிறாய் என்ற உண்மை இப்பொழுதுதான் தெரிகின்றது. நீங்கள் இவ்வளவு பேரிடம் பணம் வாங்கியிருக்கிறீர்கள் என்ற உண்மை ஏற்கனவே தெரிந்திருந்தால் நான் உங்களுக்குப் பணம் தந்திருக்க மாட்டன். நான் ஏமாந்துவிட்டேன் போல் தோன்றுகின்றது. உங்களுடைய தந்திரம் இப்பொழுதுதான் வெளிப்பட்டுள்ளது.

உங்களுக்குப் பணம் கொடுத்தவர்களுடனும் சீட்டுப் பிடித்தவர்களு டனும் கதைத்ததிலிருந்து நீங்கள் மூன்று லட்சம் டொலருக்குக் கடனாளியாக இருக்கின்றீர்கள் என்ற உண்மை தெரியவந்துள்ளது. இந்தப்பணத்தை எப்படித் திருப்பிக் கொடுக்கப் போகின்றீர்கள்? உங்களு டைய வருமானம் உங்களுடைய சீவியத்திற்கு மட்டும்தான் போதும் என்ற உண்மையும் இப்பொழுதுதான் தெரிகின்றது. இப்படிப்பட்ட நிலைமையில் கடன் பணத்தை எப்படிக் கொடுத்து முடிக்கப் போகின் றீர்கள்? காரும் வீடும் தளபாடங்களும் வாங்கியவுடன் பெரிய ஆளாக ஆகிவிடலாம் என்று நினைக்கிறீர்கள். உங்களுடைய இந்தப் பெருமையை எப்படிக் காப்பாற்றப் போகின்றீர்கள்?

நீங்கள் என்ன செய்வீர்களோ! ஏது செய்வீர்களோ! எனக்குத் தெரியாது. அதைப் பற்றி எனக்கு கவலையுமில்லை. என்னுடைய பணம் முப்பதினாயிரம் டொலரையும் உடனே தரவேண்டும். இல்லை யேல் பெரும் பிரச்சனை வரும்," என்று மிகவும் சூடாகக் கதைத்து முடித்தான்.

இவற்றையெல்லாம் பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்த சுந்தரி சுறுக்கென்று எழுந்து சினிமாப் பாணியில்,

"என்னவரும் என்று சொன்னீர்கள்? பெரும் பிரச்சனை! என்ன,

மிரட்டுகிறீர்களா? சுந்தரியிடம் இதுவெல்லாம் எடுபடாது. நான் உங்களிடம் பணம் வாங்கியது உண்மைதான். தேவைப்பட்டால் உங்களிடம் நான் பணம் வாங்கவில்லை என்றும் சொல்லலாம். நீங்கள் எனக்குப் பணம் தந்ததிற்கு எந்த அத்தாட்சியும் இல்லை. என்னுடைய மனச்சாட்சியின்படி நான் ஒத்துக்கொண்டால் சரி. நான் ஒத்துக் கொள்ளாவிட்டால் உங்களால் ஒன்றும் செய்யமுடியாது. கதைக்கும்போது இந்த அம்சத்தையும் மனதில் வைத்துக்கொண்டு கதைக்கவேண்டும். என்னை மிரட்டும் பாணியில் கதைத்தால் விபரீதமான விளைவுகள் ஏற்படும், ஜாக்கிரதை!" என்று எச்சரித்து முடிக்கவே, இவற்றைக் கேட்டு ஆத்திரமும் அதிர்ச்சியும் கொண்ட குகன் பொறுமையை இழந்து,

"அடி பாவி! என்ன மாதிரிக் கதைக்கிறாய்! உனக்கு மனச்சாட்சி உண்டா? உனக்கு மனச்சாட்சி இருந்திருந்தால், இவ்வளவு தொகைப் பணத்தை இவ்வளவு பேரிடமிருந்து வாங்கியிருக்கமாட்டாய்! மனிதன் மனிதனாக வாழ வேண்டுமாயிருந்தால் மானம், ரோசம், சூடு, சுரணை இருக்கவேண்டும். அல்லது இறைவனுக்குப் பயந்து நடக்கவேண்டும். இவையெல்லாம் உங்களிடம் இருப்பதாய்த் தெரியவில்லை. ஏதோ எங்களையும் எங்களுடைய பணத்தையும் ஆண்டவன்தான் காப்பாற்ற வேண்டும்," என்று தனது இயலாமையை வெளிப்படுத்தும் தொனியில் கதைத்து முடிக்கவே, இதைக் கேட்டு மேலும் எரிச்சலடைந்த சுந்தரி,

"குகன், நீ பொறுமையாகவும் மரியாதையாயும் பேசும்வரைதான் நான் உங்களிடம் பணம் வாங்கிய உண்மையை ஒத்துக்கொள்ளுவேன். என்னுடைய கௌரவத்திற்கு ஊறு விளைவிக்கும் முறையில் பேசினால் அல்லது நடந்து கொண்டால் என்னுடைய மனச்சாட்சியைக் கொன்று விட்டு உங்களிடமிருந்து நான் பணம் வாங்கவில்லை என்று சொல்ல வேண்டி ஏற்படும். அந்தளவிற்கு என்னைத் தள்ளவேண்டாம் என்று உங்களுக்கு ஆலோசனை கூறுகிறேன்," என்று சற்று கண்டிப்பான குரலில் கூறினாள். இதைக்கேட்ட குகன்,

"சரி... என்னிடமிருந்து பணம் பெற்றதாய் ஒத்துக்கொள்ளுகிறாய். அப்படியானால், எப்பொழுது என்னுடைய பணத்தைத் திருப்பித் தரப்போகின்றாய்?" என்று கேட்கவே, அதற்குப் பதில் அளித்த சுந்தரி,

"இப்பொழுது என்னிடம் பணம் இல்லை. எங்களுடைய உழைப்பி லிருந்து சிறிதுசிறிதாக சேமித்துத்தான் உங்களுடைய பணத்தைத் திருப்பித் தரவேண்டும். அதுவரையும் பொறுமையாக இருக்க வேண்டும். இடையில வந்து எனக்குத் தொந்தரவு கொடுக்கப்படாது," என்று கச்சிதமாய்க் கூறினாள். இதைக் கேட்ட குகன் மேலும் பொறுமையை இழந்து,

"நீங்கள் சிறிதுசிறிதாக சேமித்து என்னுடைய பணத்தைத் தருவதாயிருந்தால் முப்பதினாயிரத்தையும் தந்து முடிப்பதற்கு முப்பது வருடத் திற்கு மேல் பிடிக்கும். முப்பது வருடம் காத்திருந்து என்னுடைய பணத்தை நான் பெறவேண்டுமாயிருந்தால், நான் உங்களை மேல் உலகத்திற்தான் சந்திக்கவேண்டும். இது நடக்கக்கூடிய காரியமா?

இந்த நாட்டில், அதாவது கனடாவில், நீங்கள் பணத்தைத் திருப்பித் தராவிட்டாலும் உங்களை ஒன்றும் செய்யமுடியாது என்ற மனத் துணிவுடன்தான் இப்படிப் பேசுகின்றீர்கள் என்ற உண்மை எனக்குப் புரிகின்றது. நம்ம ஊராயிருந்தால் இரண்டில் ஒன்று பார்த்திருப்பேன். இது கனடா! எதுவுமே செய்யமுடியாது. கனடா மண்வாசனையை நன்றாகப் புரிந்துகொண்டு செயற்பட்டிருக்கிறாய். அந்தவகையில் நீ ஒரு புத்திசாலி. நாங்கள் ஏமாளிகள். ஏமாளிகள் இருக்கும் வரையும் ஏமாற்றுபவர்களும் இருக்கத்தான் செய்வார்கள் என்பதன் அர்த்தம் இப்பொழுதுதான் புரிகின்றது.

இப்படித்தான் வாழ வேண்டுமென்றில் லாமல் எப்படியும் வாழலாம் என்பவர்களுக்கு இப்படியான நம்பிக்கைத் துரோகம் சர்வசாதாரண விடயம். எப்படியும் வாழலாம் என்ற கொள்கை உடையவர்கள் எந்தக் கேவலமான செயலையும் மனம் கூசாமல் செய்வார்கள். அந்த வகை யைச் சார்ந்தவள்தான் நீயும் என்ற உண்மை இப்போதுதான் புரிகின்றது. இப்ப புரிந்து என்ன பிரயோசனம்! ஏமாந்துவிட்டோமே!!" என்று சொல்லி முடிப்பதற்குள் மேலும் எரிச்சலடைந்த சுந்தரி,

"என்ன! போகப் போக மரியாதை குறைகின்றது? பேசாமலிருந் தால் நீங்கள் நினைத்தபடி கதைத்துக்கொண்டே போவீர்கள் என்று எண்ணுகிறேன். இதற்குமேலும் இங்கு நின்று என்னை விமர்சித்துப்

பேசிக்கொண்டு நின்றால், பொலிசைக் கூப்பிடவேண்டி ஏற்படும். எனக்குப் பணம் தந்தவர் என்ற மரியாதையில் இவ்வளவு நேரமும் பொறுமையாய் உங்களுடைய கதையைக் கேட்டுக்கொண்டு நின்றேன். இதற்கு மேலும் உங்களுடைய விமர்சனத்தையும் மரியாதைக் குறைவான பேச்சையும் பொறுமையுடன் கேட்டுக்கொண்டு இருக்க முடியாது. ஆனபடியினால் இடத்தை விட்டுக் கிளம்பலாம். இதற்குமேலும் நின்றால் நிச்சயம் பொலிசைக் கூப்பிடுவேன். பொலிசைக் கூப்பிடுவது மட்டுமல்ல உங்களால் என்னுடைய உயிருக்கே ஆபத்து என்று முறைப்பாடு செய்வேன்," என்று அச்சுறுத்தினாள். இதைக் கேட்டு மனம் தளர்ந்த குகன்,

"நீ இதையும் செய்வாய் இன்னமும் செய்வாய். 'அற நனைந்தவனுக்கு குளிருமில்லைக் கூதலுமில்லை,' என்பதைப் போல உனக்கு எந்த மனிதத் தன்மையும் இல்லாமற் போய்விட்டது. நாங்கள் இப்ப போகிறோம். ஆனால் நீ செய்துள்ள துரோகச் செயலுக்கு என்றோ ஒருநாள் தண்டனை கிடைக்கும். அது எப்படிப்பட்டது என்பதைப் பார்ப்பதற்கு நிச்சயம் மறுபடியும் வருவோம்.

ஒவ்வொரு செயலுக்கும் ஒருவிலை உண்டு. உன்னுடைய துரோகச் செயலுக்கும் நீ பெரிய விலை ஒன்று கொடுத்தே ஆக வேண்டும். மற்றையவர்களை ஏமாற்றி மூன்று லட்சம் டொலர் பணத்தைக் கொள்ளையடித்ததையிட்டு நீ இப்பொழுது கர்வம் கொள்ளலாம் அல்லது பெருமைப்படலாம். அத்துடன் பெரிய கெட்டிக்காரி என்றும் நினைக்கலாம், ஆனால் கடவுள் ஒருத்தன் மேலே இருந்து கணக்குப் போட்டுக்கொண்டு இருக்கிறான் என்பதை மட்டும் மறந்து போக வேண்டாம். அவன் போடும் கணக்கின் விலையை நீ கொடுக்கும் போது நாங்கள் அதைப் பார்க்கத்தான் போகின்றோம். அப்போது மறுபடியும் பேசுவதற்கு வருவோம்,'' என்று சொல்லி தனது இயலாமையையும் கவலையையும் வெளிப்படுத்தினான். எதற்கும் மசியாத சுந்தரி,

"கடவுளும் கத்தரிக்காயும், என்ன கடவுளின்ர பெயரைச் சொல்லி என்னை மிரட்டிப் பார்க்கிறாயா? இதற்கெல்லாம் பயப்படும் ஆளில்லை இந்தச் சுந்தரி. நீங்கள் போய் உங்களுடைய கடவுளிடம் முறைப்பாடு செய்யுங்கோ! இப்போது கிளம்பலாம். இதற்கு மேலும் இங்கு நின்றால்

பொலிஸ் தான் உங்களெல்லோருக்கும் பதில் சொல்ல வேண்டி யேற்படும்," என்று மேலும் அதட்டவே குகனும் மற்றையவர்களும் வேதனையோடும் ஏமாற்றத்தோடும் அவளுடைய வீட்டை விட்டுக் கிளம்பிச் சென்றனர்.

இவையாவற்றையும் கேட்டு அதிர்ச்சியும் ஆச்சரியமும் அடைந்த கண்ணன்,

"என்ன சுந்தரி, ஒரு மனச்சாட்சி இல்லாமல் பொலிசு அது இதென்று சொல்லி வீட்டுக்கு வந்தவர்களை விரட்டி அடித்து விட்டாய். எனக்கு ஏற்கனவே தெரியும் உங்களுடைய செயற்பாட்டினால் இப்படிப்பட்ட பிரச்சனைகள் நிச்சயம் வருமென்று. பணத்தைக் கொடுத்து ஏமாந்தவர்கள் கோபப்படத்தான் செய்வார்கள். அதை நாங்கள் பொறுமையாய்க் கேட்டுத்தான் ஆகவேண்டும். அதைவிடுத்து அவர்களை விரட்டி அடிப்பது நியாயமா?" என்று கேட்கவே, பொறுமையை இழந்த சுந்தரி,

"நீங்கள் வீட்டில ஒரு ஆம்பிளையென்று இருந்துகொண்டு அவன்கள் மட்டுமரியாதை இல்லாமல் என்னைப் பற்றிப் பேசிக்கொண்டு போகப் பேசாமலிருந்துவிட்டு, இப்ப எனக்குப் புத்தி சொல்லுகிறீங்க! உங்களுக்கு வெட்கமாயில்லை? அவன்கள் கதைத்த கதைக்கு ஒரு கதையாவது பதிற்கதை சொன்னீங்களா? இல்லை! இப்ப எனக்குக் கதை சொல்லுகிறீங்க! இதுதானா ஓர் ஆம்பிளையின் இலட்சணம்?" என்று கேட்கவே, அமைதியாகக் கதையைத் தொடர்ந்த கண்ணன்,

"நான் ஏன் வெட்கப்படவேண்டும்? வெட்கப்படவேண்டிய ஆள் நீ! மற்றையவர்களை ஏமாற்றி நம்பிக்கைத் துரோகம் செய்து பணத்தை அமாடிசெய்த நீதான் வெட்கப்பட வேண்டும். நான் வெட்கப்பட வேண்டியதில்லை, புரியுதா?" என்று கேட்கவே மறுபடியும் பொறுமையை இழந்த சுந்தரி,

"இதற்கு மேலும் எனக்குப் புத்தி சொன்னால் அல்லது நான் செய்தது பிழை என்று கதைத்தால், நீங்களும் அவன்கள் சென்ற பாதை வழியே போக வேண்டியேற்படும். விளக்கமாய்ச் சொன்னால் உங்களை விவாகரத்துச் செய்யவேண்டி ஏற்படும்," என்று சொல்லி

வாய் மூடுவதற்கிடையில் இதைக் கேட்டுப் பதறிப்போன கண்ணன்,

"என்ன வார்த்தை சுந்தரி கூறுகிறாய்? இது உனக்கே நியாயமாய்ப் படுகின்றதா?" என்று சற்று அச்சத்துடன் கேட்க, பதிலுக்கு,

"கூறுவதுமட்டு மல்ல, செய்தும் காட்டுவன், ஜாக்கிரதை!" என்று எச்சரிக்கை கலந்த தொனியில் கூறினாள் சுந்தரி. தொடர்ந்து,

"நான் உங்களைக் கல்யாணம் பண்ணிக் கொண்டதற்கான காரணங்களில் முதலாவது காரணம் எல்லா விடையத்திலும் நீங்கள் என்னுடன் ஒத்துழைப்பீர்கள் என்பதுதான். அதைவிடுத்து எதிர்த்துக் கதைப்பதும் புத்தி சொல்லுவதுமாயிருந்தால் எனக்கு அது ஒத்துவராது. ஒத்துவராவிட்டால் என்ன நடக்கும்? வேறு வேறாய்ப் போகவேண்டித் தான் வரும்!" என்று மேலும் அச்சுறுத்தவே பீதியும் பதட்டமும் அடைந்த கண்ணன்,

"நீ சொல்வது மட்டுமல்ல, செய்தாலும் செய்துபோடுவாய். ஏனென் றால் கனடாவின் மண்வாசனை அப்படி! உன்னுடைய விடயத்தில் இனிமேல் நான் குறுக்க வரமாட்டேன் போதுமா? இனிமேல் விவா கரத்து என்ற வார்த்தையை மறந்தும் கூறவேண்டாம். அதை என்னாற் தாங்க முடியாது," என்று மிகவும் சாந்தமான தொனியில் கூறிச் சுந்தரியின் கோபத்தை தணியச்செய்தான்.

கணவனின் கவலையைப் புரிந்துகொண்டவள் போன்று,

"என்னப்பா! நான் சேர்க்கின்ற பணத்தை நான் மட்டுமா அனுப விக்கிறேன்? இல்லையே! ஒரு பகுதி பணத்தை அம்மா சகோதரங்க ளுக்கு அனுப்புகிறேன். மிகுதிப் பணத்தை நாமதானே அனுபவிக்கி றோம். வசதியான வீடு, வசதியான கார், இவையெல்லாம் எப்படி வந்தது? நானும் நீங்களும் தொழிற்சாலையில் வேலை செய்து இவைகளை வாங்க முடியுமா? முடியாது! இப்பொழுது வசதியாய்த் தானே வாழுகின்றோம். இப்பொழுது சமூகத்தில் நமக்கென்று ஒரு மதிப்பும் மரியாதையும் இருக்கின்றது. இதெல்லாம் எப்படி வந்தது? என்னுடைய திறமை!" என்று மார்பு தட்டிக்கொண்டாள் சுந்தரி

## அங்கம் – 6

இப்பொழுது இரண்டு பேருடைய மாதாந்த வருமானம் வாழ்க்கைச் செலவிற்கும் வீட்டு அடமான மாதக் கொடுப்பனவிற்கும் போதும். காரணம் வீடு வாங்கியபொழுது பெரிய ஒரு பணத்தொகையை முற்பண மாய்ப் போட்டு வாங்கியமையாகும். அதனால் மாதக் கட்டுப்பணம் அவ்வளவு பெரிய தொகையல்ல. ஓரளவிற்கு ஆடம்பரச் செலவு செய்வதற்கும் பணம் போதுமானதாயிருந்தது. நயாகரா நீர்வீழ்ச்சி, வொண்டர்லாண்ட், மரின் லாண்ட், ஆயிரம் தீவுகள், ரொறன்ரோ ஐலண்ட், சினிமா, பீச் என்று சுந்தரியின் பொழுதுபோக்குகள் ஒழுங்காக இடம்பெற்றன.

தனது வாழ்க்கையில் தற்போது தேவையானவற்றையும் விரும்பியவற்றையும் வாங்கி அனுபவிக்க முடிந்ததை எண்ணும்போது, தலைகால் தெரியாத சந்தோசம் சுந்தரிக்கு. தான் நினைத்தவற்றை எல்லாம் சாதித்து விட்டேன் என்று எண்ணிச் சந்தோசப்பட்டாளே யொழிய, தான் சாதித்த வழிமுறை தப்பானது என்று எண்ணி ஒருபோதும் கவலைப்பட்டது கிடையாது. இது சுந்தரியின் சுபாவம் என்பதுடன் இந்த நாட்டு மண்வாசனையால் ஏற்பட்ட மனோதைரியம் என்றாலும் அர்த்தம் இருக்கத்தான் செய்கிறது. வேறு வார்த்தையில் சொன்னால் அவளுடைய இயற்கைச் சுபாவத்தோடு சூழல் ஆதிக்கமும் சேர்ந்து அவளை ஒரு மனச்சாட்சி இல்லாத பொண்ணாக மாற்றிவிட்ட தெனலாம்.

இயல்பாக எப்படியாவது முன்னுக்கு வரவேண்டுமென்று எண் ணம் கொண்ட சுந்தரிக்கு இந்த நாட்டுச் சூழல் மிகவும் பொருத்தமாக அமைந்துவிட்டது. பாவம், புண்ணியம் என்பவற்றைப் பற்றி அவள் சிறிது கூடக் கவலைப்பட்டது கிடையாது. வருடங்கள் ஒன்று இரண்டு மூன்று நான்கு ஐந்து என்று கழிந்து கொண்டிருக்கவே சுந்தரியின் வாழ்க்கையும் அவளைப் பொறுத்தமட்டில் சந்தோசமாய்ப் போய்க் கொண்டிருந்தது எனலாம்.

ஒரு நாள் சுந்தரியும் கணவனும் அவர்களுடைய இரண்டு பிள்ளைகளும் மறீன் லாண்டிற்கும் நயாகரா நீர்வீழ்ச்சிக்கும் போய் விட்டு தங்களுடைய காரில் வந்து கொண்டிருந்த பொழுது அவர்களு

டைய கார் விபத்தில் சிக்கியது. தெய்வாதீனமாக இரண்டு பிள்ளைக ளும் எந்தவித காயமும் இல்லாமல் தப்பிவிட்டார்கள். தலையில் ஒரு சிறிய காயம் மட்டும்தான். கண்ணனுக்குப் பளுவில் பலத்த அடி. ஆனால் எந்தவித காயமோ, முறிவோ இல்லை. அதேவேளை சுந்தரியின் வலதுகால் முறிந்து விட்டது. முளங்காலுக்கு கீழ்ப்பகுதியை கழற்றும் அளவிற்கு எலும்பு நொருங்கிவிட்டது.

கண்ணனுக்கு என்னசெய்வதென்று தெரியவில்லை. மூன்று நாட்க ளுக்கு அவள் கண் விழிக்கவில்லை. மயக்க நிலையிலேயே இருந்தாள். கண்ணன் அவளைக் காப்பாற்றும்படி வேண்டாத தெய்வமில்லை, நேராத கோயிலில்லை. இரண்டு பிள்ளைகளையும் தன்னையும் விட்டு விட்டுப் போய்விடுவாளோ என்ற பயம் மேலோங்கி நிற்கவே, எப்படி யாவது அவளைக் காப்பாற்றும்படி வேண்டி துர்க்கை அம்மனிடம் சென்று அவளின் பாதார விந்தங்களில் சரண் அடைந்தான். அவள் செய்த தவறுகளையும் பாவங்களையும் மன்னிக்கும்படி துர்க்கை அம்மனை வேண்டி அழுதான், தொழுதான். அவள் செய்த தவறு களுக்காக தனக்குத் தண்டனை வழங்கும்படியும் அவளைக் காப்பாற்றும் படியும் அழுதழுது வேண்டினான். அம்மனின் அருளோ என்னவோ சுந்தரி நான்காவது நாள் கண்விழித்து கதைக்கத் தொடங்கினாள். அன்றிலிருந்து நிலமை முன்னேறி வந்தது. மூன்று மாதம் கழித்து சுந்தரி சில்லுக் கதிரையில் (வீல் செயரில்) வீடு வந்து சேர்ந்தாள்.

அப்புறம் செயற்கைக் கால் பொருத்தப்பட்டு நடக்கத் தொடங்கி னாள். அவள் இயற்கையாக நடக்கமுடியாவிட்டாலும், அவள் உயிரு டன் இருப்பதையும் செயற்கைக் காலுடன் வீட்டு வேலைகளைச் செய்ய முடிவதையும் இட்டுக் கண்ணன் பெரும் திருப்தி அடைந்தான். இந்த அளவிற்கு அவளைக் காப்பாற்றிய இறைவனுக்கு நன்றி செலுத் தும் பொருட்டு அவன் வைத்த நேத்திகளை ஒன்றும் விடாது நிறை வேற்றினான். தவறு செய்தவன் மன்னிக்கப்படலாம். ஆனால் தப்புச் செய்தவன் தண்டனை பெறுவான் என்ற நியதிக்கிணங்க சுந்தரி இறைவனால் தண்டிக்கப்பட்டுள்ளாள் என்று கண்ணன் கருதி னானேயொழிய, அவன் இறைவன் மீது துளிகூட கோபப்படவில்லை, வெறுப்படையவும் இல்லை. அவளை ஒரு நல்ல பெண்ணாக மாற்று வதற்கு இறைவன் கொடுத்த படிப்பினையாக, தண்டணையாக எண்ணி இறைவனுக்கு நன்றி சொன்னான் என்றால் அதுவும் வாஸ்தவம்தான்.

யார் ஏற்படுத்திய மாற்றமோ அல்லது யாரிடமிருந்து பெற்ற ஞானமோ தெரியாது, சுந்தரி இவ்வளவு காலமும் எப்படியும் முன்னுக்கு வந்துவிடவேண்டும் என்று கடைப்பிடித்த கொள்கையிலிருந்து விடுபட்டு, இனிமேல் இப்படித்தான் முன்னுக்கு வரவேண்டும் என்னும் கொள்கை உடையவளாகத் தன்னை மாற்றிக்கொள்ளுவதற்கு உறுதி பூண்டு செயற்படத் தொடங்கினாள். தான் எடுத்திருக்கும் இந்தக் கொள்கை மாற்றத்தையும் மன உறுதியையும் அவள் கண்ணனுக்கு கூறிய பொழுது அவன் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை என்றால் மிகையாகாது.

இறைவன் அவளை விபத்திலிருந்து காப்பாற்றியதைவிட அவளுடைய மனதை மாற்றியதற்கு முக்கியத்துவம் கொடுத்து இறைவனுக்கு நன்றி செலுத்தினான் என்பதுதான் உண்மை. இறைவனின் அற்புதத்தை நினைத்து பல தடவை ஆனந்தக் கண்ணீர் சொறிந்தான் என்பது வேறு யாருக்கும் தெரியாத இன்னுமொரு உண்மையாகும்.

விபத்தில் தனது கணவனுக்கும் பிள்ளைகளுக்கும் எந்தவித பாதிப்பும் ஏற்படாமையையிட்டு ஆச்சரியம் அடைந்த சுந்தரி, தன்னுடைய உயிர் காப்பாற்றப்பட்டமையை இட்டும் பெரிதும் மகிழ்ச்சியடைந்தாள். தன்னுடைய கால் முன்பு போன்று இல்லாவிட்டாலும், நடமுடங்கலாய்ப் போகாமல் நடந்து திரிந்து தன்னுடைய காரியங்களைப் பார்க்கக்கூடிய அளவிற்கு சுகம் வந்தமை, கவலையின் மத்தியிலும் அவளுக்கு ஆறுதலைக் கொடுத்தது.

ஒட்டுமொத்தமாய்ச் சொன்னால் இந்த விபத்தின் பிற்பாடு சுந்தரியின் மனதில் குறிப்பிடத்தக்க அளவு மாற்றம் ஏற்படத் தொடங்கியது. விசேடமாக கடவுள் நம்பிக்கை ஏற்படத் தொடங்கியது. காலையும் மாலையும் வீட்டிலிருந்த சுவாமி அறையில் தவறாது இறைவனை வழிபடத் தொடங்கினாள். குறிப்பாக துர்க்கை அம்மனை ஆழமாக நம்பினாள். துர்க்கையின் கருணையாலேயே தான் உயிர் பிழைத்ததாக நம்பினாள். அதைத் தொடர்ந்து ஒவ்வொரு செவ்வாய்கிழமையும் துர்க்கை அம்மன் கோயிலுக்குப் போவதை வழமையாக்கிக் கொண்டாள். எதுவித முக்கிய அலுவல்கள் இருந்தாலும் அவற்றையெல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு செவ்வாய்க் கிழமைகளில் துர்க்கை அம்மனிடம் போவதை தவறாது மேற்கொண்டு வந்தாள். நாட்கள்

செல்லச்செல்ல அவளுடைய மனோநிலையில் பல மாற்றங்கள் படிப்படியாக ஏற்படத்தொடங்கின.

மாணவியாக இருந்த காலத்திலிருந்து இன்றுவரை தான் செய்த தவறுகளை எண்ணிப் பார்க்கத் தொடங்கினாள். எண்ணிப் பார்த்ததோடு மட்டும் நின்றுவிடாமல் அவையெல்லாம் தான் செய்த தவறுகள்தான் என்பதை மனதார ஏற்றுக் கொண்டாள். பிழையான காரியங்களைக் கூசாமற் செய்யும் மனோபாவம் இளமையிலிருந்து படிப்படியாக வளர்ச்சியடைந்து அதன் உச்சக்கட்டமாக பலருக்கு நம்பிக்கைத் துரோகம் செய்யும் அளவிற்குத் தன்னைத் தூண்டியுள்ளது என்பதை உளமார ஏற்றுக் கொண்டாள்.

கீழ்த்தரமான, ஆபத்தான, பாவம் நிறைந்த இந்த மனோநிலையை மாற்றிக்கொள்ள வேண்டுமென்று உறுதியான முடிவை எடுத்துக்கொண் டாள். பல வருடங்களாக வளர்ந்து வந்த இந்த மனோபாவத்தை சில நாட்களிலோ அன்றிக் சில மாதங்களிலோ மாற்றிவிட முடியாது என்பதை உணர்ந்திருந்தபோதும், முடிந்த விரைவில் மாற்றிக்கொள்ள வேண்டுமென்று தொடர்ந்து முயற்சித்தாள். அவளுடைய எண்ணங்களி லும் செயற்பாடுகளிலும் ஏற்பட்டு வந்த மாற்றங்களைப் பார்த்து கண்ணன் பெரும் மகிழ்ச்சியடைந்தான். அவளை ஒரு புதிய பெண்ணாக மாற்றுவதற்கு வேண்டிய உதவிகளையும் ஒத்தாசைகளையும் வழங்கி னான். அதன் சில அம்சங்களாக வாராவாரம் சுந்தரியையும் பிள்ளை களையும் துர்க்கை அம்மன் கோயிலுக்கு அழைத்துச் சென்றமை, ஆன்மீக வளர்ச்சியை ஏற்படுத்தக்கூடிய புத்தகங்கள், கதைகள், கட்டுரை களைப் பெற்றுக்கொடுத்தமை குறிப்பிடத்தக்கவையாகும்.

ஒருநாள் சுந்தரியும் கண்ணனும் பிள்ளைகளும் துர்க்கை அம்மன் கோயிலில் நின்றபொழுது, சுந்தரியிடம் முப்பதினாயிரம் டொலர் பணத்தைக் கொடுத்து ஏமாந்தவனும் கடுமையாகச் சுந்தரியுடன் மோதிக் கொண்டவனும் இறுதியில் உனக்கு ஆண்டவன் பாடம் புகட்டுவான் என்று சாபம் போட்டவனுமான குகன் அங்கு சென்றிருந்தான். சுந்தரியைப் பார்த்த குகன்,

'இவள் ஏன் கோயிலுக்கு வந்துள்ளாள்? மனிதர்களை எல்லாம் ஏமாற்றிவிட்டு இறுதியில் கடவுளையும் ஏமாற்றலாம் என்று எண்ணி

வந்துள்ளாளோ! அல்லது தான் செய்த பாவங்களுக்குப் பரிகாரம் தேடுவதற்காக வந்து நிற்கின்றாளோ! சுந்தரி கோயிலுக்கு வந்துள்ளா ளென்றால், அதற்கு ஓர் ஆழமான அர்த்தமிருக்கவேண்டும். மற்றைய சனங்களைப் போன்று சும்மா கடவுளைக் கும்பிடுவதற்கு வந்திருக்க மாட்டாள்,' என்று தனக்குள் எண்ணிக்கொண்டு அவளைப் பார்க்காதவன் போன்று அம்மனை வணங்கிக் கொண்டு நின்றான். குகன் நிற்பதைக் கண்டு கொண்ட சுந்தரி அவனிடம் சென்று,

"நான் உங்களிடம் சிறிதுநேரம் பேசவேண்டும். இப்பொழுது பேசலாமா? அல்லது பூசை முடிந்தபின் பேசுவமா?" என்று கேட்டாள். குகன் தனது மணிக்கூட்டைப் பார்தது விட்டு,

"பூசை ஆரம்பமாவதற்கு இன்னும் அரை மணித்தியாலம் இருக்கின் றது. ஆகையால், இப்பவே பேசலாம்," என்றான். உடனே ஓர் ஓதுக்குப்புறமாய் அவனை அழைத்துச் சென்ற சுந்தரி,

"நீங்கள் என்மீது மிகுந்த கோபமாயிருக்கின்றீர்கள் என்பது எனக்குத் தெரியும். கொஞ்சநெஞ்சமல்ல முப்பதினாயிரம் டொலரைக் கொடுத்து ஏமாந்துபோனால் ஏமாற்றியவர் மீது கோபம் கொள்வது நியாயமானதுதான். அந்தவகையில் நீங்கள் என்மீது கோபப்படுவதும் வாஸ்தவம்தான். நான் இப்பொழுது பழைய சுந்தரி அல்ல. நான் எவ்வளவோ மாறிவிட்டேன். தொடர்ந்தும் மாறிக்கொண்டே இருக்கி றேன். துர்க்கை அம்மன் என்னை மாற்றிவிட்டாள். அதுமட்டுமல்ல என்னைக் காப்பாற்றியும் விட்டாள்.

நான் விபத்தில் சிக்கிய பொழுது என்னுடைய கால் முறிந்து விட்டது. இப்பொழுது செயற்கைக் காலோடுதான் நடக்கிறேன். அந்த விபத்தில் எனது உயிரைக் காப்பாற்றியது இந்த அம்பாள்தான். இல்லாவிட்டால் எனது பிள்ளைகளும் கணவரும் அநாதையாகி இருப் பார்கள். நான் செய்த பாவத்திற்கு அவர்கள் செய்த பாக்கியம் மருந்தாகிவிட்டது என்றுதான் எண்ணத் தோன்றுகிறது.

இந்த விபத்து இறைவன் என்னைத் தண்டிப்பதற்காக ஏற்படுத்தி யதல்ல, என்னை ஒரு நல்ல பெண்ணாக மாற்றுவதற்காக ஏற்படுத்தி யுள்ளான் என்பது திண்ணம். அம்பாளின் விருப்பப்படி விரைவில்

ஒரு நல்ல பெண்ணாக மாறிவிடுவேன் என்று நம்புகிறேன். அதன் ஓர் அம்சமாக ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் அம்பாளிடம் வந்து அவளுடைய பாதார விந்தங்களில் விழுந்து என்னை ஒரு நல்ல பெண்ணாக மாற்றிவிடும்படி வேண்டுகிறேன். நான் செய்த தப்புக்கள் தவறுகளை உணரத் தொடங்கிவிட்டேன். அவற்றிற்குப் பிராயச்சித்தம் தேடவும் விளைந்துள்ளேன்.

உங்களுடைய பணத்தை இப்பொழுது உடனடியாகத் தரமுடியாது. ஆனால், பணத்தை திரும்பத் தருவது நிச்சயம். அம்பாளின் முன்னிலையில் அவளைச் சாட்சியாக வைத்து இதைச் சொல்லுகிறேன். இனிமேல் நீங்கள் உங்கள் பணத்தைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. நீங்கள் என்னிடம் கடைசியாக வந்து, பணம் கேட்டு, கதைவழிப்பட்ட நிகழ்வும் இறுதியில் கடவுள் காட்டுவார் என்று கூறிய வார்த்தைகளும் இப்பொழுதும் எனது காதில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. நீங்கள் கூறியது போன்றே இறைவன் வழிகாட்டிவிட்டார். இனிமேல் கவலைப்பட வேண்டியதில்லை. அதாவது சரியான பாதையைக் காட்டிவிட்டார். வாழவேண்டிய முறையையும் காட்டிவிட்டார். அந்த வகையில் இறைவனுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளேன்.

உங்களுடைய பணத்தைத் திருப்பித் தருவதற்கு, முதலில் எனது வீட்டை விற்கத் தீர்மானித்துள்ளேன். வீட்டை நல்ல விலைக்கு விற்க வேண்டுமாயிருந்தால் குறைந்தது ஆறுமாதம் சிலவேளை ஒரு வருடமும் பிடிக்கலாம். பொறுத்ததோடு பொறுத்துக் கொள்ளுங்கோ. வீடு விற்கப்பட்டவுடன் முதலாவதாக உங்களுடைய பணம் தரப்படும். அதுகும் இந்த அம்பாளின் முன்னிலையிற்தான் தரப்படும். நான் செய்த தவறுக்காக மனம் உருகி மன்னிப்புக் கேட்கிறேன். என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். பூசை ஆரம்பமாகப் போகின்றது சந்தோச மாய்ப் போங்கோ. பணம் கைக்கு வந்தவுடன் உங்களுக்குத் தெரியப்ப டுத்துவேன்," என்று கூறிமுடித்துவிட்டு பூசைக்காக விநாயகர் சந்நிதா னத்திற்குச் சென்றாள் சுந்தரி.

குகனால் நம்பவே முடியவில்லை! இவள் உண்மையாகத் திருந்தி விட்டாளா? அல்லது கண்ட இடத்தில் நடிக்கிறாளா? ஒன்றும் புரிய வில்லையே! பிராமணனை ஏமாற்றிய புலியின் கதையைப் பாட

சாலையில் படித்துள்ளேன். அதுபோன்று புலி சன்னியாசி வேடம் போட்ட கதைதானோ? புரியாத புதிராக இருக்கின்றதே! என்று அவனின் ஒரு மனம் சொன்னது. அதேநேரத்தில் அடுத்த மனம், 'அம்பாளின் சன்னிதானத்தில் கூறியிருக்கின்ற படியினால் இதில் உண்மை இருக்கலாம். அம்பாளோடு விளையாடமாட்டாள். ஏற்கனவே அம்பாள் பாடம் புகட்டியிருக்கிறாள். ஆனபடியால் மறுபடியும் தப்புபண்ண முயற்சிக்கமாட்டாள்,' என்று கூறியது. மொத்தத்தில் அவனால் நம்பவும் முடியவில்லை நம்பாமல் விடவும் முடியவில்லை. இரண்டும் கெட்டான் நிலையில் வீட்டிற்குச் சென்றான். சென்றதும், உடனே இந்த விடயத்தை மனைவியிடம் சொல்லவேண்டுமென்ற எண்ணத்துடன்,

"செம்பருத்தி, இன்று எனக்குச் சூவீப் ரிக்கற் விழுந்திருக்கப்பா. ஆனால் பணம் கிடைப்பதற்குக் கொஞ்ச நாளாகும்," என்றான். இதைக் கேட்டு ஆச்சரியமடைந்த மனைவி,

"நாட்சென்றாவது பணம் நிச்சயம் கிடைக்கும்தானே? எவ்வளவு தொகை அப்பா விழுந்தது? ஏன் தாமதமாகும் பணம் கிடைப்பதற்கு?" என்று புன்சிரிப்புத் தவழ ஆர்வத்துடன் கேள்விகளைக் கேட்டாள்.

"முப்பதினாயிரம் டொலர் விழுந்துள்ளது. வீடு விற்ற பிற்பாடுதான் பணம் கிடைக்கும்," என்றதும் சற்றுச் சலிப்படைந்த செம்பருத்தி,

"என்னப்பா புதிர் போடுகின்றீர்கள்?" என்றாள். மேலும் புதிர்போட விரும்பாத குகன்,

"புதிருமில்லை குதிருமில்லை, நாமள் பணம் கொடுத்து ஏமாந்து போன சுந்தரி இருக்கின்றாளே? அவள் இன்று துர்க்கை அம்மன் கோயிலுக்குள் என்னைக் கண்டு, அவசரமாக என்னை ஒரு பக்கமாய் அழைத்துச் சென்று,

'தான் தன்னுடைய தவறை உணர்ந்து விட்டதாயும் நமது பணத் தைத் திருப்பித்தர விருப்பதாயும் உறுதிபடக் கூறியவள், தன்னுடைய வீட்டை விற்றுத்தான் பணத்தைத் தரமுடியுமென்றும் அதுவரையும் பொறுத்திருக்கும் படியும் கேட்டுக்கொண்டாள்.' அவள் கூறியதை வைத்துப் பார்க்கும் பொழுது நிச்சயம் அவள் பணத்தைத் திருப்பித்

தருவாள் என்று நம்புகின்றேன்," என்றான். இதைக் கேட்ட செம்பருத்தி,

"உங்களுடைய கதையைக் கேட்கும்போது 'அவிச்சமீன் துடிக்கிது அம்புலிமான் ஓடுது,' என்ற பழமொழிதான் ஞாபகத்திற்கு வருகின்றது. ஏன் அப்பா இப்படிச் சிறுபிள்ளைத் தனமாய்க் கதைக்கிறீங்கள்? சுந்தரி யாவது! பணம் தருவதாவது!! அவள் முடிச்சுமாறிக் கள்ளியைப் பற்றிக் கதைத்து உங்களுடைய நேரத்தை வீணாக்காமல் வேலை ஏதும் இருந்தாற் போய்ப் பாருங்கோ," என்று அவளைப்பற்றிய கதையைக் கணக்கெடுக்காமல் தூக்கியெறிந்து பேசினாள். இன்னும் அவளின் உறுதிமொழியில் நம்பிக்கை இழக்காத குகன்,

"செம்பருத்தி! நீ அவளை நம்புகிறாயோ இல்லையோ, நான் அவளை நம்புகிறேன். அவள் சொன்ன விதம், அவள் சொன்ன இடம், வீட்டை விற்றுப் பணம் தருவதாய்க் கூறியவற்றை வைத்துப் பார்க்கும் பொழுது, அவளுடைய கூற்றை நான் பூரணமாய் நம்புகிறேன். மூன்று தொடக்கம் ஆறு மாதம் வரையிலான காலப் பகுதியில் பணம் முப்பதினாயிரம் டொலரும் திரும்பி வரப்போகின்றது. அப்பணத்துடன் என்னிடமிருக்கும் பணத்தையும் போட்டு வீடு ஒன்று வாங்கத்தான் போகிறேன்," என்று உறுதிபடக் கூறினான். கணவனுடைய கதையைக் கேட்டுப் பொறுமையை இழந்த செம்பருத்தி,

"நீங்கள் அவளை நம்புவதும் நம்பாமல் விடுவதும் உங்களைப் பொறுத்த விடயம். ஆனால் ஒரு கற்பனை செய்கிறீர்களே! அதாவது அவள் தரும் பணத்தையும் உங்களுடைய பணத்தையும் கொண்டு வீடு வாங்கப் போகிறேன் என்று, இதைக்கேட்கும் பொழுது மறுபடியும் ஒரு பழமொழி ஞாபகத்திற்கு வருகின்றது. 'மண்குதிரையை நம்பி ஆற்றில் இறங்கியது போல்,' அவளை நம்பி வீடு வாங்கப் புறப்பட்டால் வெள்ளம் வரும்போது நட்டாற்றிற்தான் தத்தளிப்பீர்கள். அப்பொழுது யாராலுமே உங்களைக் காப்பாற்றமுடியாது. என்னுடைய சிறிய மூளைக்கு எட்டிய அளவிற்குச் சொல்லவேண்டியதைச் சொல்லிப்போட்டன். மிகுதி உங்களைப் பொறுத்தது," என்று கூறிவிட்டுக் குசினிக்குள் சென்றாள் செம்பருத்தி.

மூன்று மாதங்கள் கழிந்த நிலையில் ஒருநாள் செம்பருத்தி தனியாக வீட்டில் இருந்தபொழுது தொலைபேசி மணி அடித்தது.

றிசீவரை ஏடுத்து ஹலோ! என்றாள். மறுமுனையிலிருந்து,

"நான் சுந்தரி பேசுகிறேன். உங்களுடைய கணவர் குகனோடு பேசலாமா?" என்று கேட்டாள். அதற்கு செம்பருத்தி,

"அவர் வெளியிற் சென்றுவிட்டார். வருவதற்கு ஒரு மணித்தியால மாகும். என்னிடம் சொல்லக்கூடிய விடயமென்றால் இப்போது கூறலாம். அல்லாவிடில் ஒரு மணித்தியாலம் கழித்து எடுங்கோ," என்றதும் உடனே சுந்தரி,

"வேறொன்றுமில்லை... உங்களுக்குத் தரவேண்டிய முப்பதினாயிரம் டொலர் பணத்தை திருப்பித்தருவது சம்பந்தமாகக் கதைப்பதற்காகத் தான் எடுத்தனான். பணம் எனது கைக்கு வந்து விட்டது. அதை நான் அவருக்கு வாக்குறுதி அளித்தபடி துர்க்கை அம்மன் சந்நிதா னத்தில் வைத்துக் கொடுப்பதற்குத்தான் விரும்புகிறேன். கோயிலுக்கு வருவதற்கு அவருக்கு எப்போது நேரம் கிடைக்கும் என்பதை அறிவதற் காகத்தான் எடுத்தனான்," என்று சொல்ல வந்ததை சொல்லி முடிப்ப தற்குள் முந்திரிக்கொட்டை போன்று முந்திக்கொண்ட செம்பருத்தி,

"அவர் வந்தவுடனே அவருக்கு விடயத்தைச் சொல்லி உங்க ளுக்கு ரெலிபோன் எடுக்கச் செய்கிறேன்," என்று கூறியதும்,

"அப்ப..... சரி," வைக்கிறேன் என்று சொல்லிக் கதையை முடித்துக் கொண்டாள் சுந்தரி.

செம்பருத்திக்கு கனவு கண்டு விழித்தது போன்று இருந்தது. 'அவள் சொன்னது உண்மைதானா? என்னால் நம்பவே முடிய வில்லையே!' என்று தன்னுள் பிதற்றிக்கொண்டாள். இருந்தபோதும் வெளியிற் சொல்ல முடியாத சந்தோசம் அவளுக்கு. கைகால் தெரியாத மகிழ்ச்சி, உடல் முழுவதும் ஒரே கிளுகிளுப்பு. மனமும் உடலும் இருப்புக்கொள்ளவில்லை. 'குட்டி போட்ட பூனை போன்று,' அங்கு மிங்கும் நடந்து திரிந்தாள். மேலோங்கிய உணர்ச்சியின் வெளிப்பாடாக,

"அதற்குள் இந்த மனுசன் எங்கடா போனது. ஆகா! முப்பதினா யிரம் டொலர்! தொலைந்து போச்சிது என்று எண்ணிய பணம்!

திரும்ப வரப்போகிறது! மனுசன் சொன்னது உண்மைதான்., சுவீப் விழுந்துள்ளது! சுந்தரியின் மனம் மாறுவதற்குள் சென்று பணத்தைப் பெற்றுவிட வேண்டும். கைத்தொலைபேசி இருந்தால் உடனே அவரோடு இதைப்பற்றிக் கதைக்கலாமே! அதுகும் இல்லையே! கைத்தொலைபேசி ஒன்று வாங்குவம் வாங்குவம் என்றும் மனுசன் எத்தனை தடவை சொன்னது. வீண்செலவு, வேண்டாமென்று நான்தானே சொன்னேன். இப்ப விளங்கிது அதன் முக்கியத்துவம்," என்று மறுபடியும் புலம்பிக் கொண்டாள்.

கதவில் யாரோ தட்டும் சத்தம் கேட்டது. கணவன்தான் வந்து விட்டாரென்று எண்ணிக்கொண்டு அவசரமாய்ப் போய் ஆவலோடு கதவைத் திறந்தாள். எதிரில் நின்றது அவளின் தாயார் மங்களம். ஏமாற்றமடைந்த செம்பருத்தி,

"நீயா அம்மா!" என்று கேட்டதும் மகளின் வித்தியாசமான முக பாவத்தை அவதானித்த மங்களம்,

"என்ன ஒருமாதிரி நிற்கிறாய்? உனக்கு என்ன நடந்தது? வழமைக் குமாறாக "நீயா அம்மா!" என்றும் கேட்கிறாய். என்ன விசயம்?" என்று கேட்டாள். உண்மையை மறைக்க விரும்பாத செம்பருத்தி,

"அது வந்தம்மா.... நாங்கள் பணம் கொடுத்து ஏமாந்துபோன சுந்தரியை உனக்குத் தெரியுமல்லே? அவள் பணம் முப்பதினாயிரத் தையும் திருப்பித் தருவதாய்க் கூறுகிறாள். கொஞ்ச நேரத்திற்கு முன்புதான் போன் பண்ணினாள். அதுதான் அவரைப் பார்த்துக் கொண்டிருக்கிறேன்," என்றதும் வியப்படைந்த மங்களம்,

"என்னால் நம்பவே முடியவில்லையே! ஆச்சரியமாய்தான் இருக்கு! அப்படியாயின் அது உங்களுடைய பெரிய அதிஷ்டம். தாமதிக்காமல் உடனே போய்ப் பணத்தைப் பெற்றுக்கொள்ளுங்கோ. அப்படிப்பட்டவள் மனதை மாற்றினாலும் மாற்றிவிடுவாள்," என்று சொல்லிக்கொண்டு போக மறுபடியும் கதவில் தட்டிக் கேட்டது. உடனே செம்பருத்தி,

"யாரப்பா இந்த நேரத்தில் வந்து தொந்தரவு பண்ணுதுகள்,"

என்று சொல்லிச் சலித்துக்கொண்டு விரைந்து சென்று கதவைத் திறந்தாள். வாசலில் நின்றது வேறுயாருமல்ல குகன்தான். சந்தோச மிகுதியால் எப்படிக் கதையைத் தொடங்குவதென்று அவளுக்குத் தெரியவில்லை. நிலமையை ஒருவாறு சுதாகரித்துக்கொண்டு,

"சுவீப் விழுந்துள்ளது என்று நீங்கள் சொன்னது சரிதானப்பா. உடனே போய்ப் பணத்தைப் பெற்றுக் கொண்டு வாருங்கோ. தாமதித்தால் அவளுடைய குரங்குமனம் அடுத்த கொப்பிற்குப் பாய்ந்தாலும் பாய்ந்துவிடும்," என்று சொன்னதும், செம்பருத்தியின் கதையைப் புரிந்தும் புரியாததுமான குகன்,

"கொஞ்சம் விபரமாய்ச் சொல்லும்," என்றான்.

'இந்த மனுசன் தான் சொன்னதையையே மறந்துவிட்டதாக்கும்,' என்று தன்னுள் புலம்பிக்கொண்ட செம்பருத்தி,

"என்னப்பா, நீங்கள்தானே சொன்னீங்கள் சுந்தரி பணத்தைத் திருப்பித் தரவிருக்கிறாள் என்றும் அது நமக்குச் சுவீப் விழுந்தது போலவென்றும், மறந்து போனீங்களே?" என்று கேட்டதும் குகன்,

"சொன்னனான்தான், அதற்கென்ன இப்ப?" என்று கேட்க,

"அதற்கென்னவோ?" என்று அவசரப்பட்ட செம்பருத்தி,

"நீங்கள் வெளியிற் போயிருந்தபொழுது சுந்தரி போன் பண்ணி, பணம் தயாராயிருப்பதாயும் அதைப் பற்றி உங்களுக்குத் தெரியப்ப டுத்த எடுத்ததாயும் சொன்னாள். அப்பொழுது நீங்கள் வந்தவுடன் சொல்லுகிறேன், என்று நான் சொன்னதும் போனை வைத்து விட்டாள். நீங்கள் இப்ப உடனே போன் பண்ணி விட்டு, உடனே சென்று பணத்தை வாங்கிக்கொண்டு வாங்கோ. சோரவிட்டால் 'ஆறின கஞ்சி பழங்கஞ்சி,' என்பதுபோல் ஆகிவிடும். அப்புறம் பழைய கதையாய்ப் போய்விடும்," என்று கூறியதும், மட்டற்ற மகிழ்ச்சி அடைந்த குகன் உடனே சுந்தரிக்குப் போன் பண்ணினான்.

"ஹலோ! யார் பேசுகிறீங்கள்," என்று கேட்டாள் சுந்தரி.

"நான் குகன் பேசுகிறேன். நீங்கள் போன் பண்ணியதாய் மனைவி என்னிடம் சொன்னா. அப்பொழுது நான் வெளியிற் கடைப்பக்கம் போயிருந்தேன்," என்று குகன் கதையைச் சொல்லி முடிப்பதற்குள்,

"ஓம் குகன், நான் போன் பண்ணினனான்தான். அதாவது நான் உங்களுக்குத் தருவாய்ச் சொன்ன பணம் எனது கைக்கு வந்துவிட்டது. வீட்டிற்கு நல்ல விலை வந்ததினால் உடனே விற்றுப்போட்டன். வீட்டை விற்றதால் ஐம்பதினாயிரம் டொலர் இலாபம் கிடைத்துள்ளது. அதில் முப்பதினாயிரத்தை உங்களுக்கும் இருபதினாயிரத்தை வேறு இருவருக்கும் கொடுத்துக் கடன்களை அடைப்பதற்குத் தீர்மானித்துள்ளேன்.

நான் உங்களுடைய பணத்தை வாக்குறுதி அளித்தபடி துர்க்கை அம்மன் ஆலயத்தில் வைத்துத் தருவதற்குத்தான் விரும்புகிறேன். அப்படிச் செய்வதன் மூலம் என்னை ஒரு நல்ல பெண்ணாக மாற்றியது மட்டுமல்ல எனது வீட்டை நல்ல விலைக்கு விற்பதற்கும் அருள்புரிந்த அம்மன் மீது எனக்கு மேலும் நம்பிக்கை அதிகரிக்கும் என்பது எனது எண்ணம். இன்று சனிக்கிழமை, வழமைபோன்று செவ்வாய்க் கிழமை பின்னேரம் ஆறுமணிக்கு உங்களுடைய பணத்துடன் கோயிலுக்கு வருவேன். அங்கு வந்து உங்களுடைய பணத்தைப் பெற்றுக் கொள்ளுங்கோ. அப்ப... போனை வைக்கட்டுமா?"என்றதும் குகன்,

"பிரச்சனையில்லை, நீங்கள் கூறுகின்றபடியே நான் செவ்வாய்க் கிழமை அங்கு வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளுகிறேன்," என்று கூறிக் கதையை முடித்துக் கொண்டான்.

'மரத்தில் ஏறவிட்ட அணிலைப் பார்த்துக் கொண்டிருந்த நாய் மாதிரி,' குகனின் வாயை அண்ணாந்து பார்த்துக்கொண்டிருந்த செம்பருத்தி,

"என்னப்பா, பிரச்சனை இல்லை வைச்சிடுங்கோ என்று சொன்னீங்கள். என்ன கூறினாள்?" என்று மிக ஆர்வத்தோடு கேட்டாள். உடனே பணம் வாங்குவதற்குச் செல்லப்போகிறார் என்று எதிர்பார்த்திருந்த செம்பருத்திக்கு,

"பணம் றெடியாம். அதை செவ்வாய்க்கிழமை பின்னேரம் துர்க்கை அம்மன் சந்நிதானத்தில் வைத்துத் தருவதற்கு விரும்புகின்றாவாம். அவளுடைய ஆசையை ஏன் கெடுப்பான் என்று நானும் பிரச்சனை இல்லை என்று சொன்னேன்," என்று குகன் சொன்னதும்,

"கிளிஞ்சிது போ! நானும் ஏதோ இன்றைக்குப் பணத்தைத் தரப்போறாளாக்குமென்று நம்பிக்கையோடு எதிர்பார்த்தேன். இவளுடைய இழுவைக் கதையில் எனக்கு இனிமேல் நம்பிக்கையில்லை," என்று வேண்டா வெறுப்பாய்க் கூறினாள் செம்பருத்தி.

மனைவியின் ஏமாற்றத்தைப் புரிந்துகொண்ட குகன்,

"நம்பவில்லை என்று சொல்லாத அப்பா. நம்பிக்கைதான் வாழ்க்கை, நம்பிக்கைதான் கடவுள், நம்பிக்கைதான் எதிர்காலம் எல்லாமே நம்பிக்கையிற்தான் தங்கியுள்ளது. என்ன!.... இன்று சனிக் கிழமை, இன்னும் இரண்டு நாட்கள் தானே இருக்கின்றன. இவ்வளவு காலமும் ஏமாற்றத்துடன் ஏங்கிக்கிடந்த நமக்கு இரண்டு நாட்கள் காத்திருப்பது பெரிய காரியமா! செவ்வாய்க்கிழமை பின்னேரம் நீரும் என்னோடு கோயிலுக்கு வாரும். பணத்தைப் பெற்று உம்முடைய கையில தருகிறேன். அப்போது ஆசைதீரப் பாரும்," என்று கூறியதும் ஒரளவு மனச்சாந்தி அடைந்த செம்பருத்தி,

"சரியப்பா," என்று சொல்லிவிட்டுச் சமையல் வேலைகளைக் கவனித்தாள். செவ்வாய்க் கிழமையை எதிர் பார்த்துக் கொண்டிருந்த செம்பருத்திக்கு, இன்று ஆனந்தம் பொங்கி வழிந்தது. காரணம், இன்று செவ்வாய்க்கிழமை.

செம்பருத்தி வேலை முடிந்து வீட்டிற்கு வந்ததும் கணவன் வந்தவுடன் தாமதிக்காமல் கோயிலுக்குச் செல்வதற்காக உடையெல்லாம் மாற்றித் தயார் நிலையில் இருந்தாள். கணவன் வந்தவுடன் தேமஸ் பிளாஸ்க்கில் இருந்த தேனீரையும் சிற்றுண்டியையும் கொடுத்துவிட்டு,

"உடுப்பை மாற்றிக்கொண்டு புறப்படுங்கோ கோயிலுக்குப் போவதற்கு," என்றதும் மனைவியின் தயார் நிலையையும் ஆர்வத்தையும்

புரிந்துகொண்டபோதும், அவசரப்பட்டுப் பிரயோசனம் இல்லை என்பதை அறிந்திருந்த குகன்,

"நாமள் முந்திப் போவதில் பிரயோசனம் இல்லை அப்பா. சுந்தரி சரியாக ஆறுமணிக்குத் தான் வருவாள்," என்று கூறிவிட்டு, ஆறுதலாய் வெளிக்கிட்டு இருவரும் கோயிலுக்குச் சென்றனர். அவர்கள் கோயிலுக்குள் கால் அடி எடுத்து வைக்கும்போது நேரம் சரியாக ஐந்து ஐம்பத்தைந்து. சுந்தரி வந்துவிட்டாளா என்பதை அறிவதற்காக கோயிலைச் சுற்றி நோட்டமிட்டாள் செம்பருத்தி. இன்னும் அவள் வரவில்லை.

இப்பொழுது நேரம் சரியாக ஆறுமணி. சுந்தரியும் கணவரும் இரண்டு பிள்ளைகளும் வருகின்றார்கள். குகனுக்கும் செம்பருத்திக்கும் மகிழ்ச்சி பொங்கிவழிகின்றது. வந்தவுடன் பணத்தை எடுத்துத் தரப் போகிறாள் என்று செம்பருத்தி ஆவலோடு எதிர்பார்க்கிறாள். ஒரு புன்சிரிப்புடன் குகனை நெருங்கிய சுந்தரி,

"பூசை முடிந்தவுடன் உங்களுடைய பணத்தைக் கொடுத்து விடுகிறேன்," என்று கூறிவிட்டு விநாயகர் சந்நிதானத்தை நோக்கி நடந்தாள். சுந்தரியின் இந்த நடவடிக்கை செம்பருத்திக்கு எரிச்சலும் ஏமாற்றமுமாயிருந்தது. குகன் அதைப் பற்றிப் பெரிதுபடுத்திக் கொள்ள வில்லை. அந்தவேளையில் சுந்தரியின் கையில் ஓர் அர்ச்சனை ரிக்கற் இருந்ததை அவாதனித்த குகன், உடனே மனைவியைப் பார்த்து,

"செம்பருத்தி, ஒன்றுக்கும் அவசரப்படாதீங்கோ. சுந்தரி அர்ச்சனை ரிக்கற் எடுத்து வைத்திருக்கிறாள். ஆனபடியால் பூசை முடிந்து, அதன்பின் அர்ச்சனையும் முடிந்த பிற்பாடுதான் பணத்தைத் தருவாள். எனவே நீரும் போய் அர்ச்சனை ரிக்கற் ஒன்று வாங்கிக் கொண்டு வாருங்கோ," என்று கூறிய குகன், சட்டைப் பையில் இருந்து ஐந்து டொலரை எடுத்துக் கொடுத்தான். பணத்தைப் பெற்றுக்கொண்டு ரிக்கற் கவுண்டரை நோக்கி நடந்துகொண்டிருந்த செம்பருத்தி,

'ஏன் இப்படி எனது பொறுமையை இவள் சோதிக்கிறாள்,' என்று தன்னுக்குள் புலம்பிக்கொண்டாள். சரியாக ஏழரை மணிக்கு ஆரம்பித்த

பூசை வழமைபோன்று எட்டு மணிக்கு நிறைவு பெற்றது. அதைத் தொடர்ந்து அர்ச்சனை ரிக்கற்றுகளைப் பெற்றுக்கொண்ட குருக்கள் ஐயா அர்ச்சனை முடிந்த பிற்பாடு எல்லோருக்கும் பிரசாதத்தை வழங்கினார். பிரசாதத்தைப் பெற்றுக் கொண்ட சுந்தரி ஒரு பக்கமாய்ச் சென்று குகனின் வருகையைப் பார்த்துக்கொண்டு நின்றாள். குகனும் செம்பருத்தியும் பிரசாதத்தைப் பெற்றுக்கொண்டு சுந்தரியிடம் சென்றனர்.

அப்பொழுது சுந்தரி தனது கைப்பையை எடுத்துத் திறந்தாள். அதைப் பார்த்துக்கொண்டு நின்ற செம்பருத்தி முப்பதினாயிரம் டொலர் என்றால் பெரிய கட்டாக இருக்கும் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கட்டுக்களாக இருக்கும். அவற்றைத் தன்னுடைய கைப்பையிற்குள் வைக்கமுடியுமா? என்று எண்ணிக்கொண்டு தனது கைப்பையின் மீது நோட்டமிட்டாள். அப்புறம் சுந்தரி எத்தனை கட்டுக்களை எடுக்கப்போகிறாள் என்று கவனமாக தலையை நீட்டி அவதானித்துக்கொண்டு நின்றாள்.

கைப்பையைத் திறந்த சுந்தரி அதனுள் இருந்த ஒரு காசோலையை எடுத்து குகனிடம் நீட்டி,

“இதில் உங்களுடைய பணம் இருக்கின்றது,” என்றாள். இதைப் பார்த்ததும் செம்பருத்திக்கு மனம் கொதிக்கத் தொடங்கியது. மறுபடியும் மறுபடியும் தனது பொறுமையைச் சோதிக்கிறாள் என்று தன்னுள் முணுமுணுத்துக் கொண்டாள். காசோலையை வாங்கிய குகன் மிகவும் கவனமாய் அதைப் பார்த்தான். காசோலையின் பின்புறத்தையும் நன்கு அவதானித்தான். அவனுடைய முகத்தில் பூரிப்பு, மனதில் மகிழ்ச்சி, இதழ்களில் புன்சிரிப்பு. மொத்தத்தில் ஒரே ஆனந்தம். உடனே குகன்,

“ரொம்பத் தாங்ஸ் சுந்தரி! ரொம்பத் தாங்ஸ்!” என்று களிப்புடன் சொன்னான். இதைப் பார்த்துக்கொண்டு நின்ற செம்பருத்திக்கு மேலும் ரென்சன் கூடியது. கள்ளச் செக்கோ வெள்ளச் செக்கோ என்று அறியாமல் இந்த மனுசன் பெரிதாய்த் தாங்ஸ் சொல்லுகிறார் என உள்ளூரப் புறுபுறுத்தாள்.

மகிழ்ச்சியோடு விடைபெற்றுக்கொண்டு குகன் வெளியில் வந்ததும், எரிச்சலோடும் மனக்குழப்பத்தோடும் நின்ற செம்பருத்தி,

"என்னப்பா! அவள் கள்ளச் செக்கைத் தந்தாளோ? வெள்ளைச் செக்கைத் தந்தாளோ? என்று அறியாமல், புன்சிரிப்போடு வாங்கிக் கொண்டு, போதாதற்கு தாங்ஸ்சும் சொல்லிப் போட்டு வாறீங்கள். இதற்குரிய பணம் வங்கியில் இருக்குமென்பதற்கு என்ன உத்தரவாதம்? இரண்டாம் பேச்சுமில்லாமல் ஏன் அப்பா செக்கை வாங்கிக்கொண்டு வாறீங்கள்? உங்களுக்கு மூளை என்ன பேதலிச்சுப் போய்ச்சா?" என்று எரிந்து விழுந்தாள். மனைவியின் சந்தேக உணர்வுகளைப் புரிந்துகொண்ட குகன்,

"மூளை இருந்தபடியாற்தான் புன்சிரிப்போடு செக்கை வாங்கிக் கொண்டு தாங்ஸ் சொல்லிப் போட்டு வருகிறேன். எல்லாவற்றிற்கும் எந்நேரமும் சந்தேகம் கொள்ளப்படாது செம்பருத்தி. இங்க பார் செக்கை, இது றோயல் வங்கிச் செக். இது அந்த வங்கியினால் உறுதிப்படுத்தப் பட்டுள்ளது. சும்மா பிளேன் செக் அல்ல. இதற்கான பணம் வங்கியில் இருந்தாற்தான் செக்கை உறுதிப்படுத்திக் கொடுப்பார் கள். இதற்குரிய பணத்தை என்னைத் தவிர வேறுயாரும் அந்த வங்கியிலிருந்து பெறமுடியாது. இப்ப புரியுதா செம்பருத்தி?" என்று கேட்டதும் சற்று மனச்சாந்தி அடைந்த செம்பருத்தி,

"நீங்கள் சொல்லுவது எனக்குப் புரிகின்றது. எதற்கும் நாளைக் காலையில் நீங்கள் முதல் வேலையாக இந்தச் செக்கை எடுத்துச் சென்று நமது கணக்கில் வைப்புச் செய்யுங்கோ. பணம் நமது கணக்கிற்கு வந்த பிற்பாடுதான் என்மனம் சாந்திப்படும். இப்ப வாங்கோ வீட்டிற்குப் போவம்," என்று கூறிவிட்டு காரில் ஏறி உட்கார்ந்து கொண்டாள்.

மனைவி வேண்டிக் கொண்டது போல் நாளை புதன்கிழமை காலை முதல் வேலையாக றோயல் வங்கிக்குச் சென்று காசோலையை தனது கணக்கில் வைப்புச் செய்தான் குகன். எந்தப் பிரச்சனையும் இல்லாமல் முப்பதினாயிரம் டொலர் அவனுடைய கணக்கில் வைப்புச் செய்யப்பட்டது.

வேலை முடிந்து முதலில் வீட்டிற்குத் திரும்பிய செம்பருத்தி கணவனின் வருகைக்காக ஆவலோடு காத்திருந்தாள். சரியாக பிற்பகல் ஆறு மணிக்கு வேலை முடிந்து வீடு திரும்பிய குகன் கதவைத்

திறந்து கொண்டு உள்ளே வந்ததும் ஆவலோடு காத்திருந்த செம்பருத்தி,

"என்னப்பா! பணம் முப்பதினாயிரமும் ஒரு பிரச்சனையும் இல்லாமல் நமது கணக்கில் வைப்பாகிவிட்டதா?" என்று ஓர் ஏக்கம் கலந்த தொனியில் வினாவினாள். குகன் புன்சிரிப்புடன்,

"டிப்பொசிற் பண்ணியாச்சப்பா," என்றான். உடனே செம்பருத்தி,

"அப்பாடா! தலை தப்பியது தம்பிரான் புண்ணியம், சுந்திரி என்றால் சுந்தரிதான்," என்று கூறிக்கொண்டு நின்மதிப் பெருமூச்சுவிட்டாள். தொடர்ந்து,

"துர்க்கை அம்பாள் உண்மையாகவே அவளுக்கு நல்ல புத்தியைக் கொடுத்துவிட்டாள். ஆகையால், போனது போகட்டும், இனிமேல் அவள் நல்லாயிருக்கவேண்டும். இனிமேல் நீங்கள் போட்ட வீடு வாங்கும் திட்டத்தை ஆரம்பியுங்கோ அப்பா," என்று கூறிவிட்டு ஆனந்தத்தோடு குசினிக்குள் சென்றாள் செம்பருத்தி.

வீட்டை விற்றுப் பெற்ற இலாபம் ஐம்பதினாயிரம் டொலரைக் கொண்டு குகனுடையதும் வேறு இருவருடையதும் கடனைக் கொடுத்த சுந்தரி மிகுதிக் கடன்களையும் கொடுத்து முடிக்கவேண்டுமென்பதில் மிக்க ஆர்வத்தோடு இருந்தாள். வீட்டை விற்றுப்பெற்ற பணத்தைக் கொண்டு திரும்ப தங்களுக்கு அளவான மூன்று அறைகளைக்கொண்ட சிறிய வீடொன்றை வாங்கினாள். அதற்கு ஐம்பது வீத டவுண் பேய் மென்ற் போட்டபின் ஐம்பாதினாயிரம் டொலர் மிகுதியாக இருந்தது. அதைக்கொண்டு மேலும் சில கடன்களைக் கொடுத்துத் தீர்த்தாள்.

சுந்தரியால் இப்பொழுது முன்பு போன்று சுறுசுறுப்பாய் நடமாட முடியாவிட்டாலும், அவளால் தையல்வேலை நன்றாகவே செய்ய முடிந்தது. நான் முன்பு கூறியிருந்தது போன்று சுந்தரி இயற்கையில் ஒரு சுறுசுறுப்பான தன்நம்பிக்கை கொண்ட ஒரு பெண். சுந்தரி தனது தையல் அனுபவத்தையும் திறமையையும் மனதிற்கொண்டு கனடாவின் சந்தை வாய்ப்பைப் பயன்படுத்தி இத்துறை மூலம் பணம் உழைக்கலாம் என்ற முடிவிற்கு வந்தாள். அதைத் தொடர்ந்து சில

தையல் மெசின்களை வாங்கி வீட்டில் பேஸ்மென்ரில் வைத்து தைக்கத் தொடங்கினாள்.

சுந்தரி எதையும் சாதிக்கும் வல்லமை படைத்தவள் என்பதை ஏற்கனவே கூறியிருந்தேன். எதையும் எப்படியும் சாதிக்கலாம் என்ற போக்கிலிருந்து மாறி, இதை இப்படித்தான் சாதிக்க வேண்டும் என்று மனம் மாறியிருப்பவள்தான் தற்போதைய சுந்தரி. இப்பொழுது அவளுடைய நினைப்பெல்லாம் முழுக்கடன்களையும் கொடுத்தழித்து விட்டு கௌரவமாக, நின்மதியாக, ஆடம்பரமற்று அளவோடு மட்டும் வாழவேண்டும் என்பதாகும்.

இதன் அடுத்த கட்டமாக, பெரிய தையல் கம்பனிகளில் ஓடர்களைப் பெற்று வீட்டில் வைத்துத் தைத்துக் கொடுத்ததன் மூலம் குறிப்பிடத்தக்க அளவு வருமானத்தை அவளால் ஈட்ட முடிந்தது. மெல்ல மெல்ல ஓடர்கள் அதிகரிக்க, தன்னால் தனித்து அவைகளை முடித்து உரியநேரத்தில் கொடுக்க முடியாது என்பதை உணர்ந்து கொண்ட சுந்தரி மேலும் இருவரை தனக்கு உதவியாக வேலைக்கு அமர்த்தி தனது முயற்சியை விரிவுபடுத்தினாள்.

இப்பொழுது சுந்தரி ஒரு சிறிய முதலாளி. வரும் வருமானத்தைக் கொண்டு தன்னுடன் வேலை செய்தவர்களுடைய சம்பளம் மற்றும் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் மிகவும் கண்ணும் கருத்துமாயிருந் தாள். பெற்ற நிகர இலாபத்தைக் கொண்டு முதலில் தனது கடன்களை அடைத்துவிட வேண்டும் என்பதில் சிறிதும் தளர்ந்து போகவில்லை. தனது கடன்களைக் கொடுத்தழித்து அவற்றிலிருந்து விடுதலை பெறவேண்டும் என்பதே சுந்தரியின் இலட்சியமாக இருந்தது என்றால் மிகையாகாது. கண்ணனும் அவளுடைய இலட்சியம் நிறை வேறுவ தற்கு தொடர்ந்து ஊக்கமும் ஒத்தாசையும் அளித்து வந்தான்.

இயற்கையிலேயே நல்ல சுபாவம் படைத்த கண்ணன் தனது மனைவி மனம் மாறி புதிய ஒரு பெண்ணாக மாறி வருவதை எப்பொழு தும் வரவேற்றான். அதற்கு வேண்டிய எல்லா ஒத்தாசைகளையும் வழங்குவதற்கு கண்ணன் ஒருபோதும் பின்நிற்கவில்லை. இலக்கை அடைவதற்கான செயற்பாட்டின் அடுத்த நடவடிக்கையாக ரொயாட்டா கம்றி காரை விற்றுவிட்டு இரண்டாயிரம் டொலருக்கு ஒரு பழைய

காரை வாங்கினாள் சுந்தரி. அதன் மூலம் குறிப்பிடத்தக்க அளவு பணத்தை கார் இன்சூரன்சிலிருந்து சேமிக்க முடிந்தது.

எந்தெந்த வழிமுறைகளில் எல்லாம் அநாவசிய, ஆடம்பரச் செலவுகளைத் தவிர்த்தும் குறைத்தும் பணத்தைச் சேமிக்க முடிந்ததோ அத்தனை வழிகளையும் பின்பற்றினாள் சுந்தரி. அவளுடைய விடாமுயற்சியாலும் புத்தி சாதுரியத்தாலும் மூன்று வருடங்களில் எல்லாக் கடன்களையும் கொடுத்தழித்து விட்டு நிம்மதிப் பெருமூச்சு விட்டாள்.

ஒரு மனிதனின் திறமை சரியான வழியில் நெறிப்படுத்தப்படும் பொழுதுதான் அதன் பிரயோசனம் முழுவதும் அம்மனிதனுக்குக் கிடைக்கிறது என்கிற உண்மை சுந்தரிக்கு மட்டுமல்ல, எல்லோருக்கும் புரிய வேண்டும்.

## அங்கம் – 7

மகளுக்கு இப்பொழுது வயது பதினெட்டுப் பூர்த்தி யாகிவிட்டது. O.A.C வகுப்பிற்குப் போவதற்கு ஆயத்தம். இப்பொழுதெல்லாம் பாடசாலை வகுப்புக்கள் முடிந்து வீட்டிற்கு வரும் நேரத்தை முன்பு போன்று கிரமமாய்க் கடைப்பிடிப்பதாய்த் தெரியவில்லை. முன்பெல்லாம் பிற்பகல் ஐந்து மணிக்கு கிரமமாய் பாடசாலையால் வீட்டிற்கு வந்த ரூபினி இப்பொழுது ஆறு மணி, ஏழு மணி, எட்டு மணி என்று நேர ஒழுங்கு இல்லாது, தான் நினைத்தபாட்டில் வீட்டிற்கு வருவது வழமையாகி விட்டது. நாட்கள் செல்லச் செல்ல நேர ஒழுங்கீனம் மோசமடைந்து செல்வதை அவதானித்த கண்ணனும் சுந்தரியும், இதன் விளைவு என்னவாய் முடியப் போகின்றதோ என எண்ணிக் கவலைப் பட்டனர். முன்பெல்லாம் தாமதித்து வரவேண்டிய தேவையிருக்கும் போது அதைப் பற்றி முதல் நாளே சொல்லிவிட்டுச் சென்ற பிள்ளை இப்பொழுது அதைப் பற்றிக் கவலைப்படுவதே இல்லை. முன்பெல்லாம் சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் வெளியே செல்லும்போது எங்கு போகிறேன் எப்போது வருவேன் என்று அம்மா அப்பாவிடம் கூறிவிட்டுச் சென்ற பிள்ளை, இப்பொழுது அவற்றைப் பற்றி எதுகும் பேசாமல் போய் வருகிறது. மொத்தத்தில் ரூபினியின் செயற்பாடு பெற்றோருக்குத் தான்தோன்றித் தனமாய் நடப்பதுபோற் தென்பட்டது.

ஒருநாள் காலை எட்டு மணிக்குப் பாடசாலைக்குச் சென்ற ரூபினி இரவு பத்து மணிக்கு வீட்டிற்கு வந்தாள். பிற்பகல் எட்டு மணியிலிருந்து பிள்ளையைக் காணவில்லையே! பிள்ளையை இன்னும் காண வில்லையே! என்று ஏங்கிக் கொண்டிருந்த சுந்தரிக்கு மகளின் வருகை ஆறுதல் அளித்தபோதும், இனிமேல் இதற்கு இடம் அளிக்கப்படாது என்று எண்ணத் தோன்றியது. உடனே சுந்தரி,

"எங்க பிள்ளை போயிட்டு வாறாய்? இப்ப நேரம் என்ன? ஏன் இவ்வளவு தாமதமாய் வாறாய்?" என்று கேள்விகளைப் போட்டாள்.

"நான் என்னுடைய தேவைகளோடுதான் போயிட்டு வாறன். இப்ப நேரம் பத்து மணி. இது பெரிய தாமதமென்றில்லை. தாமதித்து வந்தாலும் அது தப்பென்று சொல்லுவதற்கில்லை. தாமதிக்க வேண்டிய தேவையிருந்தால் தாமதித்துத்தானே வரவேண்டும்!" எனச் சுறுக்கென்று சொன்னாள் ரூபினி.

இதற்கு முன் இவ்வாறான அனுபவத்தை மகளிடமிருந்து பெற்றி ருக்காமையினால், இப்பதில்கள் சுந்தரிக்குச் சிறிய அதிர்ச்சியை ஏற்படுத்தியது என்றால் வாஸ்தவந்தான். இருந்தபோதும் மகளின் எதிர்காலம் பாழாகிவிடப்படாதே என்ற ஆதங்கத்தில்,

"தேவையோடுதான் போயிட்டு வாறன், தேவையோடுதான் தாம தித்து வாறன் என்று சொல்லுகிறாய் பிள்ளை! உன்னுடைய தேவை கள் என்ன? அவை உனக்கு அவசியமானவையா? எங்களால் ஏற்றுக் கொள்ளப்படக் கூடியவையா? அல்லது ஏற்றுக்கொள்ளப்பட முடியாத வையா? என்று அறியும் உரிமை எங்களுக்கும் உண்டல்லவா பிள்ளை!" என்று கேட்டு முடிந்ததுதான் தாமதம்,

"என்னுடைய சொந்த விடையங்களில் நுழைவதற்கு உங்களுக்கு உரிமை இல்லை. தேவையா? தேவையற்றவையா என்று எனக்குத் தான் தெரியும். எனக்குத் தேவையானது உங்களுக்குத் தேவையற்றது போன்று படலாம். அதற்காக நான் அதை விட்டுக்கொடுக்க முடியாது. எனது தேவையையும் தேவையீனத்தையும் நான்தான் தீர்மானிக்க வேண்டும்," எனச் சூடான வார்த்தைகளில் பதில் வந்தது. எந்தக் கட்டத்திலும் பொறுமையை இழந்து விடப்படாது என்று எண்ணிக் கொண்டு,

"சரி... உன்னுடைய தேவைகள் உன்னோட. நாங்கள் அதில தலையீடு செய்யவில்லை. இருந்தபோதும் உன்னுடைய பாதுகாப்பிற காகவேனும் நீ எங்க போறாய்? ஏன் போறாய்? எப்பொழுது திரும்ப வருவாய்? என்ற விடயங்களாவது எங்களுக்குப் பெற்றாரென்ற முறையிற் தெரிந்திருக்க வேண்டுந்தானே பிள்ளை! நாளைக்கு ஒன்று நடந்திட்டால், அப்புறம் பொலிசுக்காரன் வந்து உங்களுடைய மகள் எங்க போனவா? ஏன் போனவா? எப்ப போனவா? என்று கேள்வி களைக் கேட்கும்போது அவற்றிற்குப் பதில் சொல்லுவதற்காகவேனும் நீ போய்வாறதைப் பற்றி நாங்கள் தெரிந்திருக்கத்தானே வேண்டும்! மொட்டையில எங்களுக்கு ஒன்றும் தெரியாது என்று பொலிசுக்கார னுக்கு பதில் சொல்ல முடியுமே? அப்படிச் சொன்னால் அவன் எங்க ளைப் பற்றி என்ன நினைப்பான்?" என்று சொல்லிக்கொண்டு போக, மேலும் கொதிப்படைந்த ரூபினி,

"எனக்கு இப்ப வயது பத்தொன்பது நடக்கிறது. நான் எங்கும் போகலாம், எப்பொழுதும் போகலாம். உங்களுக்குச் சொல்லிப்போட்டு உங்களுடைய அனுமதியைப் பெற்றுக் கொண்டுதான் போகவேண்டு மென்ற அவசியம் இல்லை. நீங்கள் நினைப்பது போன்று ஏதும் அசம்பாவிதம் நடந்திட்டால், பொலிசுக்காரன் என்னைப் பற்றிக் கேட்கும் கேள்விகள் எல்லாவற்றிற்கும் நீங்கள் பதில் சொல்லவேண்டிய அவசிய மும் இல்லை. அவ போவது வருவதைப் பற்றி எங்களுக்கு எதுவும் சொல்வதில்லை என்று நீங்கள் சொன்னால், உங்களைப் பொலிசுக் காரன் ஒன்றும் பண்ண மாட்டான், பண்ணவும் முடியாது.

தேவையற்றுக் கதைத்து நேரத்தை வீணாக்காமல் ஏதும் வேலையி ருந்தாற் போய்ப் பாருங்கோ அம்மா. இந்த நாட்டில நேரம் பொன்னா னது," என்று கூறிவிட்டு கதவை அடித்துச் சாத்திக்கொண்டு அறையி னுள் சென்றாள் ரூபினி.

பெத்த பிள்ளை நெஞ்சில எட்டிக் காலால் உதைத்து விட்டது போன்ற உணர்வுடன் குசினிக்குள் சென்ற சுந்தரி யோசித்துக் கொண்டி ருந்தாள். அப்பொழுது நண்பனின் வீட்டுக்குச் சென்றுவிட்டு வந்த கண்ணன் மனைவியைப் பார்த்ததும் ஏதோ பிரச்சனைபோலும் என்று எண்ணிக் கொண்டு,

"என்னப்பா! 'கப்பலோடு கவிழக்கொடுத்தவன் மாதிரி' யோசித்துக் கொண்டிருக்கிறீர்! என்ன நடந்தது?" என்று பகிடி விடுபவன் போன்று கேட்டான்.

"கப்பலென்ன கப்பல்! எல்லாமே கவிண்டு போய்ச்சு, இனியென்ன கவிழக்கிடக்கு?" என்று விரக்தியோடு கூறியதைக் கேட்டு சிறிது அச்சமடைந்த கண்ணன்,

"புதிர் போடாமல், கொஞ்சம் விளக்கமாய்ச் சொல்லுமேன். அப்ப தானே விடயத்தை என்னால் புரிந்துகொள்ள முடியும்," எனக் கேட்டதும் சுந்தரி நடந்தவற்றை விபரமாய்ச் சொல்லி முடித்துவிட்டு,

"இதற்கு என்னப்பா செய்யலாம்?" என்று சிறிது ஏக்கத்தோடு கேட்டாள். மனைவி சொன்னதைக் கேட்டுவிட்டு ஆழமாகச் சிந்தித்த கண்ணன் சில நிமிடங்களின் பின் ஏதோ வெளிச்சவன் போன்று,

"இந்த விடையத்தில் நாம் கொஞ்சம் ஓடவிட்டுத்தான் பிடிக்க வேண்டும். நமது உணர்வுகளை மட்டும் கருத்திற் கொண்டு திடீரென இறுக்கிப் பிடித்தால், அறுத்துக்கொண்டு நமது பிடியிலிருந்து விலகிப் போகக்கூடிய நிலைமையும் ஏற்படலாம். இந்த நாட்டு மணவாசனை அப்படியானது! எனவே கொஞ்சம் பொறுமையாய் இருப்பம். நீர் இப்போ உன்னாலியன்ற புத்திமதிகளைச் சொல்லிப் போட்டீர்தானே! தொடர்ந்து நானும் ஏதாவது சொன்னால் அவளுக்கு நாம் இருவரும் சேர்ந்து பெரும் நெருக்குதல் கொடுப்பது போன்று படலாம். அதன் எதிர்விளைவுகள் பாரதூரமானவை யாயும் அமையலாம். ஆனபடியால் கொஞ்சம் பொறுமையாய் இருப்பம்," என்று கூறி மனைவியைச் சாந்தப்படுத்திவிட்டு படுக்கைக்குச் சென்றுவிட்டான் கண்ணன்.

இரண்டு வாரத்தின் பின் ஒரு வெள்ளிக்கிழமை இரவு பத்து மணியாகியும் காலையில் பாடசாலைக்குச் சென்ற ரூபினி வீடு திரும்பவில்லை. இருவரும் மகளைப் பற்றி யோசிக்கத் தொடங்கினர். ஒருபுறம் மகளின் பாதுகாப்பைப் பற்றியும் மறுபக்கம் மகளின் நடத்தை பற்றியும் எண்ணங்கள் எழுந்தவண்ணமிருந்தன. நேரம் பதினொன்றைத் தாண்டிப் பன்னிரண்டை அண்மித்துக் கொண்டிருந்தது. சுந்தரியால் இருப்புக்கொள்ள முடியவில்லை. கதவடிக்குப் போவதும் அதைத் திறந்து பார்ப்பதும் பின் திரும்பி வருவதும், மறுபடியும் சென்று யன்

லூடாகப் பார்ப்பதும், திரும்பி வருவதும் என்று சுற்றிச் சுழன்றுகொண்டு நின்றாள்.

இப்பொழுது நேரம் பன்னிரண்டையும் கடந்துவிட்டது. இதற்குமேல் சுந்தரியாற் தாக்குப்பிடிக்க முடியவேயில்லை. கண்ணனும் கூட சிறிது ஆட்டங்காணத் தொடங்கினான் என்றால் மறுப்பதற்கில்லை. றேடியோ, ரி.வி., பத்திரிகைகளில் வரும் விபரீதமான செய்திகள் கண்ணனின் எண்ணத்தில் தோன்றி மறைந்து கொண்டிருந்தன. அத்தோடு மகளின் எதிர்கால வாழ்க்கை எப்படி அமையப் போகின்றதோ! என்பதைப் பற்றிய ஏக்கமும் கவலையும் மனதில் பாரத்தை ஏற்றிக்கொண்டே இருந்தன.

இப்பொழுது நேரம் சரியாக பின்னிரவு ஒரு மணி. சுந்தரி கதவடியில் நின்றுகொண்டு கதவை அடிக்கடி திறந்து பார்ப்பதும் மூடுவதாயும் இருந்தாள். அப்பொழுது அவளருகில் வந்த கண்ணனுக்கு தமிழ் றேடியோ ஒன்றில் நேயர் ஒருவர் சொன்ன செய்தி ஞாபகத்திற்கு வந்தது.

"இரவு ஒரு மணிக்கு கென்னடி ஸ்ரேசனுக்குப் போனாற்தான் எங்களுடைய தமிழ்ப் பிள்ளைகள் போடுகின்ற கூத்தும் கும்மாளமும் தெரியும். நம்மட பெடியன்களும் பெட்டைகளும் சேர்ந்து என்ன கூத்தும் கும்மாளமும் போடிறாங்கள் தெரியுமே! நாமள் வீட்டிற்குள்ள இருந்து கொண்டு நம்மளுடைய பிள்ளைகளெல்லாம் திறம் என்று எண்ணப்படாது. இதை நான் என்னுடைய இரண்டு கண்களாலும் பார்த்துவிட்டுத்தான் சொல்லுகிறேன்," என்று சொன்னது மறுபடியும் காதில் ஒலிப்பது போன்று கேட்டது கண்ணனுக்கு.

இதை மனைவிக்கு இப்போது சொன்னால் மேலும் அவள் மூளையை ஓடவிட்டுவிடுவாள் என்று எண்ணிக்கொண்டு கதவைத் திறந்து பார்த்தான். அப்பொழுது கார் ஒன்று வந்து நின்றது. அதிலிருந்து இறங்கிய ரூபினி,

"Good Night Mike!" என்றாள். பதிலுக்கு 'Good Night Rubi!' என்றான். கார் சுறுக்கென்று புறப்பட்டுச் சென்றது. உடனே கதவைச் சாத்திக்கொண்ட கண்ணன் ஒன்றும் அறியாதவன் போன்று கதவடி யிலிருந்து விலகிச் சென்றான். கதவைத் திறந்துகொண்டு ரூபினி

உள்ளுக்கு வந்தபொழுது கொதித்துப்போயிருந்த சுந்தரி,

"நில் இங்க! இப்ப நேரம் என்ன? இதுவரை எங்க போயிட்டு வாறாய்? காலை எட்டு மணிக்கு பாடசாலைக்கென்று போன நீ! இப்ப வாற நேரம் என்ன? எங்க போறாய் வாறாய் என்று போண் பண்ணிச் சொல்லியிருக்கலாமல்லே? நீ என்ன நினைச்சுக்கொண்டு திரிகிறாய் உன்பாட்டில்?" என்று கேள்விமேல் கேள்விகளைப் போட்டாள்.

அவற்றையெல்லாம் பற்றிக் கவலைப்பட்டுக் கொள்ளாத ரூபினி,

"அம்மா, நான் தேவையோடுதான் போயிட்டு வாறன்," என்று சொல்லி வாய் மூடுவதற்குள் முற்றாகப் பொறுமையை இழந்த சுந்தரி,

"என்னடி! தேவையோடுதான் தேவையோடுதான் போயிட்டு வாறனன் என்கிறாய்! அந்தத் தேவையை நாங்கள் தெரிந்துகொள்ளப் படாதோ?" என்று அதட்டிக் கேட்டாள். அம்மா அளவிற்கு மீறி உணர்ச்சி வசப்படுகிறா என்று எண்ணிய ரூபினி நிதானமாக,

"அம்மா, எங்களுடைய பாடசாலையால் டான்ஸ் கிளப்பில் டான்ஸ் புறோகிறாம் ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டு இருந்தது. அங்குதான் போயிருந்தேன். நாங்கள் எதிர்பார்த்த நேரத்தைவிட அது தாமதமாய்த்தான் நிறைவுபெற்றது. அதனாலதான் இவ்வளவு தாமதம் . தாமதம் என்று தெரிந்து கொண்டுதான் என்னுடைய பிறண்ட் (friend) காரில் கொண்டு வந்து இறக்கிவிட்டுப் போறான்," என்றதும் மேலும் குழம்பிய சுந்தரி,

"யார் அவன்? பிறண்ட் (friend) கறுப்பனா? வெள்ளையனா? நம்மவனா?" என்று கேட்டுவிட்டு ஏக்கத்தோடு மகளின் வாயைப் பார்த்தாள். அம்மாவினுடைய கேள்விகள் ஈழத் தமிழ் மண்வாசனையின் பிரதிபலிப்புக்கள் என்று எண்ணிக் கொண்டு மேலும் நிதானமாக,

"வெள்ளையன், என்னோடு ஒன்றாகப் படிப்பவன், எனது நண்பன். என்னில அவனுக்கு நல்ல விருப்பம். அதுதான் என்னைக் கொண்டுவந்து இறக்கிவிட்டுப் போறான், தான் தூரம் போகவேண்டும் என்பதைப் பற்றியும் கவலைப்படாமல்," என்று சொன்னாள் ரூபினி. இக்கட்டத்தில்

என்ன செய்வது என்ன சொல்லுவது என்று புரியாமல் மனம் குழம்பிய நிலையில் மனைவி அவஸ்த்தைப் படுவதைப் பார்த்த கண்ணன்,

"பாடசாலையில் டான்ஸ் புறோகிறாம் இருக்கென்றால் எங்களுக்குச் சொல்லிப்போட்டுப் போயிருக்கலாமல்லே பிள்ளை? அப்படிச் சொல் லிப்போட்டுப் போயிருந்தால், நாங்கள் இப்படிக் கிடந்து ஏங்கத் தேவையில்லையே பிள்ளை!" என்று மெதுவாய்க் கேட்டான். அப்பா வினுடைய கேள்விக்குப் பொருத்தமாய்ப் பதில் சொல்லவேண்டும் என்று எண்ணிய ரூபினி, சிறிய புன்சிரிப்பை வரவழைத்துக்கொண்டு,

"ஏன் அப்பா! நான் சின்னப்பிள்ளையே! எல்லாவற்றிற்கும் சொல்லிப் போட்டுப் போவதற்கு? இப்பொழுது எனக்குப் பத்தொன்பது வயது. என்னைப் பாதுகாக்க எனக்குத் தெரியாதா? என்ன கதைக் கிறீர்கள்? சும்மா விடுங்கோ அப்பா! தேவையற்று அலட்டிக் கொள்ளாமல்!" என்று சாதாரணமாய் கூறிவிட்டுத் தனது அறையினுள் சென்றாள்.

அப்பொழுது சுந்தரி கணவனின் முகத்தை ஒருமாதிரிப் பார்த்தாள். அவளின் பார்வை "பார்த்தீங்களா! என்ன சொல்லிப்போட்டுப் போறா ளென்று!" எனக் கேட்பதுபோற் பட்டது. இதை உணர்ந்துகொண்ட கண்ணன்,

"கொஞ்சம் விட்டுத்தான் பிடிக்கவேண்டியிருக்கு," என்று சொல்லிக் கொண்டு முன் கதவைப் பூட்டிச் சங்கிலியையும் போட்டுவிட்டு

"வா போய்ப் படுப்பம்," என்று சொல்லிக்கொண்டு படுக்கை அறைக்குச் சென்றான்.

இரண்டு வாரங்கள் கழித்து ஒரு வெள்ளிக்கிழமை இரவு, முன்பு போன்று பத்து மணியாகியும் மகளைக் காணவில்லை. ரீ.வி. பார்த்துக் கொண்டிருந்த கணவனிடம் சென்ற சுந்தரி,

"என்னப்பா! 'வேதாளம் திரும்பவும் முருங்கை மரத்தில் ஏறிய கணக்காய்' அவளை இன்றைக்கும் காணவில்லை! நேரம் பத்து மணிக்கு மேலாகிவிட்டது! எனக்கு என்ன செய்வதென்றே தெரிய வில்லை! தலையுக்குள்ளும் ஏதோ செய்யுதப்பா!" என்று சொல்லி

வேதனைப்பட்டுக் கொண்டாள். மனைவியின் கதையைக் கேட்டுச் சிறிது எரிச்சல் அடைந்தவன் போன்று,

"இங்க பாரப்பா! நீர் உம்முடைய மண்டையைக் குழப்பி உம்மை வேதனைப்படுத்துவது மட்டுமல்ல, என்னுடைய மண்டையையும் குழப்பி என்னையும் வேதனைக்குள்ளாக்கிறீர்!" என்று சொல்லியதுதான் தாமதம்,

"ஏனப்பா! அப்படிச் சொல்லுகிறீங்கள்? உங்களுக்குப் பிள்ளையைப் பற்றிக் கவலை இல்லையே? நான் மட்டுந்தானே பெத்தனான்! என்றதும் மேலும் எரிச்சலடைந்த கண்ணன்,

"சும்மா விசர்க்கதை கதைக்காதையும்! நான் பெத்தது நீ பெத்தது என்று! நாமள் இருவரும் சேர்ந்துதான் பெத்ததென்று எனக்கு ஞாபகமிருக்கு. சும்மா போட்டு உமது மனதைக் குழப்பாமல் கொஞ்சம் பொறுமையாய் இரும்! மனதைப் போட்டுக் குழப்புவதன் மூலம் நீர் மனநோயாளியாய் மாறுவதேயொழிய அவள் இப்ப வரப்போவதில்லை. இப்ப நேரம் பத்தரைதானே! கொஞ்சம் பொறுமையாய் இரும். என்ன நடக்குதென்று பார்ப்பம்!," எனக் கூறிவிட்டு ரீ.வி.யில் கவனத்தைச் செலுத்தினான். மிகுந்த கவலையோடு கதையை நிறுத்திக் கொண்ட சுந்தரி,

"பொறுத்திருந்து எதையோ கிளிச்சுக்கொட்டுபவர் மாதிரி என்னைப் பொறுத்திருக்கச் சொல்லுகிறார். என்னத்தைக் கிளிச்சுக்கொட்டுகிறார் இண்டைக்கென்று பார்ப்பம்!" தன்னுள் புறுபுறுத்துக் கொண்டாள்.

நேரம் பதினொன்றாகிப் பன்னிரெண்டுமாகிவிட்டது. மணிக்கூட்டைப் பார்க்கப் பார்க்கச் சுந்தரிக்கு ரென்சன் அதிகரித்துச் சென்றது. நேரம் பன்னிரண்டரையையும் கடந்து விட்டது. சுந்தரியால் சோபாவிலேயோ அல்லது கதிரையிலேயோ இருக்கமுடியவில்லை. ஏதோ நெருப்பை வயிற்றிற் கட்டியவள் போன்று அங்குமிங்கும் திரிந்தாள். இதை நன்கு அவதானித்த கண்ணன் நேரத்தையும் பார்த்துவிட்டு திடீரென்று எழும்பி,

"சுந்தரி! இப்படி நீர் ரென்சனாகினால் உமக்கு டிப்பிறெஷன் வந்துவிடும். கொஞ்சம் றிலாக்ஸ் பண்ணும்!" என்று ஆறுதல் கூற,

"ஏற்கனவே டிப்பிறெஷன் வந்துவிட்டது. இனியென்ன கிடக்கு வருவதற்கு! இப்படிக் கிடந்து வேதனைப்படுவதிலும் பார்க்க எங்காவது விசர் ஆஸ்ப்பத்திரியிற் போய்க்கிடந்து செத்துப்போனாலும் பரவாயில்லைப் போல் தோணுது," என்று விரக்தியின் விளிம்பிற்குப் போனவள் போன்று கூறினாள் சுந்தரி. இதைக் கேட்டு அச்சமடைந்த கண்ணன், தான் எரிச்சலுடன் சொல்வதும் தப்புத்தான் என்பதை உணர்ந்து கொண்டு,

"இண்டைக்கு அவள் வரட்டு! ஒரு கை பார்க்கிறேன்! வீட்டை விட்டுப் போகப்போறியா? அல்லது ஒழுங்காய் வீடு வாசலில் இருக்கப் போறியா? என்று கேட்கிறேன், வரட்டும்!" என்று சொல்லி வாய் மூடுவதற்குள்,

"வீட்டைவிட்டுப்போகப்போறியா? என்று கேட்கவேண்டாம் அப்பா! அப்படிக் கேட்டால் இதுதான் சாட்டென்று அவள் போனாலும் போய் விடுவாள். இந்த நாட்டு மண்வாசனை அப்படி! இந்த நாட்டு மண்வாசனையை நுகர்ந்து வளர்ந்தவள் அவள்! அவள் வீட்டைவிட்டுப் போனால் அப்புறம் என்னால் உயிருடன் இருக்கமுடியாது! ஆகையால் அவளுக்குச் சொல்லித்தான் திருத்த வேண்டும்," என்றால் சுந்தரி.

"இதைத்தான் அப்பா! தாய்ப்பாசம் என்பது! பிள்ளை எப்படித்தான் எம்மை வேதனைப்படுத்தினாலும் பிள்ளைக்கென்று ஒரு துன்பம், இடைஞ்சல் வரும்போது அதைப் பெத்தமனம் தாங்கமாட்டாது. அது தான் இப்பொழுது உன்னிடம் வெளிப்படுகின்றது. அந்தத் தாய்ப் பாசத்தைப் பிள்ளைகள் உணர்வதில்லையே!! இதுதானே கொடுமை!... சரி... உன்னுடைய உணர்வுகளை நான் புரிந்துகொள்கிறேன். வரட்டும் புத்தி சொல்லிப் பார்ப்பம்! அடிக்குமேல் அடி அடித்தால் அம்பியும் நெகிழுந்தானே!" என்று சொல்லிக் கொண்டு போக கதவு மணிச்சத்தம் கேட்டது.

"வந்திட்டாள் போலும்!" என்று சொல்லிக்கொண்டு அவசரமாய்ப் போய்க் கதவைத் திறந்தாள் சுந்தரி. எதிரில் நின்ற ரூபினி தான் வந்திறங்கிய காரைப் பார்த்து,

"Good Night" சேகர்!" என்றதும் பதிலுக்கு 'Good Night"

ரூபி!''என்று ஓர் இளைஞனின் பதில் வந்தது. ஒன்றும் பேசாமல் அம்மாவை விலத்திக்கொண்டு உள்ளுக்குள் சென்றாள் ரூபினி. உடனே மணிக்கூட்டைப் பார்த்த கண்ணன்,

"இங்க நில்லு பிள்ளை! நேரத்தைப் பார்! நேரம் இரவு ஒன்றரை மணி. நீ ஒரு குமர்ப்பிள்ளை, சொல்லாமற் கொள்ளாமல் நீ நினைத்த பாட்டிற்குப் போயிட்டு வாறாய்," என்று சொன்னதுதான் தாமதம் கொதித்துக் கொண்டிருந்த எரிமலை பீறிட்டது போன்று,

"யாரடி அவன்! உன்னைக் கொண்டுவந்து இறக்கிவிட்டுப் போறவன்? அண்டைக்கு ஒரு வெள்ளையனோடு வந்திறங்கினாய்! இன்று இன்னொருவனோடு வந்திறங்கிறாய்! என்ன நினைச்சுக்கொண்டு இப்படித் திரிகிறாய்! எங்களுக்கென்று ஒரு கலை கலாச்சாரம் பண்பாடு இருக்கு! அது உனக்குத் தெரியுமா? ஏண்டி! இப்படித் தெருநாய் போன்று திரிந்து எங்கட மானத்தை வாங்கிறாய்? இதை நாலுபேர் நம்ம சனம் அறிந்தால் எங்களைப் பார்த்துக் காறித் துப்புங்கள். நாளைக்குத் தலைநிமிர்ந்து வீதியில் நடக்க முடியாதடி!" என்று ஆவேசத்தோடு சொல்லிக் கொண்டு போக, குறுக்கிட்ட ரூபினி சிறிது பொறுமையை இழந்தவளாய் கடுந்தொனியில்,

"அம்மா! தெருநாய் போல என்று சொன்னீங்கள். I don't like these words! நீங்கள் ரொம்ப, அர்த்தமில்லாமல் உணர்ச்சிவசப்படுகிறீங்கள். நான் தெருநாயல்ல! நான் ஒரு நல்ல பொண்ணு! என்னைக் காரில் கொண்டுவந்து இறக்கிவிட்டுப் போனவர் என்னுடைய போய் பிறன்ட் (Boy friend). அவரும் ரொம்ப நல்லவர். அவரோடு டான்ஸ் கிளப்பிற்குத்தான் இன்று போயிருந்தேன். அவர் தன்னுடன் வரும்படி கேட்டார். அதனால போயிருந்தேன். நேரம் போய்விட்டதுதான். அது எனக்குப் புரியுது. இருந்தபோதும் டான்ஸ் கிளப்பின் நேரக்கட்டுப்பாடு எங்களுடைய கையில் இல்லாதபடியினால் நாங்கள் ஒண்ணும் பண்ண முடியாது," என்று நிதானமாய்ச் சொன்னாள்.

இன்றும் டான்ஸ் கிளப்பிற்குத்தான் போயிட்டு வாறன் என்று சொன்னதைக் கேட்டு மேலும் அதிர்ச்சியடைந்த சுந்தரி மனம் குழம்பி வாயில் வந்தபடி,

"அடியே! டான்ஸ் கிளப் டான்ஸ் கிளப் என்று சொல்லிக்கொண்டு அண்டைக்கு ஒரு வெள்ளையனோடு போயிட்டு வாறாய்! இண்டைக்கு இன்னொருத்தனோட போயிட்டு வாறாய்! எங்களுக்கெண்டு ஒரு கலை, கலாசாரம் பண்பாடு நாகரீகம் இருக்கென்று தெரியுமா? தெருநாய் போல் என்று சொன்னவுடன் உனக்கு ரோசம் பத்துது! இப்படித் திரியிற உன்னை எப்படிச் சொல்லுவது? ஏண்டி எங்கட மானத்தை வாங்கி, எங்களை மனநோயாளி ஆக்குகிறாய்? இதெல்லாம் நாங்கள் செய்த பாவந்தானே!" என்று சொல்லிக் கொண்டு தலையில் அடித்துத் தனது வயித்தெரிச்சலைக் கொட்டித் தீர்த்தாள். அப்பொழுது அவளுக்கு அழுகையும் கூட வந்துவிட்டது. இதைப் பார்த்த ரூபினிக்கு உண்மையை அம்மாவுக்குப் புரியவைக்க வேண்டும்போற் தோன்றியது.

"அம்மா! றிலாக்ஸ் பிளீஸ்!! (Relax please) நான் சொல்லுவதை கொஞ்சம் நிதானமாய்க் கேளுங்கோ! அண்டைக்கு டான்ஸ் கிளப்பிற்குப் போனது பாடசாலையின் மூலம். அன்று என்னைக்கொண்டு வந்து விட்ட வெள்ளையன் என்னுடைய பாடசாலை பிறண்ட். எனக்கு வர வசதியில்லாமையால் அன்று அவன் கொண்டு வந்து விட்டான். அது அவன் எனக்குச் செய்த உதவி. அதாவது தேவைகருதிச் செய்யப்பட்ட உதவி. இன்று என்னைக் கொண்டு வந்து விட்டவர் என்னுடைய boyfriend எங்களுடைய படிப்பு முடிந்தவுடன் அவரைத் தான் நான் கல்யாணம் பண்ணிக்கப் போறன். இன்று அவர் செய்தது தனது girl friend இற்குச் செய்த உதவி. இதில ஒரு தப்பும் இல்லை அம்மா!" என்று கதையைச் சொல்லி முடிப்பதற்குள் குறுக்கிட்ட சுந்தரி,

"அப்ப... நீ! இதைப் பற்றி ஒன்றும் எங்களுக்கு இதுவரை சொல்லவில்லையே!" என்று கேட்க, இடையிற் புகுந்த கண்ணன்,

"நீ கொஞ்சம் பொறப்பா! பிள்ளை சொல்ல வந்தவற்றையெல்லாம் முதலில் சொல்லி முடிக்கட்டும். அப்புறம் நீ கதைக்கலாம்," என்று சிறிது கண்டிப்பான தொனியிற் சொன்னான்.

உடனே ரூபினி, "தாங்ஸ் அப்பா!" என்று சொல்லிவிட்டுத் தொடர்ந்து,

"அம்மா! நான் அன்று அவனுடனும் இன்று இவனுடனும் டான்ஸ் கிளப்பிற்குப் போய் வந்தபடியால், நான் ஒழுக்கம் கெட்டவள் என்று எண்ணிக்கொண்டு தெருநாய் போல என்று சொன்னீங்கள் அம்மா! ஆனால் நான் ஒழுக்கம் கெட்டவளல்ல. இருந்தபோதும் நீங்கள் அப்படிக் கேட்டதற்குக் காரணம் நீங்கள் பிறந்து வளர்ந்த ஊரின் மண்வாசனை! வயது வந்த ஓர் ஆணும் ஒரு பெண்ணும் ஒன்றாய்ப் போய் வந்தால், ஒன்றாய்ப் பழகினால் நீங்கள் கிசுகிசுக்கத் தொடங்கிவிடுவீங்கள். இதுதான் உங்க நாட்டுப் பண்பாடு. உங்க நாட்டில வேலையில்லாத பெண்களுக்கு இப்படியான கிசுகிசுப்புக்கள் அரட்டை அடிப்பதற்கும் வம்பளப்பதற்கும் நல்ல பொழுதுபோக்குத் தலைப்புக்கள். உங்களுடைய உயர்ந்த பண்பாட்டின் அழிக்கமுடியாத சின்னங்கள்! இங்க அப்படி இல்லையே! ஏன்? உங்களுக்கு இங்க நிறைய வேலைகளிருக்கு! உங்களுடைய வேலையைப் போய்ப் பாருங்கோ!," என்று கூறிவிட்டு அறையினுள் போக முற்பட்டபோது,

"நீ என்ன சொன்னாலும் ஏது சொன்னாலும் இரவில் டான்ஸ் கிளப்பிற்குப் போவதை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது. அது எங்களுடைய கலாச்சாரம், பண்பாட்டிற்கு ஒத்துவராது. அதைக் கேவலமாய்த்தான் எமது சமூகம் பார்க்கும்," என்று மறுபடியும் சுந்தரி கூறியதும், சற்று உணர்ச்சி வசப்பட்ட ரூபினி,

"அம்மா! கேவலம் என்ற வார்த்தையைப் பயன்படுத்த வேண்டாம் அம்மா! உண்மையான கேவலம் என்னவென்று உங்களுக்குத் தெரியுமா?

நீங்கள் பணத்தை வட்டிக்கென்று பலரிடமிருந்து வாங்கிவிட்டு, வட்டியும் கொடுக்காமல் முதலும் கொடுக்காமல் ஏமாற்றினீங்களே! அது கேவலம். கொடுத்த பணத்தைத் திரும்பப் பெறுவதற்கு வீடுதேடி வந்தவன்களை மனச்சாட்சி இல்லாமல் பொலிசைக் கூப்பிடுவேன் என்று சொல்லி விரட்டியடித்தீங்களே! அது கேவலம். அத்தனை பேர் மத்தியிலும் உங்களைத் திட்டித் தீர்த்துச் சாபம் போட்டதைக் கேட்டுக்கொண்டும் வீராப்புப் பேசினீங்களே! அது கேவலம். சீட்டுப் பிடிப்பதை ஆரம்பித்து மற்றையவர்களுடைய பணத்தை எந்த நியாயத்திற்கும் உட்படாத வகையில் சுருட்டினீங்களே! அது கேவலம். உண்மையை மறைப்பதற்காக ஒன்றுக்கு நூறு பொய் சொல்லி

உங்களுடைய மனச்சாட்சியைக் கொலைசெய்து புதைத்தீங்களே! அது கேவலம். உங்களுடைய அராசகத்திற்கு ஒத்துவரவில்லை என்பதற்காக கட்டிய கணவனை விவாகரத்துச் செய்வேன் என்று மிரட்டினீங்களே! அது கேவலம்.

இவ்வாறு நீங்கள் செய்த செயல்களின் கேவலங்களை அடுக்கிக் கொண்டே போகலாம். இவற்றையெல்லாம் குத்திக்காட்டி உங்களுடைய மனதை வேதனைப்படுத்த வேண்டும் என்பதற்காக நான் இவற்றைச் சொல்லவில்லை. உண்மையான கேவலம் எது என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்பதை உணரவேண்டும் என்பதற்காக மட்டும் சொல்லுகிறேன். என்மீது கோபப்படாமல் உண்மையைப் புரிந்துகொள்ள முயற்சி பண்ணுங்கோ!" என்று கூறியபொழுது,

"அப்படிப் போடடி மகளே! அருவாளை!" என்று தனது மனதிற்குள் கூறிக்கொண்டான் கண்ணன். சிங்கத்தைத் திருத்துவதற்கு சிங்கக்குட்டி தான் வளர்ந்து வரவேண்டும். காளையாலயா திருத்த முடியும்? நானும் ஒருத்தன் கோயில் மாடுமாதிரி இருக்கிறேன்! என்று தனது இயலாமையையும் நினைந்து கொண்டான் கண்ணன்.

மகளின் கதையைக் கேட்டு வெட்கமும் வேதனையும் அடைந்த போதும், எப்படியும் தனது இனத்தையும் பண்பாட்டையும் விட்டுக் கொடுக்க விரும்பாதவள் போன்று,

"பிள்ளை! நீ என்னத்தைச் சொன்னாலும் எங்களுடைய தமிழ் இனத்திற்கென்று ஓர் உயர்ந்த கலை, கலாச்சாரம், பண்பாடு, நாகரீகம் இருக்கு என்பதுதான் உண்மை" என்றதும், மேலும் கொஞ்சம் அம்மாவிற்குப் புரியவைக்கவேண்டும் என்று எண்ணிய ரூபினி,

"அம்மா! உங்களுடைய நாகரிகம் பண்பாட்டினுடைய வெளிப்பாடுதான் உங்களுடைய ஊர்களில், அயலவன் வீட்டு அடுப்பில் புகை வந்தால் உங்களுடைய வயிற்றில் நெருப்பு எரியும். நலிந்து மெலிந்து கிடந்தவன்கள் முன்னேறினால் அவன்களைப் பார்க்க உங்களுக்குப் பொறுக்காது. தாகத்திற்குத் தண்ணீர் கேட்டு வருபவனுக்கு தாழ்த்தப்பட்ட சாதி என்று சொல்லிக் கொண்டு ஓட்டைச் சிரட்டையிற்தான் தண்ணீர் வார்ப்பீங்கள். கணவனை இழந்தவளை அமங்கலி என்று

சொல்லி மூலையிற் போட்டு முடக்கி வைப்பீங்கள். சீதனமென்று சொல்லி சாதி என்று சொல்லி காதலைக் கொலை செய்வீங்கள். சீதனம் என்று சொல்லி வாழவேண்டிய றோசாக்களை வாடவைப்பீங்கள்.

பெத்த குழந்தையைப் பெண்குழந்தை என்று சொல்லி நஞ்சூட்டிக் கொலை செய்வீங்கள். பாலியற் பலாத்காரத்திற்கு உட்பட்டவளுக்கு கெட்டுப்போனவள் என்று பட்டம் சூட்டி அவளைத் தற்கொலை செய்யப் பண்ணுவீங்கள். சந்தர்ப்பம் சூழ்நிலையால் வழிதவறிப்போனவளுக்கு வேசி என்று பட்டம் சூட்டுவீங்கள். அதேவேளை உண்மையான வேசிக்கு, அவள் பணம் படைத்தவள் சமூக அந்தஸ்த்துக் கொண்டவள் என்பதற்காக ஆலவட்டம் பிடிப்பீங்கள். அவன் தீவான் இவன் குழக்காட்டான், உவன் செம்பாட்டான் என்று பட்டம் வழங்குவீங்கள். இவைதான் அம்மா உங்களுடைய நாகரீகமும் பண்பாடும்" என்று சொன்னதும், இதைக் கேட்டு ஆச்சரியமும் அதிர்ச்சியுமடைந்த சுந்தரி,

"இதெல்லாம் இவளுக்குக்கு எப்படித் தெரியவந்தது? ஏதும் புத்த கம் கித்தகங்களில் படித்தாளோ?" என்று தன்னுள் புறுபுறுத்துக் கொண்ட வேளையில், இதை அவதானித்த ரூபினி,

"என்ன அம்மா! உங்களுக்குள்ளேயே ஏதோ கதைக்கிறீங்கள்! இதெல்லாம் எப்படி இவளுக்குத் தெரியவந்தது என்றுதானே! நினைக் கிறீங்கள்? இது மட்டுமல்ல அம்மா! இன்னும்கூட எனக்குத் தெரியும். ஏன்? இங்கு வந்தும் உங்களுடைய சுயநலம் புத்தியைக் காட்டாமலா விட்டீங்கள்?

ஒரு வாகனத் தரிப்பிடத்தில் மற்றைய வாகனங்கள் வெளியிற் போகமுடியாதபடிக்கு போகும் பாதையில், அதாவது ட்றைவ் வேயில், கார் நிறுத்தப்பட்டிருக்கிறது என்றால், அது ஒரு தமிழனுடைய காராய்த் தானிருக்கும்.

ஒரு கடை வாசலின் முன் கார் நிறுத்தக்கூடாத இடத்தில் ஒரு கார் நிறுத்தப்பட்டிருக்கிறது என்றால், அது ஒரு தமிழனுடைய காராய்த்தானிருக்கும். ஏன்? அவர்கள் காரோடுதான் பிறந்து வந்தவர்கள்! இங்கு வந்தும் சீதனம் கேட்கிறாங்கள். உங்களுடைய சுயநலப்புத்தி, வக்கிரப்புத்தி இங்கும் வந்தும் போகவில்லையே! எங்கு போனாலும்

போகாது! ஏன், சந்திர மண்டலத்திற்குப் போனாற்கூடப் போகவே! போகாது!! தமிழனுக்கென்றே உரிய சுயநலம், பொறாமை, எரிச்சல், வறட்டுக் கௌரவம் என்பன சூரிய மண்டலத்திற்குப் போனாலும் சுட்டெரிக்கப்பட முடியாதவை. இவைகள்தான் உங்களுகடைய பண்பாடு, வாழ்க்கை முறை என்பவற்றின் சிறப்பம்சங்கள்.

அம்மா! உங்களுக்கு ஓர் உண்மை தெரியுமா? இந்த உலகத்தில் ஒன்பது கோடி தமிழன் இருக்கிறான். அவனுக்கு ஒரு நாடு தானும் கிடையாது. அதேவேளையில் சில லட்சம் மக்களுள்ள இனங்களுக்குப் பல நாடுகளுண்டு. என்ன காரணம்? தான் மட்டும் வாழ்ந்தாற்போது மென்ற சுயநலம்! தனது சுயநலத்தைத் தவிர வேறு எதுகும் தமிழனுக்குப் பெரிதாய்ப் படுவதில்லை. அதற்கு மேல் ஏதும் செய்ய முயற்சித்தால் பொறாமை என்னும் அவனைச் சூழ்ந்திருக்கும் பிசாசு அவனைத் தடுத்துவிடும். நாடு, மொழி, இனம், கலை, கலாச்சாரம், சுதந்திரம் எல்லாம் தனது சுயநலத்திற்குக் கீழ்த்தான். அதனால தான் அவன் தன் இனத்தைக் கூடக் காட்டிக் கொடுக்கத் தயங்குவ தில்லை! அதன் பெறுபேறுதான் இந்த உலகத்தில் நாதியற்ற நிலைமை தமிழனுக்கு.

யானை தானே தன் தலையில் மண்ணை வாரிக் கொட்டிக் கொள்வதைப் போல, தமிழன் மண்ணை வாரிக் கொட்டிக் கொண்டு அவஸ்தைப்படுகிறான். அவனுடைய அவல நிலைக்கும் அவஸ்தைக்கும் வேறு யாரும் காரணம் அல்ல. அவனே தான் காரணம். இதை அவன் புரிந்துகொள்ளும்வரை தமிழனுக்கு விமோசனம் இல்லை. இருந்தபோதும் அவன் கடைசிவரை உணரப்போவதும் இல்லை. அதை அவன் உணர்ந்தாலும், உணர்ந்தவனைப்போன்று காட்டிக்கொள்ளப் போவதும் இல்லை. காரணம் அவனை ஆட்கொண்டிருக்கும் சுயநலம், பொறாமை, வரட்டுக் கௌரவம் என்பனவாகும்.

இவைகள் தான் அம்மா, உண்மையான கேவலம். அதை விடுத்து நான் என்னுடைய நண்பனோடு, என்னுடைய காதலனோடு டான்ஸ் பண்ணப் போவது கேவலம் இல்லை அம்மா! ஏன்! எங்களுடைய சிவபெருமானும் உமாதேவியாரும்கூட எப்பொழுதும் டான்ஸ் பண் ணிக் கொண்டுதானே இருக்கிறார்கள்!

உங்களைப் பொறுத்தவரை வயதுக்கு வந்த ஒரு பையனும் பொண்ணும் டான்ஸ் பண்ணப் போனால், அங்கு ஏதோ கசமுசா இருக்கும். இதுதான் உங்களுடைய பண்பாடு, உங்களுடைய வக்கிர புத்தி. அவர்களை நல்ல கண்ணோட்டத்தோடு பார்க்கவே! மாட்டீங்கள், ஏன்? உங்களுடைய பிறவிக் குணம், மண்வாசனை விடாது. உங்க ளைத் திருத்தவே முடியாது. உங்களுடைய வழிகாட்டலில் உங்க ளுடைய பிள்ளைகுட்டிகள் பேரப்பிள்ளைகள் வளர்ந்தால், இந்த நாட்டிலும் உங்கள் பிற்சந்ததியின் நிலைமை அதோகெதியாய்த்தான் முடியும். உங்களுடைய உள்ளம் மட்டுமல்ல உடம்பு முழுவதும் சுயநலம், பொறாமை, எரிச்சல், வரட்டுக் கௌரவம், வக்கிரபுத்தி. சந்தேகம் என்பவற்றால் நிரம்பிக் கிடக்கு. பிறகு எப்படி நீங்கள் உருப்படுவது? இப்படிப்பட்ட உங்களுக்கு ஒரு நாகரிகமும்! பண்பாடும்!! உண்டு என்று சொல்லிக் கொண்டு எங்களைத் திருத்த வாறீங்கள்! உங்களைத் திருத்தவே முடியாது.

தமிழருக்கும் பரத நாட்டியம் எனப்படும் பாரம்பரிய டான்ஸ் இருக்கின்றது. அதைச் சிலர், கனடாவில் பலர் என்று கூடச் சொல்லலாம், தங்களுடைய பெண்பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுப்பார்கள். அதாவது, பெண்பிள்ளைகளைப் பயில வைப்பார்கள். பயின்ற பிற்பாடு பெரும் விளம்பரத்துடன் மேடையேற்றி விழா எடுப்பார்கள். அப்புறம், அதை நிறுத்திவிடும்படி பிள்ளைகளை வற்புறுத்துவார்கள். ஏன்? ஏன் நிறுத்தும்படி வற்புறுத்துகிறார்கள்? தமது வரட்டுக் கௌரவத்திற்காகப் போடப்பட்ட வேடம் முடிந்துவிட்டது. மேற்கொண்டு தேவையில்லை. இவ்வாறு வரட்டுக் கௌரவித்திற்காக ஏதேதோ வெல்லாம் நிறையப் பணம் செலவழித்து வேடம் போடுவார்கள். நீங்கள் அம்மா, விபத்துக்கு முன் போட்ட ஆட்டங்களும் அந்த வரட்டுக் கௌரவத்துக்காகப் போடப்பட்ட வேடங்கள்தான். இவைதான் உங்களுடைய உயர்ந்த நாகரிகமும் பண்பாடும். இவற்றை நாங்களும் பின்பற்ற வேண்டுமென்று எதிர்பார்க்கிறீங்கள்.

உங்களுடைய வழிகாட்டலில் பிற்சந்ததி வளர்ந்தால், உங்களு டைய பிற்சந்ததி மட்டுமல்ல, இந்த பொன்னான நாடே நாசமாகிப் போகும். உங்களுடைய நாட்டை நாசமாக்கிப்போட்டு இங்க வந்திருக் கிறீங்கள். இப்படியொரு நல்ல நாடு இருந்தபடியாற்தான் உங்களால்

இங்கு வரமுடிந்தது. உங்களுடைய கதையைக் கேட்டு நீங்களும் நாங்களும் சேர்ந்து இந்த நாட்டையும் நாசமாக்கிவிட்டால், அப்புறம், எங்களுக்கு ஆபத்து வரும்போது நாங்கள் எங்கு போவது? யோசித்துப் பாருங்கள் அம்மா! ஆகையால், நீங்கள் உங்களுடைய நாட்டை நாசமாக்கியது போதும், இந்த நாட்டையாவது உருப்படியாக இருக்க விடுங்கள், அவ்வளவும் செய்தாலே போதும். சரியா?

அதைவிடுத்து உங்களுடைய நாகரிகம், பண்பாடு, வாழ்க்கை முறை என்று சொல்லிக் கொண்டு இருக்கிற எங்களையும் வரப்போகும் பிற்சந்ததியினரையும் ஆபத்துக்குள் தள்ளவேண்டாம் அம்மா! தன்னுடைய நலனுக்காக தன் இனத்தையே காட்டிக்கொடுக்கும் ஈனப்பிறவி தான் தமிழன், புரியுதா அம்மா?" என்று கூறிவிட்டுத் தனது அறையினுள் சென்றாள் ரூபினி.

இவற்றையெல்லாம் கேட்டுப் பேய் அறைந்தவள் போலாகிய சுந்தரி சிறிது நேரத்தின் பின் தன்னைச் சுதாகரித்துக்கொண்டு

"எப்படி அப்பா! இவள் இவ்வளவு விடயங்களையும் தெரிந்து வைத்திருக்கிறாள்? விடயங்களைத் தெரிந்து வைத்திருப்பது மட்டுமல்ல, என்ன அழகாகத் தமிழ்பேசுகிறாள் என்று பார்த்தீங்களே அப்பா! பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளர் விரிவுரை ஆற்றியது போன்று பொழிஞ்சு தள்ளிவிட்டுப்போறாள் அப்பா! அவளுடைய பேச்சைக் கேட்டதும் அவளின் மீது இருந்த கோபம் எல்லாம் போய், அவள் மீது நம்பிக்கைதான் பிறந்துள்ளது. இனி நாம் அவளைப் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை அப்பா. அவள் தன்னைக் காப்பாற்றிக் கொள்ளுவாள் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை அப்பா!" என்று மகிழ்ச்சியோடு கூறிமுடித்தாள் சுந்தரி.

மகளின் அறிவையும் புத்திக் கூர்மையையும் இட்டு அம்மாவிற்கு இவ்வளவு மகிழ்ச்சியென்றால், அப்பாவிற்குச் சும்மாவாவிருக்கும்? சந்தர்ப்பத்தை நழுவவிடப்படாது என்று எண்ணிய கண்ணன்,

"புலிக்குப் பிறந்தது பூனையாகுமா? புலிக்குட்டி புலியாய்த் தான் வரும்! சிங்கக்குட்டி சிங்கமாய்த்தான் வரும்! கங்காருக்குட்டி கங்காருவாய்த்தான் வரும். இதிலென்னப்பா ஆச்சரியப்படக் கிடக்கு!

நாங்கள் கவரிமான் குடும்பத்தைச் சேர்ந்தனாங்கள்!" என்றதும்,

"பப்பாசியில் ஒரேயடியாய் உச்சிக்குப் போய்விடாதீங்கோ, ஆபத்து! கொஞ்சம் பாத்து ஏறுங்கோ! அப்புறம் தலைகீழாய் விழவேண்டிவரும்" என்று சொல்லிக்கொண்டு அருகாமையில் வந்த மனைவியைப் பார்த்து,

"பிள்ளை தன்னைக் காப்பாற்றிக் கொள்ளுவாள் என்ற நம்பிக்கை உனக்கு வந்துவிட்டதல்லோ? கவலையை விட்டிட்டு நின்மதியாய்ப் போய் தூங்கப்பா. நேரம் இரண்டு மணி ஆகப் போகின்றது. எனக்கும் கண் தூங்குது," என்று கூறிக்கொண்டு படுக்கை அறைக்குச் சென்றான் கண்ணன். தொடர்ந்து சுந்தரியும் சென்றாள்.

## அங்கம் – 8

மறுநாள் சனிக்கிழமையான படியாலும் தாமதித்துப் படுக்கைக்குச் சென்றிருந்த படியாலும் ரூபினி ஒன்பது மணிக்குப் பிற்பாடுதான் படுக்கையால் எழுந்தாள். காலைக் கடன்களை முடித்துக்கொண்டு லிவிங் றூமிற்கு வந்த பொழுது ஏற்கனவே அங்கிருந்து பத்திரிகை வாசித்துக் கொண்டிருந்த கண்ணன் மகளைக் கண்டதும்,

"பிள்ளை ரூபினி! இங்க வா, இதில இரு," என்று சொல்லிக் கொண்டு பக்கத்தில் இருந்த சோபாவைக் காட்டிவிட்டு,

"உன்னோடு கொஞ்சம் கதைக்கவேண்டும் பிள்ளை! இப்ப கதைக் கலாமா?" என்று அன்புடன் கேட்டான். சற்று நீண்ட கதை சொல்லப் போறார் போலும் என்று எண்ணிய ரூபினி,

"கொஞ்சம் பொறுங்கள் அப்பா, அம்மா ரீ போட்டுவிட்டாவா என்று பார்த்திட்டு வாறன்," என்று சொல்லிவிட்டுக் குசினிக்குள் சென்று,

"அம்மா! ரீ போட்டீங்களா அம்மா?" என்று கேட்டதும்,

"ஒரு நிமிசம் பொறு பிள்ளை," என்று சொன்ன சுந்தரி, தயாரா யிருந்த ரீயை ஒரு கப்பில் ஊத்திக் கொடுத்தாள். ரீ கப்புடன் வந்து அப்பாவிற்கு அருகில் உட்கார்ந்து கொண்ட ரூபினி,

"இப்ப சொல்லுங்கப்பா உங்களுடைய கதையை," என்றாள். மெதுவாகக் கதையை ஆரம்பித்த கண்ணன்,

"பிள்ளை! நேற்று நீ சொன்ன விடயங்களிலிருந்த பல உண்மைகளையும் அவற்றின் அர்த்தங்களையும் நான் நன்கு புரிந்துகொண்டேன். உனது அறிவையும் ஆற்றலையும் மெச்சுகிறேன். இருந்தபோதும் இன்னும் சில உண்மைகளையும் நீ தெரிந்துகொள்ள வேண்டிய தேவையுண்டு பிள்ளை. எமது கலை, கலாச்சாரம், பண்பாட்டில் பல குறைபாடுகள் இருந்தபோதும் அவற்றில் பல நல்ல விடயங்களும் இருக்கின்றன என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. எதையும் ஒரேயடியாத் தூக்கி வீசப்படாது பிள்ளை. ஒவ்வொன்றிலும் நல்லதும் உண்டு கெட்டதும் உண்டு. நல்லதை எடுத்துக்கொண்டு கெட்டனவற்றைத் தவிர்த்துக் கொள்வதுதான் புத்திசாலித்தனம்.

உதாரணமாக : குடும்பவாழ்க்கை முறையை எடுத்துக்கொண்டால், கணவன் மனைவி, ஒருவனுக்கு ஒருத்தி, ஒருத்திக்கு ஒருவன் என்ற முறையில் இறுதிக் காலம் வரை ஒன்றாயிருந்து வாழ்வது; பெற்றபிள்ளைகள் தங்களுக்கென்று வாழ்க்கையை அமைத்துக்கொள்ளும் வரை ஒன்றாக ஒற்றுமையாகப் பெற்றோருடன் வாழ்வது, பெற்றாரைப் பிள்ளைகள் பிற்காலத்தில் பேணிப் பாதுகாப்பது; சமூகவிதிகளை உருவாக்கி ஒழுக்கத்தை வளர்ப்பது; அதைப் பேணிப் பாதுகாப்பது; உற்றார் உறவினர் உறவை வளர்த்துக்கொள்வது, அதைப் பேணிப் பாதுகாப்பது; கடவுள் நம்பிக்கை போன்ற பல நல்ல அம்சங்கள் எமது சமூகத்தினிடையே உண்டு என்பதை ஒருபோதும் மறந்து விடப்படாது.

நீ டான்ஸ் கிளப்பிற்குப் போயிட்டு வருவதைப் பார்த்து உனது அம்மா கடுங்கோபம் அடைந்ததற்கான காரணம், அவ உன் மீது வைத்திருக்கின்ற அதிக பற்றும் பாசமும்தான். அதனால் பிள்ளை கெட்டுப்போய்விடுமோ என்ற ஏக்கம். வெள்ளைக்காரன் அப்படி அல்ல. பிள்ளைகள் எங்காவது போகட்டும் என்னவாவது செய்யட்டும் என்றுதான் பேசாமலிருந்து விடுவான். பிள்ளை வீட்டைவிட்டுப் போனாலும் அவனுக்குக் கவலையில்லை. அது அவனுடைய வாழ்க்கை முறை. ஆனால் நாங்கள் அப்படி அல்ல. நீ வீட்டைவிட்டுப் போனால் எங்களால்

மேற்கொண்டு உயிருடன் வாழமுடியாது.

வெள்ளைக்காரன் ஒருவன் தனது வாழ்நாளில் பத்துத் தடவை கல்யாணம் பண்ணிக்கொள்வான். போனகிழமை செய்தியிற் கேட்டேன். 'புகழ்பெற்ற ஹொலிவூட் நடிகை எலிசபேத் ரெயிலர் ஏழு தடவை கல்யாணம் பண்ணியிருந்தாளென்று. ஏழு தடவை, பத்துத் தடவை கல்யாணம் பண்ணுகிற ஒரு பெண்ணினுடைய பிள்ளைகளின் நிலைமையை எண்ணிப்பார் பிள்ளை! அதுகள் என்னபாடுபட்டு வளருங்களென்று! அப்படியான ஒரு வெள்ளைக்காரக் குடும்பத்தில் நீ பிறந்திருந்தால், இந்தப் பிரச்சினை உனக்கு வராது. அதேவேளை எங்களிடமிருந்து கிடைக்கின்ற அன்பு, பாசம், நேசம், அக்கறை, அரவணைப்பு என்பனவும் உனக்குக் கிடைத்திராது.

நாங்கள் பிள்ளை களுக்காக குடும்பத்திற்காக எங்களை அர்ப்பணித்து வாழ்பவர்கள். ஒவ்வொரு சமூகத்திலும் நல்ல அம்சங்களும் தீய அம்சங்களும் இருக்கும் என்பது அனுபவரீதியான உண்மை. எனவே நல்லவனவற்றை எடுத்துக் கொண்டு தீயனவற்றை ஒதுக்கிவிடுவதுதான் புத்திசாலித்தனம். நீ எப்பொழுதும் புத்திசாலிப் பிள்ளையாய் இருக்க வேண்டுமென்பது தான் எனது விருப்பம். எனது பிள்ளை எதற்கும் ஈடுகொடுக்கக் கூடியதாய் வளரவேண்டுமென்பது என்னுடைய இலட்சியம்.

எங்களுடைய குடும்ப வாழ்க்கை முறையின் சிறப்பை அறிந்த பல வெள்ளைக்காரர் எங்களுடைய குடும்ப வாழ்க்கை முறையைப் பாராட்டுகின்றனர். பலர் தமிழ்ப் பெண்களைத் திருமணம் செய்ய விரும்புகிறார்கள். பலர் ஏற்கனவே திருமணம் செய்துமுள்ளார்கள். எங்களுடைய இவ்வாறான ஒரு சிறந்த குடும்பவாழ்க்கை முறையைக் கட்டிப் பாதுகாத்து இயக்கிக் கொண்டிருப்பது எங்களுடைய சமூக விதிகள், அரசின் சட்டமல்ல. அதன் அடிப்படையிற்தான் நீ இரவில் டான்ஸ் கிளப்பிற்கு ஆண்களோடு போய்வருவதை அம்மா விரும்ப வில்லை.

பல்கலைக்கழக, பாடசாலை மாணவர்களுடைய புறோகிறாம் என்று வரும்போது போவது பெரிய தப்பல்ல. மற்றும்படி சந்தோசமாய்ப் பொழுது போக்குவதற்காக இரவு டான்ஸ் கிளப்பிற்குப் போவது

அவசியமற்றது என்பதுதான் எனது கருத்தும். சந்தோசமாய்ப் பொழுது போக்குவதற்கு இந்த நாட்டில் எத்தனையோ நல்லநல்ல அம்சங்க ளெல்லாம் உண்டு. அவற்றைப் பின்பற்றலாம் பிள்ளை!

இந்த நாட்டில் வாழும் பல்வேறு சமூகங்களிடமிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய பல நல்ல விடயங்களுண்டு. அதை யாரும் மறுக்கமுடியாது. அதேவேளை நம்மிடமுள்ள நல்ல விடயங்களையும் மறந்துவிடப்படாது," என்று விளக்கமாய்ச் சொன்னான் கண்ணன். இவையாவற்றையும் அமைதியாய்க் கேட்டுக் கொண்டிருந்த ரூபினி,

"சரி அப்பா! நீங்கள் சொன்ன ஆலோசனைகளைப் பற்றி நான் கருத்திற்கொள்ள முயற்சிக்கிறேன். இப்பொழுது எனக்கு நேரம் போகிது, பதினொரு மணிக்கு ஜிம்மிற்குப் போகவேண்டும். தாங்ஸ் அப்பா!" என்று சொல்லிவிட்டு மெதுவாய் எழுந்து சென்றாள்.

அப்பாவும் மகளும் கதைப்பனவற்றைக் காதுகொடுத்துக் கவன மாய்க் கேட்டுக்கொண்டிருந்த சுந்தரி, குசினிக்குள் இருந்து புன்சிரிப்புடன் வந்து,

"உங்களை நான் கணவனாகப் பெற்றதற்கு உண்மையிலேயே நான் சந்தோசப்படுகிறேன்! பெருமைப்படுகிறேன்! நான் எனது அறிவு கெட்டதனத்தால் உங்களுக்குப் பல தடவை துன்பத்தையும் துயரத் தையும் தந்துவிட்டேன். அதற்காக என்னை மன்னித்துக் கொள்ளுங்கள் அப்பா! என்னுடைய தவறான செயற்பாடுகளுக்கு எமது நாட்டு மண் வாசனையையோ அன்றி கனடாவின் மண்வாசனையையோ குறை சொல்லிப் பிரயோசனமில்லை. எனது அறிவீனமும் விவேகமின்மையுந் தான் காரணம். அத்தோடு எனது முற்கோபம், பேராசை போன்ற குணங்களும் உடந்தையாய் இருந்துள்ளன என்பதை இப்போது உணர்கிறேன்.

எல்லா நாட்டிலும் எல்லாச் சமூகங்களிலும் நல்லனவும் உண்டு கெட்டவனும் உண்டு. கெட்டனவற்றைத் தவிர்த்து நல்லனவற்றைப் பெறும் வல்லமை கொண்டவன் புளைத்துக் கொள்கிறான். அந்த வல்லமை இல்லாதவன் தனது வாழ்க்கையைத் தானே நரகமாக்கிக் கொள்கிறான் என்பதுதான் உண்மை. நான் ஒரு நல்ல பெண்ணாக

நல்ல ஒரு மனைவியாக, நல்ல ஓர் அம்மாவாக வாழுவதற்கு முயற்சிக் கிறேன்," என்றதும் கண்ணனுக்கு கண்ணீர் வந்துவிட்டது.

கண்ணீர் வந்ததைக் கண்ட சுந்தரி பதட்டத்துடன்,

"ஏன் அப்பா! அழுகிறீங்கள்? நான் ஏதும் தப்பாகச் சொல்லிப் போட்டேனா?" என்று கேட்டாள்.

"இது அழுகையல்ல அப்பா! இது ஆனந்தக் கண்ணீர்! கெட்ட மனிதன் நல்ல மனிதனாய் மாறுவதுதான் பாராட்டுக்குரியது, படிப்பனைக் குரியது! எமது குடும்ப வாழ்க்கையில் ஒரு புதுயுகம் பிறந்துள்ளது என்று எண்ணும்பொழுது எனக்கு அறியாமலேயே ஆனந்தக் கண்ணீர் வந்துவிட்டது," என்று நிறைந்த சிரிப்புடன் சொன்னான் கண்ணன். அதைப் பார்த்த சுந்தரியும் ஆனந்தமடைந்து,

"போனவை போனவையாக இருக்கட்டும்! அவற்றையெல்லாம் மறந்துவிடுவம். இனிமேல் நல்லனவற்றையே நினைப்பம், நல்ல னவற்றையே செய்வம். அப்பொழுது நடப்பவையும் நல்லனவாயே அமையும்," என்று நம்பிக்கை கலந்த தொனியிற் கூறிவிட்டுக் காலை உணவைக் கணவனுக்குப் பரிமாறினாள். இருவரும் சாப்பிட்டு முடிந்த பின் அந்தக் கிழமைக்கான உணவுப் பொருட்கள் வாங்குவதற்காக காரில் கிளம்பிச் சென்று விட்டனர்.

அன்று வெளியிற் சென்றுவிட்டு பிற்பகல் ஒன்பது மணியளவில் திரும்பிவந்த ரூபினி அப்பாவின் முன் சென்று சிரித்துகொண்டு நின்றாள். "என்ன குண்டைத் தூக்கிப் போடப்போகிறாளோ!" என்று யோசித்துக் கொண்டு,

"என்ன பிள்ளை! உன்னுடைய சிரிப்பைப் பார்க்க ஏதோ காரியம் ஆகவேண்டியிருக்குப்போற் தோணுது, என்ன விடயம்? என்று சொல லேன்!" என்று சிறிது தயக்கத்தோடு கேட்டாள் கண்ணன். அப்பாவின் நிலைமையைப் புரிந்து கொண்ட ரூபினி மேலும் தாமதிக்காமல்,

"நான் இனிமேல் டான்ஸ் கிளப்பிற்குப் போவதில்லை என்று முடிவெடுத்துவிட்டேன்" என்று சொல்லி வாய் மூடுவதற்குள்,

"உண்மையாகவா பிள்ள!!" என்று ஆச்சரியத்தோடு கேட்டவன் மறுகணம்,

"நீ என்னுடைய மகள்தான் என்பதை நிரூபித்துவிட்டாய்! ரொம்பத் தாங்ஸ் பிள்ளை! ரொம்பத் தாங்ஸ்!" என்று சொல்லிவிட்டு குசினிக்குள் நின்ற மனைவியைப் பார்த்து,

"கேட்டீரே அப்பா! பிள்ளை சொன்னதை?" என்றதும்,

"பான்(fan) இரைச்சலில் எனக்கொன்றும் கேட்கவில்லை அப்பா! என்னவென்று சொல்லுங்கோ!" என்றாள். மகள் கூறியதை ஒரு சொல் லும் தவறாமல் அப்படியே திரும்பிச் சொன்னான் கண்ணன். உடனே சுந்தரி,

"அப்படியா! என்னால் நம்பவே முடியவில்லையே!" என்று சொல்லிக்கொண்டு விரைந்து வந்த சுந்தரி மகளைக் கட்டிப்பிடித்து இரு கன்னங்களிலும் முத்தம் கொடுத்துவிட்டு,

"எனது அடிவயிற்றில பால் வார்த்திருக்கிறாய் பிள்ளை! உன்னைப் பெற்றெடுத்த அன்றைய நாளில் கிடைத்த சந்தோசத்தைவிட இரு மடங்கு சந்தோசம் இன்று கிடைத்துள்ளது. உன்னுடைய வாழ்க் கையை நீயே அழித்துப் போடுவாயோ! என்று ஏங்கினேன். ஆனால், உன்னையும் எங்களையும் இறைவன் காப்பாற்றிவிட்டார். முதலில் இறைவனுக்கு நன்றி! இரண்டாவது உனக்கு நன்றி!" என்று சொன்னவள் தொடர்ந்து,

"வா பிள்ளை! சாப்பிடுவம். நேரம் பத்து மணி ஆகப் போகின்றது. அப்பாவையும் கூட்டிக்கொண்டு வா பிள்ளை!" என்று சொல்லிவிட்டுக் குசினிக்குச் சென்றாள். மகளைத் தொடர்ந்து குசினிக்குள் சென்ற கண்ணன் மனைவியைப் பார்த்து,

"புலிக்குட்டி புலியாகத்தான் அப்பா வரும்! சிங்கக்குட்டி சிங்க மாய்த்தான் வரும்! புலிக்குட்டி ஒருபோதும் பூனையாக வராது என்பது நிரூபணமாவிட்டதல்லே! இனிமேல் கவலையை விடும்!" என்று கூறிக்கொண்டு உணவைச் சுவைத்துச் சாப்பிடத் தொடங்கினான்

கண்ணன். பெற்றோர் அடைந்த மகிழ்ச்சியைப் பார்த்துத் தானும் மகிழ்ச்சியடைந்த ரூபினி, தான் புரிந்துகொண்டதைச் சொல்ல விளைந்த வளாய்,

" அப்பா, தமிழ்ப் பெற்றோர் தமது பிள்ளைகளின் முன்னேற்றத்தில், அவர்களின் எதிர்கால நல்வாழ்க்கையில் எவ்வளவு அக்கறை கொண் டுள்ளார்கள் என்பதையும் அதற்காக அவர்கள் எவ்வளவு அர்ப் பணிப்புடன் செயற்படுகிறார்கள் என்பதையும் இப்போது என்னாற் புரிந்துகொள்ள முடிகின்றது. அத்தோடு அம்மா சொன்ன ஒரு விடயம் எனக்கு நல்லொரு படிப்பினையாயும் அமைந்துள்ளது. அதாவது ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு சமூகத்திலும் நல்லனவையும் கெட்டனவையும் இருக்கத்தான் செய்கின்றன. அவற்றில் கெட்டன வற்றைத் தவிர்த்து நல்லனவற்றை எடுத்துக்கொள்வதிற்தான் எமது வெற்றியும் எதிர்கால நல்வாழ்வும் தங்கியுள்ளது என்பது உண்மையான உண்மை. இதைக் கேட்கும் பொழுது இது எல்லார்க்கும் தெரிந்த ஒரு சிறிய உண்மையாய்த்தான் படுகின்றது. ஆனால் அதைக் கடைப் பிடித்து வாழ்க்கையில் வெற்றி காணும்பொழுதுதான் அதன் முக்கியத்துவமும் எமது திறமையும் வெளிப்படுகிறது.

வேறு பல இனப்பிள்ளைகளோடு நாங்கள் பழகுவதற்கு வாய்ப்புக் கிடைப்பதால், அவர்களுடைய பண்பாடு, கலாச்சாரம், வாழ்க்கை முறைகளிலுள்ள நல்லனகெட்டனவற்றை ஒப்பிட்டுப்பார்க்கக் கூடிய சந்தர்ப்பங்கள் எங்களுக்கு உண்டு. அந்த வகையில் தமிழ் மக்களுடைய பண்பாடு, கலாச்சாரம், வாழ்க்கை முறையில் நல்லன உண்டு என்பதை நான் மறுக்கவில்லை. அவற்றைப் பின்பற்ற நான் முயற்சிப்பேன் அப்பா. ஆனபடியால் நீங்களும் அம்மாவும் தேவையற்ற கற்பனைகளைப் பண்ணிக்கொண்டு அநாவசியமாய் வேதனைப் படாதீங்கோ, சரி அப்பா?" என்று கூறிவிட்டு படுக்கைக்குச் சென்றாள் ரூபினி.

## அங்கம் - 9

இப்பொழுது மனதில் நின்மதி, வாழ்வில் சந்தோசம், சமூகத்தில் மறுபடியும் கௌரவம். இப்பொழுது சுந்தரியின் மூத்தபிள்ளை ரூபினி

வாட்டலூ பல்கலைக் கழகத்திற்குப் பட்டப்படிப்பிற்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளாள். மற்றைய பிள்ளை எட்டாம் வகுப்பிற் படித்துக் கொண்டிருக்கின்றது. சுந்தரிக்கும் கண்ணனுக்கும் ஒரே மகிழ்ச்சி. சுதந்திரமான, நின்மதியான, மகிழ்ச்சியான சாதாரண வாழ்க்கை.

நம்பிக்கைத் துரோகம், பாவம் நிறைந்த ஆடம்பரமான பகட்டான வாழ்க்கையா? தூய்மையான நின்மதி நிறைந்த சாதாரணமான வாழ்க்கையா சிறந்தது? ஒப்பிட்டுப் பார்த்தாள். யாருக்கும் துரோகம் இழைக்காத பாவமற்ற நின்மதியான வாழ்க்கை எவ்வளவோ மேலானது என்னும் முடிவிற்கு வந்தாள். ஏன்? இரண்டையும் அனுபவித்தவள் சுந்தரி.

பெரியோர்கள் சொல்லிக் கேள்விப்பட்டதற்கு மேலாகத் தானே அனுபவித்துத் தெரிந்துகொண்டவள் சுந்தரி. இப்பொழுது அவளுடைய அனுபவம் புத்தி புகட்டுகின்றது. கேட்டுத் தெரிந்துகொள்வதை விட பட்டுத் தெரிந்துகொள்வதே மேலானது என்பார்கள் உயர்ந்தவர்கள். இப்பொழுது பட்டுத்தெரிந்து கொண்டாள் சுந்தரி. உண்மையான அறிவு என்பது பட்டுத்தெரிந்து கொள்வதிலிருந்து பெறப்படுவதுதான். இவள் இப்பொழுது உயர்ந்தவர்கள் பிரிவில் சேர்ந்துள்ளாள் என்றால் மறுப்பதற்கில்லை.

தனது கடந்தகால வாழ்க்கை முறையை எண்ணி வெட்கப்படு கிறாள் வேதனைப்படுகிறாள். திருந்திய மனிதன் கடந்தகால தவறுகள் தப்புக்களை மறந்துவிட வேண்டுமென்று ஞானிகள் கூறுவார்கள். அதன்படி கடந்தகால பாவம் நிறைந்த வாழ்க்கையை மறந்துவாழ முயற்சிக்கின்றாள் சுந்தரி. புண்ணியம் நிறைந்த புதிய வாழ்க்கை கடந்த கால வாழ்க்கையை மறக்கச் செய்து அவளை முன்னோக்கி இழுத்துச் செல்கின்றது. புதிய சுந்தரியால் இரண்டு உண்மைகளை உணர முடிந்தது.

ஒன்று, ஒரு மனிதன் தனது திறமையை நல்ல வழியிலும் பயன்படுத்தலாம், அதேநேரத்தில் கெட்ட வழியிலும் பயன்படுத்தலாம். சுந்தரி தனது அபார திறமையை கெட்டவழியில் பயன்படுத்திய காலம் போய் நல்ல வழியில் பயன்படுத்தும் காலத்திற்கு வந்து விட்டாள். வெட்கங்கள் வேதனைகளையெல்லாம் மறந்துவிட்டாள். இனிமேல் வெட்

கப்படுவதற்கும் வேதனைப்படுவதற்கும் ஏதுவுமேயில்லை. இப்பொழு தெல்லாம் ஒரே சந்தோஷம்.

இரண்டாவது, கனடா நாட்டில் கிடைக்கும் வசதி வாய்ப்புக்களை நல்ல வழியிலும் பயன்படுத்தலாம், கெட்ட வழியிலும் பயன்படுத்தலாம். வேறுவார்த்தையிற் சொன்னால் அழிந்து போவதற்கும் கனடா ஒரு சிறந்தநாடு, அதேநேரத்தில் ஆக்கபூர்வமாய் முன்னேறி ஓகோவென்று வாழுவதற்கும் ஒரு நல்ல நாடு கனடா. இதுதான் கனடாவின் உண்மை யான மண்வாசனை. இதைப் பயன்படுத்தும் முறையிற்தான் எமது முன்னேற்றமும் பின்னேற்றமும் தங்கியுள்ளன.

சிலர் கனடாவில் கிடைக்கும் வசதி வாய்ப்புக்களைப் பயன்படுத்தி குறுக்கு வழியில் பணத்தைச் சம்பாதித்துவிடலாம் என்றும் ஆடம்பர வாழ்க்கையைத் தேடிக்கொள்ளலாம் என்றும் அங்கலாய்த்துக் கொள்ளுகின்றனர். அவற்றைத் தேடி அலையவும் முயற்சிக்கின்றனர். அதன் வழியிற்சென்று பாடம் கற்றுத் தெளிந்தவள்தான் சுந்தரி.

சுந்தரியின் பிற்பட்ட வழியைப் பின்பற்றி நாமும் முன்னேறிச் சென்று நல்ல மனிதராய், கௌரவமான மனிதராய், எல்லாவற்றிற்கும் மேலாக நமது தமிழ்ச் சமூகத்திற்கு நல்ல பெயரைத் தேடிக்கொடுக்கும் மனிதராய் வாழ்வதற்கு சுந்தரியின் வாழ்க்கை எமக்குப் பாடம் கற்றுத் தருகிறது.

கனடாவின் மண்வாசனை தனிமனித சுதந்திரத்தையும் வசதி வாய்ப்புக்களையும் மாத்திரம் அளிக்கும் என்று தப்புக் கணக்குப் போட்டுவிடாதீர்கள். தேவைப்படும்போது அநியாயம் அக்கிரமங்களை இரும்புக்கரம் கொண்டு அடக்கும் ஆற்றலையும் கொண்டது என்பதை மறந்துவிடாதீர்கள்! நீங்கள் நன்றாகவே வாழுங்கள், மற்றவர்களையும் வாழவிடுங்கள். இதுதான் கனடாவின் உண்மையான மண்வாசனை, புரிந்துகொள்ளுங்கள். வாழ்! வாழவிடு!!.

## அங்கம் – 10

குகன் மூலம் சுந்தரியின் கதையைக் கேள்விப்பட்ட எழுத்தாளர் கோவிந் சுந்தரியைச் சந்தித்துப் பேசுவதற்கு மிகவும் ஆர்வமாயிருந் தார். குகனின் உதவியின் மூலம் சுந்தரியின் கணவர் கண்ணனை

முதலில் சந்தித்து தனது விருப்பத்தைத் தெரிவித்த கோவிந் இரண்டு கிழமைகளின்பின் சுந்தரியை நேரில் சந்தித்துக் கதைப்பதற்கான ஒழுங்கைச் செய்திருந்தார். ஒழுங்கு செய்ததின்படி குறிப்பிட்ட நாளில் சுந்தரியின் வீட்டிற்குச் சென்ற கோவிந், அவர் வீட்டின் வாசற்கதவைத் தட்டினார். சிறிது தாமதமாக வந்து கதவைத் திறந்த ஒரு பெண் கோவிந்தைப் பார்த்து,

"வணக்கம்! உங்களுக்கு என்ன வேண்டும்? நீங்கள் யார்?" என்ற கேள்விகளைப் போட்டாள். இயற்கையாகவே பிரமதேவனின் அழகான பெண் படைப்புக்களை நன்கு ரசிக்கும் சுபா வம் கொண்ட கோவிந், அவளின் அழகைப் பார்த்து ஒருகணம் தடு மாறி நின்றார். அப்புறம் தன்னைச் சுதாகரித்துக்கொண்டு,

"என்னுடைய பெயர் கோவிந். நான் ஓர் அரிவரி வகுப்பு எழுத்தா ளன். என்னைப் பற்றி உங்களுடைய கணவர் கண்ணன் உங்களுக்குத் தெரியப்படுத்தியிருப்பார் என்று எண்ணுகிறேன்." என்று சொல்லி முடிப் பதற்குள் குறுக்கிட்ட சுந்தரி,

"வணக்கம் சார்! ரொம்பத்தான் உங்களைத் தாழ்த்திக் கொள்ளு கின்றீங்கள். அது உங்களுடைய நிறைவின் பிரதிபலிப்பு, பரவாயில்லை. உங்களைப் பற்றியும் நீங்கள் இன்று இங்கு வருவது பற்றியும் எனது கணவர் என்னிடம் ஏற்கனவே கூறியிருந்தார். நீங்கள் வந்தது ரொம்பச் சந்தோசம். உள்ளுக்கு வாருங்கோ," என்று கூறி கோவிந்தை அழைத்துச் சென்று சோபாவில் இருக்கச் செய்தாள். அமர்ந்து கொண்ட கோவிந்,

"உங்களைப் பற்றியும் உங்களுடைய கடந்தகால வாழ்க்கை முறைகளைப் பற்றியும் குகனிடமும் உங்கள் கணவர் கண்ணனிடமும் கேட்டறிந்து கொண்டேன். இருந்தபோதும் கேட்டறிந்து கொண்டவற்றை மட்டும் வைத்துக் கொண்டு உங்களைப் பற்றி எழுதமுடியாது, எழுதவும் கூடாது. அதனால, உங்களுடன் கதைத்துப் பேசி உண்மைகளை அறிந்து எழுதும் நோக்குடன்தான் உங்களைக் கண்டு நேரிற்பேசி உண்மைகளை அறிந்து கொள்வதற்காக இங்கு வந்திருக்கின்றேன்," என்று மிகவும் அன்பாகவும் கனிவாகவும் கூறினார்.

கோவிந்தின் வார்த்தைகளைக் கேட்டு பூரிப்படைந்த சுந்தரி,

"நீங்கள் ஓர் எழுத்தாளன் என்ற முறையில் என்னிடமிருந்து பெறும் உண்மைச் செய்திகளை வைத்து நமது சமூகத்திற்குப் பயன் அளிக் கக்கூடிய முறையில் எழுதவேண்டுமென்பது எனது ஆசை. அதற்கேற்ற வகையில் கேள்விகளைக் கேட்பீர்களென்று எதிர்பார்க்கி றேன்," என்று கூறியதும் கேள்விகளைக் கேட்பதற்குத் தயாராகவிருந்த கோவிந் முதலாவது கேள்வியாக,

"உங்களுடைய பழைய வாழ்க்கை முறையிலிருந்து எப்படி உங் களால் புதிய வாழ்க்கை முறைக்குத் திடீரென்று மாறமுடிந்தது? கொஞ்சம் விளக்கமாகச் சொல்லுங்களேன்," என்றார். அப்பொழுது சுந்தரி புன்முறுவலை வரழைத்துக் கொண்டு,

"மனமிருந்தால் இடமுண்டு, என்ற பழமொழி மனித வாழ்விற்கு மிகவும் பிரயோசனமானது சார். எல்லாவற்றிற்கும் காரணம் இந்த மனந்தான். மற்றைய ஐந்தறிவிற்கு அடிப்படையாய் ஐந்து புலன்களி ருப்பது போன்று, ஆறாவது அறிவாகிய பகுத்தறிவிற்குப் புலனாக (தளமாக) இருப்பது மனம். ஆறாவது அறிவாகிய பகுத்தறிவு நல்லது கெட்டதை உய்த்துணரும் வல்லமை கொண்டது. ஆனால் மனதைத் தளமாய்க்கொண்டு அது செயற்படுவதனால் மனம் நல்மனமாயிருக் கும்வரை அது நல்லனவற்றைச் செய்யத்தூண்டும். மனம் தீயமனமாய் இருக்கும் வரை அது தீயனவற்றையே செய்யத் தூண்டும். எனவே மனதை எப்பொழுதும் நல்ல மனமாய் வைத்திருக்கவேண்டும். அதை நல்ல வழியில் நெறிப்படுத்த வேண்டும். அங்குதான் நமது திறமையும் ஆளுமையும் தங்கியுள்ளது.

எனது இளமைப் பருவத்திலிருந்தே தப்பான வழிகளில் காரியங் களைச் சாதித்துப் பழக்கப்பட்ட எனக்கு, கனடாவிற்கு வந்தபிற்பாடும் அதேவழிதான் சரியாகப்பட்டது. அதே வழியில் தொடர்ந்து செயற்பட்ட நான் கார் விபத்தொன்றில் எனது காலின் ஒரு பகுதியை இழந்து விட்டேன். அதிலிருந்து ஞானம் பிறந்ததுபோன்று ஓர் உணர்வு ஏற் பட்டது. எனது பழைய சிந்தனைகள் மாறுபடத் தொடங்கின. 'அந்த விபத்தில் இறந்திருந்தால்' என்று எண்ணியபொழுது புதிய பிறப்பு எடுத்தது போன்ற ஓர் எண்ணம் என் மனதில் ஏற்பட்டது. விபத்தில் இறந்திருந்தால் எனது பிள்ளைகளும் கணவரும் அநாதைகளாகியிருப் பார்கள். நான் தப்பான வழியில் சேர்த்த சொத்தால் என்ன பிரயோசனம்!

மரணச் சடங்கிற்கு வந்திருக்கக் கூடியவர்களும்,

"கொடியவள், ஏமாற்றுக் காரி, நம்பிக்கைத் துரோகி போய்த் தொலைந்துவிட்டாள், அது நல்லது," என்று சொல்லி தீபாவளிப் பண்டிகை கொண்டாடியிருப்பார்கள்.

என்னுடைய செயற்பாட்டினால் நேரடியாகப் பாதிக்கப்பட்டவர்கள்,

"இவளைப் போன்று நான்கு பேர் இருந்தால் உலகம் தாங்காது. போய்த் தொலைந்தது உலகத்திற்கு ரொம்ப நல்லது", என்று சொல்லிச் சந்தோசப்பட்டு இருந்திருப்பார்கள். விபத்தில் இறந்துபோகாமல் நிரந்தர நடமுடங்கலாய்ப் போயிருந்தால் எனது கணவருக்கும் பிள்ளைகளுக்கும் நீண்டகால சுமையாக மாறியிருந்திருப்பேன். இவற்றையெல்லாம் தவிர்த்து இந்தளவிற்கு நடமாடி வேலை செய்யக்கூடிய முறையில் ஏன் இறைவன் என்னை காப்பாற்றினான்? இதற்கொரு காரணம் இருக்கவேண்டும்.

"நடப்பவையெல்லாம் நன்மைக்கே, இது உத்தம உண்மை" என்பது பெரியோரின் கூற்று. அப்படியாயின் நான் நல்லவளாய் மாறவேண்டும் என்று திருந்துவதற்கு இறைவன் எனக்குக் கொடுத்த இறுதிச் சந்தர்ப்பம் இதுவாகும். அதிலிருந்து என்னுடைய எண்ணமெல்லாம் நீதி, நியாயம், தர்மம், உண்மை, நேர்மை, சத்தியம் என்பவற்றைப் பற்றிதாயே எழுந் தன. அதன் வெளிப்பாடுதான் இந்தத் திடீர் மாற்றம். அதன் வளர்ச்சிதான் என்னை ஒரு புதிய பெண்ணாக மாற்றியது.

முன்பெல்லாம் பேராசை, வெளிவேசம், ஆடம்பரம், அகங்காரம், வரட்டுக்கௌரவம் என்பவற்றில் சிக்கித் தவித்த எனது மனம், இப்பொழுது அமைதி, சாந்தம், சந்தோசம், நின்மதி என்பவற்றை வேண்டிநிற்கின்றது. முன்பெல்லாம் என்னை மற்றையவர்கள் பார்த்த பொழுது வெறுப்போடும் வெருட்சியோடும் பார்த்தார்கள். இப்பொழு தெல்லாம் முகமலர்ச்சியோடும் புன்சிரிப்புடனும் பார்க்கின்றனர். அவர்களுடைய பேச்சிலிருந்து எல்லாவற்றையும் அறியமுடிகின்றது.

என்னுடைய சொந்த உழைப்பினால் முன்னேறிக்கொண்டு போகி றேன் என்று எண்ணும்போது, எவ்வளவு சந்தோசம் அடைகிறேன்!

என்பதைக் கூறுவதற்கு என்னிடம் வார்த்தைகளே இல்லை எனலாம். உண்மையான சந்தோசம் எதுவென்று புரியாமல் கடந்த காலத்தைப் பாழடித்துவிட்டேன் என்று எண்ணும்போது, வெட்கமாயும் வேதனையாயும் இருக்கின்றது. இருந்தபோதும் இந்தளவிலாவது உண்மையைப் புரிந்து கொண்டமையையிட்டுச் சந்தோசப்படுவதுடன் உண்மையைப் புரியவைத்த இறைவனுக்கும் நன்றிசொல்லுகின்றேன்.

இந்த நாடு ரொம்ப நல்ல நாடு, சுதந்திரமான நாடு, முன்னேறுவதற்கான வாய்ப்புக்களையும் வளங்களையும் கொண்ட நாடு. சுதந்திரம், வாய்ப்பு, வளங்கள்தான் இந்த நாட்டின் மண்வாசனை. இவைகளைப் பயன்படுத்தி ஒருவன் தப்பான வழியில் ஒரு மில்லியன் டொலர் பணத்தைச் சேர்க்கலாம். இவைகளைப் பயன்படுத்தி இன்னொருவன் ஒரு மில்லியன் பணத்தை உழைத்துச் சம்பாதிக்கலாம். இரண்டிற்கும் இடையில் என்ன வித்தியாசம்? ஒரு மில்லியன் டொலர் பணத்தை உழைத்துச் சம்பாதித்தானே! அவனுக்குக் கிடைக்கின்ற ஆத்மதிருப்தியையும் சந்தோசத்தையும் வார்த்தைகளால் வர்ணிக்கமுடியாது. அதை அனுபவித்தவனுக்குத்தான் அதன் இன்பச்சுவை தெரியும். அவனாற்தான் அதை உணரமுடியும்.

ஒரு மில்லியன் டொலர் பணத்தைத் தப்பான வழியில் சேர்த்தானே! அவன் சந்தோசமாய் இருப்பவன் போன்று மற்றையவர்களுக்குக் காட்டிக் கொண்டாலும், அவனுடைய அடிமனதில் ஒரு குற்ற உணர்வும் ஏக்கமும் இருந்து கொண்டேயிருக்கும். அவன் சட்டத்தின் பிடியிலிருந்துதான் தப்பிக்கொண்டேன் என்று எண்ணலாம். ஆனால், தர்மத்தின் பிடியிலிருந்து தப்பவே முடியாது! தர்மம் எந்த ரூபத்திலாவது எப்போதாவது பழிவாங்கியே தீரும். இதுதான் இயற்கையின் நியதி. இதிலிருந்து யாருமே தப்பவே முடியாது.

சிலர் தப்பான வழியில் பல ஆயிரம் டொலர் பணத்தையோ அன்றி சில மில்லியன் டொலர் பணத்தையோ சம்பாதிக்க முடிந்தவுடன், இந்த நாட்டில் இதுதான் பணம் சம்பாதிப்பதற்கான வழி என்று நம்புகின்றார்கள். அந்த வழியில் பணத்தைச் சம்பாதிக்க விரும்பாதவர்களைப் பார்த்து "புளைக்கத் தெரியாதவர்கள்" என்று ஏளனம் செய்கின்றார்கள். அதுதான் அவர்கள் செய்யும் மகாதப்பு. தவறு தெரியாமற் செய்யப்படுவது,

அவன் திருந்தலாம். தப்பு தெரிந்து செய்யப்படுவது, அவன் வருந்தியே ஆகவேண்டும்.

உலகம் தர்மம் என்னும் அச்சாணியிற்தான் சுழன்றுகொண்டிருக்கின்றது. அதர்மம் அடிக்கடி அதன்மீது வந்து மோதும். சிலவேளைகளில் உக்கிரமாக மோதும். அவ்வேளைகளில் தர்மம் சரிவதுபோன்று தோன்றும். அதைப் பார்க்கும் சில மனிதர்கள் எண்ணுகின்றார்கள் வெற்றிக்கு அதர்மந்தான் சிறந்த வழி என்று. அது தற்காலிகமானது என்பதை அவர்களால் உணரமுடிவதில்லை. காரணம் பேராசை, கர்வம் என்பனவாகும்.

ஓர் இடைவெளிக்குப் பின் தர்மம் மறுபடியும் நிமிர்ந்து நிற்கும். அப்பொழுது வட்டிகுட்டியெல்லாம் சேர்த்து தண்டனை வழங்கும். இதுதான் தர்மத்தின் இயல்பு, இதுதான் காலவோட்டத்தின் நியதி. இதைச் சரியாகப் புரிந்து கொள்ளமுடியாத மனிதர்கள் பேராசையினாலும் அகங்காரத்தினாலும் உந்தப்பட்டு அதர்மத்தை அணைத்துக் கொள்கிறார்கள்.

உலக வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால், தர்மமும் அதர்மமும் பல தடவைகள் பலமாக மோதிக் கொண்டதைப் பார்க்கலாம். அவ்வேளைகளில் அதர்மத்தின் உக்கிரமான மோதல்களால் தர்மம் பல தடவைகள் சரிந்தது போன்று தென்பட்ட சந்தர்ப்பங்களும் உண்டு. இறுதியில் தர்மம் மறுபடியும் பலத்துடன் எழுந்ததுதான் நாம் வரலாற்றிலிருந்து கற்றுக்கொண்ட உண்மை. இதை இந்த உலகத்தில் உள்ள எந்த வல்லரசாலும் நிறுத்தமுடியாது. தர்மத்தின் சக்தி மிக அபாரமானது. இதை மனிதரால் கட்டுப்படுத்தமுடியாது. ஏனென்றால் மனித இனத்தை இன்றுவரை வாழவைத்திருப்பதே தர்மந்தானே! தர்மம் இன்றேல் உலகம் எப்பவோ அழிந்து போயிருக்கும்.

மறுபடியும் கூறுகிறேன் "உலகம் தர்மம் என்னும் அச்சாணியிற்தான் சுழன்று கொண்டிருக்கின்றது,"என்று கூறிய சுந்தரி சிறிது யோசித்து விட்டு,

"அதிகம் பேசிவிட்டேன் என்று நினைக்கின்றேன். வேறு ஏதாவது கேட்க விரும்புகின்றீர்களா சார்?" என்றாள். ஆச்சரியம் கலந்த முகத்

துடன் சுந்தரியைப் பார்த்த கோவிந், சிறிது நேரம் மௌனமாயிருந்து விட்டு,

"உங்களுடைய பேச்சைக் கேட்டதும் எனக்கும் அரைவாசி ஞானம் பிறந்துவிட்டது போல் தோணுகின்றது. நீங்கள் கூறிய கருத்துக்களை வைத்துப் பார்க்கும்பொழுது நீங்கள் சாதாரண வாழ்க்கை முறைகளில் மட்டும் மாற்றத்தை மேற்கொண்ட ஒரு பெண் அல்ல, உண்மையி லேயே ஞானம் பெற்ற ஒரு பெண் ஆவீர்கள். நான் உண்மைக்குப் புறம்பாக உங்களைச் சந்தோசப்படுத்த வேண்டுமென்று இப்படிக் கூறவில்லை. உலகத்தின் அச்சாணியையே நீங்கள் சரியாகப் புரிந்துள் ளீர்கள் என்பதை அறியும்போது, உங்களை எப்படிப் பாராட்டுவதென்றே எனக்குப் புரியவில்லை! உங்களைப் பாராட்டுவதா? அல்லது உங் களை வணங்குவதா? எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லையே!

எத்தனையோ கேள்விகளைக் கேட்கவேண்டுமென்று எண்ணிக் கொண்டு இங்கு வந்தேன். உங்களுடைய பேச்சைக் கேட்டதும் எல் லாவற்றிற்கும் விடை கிடைத்துவிட்டன. அதற்கும் மேலாக பல இயற்கை உண்மைகளையும் புரிந்துகொண்டேன். இந்நேரத்தில் நான் பெற்றிருக்கும் உணர்வுகளை வர்ணிப்பதற்கு உண்மையிலேயே என்னிடம் வார்த்தைகள் இல்லை.

என்னுடைய இந்தத் தொழிலில் பலரைச் சந்தித்திருக்கின்றேன். இருந்தபோதும் இன்று உங்களைச் சந்தித்தது எனக்கு ஒரு வித்தி யாசமான அனுபவம். உங்கைளச் சந்திக்க வந்ததின் நோக்கம் உங்க ளுடைய அனுபவங்களையும் கருத்துக்களையும் வைத்துக்கொண்டு கதைகள் கட்டுரைகள் எழுதுவதாய்த்தான் இருந்தது. உங்களை நேரில் சந்தித்த பிற்பாடு அதற்கும் மேலால் சில காரியங்களைச் சாதிக்கலாம் என்ற முடிவிற்கு வந்துள்ளேன். அவற்றைப் பற்றி இன் னொரு நேரத்தில் பேசிக்கொள்ளலாம்.

இவ்வளவு நேரமும் உங்களுடன் பேசியதையிட்டு மிகமிக மகிழ்ச்சி யடைகின்றேன். எவ்வளவோ உண்மைகளையும் தத்துவங்களையும்கூட உள்வாங்கிக்கொண்டேன்," என்று கூறினார் கோவிந். உடனே சுந்தரி,

"நமது சமூகத்திற்குப் பயன்படக்கூடிய முறையில், வேறு வார்த்

தையில் சொன்னால், நமது மக்களின் மத்தியில் மாற்றங்களைத் திருத்தங்களை ஏற்படுத்தக்கூடிய வகையில் எழுதுங்கோ சார்," என்றதும், கோவிந் மேலே பார்த்துச் சிறிது யோசித்துவிட்டு,

"ஆரம்பத்தில் முனிவர்கள், யோகிகள், ஞானிகள், சித்தர்கள் ஆகியோரும் அப்புறம் புத்தர், யேசுபிரான், நபிகள் நாயகம் போன்ற இறைவனின் தூதுவர்களும் சொல்லித்திருந்தாத இந்த மனித சமு தாயம், நான் எழுதியா திருத்தப்போகின்றது?" என்று கூறிக்கொண்டு போக குறுக்கிட்ட சுந்தரி,

"அப்படிச் சொல்லாதீங்க சார். அவர்கள் சொல்லி மனித சமுதாயம் திருந்தவில்லையென்று சொல்லுவதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது சார். திருந்தியிருக்கின்றது, நிச்சயமாய்த் திருந்தியிருக்கின் றது. அவர்கள் கூறியவற்றை இந்த மனித சமுதாயம் கேட்டிருந்தி ருக்காவிட்டால், மனிதகுலம் எப்பவோ நிச்சயம் அழிந்திருக்கும். மனித குலம் அழிந்துவிடக்கூடாது என்பதற்காகத்தான், இறைவன் காலத்திற் குக்காலம் இந்தப் பூமிக்கு அவதார புருசர்களை அனுப்புகிறார். அவர்களுடைய போதனைகளை எல்லா மனிதரும் ஒட்டுமொத்தமாய்க் கேட்கவில்லை என்பது உண்மைதான். ஆனால், மனிதகுலத்தின் பெரும்பகுதியினர் அந்த மகான்களுடைய அறிவுரைகளைக் கேட்டு நடப்பதனாற்தான் இன்றுவரை இந்த உலகம் அழியாமலிருக்கின்றது என்பது அசைக்கமுடியாத உண்மை. ஆகையால், பயப்படாமல் நல்ல விடயங்களை எழுதுங்கோ. அவற்றை ஒரு சிலர் கேட்டாலேபோதும். ஏனென்றால் அந்த ஒருசிலர்தான் இந்த உலகத்தை வழி நடத்து பவர்கள். உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டு," என்று கோவிந்தை ஊக் கப்படுத்தும் பாணியில் கூறினாள் சுந்தரி.

சுந்தரியின் பேச்சிலிருந்த உண்மை அர்த்தங்களைப் புரிந்து கொண்ட கோவிந்,

"இன்று உங்களிடமிருந்து பல நல்ல விடயங்களைக் கற்றுக் கொண்டேன் என்றால் மிகையாகாது. என்னுடைய அறிவையும் அனுப வத்தையும் பயன்படுத்தி எமது சமூகத்திற்குப் பயன்படக்கூடிய முறை யில் நிச்சயம் எழுதுவேன்," என்று கூறிமுடித்த கோவிந் தொடர்ந்து,

"சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருக்கும் நீங்கள் உங்களுடைய நேரத்தையும் பார்க்காது என்னுடன் உரையாடியதற்கு ரொம்ப நன்றி!" என்று கூறி பேட்டியை நிறைவு செய்த வேளையில், ஏதோ ஞாபகத் திற்கு வந்தவன் போன்று,

"பட்டுத் தெளிந்ததுதான் அறிவு, பட்டுத் தெளிந்தவன்தான் அறிவாளி. நான் இன்று ஓர் உண்மையான அறிவாளியைச் சந்தித்து விட்டுச் செல்கிறேன் என்பதில் மிக்க மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன். மறுபடியும் நன்றி! வணக்கம்!" என்று கூறிவிட்டுப் புறப் பட்ட தருணத்தில்,

"எழுதுங்கோ சார்! பயப்படாமல் எழுதுங்கோ! துணிச்சலுடன் எழுதுங்கோ! போற்றுவார் போற்றபட்டும்! மண்வாரித் தூற்றுவார் தூற் றட்டும்! தொடர்ந்து எழுதுங்கோ! எழுதும்பொழுது எதிர்ப்புக்களும், குறைகளும் வரத்தான் செய்யும். காரணம் மனிதகுலம் இருக்கும்வரை அயோக்கியர்களை அழிக்கவே முடியாது. அயோக்கியர்கள் இருக்கும் வரைதான் சார், யோக்கியவான்களுக்குத் தேவை இருக்கும்.

தருமம் தலைகாக்கும் என்று எண்ணிக்கொண்டு எழுதுங்கோ. வாழ்க தர்மம்! வளர்க மனித குலம்!

நன்றி!

முற்றும்

(யாவும் கற்பனை)



இ. கோவிந்தன் B.A.(Hons.) Econ.
ஓய்வுபெற்ற வங்கியாளர்

இந்நூலாசிரியரின் இயற்பெயர் இராமநாதன் கோவிந்தன். தான் பிறந்து வளர்ந்த ஊராகிய நெடுந்தீவிற்குரிய பெயர்களில் ஒன்றான பசுந் தீவு என்ற பெயரையும் இணைத்து பசுந்தீவு கோவிந்தன் என்ற பெயருடன் இவர் தனது படைப்புக்களை வெளியிட்டுவருகிறார். 2003ம் ஆண்டிலிருந்து தன்னை எழுத்துத்துறையில் ஈடுபடுத்திக் கொண்ட இவர் இதுவரை பத்திற்கு மேற்பட்ட நாவல்களை வெளியிடு செய்துள்ளார். அவற்றில் ஆறு நாவல்கள் இரண்டு புத்தக வடிவில் ஏற்கனவே கனடாவில் வெளிவந்துள்ளன. மிகுதி பத் திரிகையில் வெளிவந்தன. அவை அனைத் தும் வாசகர்களின் வரவேற்பையும் பாராட்டை யும் பெற்றிருந்தன என்பது மகிழ்ச்சிக்குரிய அம்சமாகும்.

இவர் ஒரு புரட்சிகரமான சிந்தனையாளர், சிறந்த கற்பனை வளமும் கொண்டவர். இவருடைய சிந்தனாசக்தியைப் பாராட்டி கவிநாயகர் கலாநிதி வி.கந்தவனம் அவர்கள் இவருக்கு **"சிந்தனைச் செம்மல்"** என்ற கௌரவப் பட்டத்தை வழங்கியுள்ளார். இவருடைய கற்பனை வளத்தைப் பாராட்டி ஆதி அருள்நெறி மன்றம் இவருக்கு **"கற்பனைச் சிற்பி"** எனும் கௌரவப்பட்டத்தை வழங்கியுள்ளது. இவருடைய எழுத்தில் காணப்படும் முக்கிய சிறப்பம்சம் : கதையில் வரும் ஒரு நிகழ்வை அல்லது காட்சியை தனது எழுத்தாற்றல் மூலம் மனக்கண் முன் கொண்டுவந்து நிறுத்தும் வல் லமை ஆகும். இதனால் இவருடைய கற்பனைகளைக்கூட நிஜம் என்று எடுத் துக் கொள்ளும் வாசகர் பலர்.

அத்தோடு, இவர் இலங்கை, சவுதி அரேபியா, கனடா ஆகிய நாடுகளில் தொழில் புரிந்ததன் மூலமும் **U.K., U.S.A,** ஜேர்மனி, பிரான்ஸ், சுவிஸ், இந்தியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளிற்கு சுற்றுப்பிரயாணங்களை மேற்கொண்டவர் என்ற வகையிலும் ஒரு சிறந்த அனுபவசாலியுமாவார். இவருடைய அறிவும் அனுபவமும் தேடல்களும் எமது சமூகத்திற்குப் பயன் படக்கூடிய பல படைப்புக்களை உருவாக்க இவருக்கு உறுதுணையாக அமைந்துள்ளன என்பதில் சந்தேகம் இல்லை.

இவருடைய ஐந்தாவது நூலாகிய **"படுக்கையின் கீழ் பாம்பு"** என்னும் இந்நூலை வெளியிடுவதில் நாங்கள் பெருமகிழ்ச்சியடைகிறோம். இவருடைய பணி மேன்மேலும் தொடர வாசகராகிய நீங்கள் பேராதரவு வழங் கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம். வாசகர்களின் ஆதரவே எழுத் தாளனை இயக்கும் சக்தியாகும்.

- பதிப்பகத்தார் -